# அமெரிக்க ஐக்கிய நாடு: இராணுவ இயந்திரமும் அரசியலும்

ரா. பக்தானவ்

ML36

ரா. பக்தானவ்

# அமெரிக்க ஐக்கிய நாடு: இராணுவ இயந்திரமும் அரசியலும்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: இரா. பாஸ்கரன்

Р. Г. Богданов
США: ВОЕННАЯ МАШИНА
И ПОЛИТИКА
*на тамильском языке*

R. Bogdanov
THE US WAR MACHINE AND POLITICS
*in Tamil*

© Издательство "Наука", 1983

© சுருக்கமான தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1986

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Б $\frac{0302030105-553}{014(01)-86}$ 345-86

## பொருளடக்கம்

முன்னுரை . . . . . . . . . . . 5

அத்தியாயம் ஒன்று. அமெரிக்க மேலாதிக்கவாதத்தின் பாரம்பரியங்களும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் இராணுவ வெறித் தத்துவமும் நடைமுறையும் உருவெடுத்ததில் இவற்றின் பங்கும் . . . 18

1. அமெரிக்க மேலாதிக்கவாதத்தின் வரலாற்று மற்றும் சித்தாந்தப் பாரம்பரியங்கள் . . . . . . . 18
2. அமெரிக்க இராணுவ-அரசியல் சிந்தனை மற்றும் இராணுவ வெறிச் சித்தாந்தம் உருவானதில் சில சிறப்பியல்புகள் . . . . 33
3. அமெரிக்க மேலாதிக்க மற்றும் இராணுவ வெறிக் கொள்கையின் நிறைவேற்றத்தில் இராணுவ பலம் . . . . . . . . . 67

அத்தியாயம் இரண்டு. இராணுவ இயந்திரம் — யுத்தத்திற்குப் பின் உலக

ஆதிக்கத்தை வெல்லும் கொள்கையின் முக்கியக் கருவி . . . . . . 84

1. சோவியத் யூனியன் — அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு நோக்கங்களின் முக்கிய இலக்கு 84
2. ''கெடுபிடி யுத்தத்திற்கு'' மாறியதும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவ-அரசியல் திட்டங்களும் . . . . . . . . . . . 110
3. இராணுவ ஐக்கியக் கட்டமைப்பின் தோற்றமும் யுத்தத்திற்கு பிந்தைய காலகட்டத்தில் இதன் வளர்ச்சியும் . . . . . . . . . 138

அத்தியாயம் மூன்று. அரசுக் கொள்கையில் அணு ஆயுத வெறி . . . . . 173

1. அணு ஆயுதப் போர்த்தந்திரத்தின் அடிப்படைகளை உருவாக்குதலும் அணு ஆயுத மிரட்டல் கொள்கையும் . . . . . . . 173
2. சோவியத் யூனியனுக்கு எதிரான தடுப்பு அணு ஆயுத யுத்த திட்டங்களின் பரிணாம வளர்ச்சி 202
3. அணு ஆயுதமும் ஜனாதிபதியின் அதிகாரமும் . . . . . . . . . 226

முடிவுரை . . . . . . . . . . . . . . 246

குறிப்புகள் . . . . . . . . . . . . . 274

# முன்னுரை

70ஆம் ஆண்டுகளின் இறுதியில், 80ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் அணு ஆயுத யுத்த அபாயம் நம் காலத்தின் உலகளாவிய பிரச்சினைகளில் முதலிடத்திற்கு வந்தது. சோவியத் யூனியனை விட இராணுவ மேன்மையை அடைவதையும் தன் மேலாதிக்க லட்சியங்களை நிறைவேற்றுவதையும் நோக்க மாகக் கொண்டு அமெரிக்கா ஐக்கிய நாட்டாலும் நேட்டோவாலும் தூண்டிவிடப்படும் இதுவரையில்லா ஆயுதப் போட்டி, மேற்கு ஐரோப்பாவில் இடைத் தொலைவு அணு ஆயுத ராக்கெட்டுகளை வைத்தது, உலக ஆதிக்கத்தை அடையும் முக்கியச் சாதனமாக இராணுவ பலத்தை அமெரிக்கா பயன்படுத்து வது ஆகியவைதான் உலக நிலவரம் மிக மோசமானதற்கு முக்கியக் காரணங்களாகும். இரண்டாவது உலக யுத்தம் முடிந்த பின் முதன்முதலாக இந்த அளவிற்கு அமெரிக்க ஐக்கிய நாட்டாலும் மற்ற நேட்டோ நாடுகளா லும் இராணுவ பலம் பெருக்கப்படுகிறது.

யுத்தமா அல்லது சமாதானமா எனும் பிரச்சினை இன்று மிகவும் கூர்மையடைந்துள்

ளதில் வியப்பேதுமில்லை. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியின் 27வது காங்கிரஸ் சோவியத் அரசின் வெளிநாட்டுக் கொள்கை யின் பிரதான, நீண்டகாலப் போக்கைத் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறியது. உலகில் சமாதானத்தைப் பேணிப் பாதுகாப் பதற்காகப் போராடுவதை இது முன்னனு மானிக்கிறது.

ஏகாதிபத்தியத்தின் அதிகரித்துள்ள ஆக்கிர மிப்புத் தன்மைக்கான முக்கியக் காரணங்கள், அதன் நிலை உலகில் கடுமையாகப் பலவீன மடைந்துள்ளதில் அடங்கியுள்ளன. ஏகாதி பத்தியத்தின் இன்னல்கள் அனைத்தும் ஒருங் கிணைந்து, முக்கிய ஏகாதிபத்திய வல்லரசாகிய அமெரிக்க ஐக்கிய நாடு அனுபவிக்கும் இதுவரையில்லா கடும் நெருக்கடியில் பிரதி பலிக்கின்றன. இன்று அமெரிக்க பொருளா தார, அரசியல் மேலாதிக்கம் சந்தேகத்திற்கிட மின்றி ஆட்டங் கண்டுள்ளது. இதற்குப் பதிலாக பல செல்வாக்கு மையங்கள் வந்துள்ளன; இதில் முதலாளித்துவ உலகில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவ மேம்பாடு அதன் அணு ஆயுதத் தளங்கள் மற்றும் ஆக்கிரமிப்புத் துருப்புகளின் உலகளா விய கட்டமைப்புடன் அப்படியே உள்ளது.

உலகில் உருவாகி வரும் குணாம்ச ரீதியாகப் புதிய நிலவரம் அமெரிக்க ஆளும் வர்க்கத்தில் பலரைக் கவலைக்கு உள்ளாக்குகிறது என்பது புரிகிறது. நடைபெறும் மாற்றங்களைத் தாமதப் படுத்தவும் மாற்ற முடியாத வரலாற்றுப்

போக்கைப் பின் நோக்கித் திருப்பவும் அவர்கள் எதைச் வேண்டுமானாலும் செய்ய தயார். எனவே சோஷலிச உலகை அணு ஆயுத யுத்தத்தால் அச்சுறுத்தி, தம்முடைய சுயநல நோக்கங்களுக்காக மனிதகுலத்தின் ஜீவாதார நலன்களைப் பலியிடத் தயாரா யுள்ள மிகப் பிற்போக்கான, போர் வெறி கொண்ட அமெரிக்க கோஷ்டிகள் குறிப்பாக ஆபத்தானவை.

இன்று இக்கோஷ்டிகள்தான் உலகில் நிலவும் இராணுவப் போர்த்தந்திர சமன்நிலையைக் குலைத்து, சோவியத் யூனியனை இராணுவ ரீதியில் விஞ்சி நிற்பது, பொருளாதார, அரசியல், இராணுவத் துறைகளில் நிர்ப்பந் தத்தின் மூலம் சோஷலிச நாடுகளைப் பலவீனப்படுத்தி அவற்றை ஏகாதிபத்தியத்திற்கு இணங்கி வருமாறு கட்டாயப்படுத்துவது, தேசிய விடுதலை இயக்கச் சக்திகளைப் பின்னுக்குத் தள்ளுவது ஆகியவற்றை தமது லட்சியமாக வெளிப்படையாக பிரகடனப் படுத்துகின்றன. சோஷலிச முகாம் நாடுகளுக்கு எதிரான அணு ஆயுத சச்சரவு அபாயத்தைக் கடுமையாக முடுக்கி விட்டு வாஷிங்டனின் குறிப்பிட்ட வட்டாரங்கள் தம் கூட்டு நாடுகளின் நலன்களைப் புறக்கணிக்கின்றன, அந்நாடுகளின் அரசியலை அமெரிக்க வல்லரசு, மேலாதிக்கத் திட்டங்களின் நிறைவேற்றத்திற்கு உட்படுத்த முயலுகின்றன.

பலாத்காரம்தான் அமெரிக்க வெளிநாட்டு அரசியல் நடவடிக்கையின் அடிப்படை என்று

இராணுவ-தொழில்துறை இணையத்தின் சித்தாந்தவாதிகள் அறிவித்துள்ளனர். இவர்களின் கருத்துப்படி இராணுவ பலத்தைப் பெருக்குவதும் அதே நேரத்தில் இன்னமும் அதிகமாக கம்யூனிச எதிர்ப்பு வெறியை முடுக்கி விடுவதும் இத்தகைய பலாத்காரத்தின் நோக்கங்களாகும். ஆனால் இராணுவ பலம் இன்றைய உலகின் சிக்கலான பிரச்சினைகளைத் தீர்க்கும் முறையல்லவே. அணு ஆயுத நூற்றாண்டில் பாதுகாப்பு என்பது வெளிநாட்டுக் கொள்கையின் ஒரு அம்சம் மட்டுமே, இதை மற்ற பிரச்சினைகளிலிருந்து பிரித்துப் பார்க்கக் கூடாது எனும் அம்சம் வாஷிங்டனில் அடிக்கடி புறக்கணிக்கப்பட்டது. உலக அரங்கில் வாஷிங்டனின் சட்டவிரோதமான நடவடிக்கைகள் அமெரிக்க ஐக்கிய நாட்டின் கூட்டாளிகளின் கண்களில் கூட சந்தேகமயமானவையாகத் தோன்றுகின்றன, ஏனெனில் பின்வரும் கேள்விகள் தோன்றுகின்றன: அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆதரவு இருப்பதால்தானே மிகப் பிற்போக்கான ஆட்சிக் கும்பல்கள் இன்னமும் நிலவுகின்றன! வாஷிங்டனின் ''கழுகுகள்'' தாமே சமாதானக் காலத்தில் நிக்கராகுவாவின் துறைமுகங்களில் கண்ணிவெடிகளை வைத்தும் லெபனான் கிராமங்களின் மீது ஆயிரக்கணக்கான கிலோகிராம் எடையுள்ள குண்டுகளை வீசியும் கிரினாடா போன்ற நாடுகளில் தனக்கு ஒத்துவராத ஆட்சிகளை முரட்டுப் பலத்தால் கவிழ்த்தும் சர்வதேச பயங்கரவாதத்தை அரசுக்

கொள்கையாக ஆக்கியுள்ளன!

வரலாற்றில் ‘‘கெடுபிடி யுத்தம்’’ என்று அறியப்பட்ட காலத்தை மனிதகுலம் ஏற்கெனவே அனுபவித்துள்ளது. அமெரிக்க ஆளும் வட்டங்களின் ஒரு சில கோஷ்டிகள்தான் இதை முன்வைத்து முக்கியமாக வாழ்வில் பின்பற்றின. இவை யுத்தத்திற்குப் பிந்தைய காலத்தில் அமெரிக்காவிற்கு மிக அனுகூலமான அரசியல், பொருளாதாரச் சூழ்நிலையில் (உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட காலகட்டத் திற்கு அணு ஆயுதங்களைத் தாம் மட்டுமே வைத்திருந்ததில்) உலக ஆதிக்கத்தின் ‘‘சிகரங் களை’’ நோக்கிச் செல்லும் வாய்ப்புகளைக் கண்டன, இப்பாதையில் முக்கியத் தடையாகிய சோவியத் யூனியனையும் சோஷலிச முகாம் நாடுகளையும் ஒழித்துக் கட்ட முயன்றன. இருபதாண்டுகளுக்கும் மேலாக நீடித்த ‘‘கெடு பிடி யுத்த’’ காலகட்டத்தில் ஆக்கிரமிப்பு நோக்குடைய அமெரிக்கக் கொள்கையின் காரணமாய் இரத்தக்களறியான சச்சரவுகள் பன்முறை மூண்டன.

சோவியத் யூனியனுடன் நிரந்தர சச்சரவுக் கொள்கையை மேற்கொள்ளுவது சம்பந்தமாக சமீப கால வரலாற்று அனுபவம் எவ்வித மாயைகளையும் ஏற்படுத்தவில்லை என்று தோன்றும். மறுபுறம், பத்தாண்டு கால பதட்டத் தணிவு சமாதான சகவாழ்வுக் கொள்கையின் அனுகூலத்தையும் ஆக்கத் தன்மையையும், எவ்வித விதிவிலக்குமின்றி எல்லா நாடுகளுக்கும் மக்களுக்கும் இதன்

பயனையும் ''லாபத்தையும்'' வெளிப்படுத்தியது. அணு ஆயுத சகாப்தத்தில் இது இன்னமும் அதிக முக்கியத்துவத்தைப் பெறுகிறது. அணு ஆயுதம் வெவ்வேறு சமூக அமைப்புகளையுடைய அரசுகளுக்கு ஒரே விதத்தில் ஆபத்தானது, இதைப் பயன்படுத்தினால் மனித வாழ்க்கையே கேள்விக் குறியாக்கப்படும். எனவேதான் அணு ஆயுதப் பேரழிவு அபாயத்தைத் தடுத்து நிறுத்த சோவியத் யூனியன் மேற்கொள்ளும் முயற்சிகளும் இது கடைபிடிக்கும் சமாதான, ஒத்துழைப்பு, பதட்டத் தணிவு கொள்கையும் சமாதான நோக்கமுள்ள சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் வெளிப்பாடாக, உலக முக்கியத்துவம் வாய்ந்த சோஷலிச சமுதாயத்தின் மனிதாபிமான வெளிப்பாடாகத் திகழ்கின்றன.

ஒவ்வொரு வெளிநாட்டு அரசியல் கடமையையும் நிறைவேற்ற அமெரிக்க ஆளும் வட்டங்களிடம் பல்வேறு சாதனங்கள் உள்ளன. ஆனால் இவற்றில் முக்கிய இடம் இராணுவ சாதனங்களுக்கு அளிக்கப்படுகிறது. நாட்டின் வரலாறு பூராவும் இராணுவ இயந்திரத்தைக் கட்டுவதில் ஜனநாயகக் கட்சியினரும் குடியரசுக் கட்சியினரும் கலந்து கொண்டனர். பிரச்சினைகளைப் பலத்தின் நிலையிலிருந்து தீர்க்கும் அமெரிக்க முதலாளி வர்க்கத்தின் பொதுவான போக்கும் உலகை ஆயுதங்களின் ஊடாகப் பார்க்கும் நாட்டமும் எதிரியை நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கி அவனை அச்சுறுத்தும் சாதனமாக

ஆயுதப் போட்டியைக் கருதுவதும் இதில் பிரதிபலிக்கின்றன.

வரலாற்றின் எல்லாக் கட்டங்களிலும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவம் ஆளும் வர்க்கத்தின் கடமைகளுக்கேற்ப கட்டப் பட்டு வந்துள்ளது. முதலில் மேற்கத்திய கோளார்த்தத்தில் அமெரிக்க முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கத்தை ஊர்ஜிதப்படுத்து வதற்காகப் பயிற்றுவிக்கப்பட்ட இந்த இராணுவம் படிப்படியாக உலகளாவிய அமெ ரிக்க விஸ்தரிப்பின் கருவியாக மாறியது. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில், 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், ஏகாதிபத்திய வளர்ச்சிக் கட்டத்திற்கு மாறிய பின் (குறிப்பாக 1898ஆம் ஆண்டு ஸ்பெயின்-அமெரிக்க யுத்தத்தில் ஸ்பெயினின் தோல் விக்குப் பின்) இன்று ''அமெரிக்க இராணுவ இயந்திரம்'' என்று அறியப்பட்ட புலப்பாடு உருவாவது ஆரம்பமாகியது.

''இராணுவ இயந்திரம்'' என்று கூறுகையில், இதில் இதன் கருவாக இராணுவம் (படைத் தலைமை, யூனிட்டுகள், படைப் பிரிவுகள்), பாதுகாப்பு அமைச்சகத்தின் நிர்வாக இயந் திரம், தேசியப் பாதுகாப்புக் கவுன்சில் மற்றும் அதன் உறுப்புகள், அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவ-அரசியல் தலைமையை வழிநடத்தும் ''சிந்தனை ஆலைகள்'', இரா ணுவ பிரச்சினைகளை விவாதிக்கும் காங்கிர சின் கமிட்டிகள், துணைக் கமிட்டிகள் ஆகியவை அடங்கும்.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான் நவீன அமெரிக்க இராணுவ வெறிக்கு அஸ்திவாரமிடப்பட்டது. வி. இ. லெனினின் வரையறுப்பின்படி "நவீன இராணுவ வெறி என்பது முதலாளித்துவத்தின் விளைவாகும். தன்னுடைய இரண்டு வடிவங்களிலுமே அது முதலாளித்துவத்தின் 'ஜீவாதார வெளிப் பாடாகும்': இராணுவ பலம் என்ற வகையில் இது முதலாளித்துவ அரசுகளின் வெளி மோதல்களின் போது அவற்றால் பயன்படுத்தப்படுகிறது... பாட்டாளி வர்க் கத்தின் சகலவித (பொருளாதார, அரசியல்) இயக்கங்களையும் ஒடுக்குவதற்காக ஆளும் வர்க்கங்களின் கரங்களில் ஒரு வகை ஆயுதமாக விளங்குகிறது...."[1]

அமெரிக்க இராணுவ இயந்திரம், மற்ற நாடுகளின் துருப்புகளுடனும் தேசிய விடுதலை இயக்கங்கள் அல்லது புரட்சி இயக்கங்களுட னும் நடந்த ஆயுத மோதல்களின் போது தோன்றி நவீனமடைந்தது. அமெரிக்க இரா ணுவ இயந்திரம் வளர்ந்ததோடு கூடவே இராணுவத் துறையில் அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் சிந்தனையைப் பிரதிபலிக்கும் போர்த்தந்திரக் கருத்தமைவுகள் உருவாகி செழுமைப்படுத்தப்பட்டன.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் இறுதியாக உருவெடுத்த இன்றைய அமெரிக்க இராணுவ இயந்திரமும் பலாத்காரக் கொள் கையைப் பற்றிய பிரச்சாரமும் யுத்த பிரச்சினைகளின் பால் ஒரு பொய்யான

திரிபு உறவை அமெரிக்க வெகுஜன உணர்வில் புகுத்தின. இன்றைய அமெரிக்க இராணுவ இயந்திரத்தின் அளவுகள் மிகப் பெரியவை. இவையும் இடையறாது அதிகரித்து வருகின்றன. இதை அமெரிக்க அரசு இயந்திர முறை முழுவதன் மீது மேன்மேலும் அதிக தாக்கம் செலுத்தும் ஏதோ ஒரு அதி உயர் உறுப்பாக மாற்றும் நிகழ்ச்சி நடந்து வருகிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் இராணுவ இயந்திரம் பலமடைந்து வருவது சமீப பத்தாண்டுகளில் மிக அச்சமூட்டும் ஒரு நிகழ்ச்சியாகும்.

அதே நேரத்தில், அமெரிக்க ஆளும் வர்க்கமும் இதன் அரசியல் மேல் மட்டமும் இராணுவ இயந்திரத்தை விரிவுபடுத்துதல் மற்றும் ஆக்கிரமிப்பு நோக்கங்களை அடைவதற்காகப் பலத்தைப் பயன்படுத்துதல் சம்பந்தமாக தீர்மானங்களை நிறைவேற்றுவதன் மீது மிகத் தீவிரத் தாக்கத்தைச் செலுத்தின என்பதை யுத்தத்திற்குப் பிந்தைய அமெரிக்க வரலாறு பூராவும் காட்டுகிறது.

ஆனால் நவீன அமெரிக்க இராணுவ இயந்திரத்தைப் போன்றதொரு பிரம்மாண்டமான அமைப்பைத் தோற்றுவித்ததற்காக ஆளும் வர்க்கம் பதில் சொல்ல வேண்டி வந்தது. தன்னுடைய பங்காலும் தேசியச் செல்வத்தில் தான் கிரகிக்கும் பங்காலும் இராணுவ மற்றும் அரசியல் நலன்கள் சிக்கலாக, ஆழ்ந்து ஊடுருவி பின்னிப் பிணைந்துள்ளதாலும் இராணுவ இயந்திரத்தின் மேல் மட்டம்

சிவில் அரசியல் உயர் மட்டத்தைப் பின் னுக்குத் தள்ளி விட்டு நாட்டின் அரசியலின் மீது நேரடியான தாக்கத்தைச் செலுத்தும் வாய்ப்பைப் பெற்றது. படிப்படியாக இராணுவ இயந்திரம் சுயேச்சையான அரசியல் சக்தியின் குணங்களைப் பெற்றது.

மொத்தத்தில் இராணுவ இயந்திரத்தின் மீதான கடுமையான கண்காணிப்பை ஆளும் வர்க்கத்தால் நிறைவேற்ற முடிகிறது. இரா ணுவ-அரசியல் இயந்திரத்தின் அதிகபட்ச செயற்பாட்டிற்கு வழிகோலுவது, இதில் விரும்பத்தகாத இடையூறுகளையும் முப்படை களுக்கு இடையில் போட்டியையும் அனுமதிக் காமல் இருப்பது, அரசியலில் அளவிற்கதி கமாக ஈடுபடும் இராணுவத் தளபதிகளைத் தடுத்து நிறுத்துவது ஆகியவைதான் இந்தக் கண்காணிப்பின் நோக்கங்களாகும். எனவே தான் இராணுவத்தின் மீதான கண்காணிப் பில் இராணுவ இயந்திரத்தின் தலைமை வட்டம் சிவில் அரசியல் தலைமையுடன் நெருக்கமாக ஒத்துழைக்கிறது, ஏனெனில் இது இராணுவத் துறையினர் மற்றும் அரசியல்வாதிகள் ஆகிய இரு தரப்பினரின் நலன்களுக்கும் உகந்ததாக உள்ளது, இவர்கள் தலைமை தாங்கி வழிநடத்தும் இராணுவ-அரசியல் இயந்திரத்தைப் பலப்படுத்துகிறது.

* * *

பி. எங்கெல்ஸ் அமெரிக்க ஐக்கிய நாட்டைப்

பற்றிக் கூறியது இன்றைய சூழ்நிலையில் மிகவும் பொருத்தமாக உள்ளது: "...அமெரிக்காவில் ஒரே மாதிரியான வளர்ச்சிப் போக்கை யாராவது எதிர்பார்க்க முடியுமா என்ன! பிரான்சின் அரசியல் வாழ்வில் ஏற்படுவதைப் போன்ற பாய்ச்சல்கள் அங்கே பொருளாதார வாழ்வில் நடைபெறுகின்றன, நிச்சயமாக அதே போன்ற பின்னோக்கிய தற்காலிகத் திருப்பங்களும் நடைபெறுகின்றன."[2] இது பொருளாதார விஷயத்தில் மட்டுமின்றி அரசியலைப் பொறுத்த மட்டிலும் கூட சரியானது. உலகளாவிய சச்சரவுக் கொள்கை நவீன சர்வதேச உறவுகளின் வளர்ச்சியை, மொத்தமாக உலக அரசியலைப் பெரிதும் பாதிக்கிறது. இந்தப் பிரச்சினை கூர்மையடைந்ததற்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சர்வதேசக் கொள்கையும் மீண்டும் அதில் தென்படும் அதிசாகசத்தன்மையும் தன்னுடைய குறுகிய சுயநல நோக்கங்களுக்காக மனிதகுலத்தின் ஜீவாதார நலன்களைப் பலியிடத் தயாராக உள்ளதும்தான் காரணங்களாகும். இரண்டாவது உலக யுத்தம் முடிந்த பின் இருந்ததைப் போன்றே இன்றும் ஏகாதிபத்திய அரசியல்வாதிகளின் விவேகமற்ற கருத்துநிலைகள்தான் இந்தக் கொள்கையின் அடிப்படையாக விளங்குகின்றன. அடைய முடியாததை அடைவது, அதாவது உலகில் ஏற்படும் முற்போக்கு மாற்றங்களின் பாதையில் தடைகளை உண்டாக்குவதென்பதை அவர்கள் மீண்டும் தம்

லட்சியமாக வைத்துள்ளனர், உலக மக்களின் விதியைத் தீர்மானிப்பவர்களாக வேண்டுமென முடிவு செய்துள்ளனர்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் வரலாறு பூராவும் ஆளும் வட்டங்கள் இராணுவச் சக்தியை முக்கிய அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தி வந்துள்ளன, இது ஏகாதிபத்தியத்தின் பெரும் ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள திட்டங்களுக்குச் சேவை புரிந்தது, தொடர்ந்து சேவை புரிகிறது. ''அச்சுறுத்துதல்'' எனும் போர்த்தந்திரம் இத்தகைய கொள்கையின் மத்தியக் கருத்தமைவாகத் தொடர்ந்து இருக்கிறது. ''சோவியத் அபாயத்திற்குப்'' பதிலடி தர வேண்டியதன் அவசியத்தைக் காட்டி இராணுவ வெறிப் பிரச்சாரம் ''அச்சுறுத்துதல்'' போர்த்தந்திரத்தை நியாயப்படுத்தியது. ஆனால் உண்மையிலோ ''அச்சுறுத்துதலானது'' யுத்தத்தைத் தடுப்பதற்கு அல்ல, மாறாக அதற்குத் தயாராவதற்குத்தான் சேவை புரிந்தது, தன் சாராம்சத்தில் இது தற்காப்புப் போர்த்தந்திரமாக இருக்காமல் ஆக்கிரமிப்புப் போர்த்தந்திரமாக இருந்தது.

இந்நூலில் அமெரிக்க இராணுவ இயந்திரம், அதன் பரிணாம வளர்ச்சி, அரசியலுடன் அதற்குள்ள பரஸ்பரத் தொடர்பு ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. இதில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவ இயந்திரம் தோன்றுவதன் மீது தாக்கம் செலுத்திய வரலாற்று மற்றும் சித்தாந்த-அரசியல் பாரம்பரியங்களும்

அதன் வளர்ச்சி முறைகள் மற்றும் நியதிகளும் ஆராயப்பட்டுள்ளன. அணு ஆயுதத்தைப் பயன்படுத்தவும் இதற்கேற்ற அணு ஆயுதப் போர்த்தந்திரத்தை உருவாக்கவும் அமெரிக்க இராணுவ இயந்திரத்தைத் தயார்ப்படுத்தி பயிற்றுவிப்பதன் மீது விசேஷக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## அத்தியாயம் ஒன்று

# அமெரிக்க மேலாதிக்கவாதத்தின் பாரம்பரியங்களும் அமெரிக்க ஐக்கிய நாட்டில் இராணுவ வெறித் தத்துவமும் நடைமுறையும் உருவெடுத்ததில் இவற்றின் பங்கும்

---

### 1. அமெரிக்க மேலாதிக்கவாதத்தின் வரலாற்று மற்றும் சித்தாந்தப் பாரம்பரியங்கள்

இராணுவ வெறி, பலாத்காரம் மற்றும் வன்முறை வழிபாடு (அமெரிக்காவில் ஆக்கிரமிப்பு குணம் மிக்க ஏகாதிபத்திய வட்டங்கள் இவற்றை முக்கியமாக கணக்கில் கொள்கின்றன) ஆகியவை முற்றிலும் திட்டவட்டமான வரலாற்று, சித்தாந்தப் பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஆளும் மேல் மட்டத்தில் உள்ளேயுள்ள குழுக்களும் பிரதிநிதிகளும் இந்தப் பாரம்பரியங்களை எந்த அளவிற்குப் பின்பற்றுகிறார்கள் என்பது வெவ்வேறு ஆக்கிரமிப்பு அல்லது மிதவாதப் போக்குகளை இவர்கள் சார்ந்திருப்பதைப் பொறுத்தது என்பதை இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும். அமெரிக்க அரசியல் வரலாற்றில் மிக ஆக்கிரமிப்பு குணமுள்ள

சிந்தனைப் ''பள்ளிகளும்'' இவற்றை ஆதார மாகக் கொண்ட நடைமுறை அரசிய லும் ஆளும் வர்க்கத்தின் மனநிலைகளில் மேலோங்கி நின்றன. சர்வதேச நிலவரத்தின் யதார்த்தங்களுக்குப் பழக்கப்படுத்திக் கொள் ளும் காலகட்டங்கள் பெரும்பாலும் விதிவிலக் கானவையாகத்தான் இருந்தன. இவை சோஷ லிசத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடை யிலான சக்திகளின் சமன்நிலையில் புதியதைப் புரிந்து கொள்ள நெருங்கி வருவதாலும் நவீன அரசியலில் அணு ஆயுதக் காரணியின் பங்கை உணர்வதாலும் ஏற்படுகின்றன. அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் யதார்த்த சிந்தனையுள்ள வட்டங்களின் பிரதிநிதிகள் கூட முதலாவதாக சோவியத் யூனியனின் பால் பலத்தின் அடிப்படையிலான கொள் கையைக் கடைபிடிப்பதையும் இராணுவ வாய்ப்புகளைப் பெருக்குவதன் மூலம் உலக அரங்கில் சக்திகளின் சமன்நிலையைத் தமக்கு ஆதரவாக மாற்றும் முயற்சிகளையும் முற்றிலு மாகக் கைவிடவில்லை.

ஆராய்ச்சி நலன்களுக்காக மட்டும் அமெ ரிக்க மேலாதிக்கவாதத்தின் பாரம்பரியங்களை நாம் பார்க்கவில்லை. இந்த வார்த்தையின் முழுப் பொருளில் இது உயிருள்ள, மிக உயிரோட்டமுள்ள வரலாறாகும். இதன் படிப்பினைகள் இன்றும் தென்படுகின்றன. விஸ்தரிப்பு மற்றும் எல்லை பிடிக்கும் நாட்டம், பொருளாதார, அரசியல், இராணுவ ஆதிக்கத்தின் பாலான நாட்டம், ஏன்

ஆன்மீக ரீதியான தலைமையின் பாலான நாட்டம் — இவையனைத்தும் இருநூறு ஆண்டு கால அமெரிக்க அரசின் வாழ்வில் அப்படியே ஊடுருவி நிற்கின்றன.

பேரரசு, நாட்டின் உள்ளேயிருந்து ஆரம்பிக்கிறது (அதாவது, செவ்விந்தியர்களைச் சுட்டுத் தள்ளுவதிலிருந்தும் நீக்ரோக்களை அடிமைப் படுத்துவதிலிருந்தும் அது ஆரம்பிக்கிறது) எனும் ஒருவித விசேஷத் தலைப்பிலான தம் கட்டுரையில் அமெரிக்க ஆராய்ச்சியாளராகிய வ. லாஃபெபெர் ''அமெரிக்க ஐக்கிய நாடு தன் தோற்றத்திலிருந்தே பிறர் விவகாரங்களில் தலையிடும் வல்லரசாக இருந்து வந்துள்ளது''[3] என்று எழுதுகிறார். அமெரிக்க ஐக்கிய நாடு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்ற உடனேயே அதன் விஸ்தரிப்பு ஆரம்பமாகியது, நடைமுறையில், விஸ்தரிப்புத் திட்டங்கள் சுதந்திரம் பெறுவதற்கு முன்னராகவே இருந்தன.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் ''சமாதான வளர்ச்சிப் பாதையைப்'' பற்றிய கட்டுக்கதைக்கு மாறாக, 19ஆம் நூற்றாண்டில் மட்டும் அது 114 யுத்தங்களை நடத்தியுள்ளதாக அமெரிக்க வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். 1846—1848இல் மெக்சிக்கோவுடன் நடந்த யுத்தமும் இதில் அடங்கும். இந்த யுத்தத்தின் விளைவாய் மெக்சிக்கோவின் பரப்பில் 2/3 பங்கைத் அமெரிக்கா தன்னுடன் இணைத்துக் கொண்டது.

பிரதேச ஆக்கிரமிப்புகள் அமெரிக்க மேலா

திக்க நாட்டங்களில் ஒரு அம்சம் மட்டுமே. உலக ஆதிக்கத்தின் பாலான விருப்பங்கள் (அக்கட்டத்தில் இது, ''கடல்களில் ஆட்சி செய்த'' பிரிட்டனுடனான போட்டியைத் தான் எல்லாவற்றிற்கும் மேலாகக் குறித்தது) சமுத்திரப் பரப்புகளின் மீது ஆதிக்கத்தை ஏற்படுத்தும் பாதையில் அமெரிக்க ஐக்கிய நாட்டைத் தள்ளின. முதலில் பசிபிக் பெருங்கடலிலும் — அமெரிக்க கூற்றின் படி இதை அமெரிக்க ஐக்கிய நாட்டின் ''உள் நாட்டு ஏரியாக'' மாற்றுவதற்காக — பின் அட்லாண்டிக் பெருங்கடல் மீதும் ஆதிக்கத்தை ஏற்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டன. ஹவாய்த் தீவுகளையும் பிலிப்பைன் தீவுகளையும் அமெரிக்கா கைப்பற்றியதும் 1898இல் ஸ்பெயினுக்கு எதிராக யுத்தத்தில் இறங்கியதும், ஏற்கெனவே பிரிக்கப்பட்டிருந்த உலகின் மறு பங்கீட்டிற்காக வெளிப்படையாகப் போராட்டத்தைத் துவக்கிய முதல் நாடாக அமெரிக்காவை ஆக்கியது தற்செயல் அல்ல.

அமெரிக்கா தன் வெளிநாட்டுப் பொருளாதாரக் கொள்கையையும் உலக ஆதிக்கத்தின் பாலான நாட்டத்திற்கு உட்படுத்தியது. ஜனாதிபதி தாப்தால் முன்வைக்கப்பட்ட ''டாலரின் இராஜதந்திரம்'' எனும் கூற்று இதற்குத் தெளிவான ஒரு நிரூபணமாகும். அமெரிக்க மேலாதிக்கவாதிகளைக் காட்டிலும் வேறு யாராலும் இச்சூத்திரத்தின் உட்பொருளையும் போக்கையும் இவ்வளவு வெளிப்படையாகக் கூற முடியாது; அமெரிக்கர்கள்தான்

வரலாற்றிலேயே முதன்முதலாக நிதித்துறை நிர்வாகத்தில் பிரம்மாண்டமான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள், அதே நேரத்தில் தரையிலும் கடலிலும் வானிலும் பரிபூரண இராணுவ ஆதிக்கத்திற்காகவும் முயலுவார்கள் என்று அந்த அமெரிக்க மேலாதிக்கவாதிகள் அறிவித்தார்கள்.

காலனியாதிக்க கொள்ளையடிப்பில் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு ஏதும் பங்கில்லை என்ற ஏகாதிபத்திய ஆதரவாளர்களின் மிக உறுதியான பொய்க் கூற்றுகளில் ஒன்றை அமெரிக்க வரலாற்றின் உண்மைகள் நிராகரிக்கின்றன. எப்போதுமே ஏகாதிபத்தியத்தைக் கண்டனம் செய்து வந்த அமெரிக்கா அதே நேரத்தில் சொந்தப் பேரரசைக் கட்டியது என்று 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே அமெரிக்க வரலாற்றாசிரியராகிய போ. டால்லஸ் குறிப்பிட்டார்.

முதலாம் உலக யுத்தம் முடிந்த பின் அமெரிக்க ஏகாதிபத்தியம் முதன்முதலாக தன் உலகளாவிய திட்டங்களை நிறைவேற்ற முயன்றது. போல்ஷிவிசத்தை முக்கிய இலக்காக ஆக்கியது, மூர்க்கத்தனமான சோவியத் எதிர்ப்பு, ருஷ்யாவைப் பிளந்து, உக்ரேய்ன், பைலோருஷ்யா, பால்டிக் பிரதேசம், காக்கஸஸ், கிரீமியா, மத்திய ஆசியாவை அதிலிருந்து பிரித்து இளம் சோவியத் குடியரசைத் துண்டு துண்டாக கடித்துக் குதறத் தயாராக இருந்தது ஆகியவை இந்த முயற்சியின் மிகக் குறிப்பிடத்தக்க

அம்சங்களாகும். 1920 ஜனவரி வரையில் 12,000க்கும் மேற்பட்ட அமெரிக்க கடல் இறக்குப் படையினர் ''அமெரிக்க லட்சியங் களை'' சோவியத் பரப்பில் புகுத்த முயன்ற னர்.

இரண்டாவது உலக யுத்தத்தின் போதும் இதன் முடிவாயும் அமெரிக்க ஏகாதிபத்தியம் இம்முயற்சியை மிகப் பெரும் உறுதியுடன் மீண்டும் மேற்கொண்டது. மேலாதிக்கம் மற்றும் சோஷலிச நாடுகளுடன் முழு சச்சரவுப் பாதையை வெளிப்படையாக மேற்கொண்ட அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமை 1945ஆம் ஆண்டிற்குப் பின் அமெரிக்க நிர்வாகத்தில் தன் சொந்தப் பங்கையும் இராணுவ-அதிகார வர்க்க முறை யின் முக்கியத்துவத்தையும் மறுபரிசீலனை செய்தது. உலகளாவிய பிரதேச விஸ்தரிப்பும் இதன் மதிப்பு அதிகரித்ததும் (இரண்டாவது உலகப் போருக்கு முன் மொத்த தேசிய உற்பத்திப் பொருளில் 1 % ஆக இருந்த இது யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் 5—13 % வரை உயர்ந்தது) முக்கிய மாற்றங்களுக்கு இட்டுச் சென்றன. எல்லாவற்றிற்கும் மேலாக ''தேசியத் தற்காப்பு'' எனும் கருத்தமைப்பில் இருந்து ''தேசியப் பாதுகாப்பு'' எனும் சகல அம்சங்களையும் உட்படுத்திய ஆக்கிர மிப்புச் சித்தாந்தத்திற்கு அமெரிக்கா மாறியது.

''ஜீவாதார நலன்கள்'' எனும் கருத்தமைப்பு மேற்கூறிய சித்தாந்தத்தின் ஒரு அங்கமாகும். ஒரு முழு யுத்தம் உட்பட இராணுவ

பலத்தைப் பயன்படுத்தி அமெரிக்கா எந்த நலன்களைக் காப்பாற்றத் தயாராக உள் ளதோ அவற்றை அமெரிக்க பூர்ஷ்வா அரசியல் இயலர்கள் ''ஜீவாதார நலன்கள்'' என்று வகைப்படுத்துகின்றனர்.[4] ''ஜீவா தார நலன்கள்'' என்று அழைக்கப்படுபவை ''தேசியப் பாதுகாப்புச்'' சித்தாந்தத்தின் ஒரு அங்கமாக இருந்தபோதிலும் பெரும்பா லான சந்தர்ப்பங்களில் இதனுடன் அந்த நலன் களுக்கு நேரடித் தொடர்பு இல்லை. இவை அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஏகாதிபத்திய பேராவல்களை நேரடியாக உள்ளடக்கியுள்ளன என்பது வேறு விஷயம். ஏனெனில் சர்வதேச உறவுகளில் ''ஜீவாதார நலன்கள்'' என்பவை, முதலாவதாக இராணுவத் தாக்குதலுக்கு எதிரான பாதுகாப்பைக் கவனத்தில் கொண்டு, ஒரு அரசின் பாதுகாப்பின் மீது அல்லது அது நிலைத்திருப்பதன் மீது செல்வாக்கு செலுத்துபவைகளாகும். ஆக்கிரமிப்பு நோக்கங் கள் இல்லாத ஒரு நாடு ''ஜீவாதார நலன்கள்'' பிரச்சினையை குறைந்தபட்சம் இப்படித்தான் அணுகும்.

ஆக்கிரமிப்பில் இறங்கத் தயாராயுள்ள அரசோ ''ஜீவாதார நலன்கள்'' எனும் கருத்தை விரிவுபடுத்துகிறது. அமெரிக்கா தன் ''பாதுகாப்பிற்கு'' ''அபாயம்'' என்று தன்னிச்சையாகக் கூறி அந்த ''அபாயங்களை'' வியாக்கியானப்படுத்துகிறது. அதிலும் இந்த ''அபாயங்கள்'' இதன் பூகோள எல்லைகளுக்கு வெகு தூரத்தில் இருக்கின்றன, சாதாரணமாக

இவற்றிற்கும் அரசின் பாதுகாப்பிற்கும் நேரடித் தொடர்பே கிடையாது. சுயதற்காப்பு வட்டத்திற்கு அப்பாலுள்ள ஒரு அம்சமாகப் ''பாதுகாப்பு'' எனும் கருத்தை ஏதோ சட்டபூர்வமான அடிப்படையில் வியாக்கியானப்படுத்தும் உரிமையை அமெரிக்கா தானாகவே எடுத்துக் கொண்டுள்ளது.

விரிவுபடுத்தப்பட்ட ''பாதுகாப்பு'' (ஒளிவு மறைவற்ற பிரதேச விஸ்தரிப்பு என்று இதற்குப் பொருள்) கருத்துகளால் வாஷிங்டனின் வெளிநாட்டுக் கொள்கை முழுவதும் படிப்படியாக நியாயப்படுத்தப்படுகிறது. 1950 ஜனவரியில் அன்றைய அரசுத் துறைச் செயலர் டி. ஆச்செசன் நியூயார்க்கில் ஆற்றிய தன் உரையில் அமெரிக்கத் தற்காப்பின் ''சுற்றளவை'' வரையறுத்தார். உலகின் அகன்ற பிரதேசங்கள் இதில் அடங்கியிருந்தன; இவை அதே நேரத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ''ஜீவாதார நலன்களாகவும்'' கருதப்பட்டன. ஜனாதிபதி ஜான்சன், வியட்நாம் யுத்தத்தின் முடிவை அமெரிக்காவிற்கு ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்ததெனக் கருதிய மூன்றாவது ஜனாதிபதியாக இருந்தார். ஜனாதிபதி கார்ட்டரின் பதவிக் கால முடிவில் ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு போர்த்தந்திர மண்டலங்களுடன் (ஐரோப்பாவும் தொலை கிழக்கும்) கூட மூன்றாவது மண்டலம்—பாரசீக வளைகுடா—சேர்ந்து கொண்டது. இதன் மூலம் அதே அபகீர்த்தி படைத்த ''ஜீவாதார நலன்களின்''

பேரால் அமெரிக்க மேலாதிக்கவாதிகள் உலகைப் பங்கு போட்டுக் கொண்டனர்.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் அமெரிக்க ஐக்கிய நாடு முதலாளித்துவ உலகின் தலைவனாக ஆனதோடு கூட இராணுவ மேன்மை பெறும் நாட்டமும் கூடவே வந்தது. இது முதலாவதாக சோவியத் நாட்டிற்கு எதிரான ஆக்கிரமிப்பை நோக்கமாகக் கொண்டிருந்தாலும் இது வேறு நோக்கங்களையும் கொண்டிருந்தது. அமெரிக்காவின் ''ஜீவாதார நலன்களைப்'' பொறுத்த விஷயத்தில் ''மேன்மை பெறுவதை'' நோக்கமாகக் கொண்ட இதன் மேலாதிக்கக் கொள்கை முற்றிலுமாக அனைவருக்கு எதிரா யும் தேவைப்பட்டது.

இன்றைய உலக அரசியலின் கண்ணோட் டத்திலிருந்து பார்க்கும் போது மேலாதிக்க வாதம் காலாவதியான ஒன்றாக இருக்கிறது, ஆனால் இது கைவிடப்படாதது மட்டு மல்ல, மாறாக அமெரிக்காவின் செல்வாக்கு மிக்க அரசியல் வட்டங்களின் உணர்வைத் தொடர்ந்து நச்சுப்படுத்தியும் வருகிறது. இரா ணுவச் சாதனங்கள் எவ்வளவுக்கெவ்வளவு நவீனமானவையோ அவ்வளவுக்கவ்வளவு இதன் விஷம் கொடுமையானது.

முதலாவதாக இந்த அபாயம் அணு ஆயுதம் இருப்பதால் நிர்ணயிக்கப்படுகிறது. கம்யூனிச எதிர்ப்பால் கண்ணவிழ்ந்து போயுள்ள நவீன மேலாதிக்கவாதிகள், இந்த அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவதன் விளைவு

களைச் சரியாகப் பார்க்காது, மனித குலத்திற்கும் நாகரிகத்திற்கும் ஏற்படக் கூடிய பேரழிவைக் குறைத்து மதிப்பிடுகின்றனர்.

அமெரிக்க நிர்வாகத்தின் பேச்சுகளிலும் நடவடிக்கைகளிலும் உலக மேலாதிக்கத்தின் பாலான நாட்டம் இன்று மீண்டும் மேலோங்கியுள்ளது. இதன் தத்துவத்தினுள் அணு ஆயுத பேராவல் முற்றிலுமாக ஊடுருவி நிற்கிறது. பதட்டத் தணிவின் எதிரிகளும் இராணுவ-தொழில்துறை இணையத்தின் கையாட்களும் சோவியத் யூனியனுக்கு எதிரான அணு ஆயுத யுத்தத்தில் வெற்றி பெறும் வாய்ப்புகளைக் குறித்தும் அமெரிக்கா இத்தகையதொரு யுத்தத்தைத் துவக்கி, வெற்றி பெறும் நிபந்தனைகளைப் பற்றியும் விவாதிப்பது குறிப்பாக கவலையைத் தருகிறது. இந்த விஷயத்தில் மேலாதிக்கவாதம் இன்னமும் அதிக ஆபத்தான தன்மையைப் பெற்றது.

80ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் வெளிப்பட்ட அமெரிக்க ஏகாதிபத்திய வட்டங்களின் உலகளாவிய பேராவல்களின் புதிய அலை, அரசியல் சமன்நிலையின் இழப்பையும் உலகின் புதிய நிலவரத்துடனும் சர்வதேச உறவுகளின் மாறியுள்ள வரையளவுகளுடனும் ஒத்துப் போவதில் விருப்பமின்மையையும் தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது. பதட்டத் தணிவு நீண்டகாலம் நீடித்தபோதிலும் அமெரிக்க ஆளும் வர்க்கத்தில் உலகளாவிய பேராவல்கள் மற்றும் ‘‘கெடுபிடி யுத்தத்தின்’’ கடந்த காலம் முழுவதும் கடக்கப்படவில்லை:

இன்றைய வாஷிங்டன் நிர்வாகத்தின், மொத்தமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அரசியலில் மேலாதிக்கத்தை நோக்கி இன்று ஏற்பட்டுள்ள திருப்பத்தின் ஆழ்ந்த காரணங் களை ஆராயும் போது, ''பிற்போக்கு-பூர்ஷ்வாச்'' சக்திகள் இராணுவ வெறி அதிசாகசங்களை நாடக் கூடும் என்று லெனின் விடுத்த எச்சரிக்கையை நினைவு கூராமல் இருக்க முடியாது. பதட்டத் தணிவிற்கு எதிரான ஏகாதிபத்தியச் சக்தி களின் போர், அமெரிக்க ஐக்கிய நாட்டில் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள கொடிய சோவியத் எதிர்ப்பு பிரச்சாரம் — இவையனைத்தும், சோஷலிசத்தின் நிலைகள் மேன்மேலும் பல மடைந்து வருவதாலும், மக்களினங்களின் தேசிய விடுதலைப் போராட்டம் பரவி வருவதாலும், சமாதானத்திற்காகவும் சர்வ தேச நிலவரத்தைச் சீர்படுத்துவதற்காகவும் போராடும் சக்திகளின் வெற்றிகளாலும், இறுதியாக, முதலாளித்துவ அமைப்பின் பொது நெருக்கடி பெருகி வருவதாலும், உலகில் அமெரிக்காவின் நிலை பலவீன மடைந்து வருவதாலும் (இதற்கென புறவய ரீதியான காரணங்கள் உண்டு) தோன்றிய எரிச்சல் மற்றும் அச்சத்தின் வெளிப்பாடு களாகும்.

80ஆம் ஆண்டுகளில் அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை ''தன் வட்டத்திற்கு'', 60ஆம் ஆண்டுகளின் மேலாதிக்கவாத அதிசாகசங்களுக் கும் இராணுவ ஆக்கிரமிப்புகளுக்கும் திரும்பி

யுள்ளதென ஒரு சில அமெரிக்க ஆசிரியர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். நிச்சயமாக கடந்த காலத்தின் அம்சங்கள் திரும்ப நடைபெறும் அபாயம் உள்ளது. கவனத்தில் கொள்ள வேண்டிய புதிய காரணிகளும் உள்ளன. உண்மையில் இன்றும் கூட உலக ஆதிக் கத்திற்கான பேராவல்கள் ‘‘சோவியத் இரா ணுவ அபாயம்’’ எனும் கற்பனையால் மூடி மறைக்கப்படுகின்றன, ‘‘மேற்கு உலகைக் காப்பாற்றுவதற்காக’’ ஆயுதங்களையும் இரா ணுவ பலத்தையும் பெருக்குமாறு அறைகூவல் விடுக்கும் ‘‘கெடுபிடி யுத்தப்’’ பறையொலிகள் எழுப்பப்படுகின்றன. ‘‘அமெரிக்கப் பலத்தைப் பெருக்காமல் மேற்கத்திய நாகரிகத்தால் பிழைத்திருக்க முடியாது’’[5] என்று பிரபல ‘‘கழுகும்’’ முந்தைய பாதுகாப்பு அமைச்சரு மாகிய ஜே. ஷிலேஸின்ஜர் கூவுகிறார். என்றா லும் 50ஆம், 60ஆம் ஆண்டுகளில் அமெரிக்க ஆதிக்கத்தைப் புகுத்தியதை ‘‘மேற்கத்திய உலகம்’’ முழுவதையும் காப்பாற்றுவது என்ற ஒரு பொய்க் காரணத்தால் எப்படியாவது மூடி மறைத்த ஒரு நிலைக்கு மாறாக இன்று ‘‘அமெரிக்க தேசிய நலன்களைப் பாதுகாப்பதைப்’’ பற்றிய கருத்து மட்டுமே முன்னுக்கு வைக்கப்படுகிறது.

உலகளாவிய பிரதேச விஸ்தரிப்பை ‘‘தேசிய நலன்களால்’’ மூடி மறைப்பதால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினுடைய மேலாதிக்க கொள் கையின் தீய சாரத்தை, அதாவது உலகாளும் நாட்டத்தை மூடி மறைக்க முடியாது.

இதுதான் அதனுடைய நோக்கமாகும். ஆனால் ஏகாதிபத்திய போட்டி நாடுகளின் எதிர்ப்பால் மட்டுமின்றி, பிரதானமாயும் முதலாவதாயும் சோவியத் யூனியன் இருப்பதாலும் உலக சோஷலிச அமைப்பு உருவாகியுள்ளதாலும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் எழுச்சியாலும் இந்த நோக்கம் அடையப்படவில்லை என்பதில் எவ்வித இரகசியமும் இல்லை.

இத்தகையதொரு தடையை அமெரிக்க ஏகாதிபத்தியத்தால் ''அகற்ற'' முடியவில்லை. இதை எப்படியாவது சமாளிக்க அது முயலுகிறது: ஆயுதப் போட்டியை முடுக்கிவிடுகிறது, சோஷலிச உலகத்தைச் சுற்றி ஆயுத மோதல்களின் பிறப்பிடங்களை உருவாக்குகிறது, அதே நேரத்தில் கம்யூனிசம் தான் ஏதோ மனிதகுலத்தின் பிரதான அபாயம் என்று நிரூபிக்க மாறிமாறி முயலுகிறது. இப்படிப்பட்ட கொள்கையின் முழு ஆதாரமற்ற நிலை இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய பத்தாண்டில் நிரூபிக்கப்பட்டதெனில் இன்று அது எவ்வளவு அதிசாகசமானது என்பது தெளிவாகவில்லையா என்ன!

சாராம்சத்தில் பார்த்தால் இத்தகைய சித்தாந்த உபாயங்களின் நோக்கம், உலக ஆதிக்கத்திற்கான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இன்றைய போராட்டப் போர்த்தந்திரத்தின் புதிய அம்சங்களிலிருந்து உண்மையிலேயே கவனத்தைத் திருப்புவதேயாகும்.

முதலாவதாக, இது அமெரிக்காவின் மேற்கு ஐரோப்பிய கூட்டாளிகளின் மீதான தெட்டத் தெளிவான நிர்ப்பந்தம், அவர்களைத் தனக்குக் கீழ் ஒடுக்கி, ''அட்லாண்டிக் ஒருமைப் பாட்டை'' வெளிப்படுத்துமாறு நிர்ப்பந்தித்து, தாம் கட்டவிழ்த்து விட்டுள்ள சோவியத் எதிர்ப்பு பிரச்சாரத்தினுள் அவர்களை இழுத்து, அவர்களின் உதவியோடு ''உலகத் தலைவர்களாக'' மாறும் நாட்டம் ஆகும்.

அட்லாண்டிக் பெருங்கடலின் மறுபுறத்தி லிருந்து வரும் கண்டிப்பான கூக்குரல்களையும் பொருட்படுத்தாது கூட்டு நாடுகள் மேன் மேலும் ''பணிந்திருக்கவில்லை'' என்பதால் ''உலகை அமெரிக்க முறைப்படி'' புன ரமைக்கும் விஷயத்தில் கூட்டு நாடுகளின் கணிசமான உதவியின் மீதான நம்பிக்கைகள் இடையறாது மங்குகின்றன. எனவே அமெரிக்க ஏகாதிபத்தியம் விடாப்பிடியாக புதிய கூட் டாளிகளைத் தேடுகிறது.

இரண்டாவதாக, உலக மேலாதிக்கத்திற் கான போராட்டத்தின் இன்றைய கட்டத்தின் சிறப்பு அம்சம் என்னவெனில், இப்பாதையில் பொருளாதார இடர்ப்பாடுகள் உட்பட மேன்மேலும் புதிய புதிய இடையூறுகள் தோன்றுவதாகும். ஆயுதப் போட்டியின் பாதையில் மேற்கொண்டு செல்வதன் மூலமும் பதட்டத் தணிவைத் தவிர்த்தும் அமெரிக்கப் பொருளாதாரத்திலும் மொத்தமாக உலகப் பொருளாதாரத்திலும் உள்ள கடுமையான நெருக்கடிகளைத் தீர்க்க முடியாது என்னும்

ஒரு கருத்து மேற்கத்திய பொதுமக்களின் மனதில் 70ஆம் ஆண்டுகளில் தோன்ற ஆரம்பித்தது. ஆனால் இன்றைய அமெரிக்கத் தலைமையோ இப்பிரச்சினைகளின் முன் வேறொரு பாதையை, மக்கள் விரோத, சமூக விரோதப் பாதையைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்து, மக்களை ''இழுத்துப் பிடிக்குமாறும்'' ''உலகத் தலைமைக்கான'' போட்டியால் ஏற்படும் பலிகளைச் சகித்துக் கொள்ளுமாறும் அறைகூவல் விடுத்தது. இந்த அறைகூவல்கள் அமெரிக்க உழைப்பாளிகளை நோக்கி விடப்பட்டவை என்பது புரிந்ததே; இராணுவச் செலவினங்களின் கடுமையான சுமையை இவர்கள்தான் ஏற்க வேண்டும், எனவேதான் இவர்களை மாயையான ''சோவியத் இராணுவ அபாயத்தைக்'' காட்டி சகலவிதத்திலும் அச்சுறுத்துகின்றனர்.

இப்புதிய அம்சங்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்க நாட்டங்களுக்கு எதிர் காலமில்லை என்பதையும் அவை இன்று எந்த அளவிற்கு ஆபத்தானவை என்பதையும் மெய்ப்பிக்கின்றன. மற்ற நாடுகள், மக்களின் மீது ஆதிக்கம் செலுத்தும் முயற்சியில் ஏகாதிபத்தியம் எவ்வளவுக்கெவ்வளவு அதிக மாக வாய்ப்புகளை இழக்கின்றதோ ஆக்கிர மிப்பு குணம் மிக்க, தொலைநோக்கற்ற இதன் பிரதிநிதிகள் அவ்வளவுக்கவ்வளவு மூர்க்கத்தோடு சாடுகின்றனர். எனவேதான் சர்வதேச உறவுமுறைகளில் முற்றிப் போன வியாதியாகிய அமெரிக்க மேலாதிக்கவாதத்தின்

எல்லா வெளிப்பாடுகளையும் எவ்வித சமரசமுமின்றி அம்பலப்படுத்தி அகற்றுவதற்கான போராட்டம் இன்று மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

## 2. அமெரிக்க இராணுவ-அரசியல் சிந்தனை மற்றும் இராணுவ வெறிச் சித்தாந்தம் உருவானதில் சில சிறப்பியல்புகள்

மேலே நாம் பார்த்த மேலாதிக்கவாதப் பாரம்பரியங்கள் அமெரிக்க இராணுவ-அரசியல் சிந்தனையும் இராணுவ வெறிச் சித்தாந்தமும் உருவானதில் எப்போதுமே பெரும் பங்காற்றின. அமெரிக்க ஐக்கிய நாட்டை ஒரு சமாதான அரசாக சித்தரிக்கவும் இராணுவப் போர்த்தந்திரச் சிந்தனையின் ஐரோப்பியப் பாரம்பரியம் ஏதோ இதற்கு அன்னியமானதைப் போன்று கூறவும் அமெரிக்க விஞ்ஞான இலக்கியத்தில் பன்முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.[6] அமெரிக்க இராணுவ இயந்திரத்தின் ஆக்கிரமிப்புச் சாரத்தை மூடி மறைப்பதும் இராணுவக் கருத்தமைப்புகள் மற்றும் தத்துவங்கள் பரவலாக உருவாக்கப்படுவதை மறைப்பதும்தான் இத்தகைய முயற்சிகளின் நோக்கங்களாகும்.

இன்றைய அமெரிக்கப் போர்த்தந்திரச் சிந்தனை மிகவும் சிக்கலான, முரண்பாடு நிறைந்த பாதையைக் கடந்து வந்துள்ளது. புறவய ரீதியான, அகவய ரீதியான அம்சங்கள் இச்சிந்தனையின் பரிணாமத்தின் மீது செல்

வாக்கு செலுத்தின; நாட்டு வரலாற்று வளர்ச்சியின் சிறப்பியல்புகள், உதாரணமாக, மார்க்சிய-லெனினிய ஆசான்கள் பன்முறை கோடிட்டுக்காட்டியபடி அமெரிக்க ஐக்கிய நாடு நிலப்பிரபுத்துவத்தை அனேகமாகச் சந்திக்காமல் ஆரம்பம் முதலே முதலாளித்துவ அடிப்படையில் வளர்ந்தது என்பது இந்த அம்சங்களை நிர்ணயித்தன. இது நாட்டுத் தலைவர்களின் இராணுவச் சிந்தனையின் மீதும் செல்வாக்கு செலுத்தியது. மேலும் இவர்களின் இராணுவ-அரசியல் கருத்துகள், ஐரோப்பிய முடியரசுகளை எதிர்த்து நின்று, குடியரசு ஆட்சியைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் நிலவிய சூழ்நிலைகளில் உருவாயின. ''மாபெரும் சமுத்திரங்களும் பலவீனமான அண்டை நாடுகளும்''[7] சூழ்ந்திருந்த ஒரு நிலையில்தான் அமெரிக்கா வளர்ந்து வந்தது என்பதும் ஒரு முக்கிய அம்சமாகும்.

அமெரிக்க இராணுவச் சிந்தனையின் பரிணாமத்தில் நாட்டு வரலாற்றின் குறிப்பிட்ட சம்பவங்களுக்கேற்ற நான்கு முக்கியக் கட்டங்களைச் சுட்டிக் காட்டலாம். முதல் கட்டம் — அமெரிக்க ஐக்கிய நாடு உருவானது முதல் உள்நாட்டு யுத்தம் வரை. இந்த யுத்தத்தின் போது குறைந்த சாதனங்களைக் கொண்டு குறுகிய நோக்கங்களை அடைவதற்குப் பதில் பரந்த, அடிப்படை லட்சியங்களை அடைய பெரும் இராணுவங்கள் முயன்றன. இரண்டாவது கட்டம் — உலகின் மறுபங்கீட்டிற்கான ஸ்பெயின்-அமெரிக்க யுத்

தமும் பிலிப்பைன் தீவுகளை இணைத்துக் கொண்டதும் (**1899—1901**). மூன்றாவது கட்டம்—மேற்கத்திய கோளார்த்தத்தில் ஏகாதிபத்திய அரசியல் தீவிரமடைந்ததும் இரண்டு உலக யுத்தங்களில் கலந்து கொண்டதும். நான்காவது கட்டம்—அணு ஆயுதத்தை உருவாக்கியது முதல் உலக ஆதிக்கம் மற்றும் உலகளாவிய மேலாதிக்க அரசியலுக்கு மாறியது வரை.

இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்னராகவே கடும் ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள ஏகாதிபத்திய வட்டங்கள், இராணுவத்தினர், இவர்களுக்குச் சேவை புரியும் விஞ்ஞான துறையினர் ஆகியோரின் பிரதிநிதிகளடங்கிய பரவலான கதம்பத் திரள் நவீன இராணுவ வெறிச் சித்தாந்தத்தின் அடிப்படைகளை உருவாக்குவதில் இறங்கியது. இது இராணுவத் துறையை மட்டுமின்றி சமூக-பொருளாதாரத் துறையையும் ஆட்கொண்டது, அமெரிக்கச் சமுதாயத்தின் ஆன்மீக வாழ்வில் ஊடுருவியது. இராணுவ வெறிக் கருத்துகளைப் பின்பற்றி, இராணுவ முறையின் பல்வேறு பிரிவுகளை ஒரே இராணுவ இயந்திரமாக உருவாக்க உதவிய ஆளும் மேல் மட்டத்தின் பிரதிநிதிகள், இந்த அம்சம்தான் அமெரிக்க ஐக்கிய நாட்டை ‘‘மாபெரும் வல்லரசாக்க’’ உதவ வேண்டும் என்று கருதினார்கள். இவர்களுடைய கருத்தின்படி பெரும் இராணுவம் இருப்பதே சர்வதேச விவகாரங்களில் முக்கிய, ஏன் முன்னணிப் பங்கை ஆற்ற அரசிற்கு

உள்ள திறமைக்கான முக்கிய நிரூபணமாகும். அமெரிக்கா இராணுவ நோக்கங்களுக்காகத் தன் சேம இருப்பில் கணிசமான பங்கை ஒதுக்குவதானது உலகில் தன் பங்கை ஆற்ற அதற்குள்ள திறமையையும் அதன் தயார் நிலையையும் வெளிப்படுத்துகிறது.

''தேசியப் பாதுகாப்புச்'' சித்தாந்தம் அமெரிக்க இராணுவப் போர்த்தந்திரச் சிந்தனையின் ''சிகரமாக'' அமைந்தது. யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் இந்நாட்டின் உலகளாவிய போர்த்தந்திரத்தின் அடிப்படையாக இது அமைந்தது.[8] ''தேசியப் பாதுகாப்புச்'' சித்தாந்தம் அமெரிக்காவின் உலகளாவிய போர்த்தந்திரத்தில் மேன்மேலும் அதிகப் பங்காற்றி வருகிறது. சமாதானம் மற்றும் யுத்த சூழ்நிலைகளில் அமெரிக்க ஆளும் வட்டங்களின் நலன்களுக்கு உலகு தழுவிய அளவில் வகை செய்வதற்கான சாதனங்களையும் முறைகளையும் தேர்ந்தெடுப்பதை இது நிர்ணயிக்கிறது. அமெரிக்க அரசின் பாதுகாப்பு முறை முழுவதுமே ''தேசியப் பாதுகாப்புச்'' சித்தாந்தத்தைத்தான் அடிப்படையாகக் கொண்டுள்ளது.[9] வெளி விவகாரக் கொள்கைத் துறையிலும் இராணுவத்தைப் பயன்படுத்துவது சம்பந்தமாயும் இதன் உதவியோடுதான் முக்கிய அரசாங்கத் தீர்மானங்கள் உருவாக்கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றன.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின், இராணுவ பலத்தின் உதவியால் ''சோஷலிசத்தைப் பின்தள்ளிவிடுவதன்'' மூலம் உலக

ஆதிக்கத்தையும் மேலாதிக்கத்தையும் நாடு வதை நியாயப்படுத்தும் ஒரு சித்தாந்தம் அமெரிக்காவிற்குத் தேவைப்பட்டது. இத் தகைய சூழ்நிலைகளில் அமெரிக்க ஆளும் வட்டங்கள், அமெரிக்கர்களின் உணர்வில் இராணுவ வெறிக் கருத்துகளைப் புகுத்தும் நோக்கத்துடன் பரவலான செயற்பாட்டிற்காக இராணுவ இயந்திரத்தின் நலன்களுக்குச் சேவை புரியும் தம் சித்தாந்தவாதிகளை அணிதிரட்டின. இதன் விளைவாய் இராணுவ வெறியைத் தூண்டிவிடும் வெளியீடுகள் மலை போல் குவிந்தன. இராணுவ-தத்துவஞான நோக்கிலிருந்து பார்க்கும் போது இந்த வெளியீடுகள் ஏகாதிபத்தியத்தின் இயற்கையி லும் ஏகாதிபத்திய அரசுகளின் போட்டியிலும் சோஷலிசத்தைப் பலாத்கார வழியில் ஒழிக்கும் முயற்சியிலும் பொதிந்துள்ள யுத்தத்தின் உண்மையான காரணங்களை மூடி மறைத்தன.

இந்தப் போக்குகள், ஏற்கெனவே கூறப் பட்ட ''தேசியப் பாதுகாப்புச்'' சித்தாந்தத்தில் அடங்கியுள்ளன; இது 1947ஆம் ஆண்டின் சட் டத்தில் சூத்திரப்படுத்தப்பட்டுள்ளது; ''தேசியப் பாதுகாப்போடு தொடர்புடைய விவ காரங்களில் மேலும் சிறப்பாக ஒத்துழைப் பதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு மற்றும் இராணுவக் கொள்கைகளின் பிரச்சினைகளின் ஒருங்கிணைப்பு''[10] என்று இச்சித்தாந்தம் இந்தச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. ''ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள சிபாரிசு களைக் கணக்கில் கொண்டு, நம்முடைய

இன்றைய மற்றும் எதிர்கால இராணுவ பலத்தின் தொடர்பில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் நோக்கங்கள், கடமைகள், அபாயத்தின் அளவு ஆகியவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து மதிப்பிடும்''[11] மிக முக்கியப் பொறுப்பை 1947ஆம் ஆண்டு சட்டத்தின் துணை ஷரத்து தேசியப் பாதுகாப்புக் கவுன்சிலுக்கு அளித்தது. இவ்வாறாக, சட்ட ரீதியாக ஊர்ஜிதப்படுத்தப்பட்ட இச்சித்தாந்தத்தின் அடிப்படையில் இராணுவ பலம் ''தேசியப் பாதுகாப்பின்'' முக்கிய அங்கமாக ஆக்கப்பட்டது.

வெளிநாட்டுக் கொள்கையின் மீது செல்வாக்கு செலுத்தும் வாய்ப்பை இராணுவ நிறுவனங்களுக்கு அளிப்பதோடு கூட இதை முற்றிலுமாக இராணுவ நோக்கங்களுக்கு உட்படுத்த வேண்டும் என்பதுதான் மேற்கூறிய சட்டத்தை உருவாக்கியவர்களின், உதாரணமாக முதல் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சராகிய ஜே. பாரெஸ்டலின் எண்ணமாக இருந்தது.[12] யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் அமெரிக்க ஆளும் வட்டங்களின் பேரரசு ஆவல்கள் அதிகரிக்க அதிகரிக்க ''தேசியப் பாதுகாப்புக்'' கருத்து மேன்மேலும் பரவலான வியாக்கியானத்தைப் பெற்றது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

இன்று அமெரிக்காவில் இச்சித்தாந்தத்தைப் பின்வருமாறு புரிந்து கொள்ளுகின்றார்கள்: ''தேசியப் பாதுகாப்பு'' என்பது நாட்டை எதிரியின் தாக்குதலிலிருந்து காப்பாற்றும்

ஒரு கொள்கையாக மட்டுமின்றி, ''எந்த ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார, அரசியல் நலன்களின் இழப்பு அரசின் அடிப்படை மதிப்புகளுக்கும் இயக்கத்திற்கும் ஆபத்தாக அமையுமோ அவற்றை''[13] ''பாதுகாக்கும்'' ஒன்றாகவும் கருதப்படுகிறது. அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் கூறும்படி, வளர்முக நாடுகளின் பொருளாதார மற்றும் அரசியல் சுதந்திரம் அதிகரித்துள்ளதும் மேற்கத்திய நாடுகளுடன் சமமான பொருளாதார உறவுகளை வைத்துக் கொள்ள அவற்றிற்கு உள்ள விருப்பமும் ''தேசியப் பாதுகாப்பு'' வரையறைக்குப் ''புதிய கோணத்தை'' அளித்துள்ளன. அவர்களுடைய நம்பிக்கையின்படி இன்று இது, சுதந்திர வர்த்தகக் கோட்பாடுகளுக்கு வகை செய்வதிலும் எரிபொருள் மற்றும் மூலப்பொருட்களின் இடங்களுக்குத் தங்கு தடையின்றி செல்ல விடுவதிலும் அடங்கியுள்ளது.

''தேசியப் பாதுகாப்பின்'' பொருளாதார அம்சத்தின் பங்கு வளர்ந்துள்ளதானது நாட்டின் பொருளாதாரம் வெளியிலிருந்து தாக்கப்படும் பிரச்சினை தோன்றுவதைக் கொண்டு (தொழில்துறை ரீதியாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் மூலப்பொருட்களின் இருப்பிடங்களைச் சார்ந்திருப்பதுடன் இது தொடர்புடையது) அமெரிக்க அரசியல் இயலர்களால் நியாயப்படுத்தப்படுகிறது. உதாரணமாக, இந்தப் ''புதிய யதார்த்தங்களின்'' அடிப்படையில் பாரசீக வளைகுடாவைப்

போர்த்தந்திர முக்கியத்துவ ரீதியில் மேற்கு ஐரோப்பாவிற்குச் சமமாக வாஷிங்டன் கருதுகிறது.

ஆனால் இதற்கு, ''புதிய கோணம்'' — பொருளாதார அம்சம் — பாதுகாப்பின் பழைய பாரம்பரிய அம்சங்களுக்கு, முக்கியமாக இராணுவ பலத்திற்கு மாற்றாக ஆகியுள்ளது என்று பொருளாகாது. பொருளாதாரக் காரணிகளைத் ''தேசியப் பாதுகாப்புக்'' கருத்தமைப்பில் சேர்ப்பதானது அரசாங்க மற்றும் விஞ்ஞான வட்டங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. ''ஜீவாதார நலன் களைப்'' பொறுத்த மட்டில் (இன்று பெரும் பாலும் பொருளாதார நலன்கள்தான் இதில் சேர்க்கப்பட்டுள்ளன) இன்றைய வடிவத்தில் ''தேசியப் பாதுகாப்புச்'' சித்தாந்தம் சாராம் சத்தில் உலகம் முழுவதற்கும் எதிரானது.

''தேசியப் பாதுகாப்புச்'' சித்தாந்தம் அமெ ரிக்காவின் பாதுகாப்பிற்கு வகை செய்யும் சாதனங்களில் இராணுவ பலத்திற்கு முதலிடம் அளித்துள்ளது. இராணுவ பலத்தின் மீதான வழிபாடு — இது ஒன்றும் அமெரிக்காவில் புதிதல்ல — அமெரிக்க இராணுவ வெறியின் நேரடியான தோற்றுவாயாகும்.[14] இது ஏகாதி பத்திய சூழ்நிலைகளில் மிக அதிகமாக வளர்ந்து பரந்தது. இன்றைய இராணுவ வெறி சாரத்தில் வெளிப்படையாக எதிர்ப் புரட்சித் தன்மையை உடையது, பிற்போக் கானது, எல்லாவற்றிற்கும் மேலாக உண்மை யான சோஷலிசத்திற்கும் சமூக முன்னேற்றம்

மற்றும் தேசிய விடுதலைச் சக்திகளுக்கும் எதிரானது.

போர்த்தந்திரப் பிரச்சினைகளின் பாலான பாரம்பரியமான அமெரிக்க அணுகுமுறை ஐரோப்பிய அணுகுமுறையைப் பெரிதும் ஒத்துள்ளது — ஏன் வழக்கத்தை விட அதிகமாகக் கூட ஒத்துள்ளது. மற்ற மேற்கத்திய நாடுகளைப் போன்றே இராணுவப் போர்த் தந்திரப் பிரச்சினைகளைப் பற்றி எழுதிய அமெரிக்க ஆசிரியர்களும் பெரும்பாலும் முழுநேர இராணுவத்தினராக இருந்தனர். ஐரோப்பிய கண்டத்தில் நடந்தது போன்றே அவர்களும் போர்த்தந்திரப் பிரச்சினைகளைத் தத்துவ நோக்கிலிருந்து பார்க்காமல் அதிகமாக தொழில்நுட்ப நோக்கிலிருந்தும் வரலாற்று நோக்கிலிருந்தும் ஆராய்ந்தனர். மற்ற நாடுகளைப் போன்றே ஆராய்ச்சியின் தனியான அம்சமாகப் போர்த்தந்திரத்தை எடுத்துக் கொள்வது அலட்சியப்படுத்தப்பட்டது, ஏனெனில், பல அமெரிக்க நிபுணர்களின் மதிப்பீட்டின்படி, இராணுவத் தலைவர்கள் இத்தகைய பகுப்பாய்வுத் தரத்திற்குத் தயார்படுத்தப் படவில்லை. ஆனால், போர்த்தந்திர ஆராய்ச்சிகளில் அமெரிக்க ஆசிரியர்கள் முன்னணி நிலைகளை வகிக்காவிட்டாலும் அமெரிக்கா இத்துறையில் பின்தங்கியிருக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

இராணுவப் போர்த்தந்திரத்தின் தத்துவார்த்தப் பிரச்சினைகளைப் பொறுத்த வரை, இவற்றை உருவாக்குவதில் முழுநேர இராணுவத்

துறையினர் எப்போதுமே மேலோங்கி நின்றனர். இவர்களுடைய வாதங்களும் கருத்து களும் இறுதியில் தீர்மானகரமானவையாக இருந்தன. நிச்சயமாக, ''சிவில் போர்த்தந்திர வாதிகளும்'' (இராணுவத்தினரைப் போன்றே இவர்களும் ஆளும் வர்க்கத்தின் நலன்களைப் பிரதிபலித்தனர்) இதில் தீவிரப் பங்கேற்றனர். பகுப்பாய்வு முறைகளால் முற்றிலும் இராணு வமயமான சிந்தனையை ''செழுமைப்படுத்துவ தும்'' நிலவரத்தை முழுமையாக இராணுவ ரீதியாகப் புரிந்து கொள்வதற்கும் அதன் அரசியல் மதிப்பீட்டிற்கும் இடையே ஒரு குறிப்பிட்ட சமன்நிலையைத் தோற்றுவிப்பதும் தான் இவர்களுடைய கடமையாக இருந்தன. இறுதியாகப் பார்த்தால் அமெரிக்க வெளி நாட்டுக் கொள்கையின் லட்சியங்களை அடை யும் சாதனங்களையும் முறைகளையும் மேம் படுத்துவதைப் பற்றிப் பேசப்பட்டது.

அமெரிக்காவில் இராணுவ-அரசியல் சிந் தனையின் வளர்ச்சியில் ''சிந்தனை ஆலை களும்'' பல்கலைக்கழகங்களும் குறிப்பான பங்காற்றுகின்றன. இரண்டாவது உலக யுத்தத்தின் போதுதான் அமெரிக்க விஞ்ஞானி கள் இராணுவப் பிரச்சினைகளின் மீதான ஆராய்ச்சியில், குறிப்பாக போர்த்தந்திரக் குண்டு வீச்சு விமானங்களை உருவாக்கி, பயன்படுத்துவது போன்ற புதிய திசையில் பரவலாக இறங்கினர். இலக்குகளை முடிவு செய்வதிலும் எதிரியின் விமான எதிர்ப்பு தற்காப்பைப் பிளந்து செல்லும் முறைகளை

வகுப்பதிலும் விஞ்ஞானிகள் பங்கேற்றனர். யுத்தத்தின் இறுதியில் அணு குண்டு தோற்றுவிக்கப்பட்டதையடுத்து விஞ்ஞானிகளின், குறிப்பாக பௌதீக விஞ்ஞானிகளின் செல்வாக்கு பெரிதும் உயர்ந்தது. இதுதான், வான்படையின் நடைமுறைத் தந்திர மற்றும் போர்த்தந்திரக் கடமைகளின் தீர்வில் விஞ்ஞான உலகுடன் நிரந்தரத் தொடர்புகளை வைத்துக் கொள்ளும் அவசியத்தை வான் படைச் சக்திகளின் படைத்தலைமையகத் தலைவன் ஜெனரல் ஹெ. அர்னோல்டிற்கு உணர்த்தியது. நாஜி ஜெர்மனியின் அனுபவமும் இதன் மீது தாக்கம் செலுத்தியது; அமெரிக்க நிபுணர்களின் மதிப்பீட்டின்படி பாசிச ஜெர்மனி, ஜெட் என்ஜினைத் தோற்றுவித்தது உட்பட பல துறைகளில் தொழில்நுட்பக் குறியீடுகளில் அமெரிக்க ஐக்கிய நாட்டை விஞ்சி நின்றது. ஹிட்லர் கோரியபடி இந்த என்ஜின் குண்டு வீச்சு விமானங்களுக்குப் பொருத்தப்படாமல் சண்டை விமானங்களுக்குப் பொருத்தப்பட்டிருந்தால் பிரிட்டிஷ்-அமெரிக்க வான் தாக்குதல் முற்றிலுமாக முறியடிக்கப்பட்டிருக்கலாம்.[15]

வான்படைச் சக்திகளின் படைத்தலைமையகத்தால் தோற்றுவிக்கப்பட்ட ரேண்டு (RAND) கார்ப்பரேஷன்தான் பெரும் செல்வாக்கு மிக்க, முதல் ‘‘சிந்தனை ஆலையாக’’ இருந்தது. இதற்குப் பின்னால் இதைப் போன்ற ஆலோசனை கூறும் நிறுவனங்கள் பல தோன்றின. பெரும்பாலும் இவை

பாதுகாப்பு அமைச்சகத்தின் நிதி ஒதுக்கீடுகளால் பராமரிக்கப்படுகின்றன. சமீப காலத்தில் இத்தகைய ஆலோசனை ஸ்தாபனங்கள் ''சிவில் போர்த்தந்திரவாதிகளைப்'' பயிற்றுவிக்கும் ஒரு குறிப்பிட்ட வடிவமாக மாறியுள்ளன; இவர்கள் பின்னால் பல நேரங்களில் பாதுகாப்பு அமைச்சகத்தின் நிர்வாக உறுப்புகளிலும் இலாக்காக்களிலும் தலைமைப் பதவிகளை வகிக்கின்றனர்.

அமெரிக்கப் பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சி மையங்களும் ஒப்பந்தங்களுக்கேற்ப அரசாங்கக் கட்டளைகளை நிறைவேற்றுகின்றன. ஹார்வர்டு பல்கலைக்கழகம், மாஸச்சுஸெட்ஸ் தொழில்நுட்பக் கல்லூரி, கொலம்பியா மற்றும் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் தோற்றுவிக்கப்பட்ட இதைப் போன்ற முதல் மையங்கள் இராணுவ நிறுவனங்களுடன், குறிப்பாக முழுநேர இராணுவத்தினருடன் மிக நெருக்கமாக ஒத்துழைத்தன.

''சிந்தனை ஆலைகள்'', பல்கலைக்கழக மையங்கள், பல்வேறுவிதமான ''லாபி'' ஸ்தாபனங்கள் ஆகியவை இராணுவ-தொழில் துறை இணையத்தின் மீது நிற்கும் ஒருவித ''மேல்கட்டுமானமாக'' விளங்குகின்றன; இதன் உதவியால் அதிக ஆக்கிரமிப்பு நோக்குள்ள, தேசியவெறி கொண்ட வெளிநாட்டுக் கொள்கைக்காகவும் இராணுவச் செலவினங்களை அதிகப்படுத்துவதற்காகவும் நிர்ப்பந்திக்கும் பிரச்சாரங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்

படுகின்றன. இந்த ''மேல்கட்டுமானத்திற்கு'' மிதமிஞ்சிய நிதி வாய்ப்புகள் உள்ளன, ''லாபி'' கோஷ்டிகள் சாதாரணமாக நன்கு ஒழுங்கமைக்கப்பட்டவை, பாதுகாப்பு அமைச்சகத்திலும் காங்கிரசிலும் தமக்கு ஏற்ற வகையில் தீர்மானங்கள் எடுக்கும்படியாக இவை பார்த்துக் கொள்கின்றன.

இராணுவ-தொழில்துறை இணையத்தின் வெளிப்படையான இராணுவ வெறி ஸ்தாபனங்களோடு கூட, இவற்றிற்கு இணையானவை போன்ற வேறு மாதிரியான குழுக்களும் உள்ளன. இவை ''கழுகுகளின்'' அதிதீவிர நிலைகளுக்கு எதிராக அடிக்கடி குரல் எழுப்புகின்றன. அமெரிக்க அரசியல் சங்கேத மொழியில் இவை ''புறாக்கள்'' என்று அழைக்கப்படுகின்றன. சாராம்சத்தில் இவை மிதவாத-முதலாளித்துவக் கூட்டமைப்புகள். உலகின் புதிய யதார்த்தங்களுக்குப் பழக்கப் படுத்திக் கொள்ளும் வடிவங்களைத் தேடும் யதார்த்த சிந்தனையுள்ள, ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் இவற்றில் உள்ளனர்.

இக்குழுக்கள் கோட்பாட்டு ரீதியாக பதட்டத் தணிவுக் கொள்கையை ஆதரித்தாலும் வலது சாரிகளின் நிர்ப்பந்தத்தால் அடிக்கடி தம் நிலைகளிலிருந்து பின்வாங்கி, தொடர்ச்சி யின்மையை வெளிப்படுத்துகின்றன. வலதுசாரி களிடம் உள்ளதை விட கணிசமான அளவு அதிகமான அறிவுத்துறை உள்ளாற்றல் இந்தக் குழுக்களில் ஒருமுனைப்படுத்தப்பட்டுள்ளது என் பதைக் கோடிட்டுக் காட்டுவது அவசியம்;

ஆனாலும் பல நேரங்களில் இது போதுமான அளவு பயன்படுத்தப்படுவதில்லை. ரீகன் நிர்வாகம் ஆட்சிக்கு வரும் முன் அந்தப் ''புறாக்கள்தான்'' ஏதோ சமஷ்டி அரசாங்கம் முழுவதையுமே நிர்வகித்ததாக இராணுவ-தொழில்துறை இணையம் கூறியது. இன்றைய ஜனாதிபதியின் போர்நாட்டமுள்ள இராணுவ வெறிக் கொள்கை, அதிகமான இராணுவச் செலவினங்கள், ஆயுதப்போட்டிக் கொள்கை ஆகியவற்றின் மீது சந்தேகம் தெரிவிக்கும் மிதவாதிகளின் நடவடிக்கைப் போக்குகளை இன்று வலதுசாரிகள் குறிப்பாகத் தாக்குகின்றனர். சமாதானத்திற்காகப் போராடும் ஒரு சில மத ஸ்தாபனங்களும் ஏன் ஐ.நா. சங்க ஆதரவு ஸ்தாபனம், சர்வபொது சமாதானத்திற்கான கர்னேகி நிதியமைப்பு, போர்டு நிதியமைப்பு, அட்லாண்டிக் கவுன்சில், அமெரிக்க விஞ்ஞானிகளின் சங்கம், ஆயுதக் கண்காணிப்பு சபை போன்ற பல அமைப்புகள் கூட பழமைவாதிகள் மற்றும் வலதுசாரிகளின் கண்டன விமரிசனத்திற்கு ஆளாகின்றன. கலிபோர்னியா, தெற்கு மற்றும் மத்திய மேற்கின் பிற்போக்குப் பத்திரிகைகளும் மிதவாதிகளுக்கு எதிராகப் போராடுகின்றன. இவை ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை விசேஷ இராணுவ விமரிசகர்களாக அமர்த்தி, இராணுவ நிறுவனங்களைக் கண்டிப்பவர்களை இராணுவப் பிரச்சினைகளில் தேர்ச்சியற்றவர்கள் என்று கூறி அவர்களை இகழ்ந்துரைக்கும் பொறுப்பை இவர்களுக்கு அளிக்கின்றன.

அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு தன் உண்மையான போர்த்தந்திர நலன்கள் விஷயமாக தேவையான தெளிவு எப்போதுமே இருந்ததில்லை, இப்போதும் இருக்கவில்லை என்றும் அது தன் பாதுகாப்பிற்கு ''அச்சுறுத்தல்கள்'' ஏற்படும் போது உரிய முறையில், உரிய நேரத்தில் செயல்படுவதில்லை என்றும் ஒரு சில மேற்கத்திய ஆசிரியர்கள் கூறுகின்றனர். ஆனால் அமெரிக்க வரலாறோ, அமெரிக்க ஆளும் வர்க்கம் எப்போதுமே ''மிதமிஞ்சிய பாதுகாப்பிற்கு'' வகை செய்து வந்துள்ளதை மெய்ப்பிக்கிறது.

19ஆம் நூற்றாண்டில் சமுத்திரங்களால் சூழப்பட்டு, தன் எல்லைகளில் தீவிரப் போட்டியாளர்கள் இல்லாத நிலையிலிருந்த அமெரிக்கா சுயேச்சையான அரசுகளின் மத்தியில் ஈடு இணையற்ற பாதுகாப்பைப் பெற்றிருந்தது. உலகில் தனக்கிருந்த செல்வாக்கான நிலையைத் தக்கவைத்துக் கொள்வதில் அமெரிக்காவிற்கு இருந்த விருப்பம் அதே நேரத்தில் கட்டுப்பாடற்ற அதன் விஸ்தரிப்புக் கொள்கைக்கான ஊக்குச் சக்தியாகவும் இதை நியாயப்படுத்துவதாகவும் இருந்தது.

அமெரிக்க ஆக்கிரமிப்புத் தன்மையையும் பலத்தை ஆதாரமாகக் கொண்ட இராஜதந்திரத்தையும் புரிந்து கொள்ளுவதில் 1890ஆம் ஆண்டுகளின் பத்தாண்டுக் காலம் குறிப்பிட்ட ஒரு திறவுகோலாக இருக்கிறது. ஸ்பெயினுக்கு எதிராக 1898இல் நடந்த யுத்தத்தில் ஸ்பெயின் தோற்கடிக்கப்பட்டது. ஆனால்

ஒரு காலனியாதிக்க வல்லரசிற்குப் பதிலாக வெற்றி பெற்ற அமெரிக்காவின் வடிவத்தில் புதிய ஒடுக்குமுறையாளர்கள் வந்தனர். கையெழுத்திடப்பட்ட பாரிஸ் ஒப்பந்தம் புயெர்ட்டோ ரிக்கோ, குவாம், பிலிப்பைன்ஸ் ஆகியவற்றை அமெரிக்காவிற்கு அளித்தது. அமெரிக்கா ஒரு காலனியாதிக்க வல்லரசாகி யது. 1904இல் ஜனாதிபதி தி. ரூஸ்வெல்ட் ''மோன்ரோ சித்தாந்தத்துடன்'' ''கூடுதல் அம்சங்களைச்'' சேர்த்தார் (இது ரூஸ்வெல்ட் டின் பிற்சேர்க்கை எனப்பட்டது). இதன்படி அமெரிக்க நலன்களின் மண்டலத்தில் ஐரோப் பிய தலையீட்டைத் தடுக்கும் அவசியம் ஏற்பட்டால் சர்வதேச போலீசாக இருக்கும் உரிமையை அமெரிக்கா பெற்றது. உதாரண மாக, இந்தப் ''பிற்சேர்க்கையை'' அமெரிக்கா, சான்தோ தொமின்கோவில் தலையிட்ட தை நியாயப்படுத்துவதற்காகப் பயன்படுத்திக் கொண்டது.

சென்ற நூற்றாண்டின் 90ஆம் ஆண்டுகளில் உலகில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் பங்கைப் பற்றிய அமெரிக்க கண்ணோட்டங் களில் இரண்டு முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டன. முதலாவதாக, நாட்டிற்கு வெளியே நடைபெற்ற நிகழ்ச்சிகளில், குறிப்பாக பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவற்றில் நிரந்தரமாக ''இருப்பதற்கு'', அதாவது ''அக்கறை கொள்வதற்கு'' அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஏகாதிபத்திய நலன்கள் கட்டளை யிட்டன. இரண்டாவதாக, அமெரிக்கா

உலக அரசியலில் மேன்மேலும் அதிகமாக இழுக்கப்பட்டது, ''உலகளாவிய பொறுப்பு'' என்றழைக்கப்படுவதை மேன்மேலும் தீவிர மாகக் கூற ஆரம்பித்தது. இவ்வாறாக ''ரூஸ்வெல்ட்டின் பிற்சேர்க்கை'' சமமான அளவிற்கு பொருளாதார மற்றும் போர்த் தந்திரச் சித்தாந்தமாக இருந்தது.

அமெரிக்கத் தலைமை வட்டங்கள் ஏதோ சமாதானம் என்பதை அரசுகளுக்கு இடையே யான உறவில் சாதாரண ஒரு அம்சமாகக் கருதுகின்றன என்று அடிக்கடி அங்கிருந்து கூறப்படுவதெல்லாம் எப்போதுமே பொய்யாக ஒலித்து வந்துள்ளன. உண்மையில் அமெரிக்க ஆளும் வர்க்கம், சமாதானம் என்பது தற்காலிகமாக யுத்தம் இல்லாததைத்தான் குறிக்கிறது என்றும் அது அடுத்த யுத்தத்திற் கான ஒருவித இடைக்கால கட்டம் என்றும் எப்போதுமே கருதி வந்துள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் அரசு முறையில் இராணுவ வெறிச் சக்திகளுக்கு மேன்மேலும் அதிக இடத்தை அளித்து அவற்றிற்கு உறுதியோடு தீனி போட்டு வந்துள்ளது. அமெரிக்க இராணுவச் செலவினங்கள் அரசு பட்ஜெட்டின் மிக முக்கிய ஷரத்துகளில் ஒன்றாக மாறியுள்ளன. பொருளாதார உதவி செயல்திட்டங்களுக்கு ஆதரவாக காங் கிரசில் பேசும் நிர்வாகத்தின் பிரதிநிதிகளுக்கு, தாம் இராணுவ உதவி செயல்திட்டங்களுடன் ஒன்றிணைந்தால் வெற்றிபெறுவதற்கு அதிக வாய்ப்புகள் உண்டு என்பது தெரியும்.

1815ஆம் ஆண்டிலிருந்து முழுநேர இரா ணுவத்தினர் அமெரிக்க ஆட்சியின் உயர் மட்டத்திற்கு வர ஆரம்பித்தனர். நியூ ஆர்லியன்ஸ் அருகே நடந்த சமரில் வெற்றி பெற்ற ஜெனரல் ஏ. ஜேக்சன் அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். குடியரசு நிலவிய முதல் நூறு ஆண்டுகளில் ஆறு ஜெனரல்களும் (ஜா. வாஷிங் டன், ஏ. ஜேக்சன், வி. ஹாரிசன், ஸ. டெய் லர், பி. பியேர்ஸ், யூ. கிரான்ட்) ஒரு கர்னலும் (தி. ரூஸ்வெல்ட்) ஜனாதிபதிப் பதவியில் இருந்தனர். 1898இல் ஸ்பெயினுக்கு எதிரான யுத்தம் முடிந்த பின் ஜெனரல் நே. மாய்ல்சும் அட்மிரல் ஜா. டியூவேயும் வெள்ளை மாளிகையில் புக முயன்றனர். நவீன காலகட்டத்தில் ஜெனரல் டு. ஐசன் ஹோவர் இப்பாரம்பரியத்தைப் புனர் நாட்டி னார். இன்று ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் தம்முடைய இராணுவச் சேவையைப் பற்றி வாக்காளர்களுக்கு மிகவும் திருப்தியோடு எடுத்துரைக்கின்றனர். இன்று ஜனாதிபதிக்கு அவசியமான குணநலன்களை அவருடைய கடந்த கால இராணுவத் தொடர்பில் அடிக்கடி பார்க்கின்றனர்.

சமாதானக் காலத்தில் இராணுவ பலத் தைப் பற்றி சிந்திக்க ஏதோ அமெரிக்கர் களுக்கு விருப்பமில்லையென்று அடிக்கடி கூறுகின்றனர். இவ்வாறு கூறும் போது மேற்கத்திய ஆசிரியர்கள் பிரபல அமெரிக்க

கட்டுரையாளராகிய வா. லீப்மனை மேற்கோள் காட்டுகின்றனர்; அமெரிக்கர்கள் சமாதானக் காலத்தில் மிகவும் சமாதானமானவர்கள் என்றார் அவர். லீப்மனின் கருத்து 1941இல் பேர்ல் ஹார்பரின் பெருநாசத்தில் முடிவடைந்த சம்பவங்களைப் பற்றிய அவரது மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது. பல்வேறு படைப் பிரிவுகளின் பகைமைப் போட்டி, அதிகார சடங்கு ரீதியான குழப்பம், செய்தி மற்றும் பகுப்பாய்வு- சேவைகளின் குறை ஆகியன சந்தேகத்திற்கிடமின்றி இங்கு தம் பங்கை ஆற்றின. ஆனால் பெருநாசத்திற்கு இட்டுச் சென்ற முக்கியக் காரணி அமெரிக்க ஆளும் வட்டங்களின் குறுகிய நோக்கங்களாகும். இந்த ஆளும் வட்டங்கள் ஜப்பானிய விஸ்தரிப்பை சோவியத் யூனியனின் பக்கமாகத் திருப்ப முடியுமென கனவு கண்டன. இந்த நோக்கிலிருந்து பார்த்தால் ஹவாய்த் தீவுகளில் நடந்த சோக நிகழ்ச்சி அசாதாரண சம்பவமாகுமே தவிர அமெரிக்கர்களுடைய அளவிற்கு மிஞ்சிய சமாதான நாட்டத்தின் விளைவல்ல.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலன்களைப் பாதுகாக்கும் பேச்சு வந்தால், அமெரிக்க நலன்களுக்கு வகை செய்வதற்குப் பொறுப்பேற்றிருந்தவர்கள் அவ்வளவு சமாதான நாட்டமுடையவர்களாக இருக்கவில்லை. ஆனால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் யுத்தங்களில் இறங்க அமெரிக்க ஐக்கிய நாடு

பெரிதும் தயாராக இருந்தது.

சமாதான காலத்தில் அமெரிக்கர்களின் சமாதான விருப்பத்தைப் பற்றிய கூற்றுகள் படைக்கலைப்புத் துறையில் நடைமுறை ரீதியான நடவடிக்கைகளின் நிறைவேற்றத்தை முன்னனுமானிக்க வேண்டும். ஆனால் இது சம்பந்தமான வாய்வீச்சுகள் அளவிற்கதிகமாக இருந்தாலும் இது எப்போதுமே அமெரிக்க ஆளும் வட்டங்களின் லட்சியமாக இருக்க வில்லை. **1960**ஆம் ஆண்டுகளில் ஆயுதங்களை மட்டுப்படுத்தும் கொள்கைக்கு மாறிச் சென்ற தை முழு மற்றும் சர்வாம்ச படைக் கலைப்பு பற்றிய லட்சியத்தைக் கைவிட்ட தாகக் கருதலாம்.

அணு ஆயுத சகாப்தத்தில் இராணுவ பலத்தை தெளிவான அரசியல் மேம்பாடாக மாற்ற அமெரிக்க இராணுவ-அரசியல் தலை மையால் இயலவில்லையென மிக ஆக்கிரமிப்பு வெறி கொண்ட அரசியல் வட்டங்களின் பிரதிநிதிகள் இத்தலைமை மீது குறை கூறுகின்றனர். ஆனால் இதற்கும் ஆட்சி யாளர்களின் சமாதான நாட்டத்திற்கும் அல்லது இவர்களின் போர்த்தந்திர ''திற மையின்மைக்கும்'' சம்பந்தமேயில்லை. உலக அரங்கில் உள்ள சக்திகளின் சமன்நிலையிலும் பலம் மிக்க, சமாதான நாட்டமுடைய சோவியத் யூனியன் இருப்பதிலும்தான் விஷ யம் அடங்கியுள்ளது, சோவியத் யூனியனின் கொள்கை மேற்கூறிய மாற்றத்திற்கான வாய்ப்புகளுக்குத் தடையாக நிற்கிறது. இரா

ணுவ பலத்தைப் பயன்படுத்துவது என்றால் ஏராளமாகச் செலவாகும் என்பதை அமெரிக்கர்கள் கவனத்தில் கொள்வார்கள் எனும் அம்சத்தையும் கணக்கில் கொள்ள வேண்டும். கடந்த பத்தாண்டுகளில் இராணுவ செலவுகள் மிகவும் அதிகரித்துள்ளன, மறுபுறமோ, இராணுவ பலத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படும் மிகப் பெரும் இழப்பின் விளைவாக இப்பலத்தால் அடையப்படும் அரசியல் நோக்கங்களின் மதிப்பு ஒப்பீட்டளவில் வீழ்ச்சியடைகிறது. ஆனால் இராணுவ-அரசியல் தலைவர்கள் இங்கும் தமக்கு ஆதாயத்தைக் கண்டு பிடித்தனர். கட்டுப்படுத்திக் கொள்ளுதல் என்றழைக்கப்படும் கருத்தமைப்பைப் பற்றி இங்கே கூறுகிறோம். இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய சர்வதேச நெருக்கடிகளின் வரலாறு காட்டும்படி, இக்கருத்தமைப்பின் போர்வையின் கீழ்தான் அமெரிக்க ஐக்கிய நாடு ''பலாத்கார இராஜதந்திரத்தை'' நாடியது, சில சமயங்களில் ஒரு சில பயன்களை (இவை குறுகிய காலத்திற்காக என்றாலும்) அடைந்தது.

அமெரிக்க ஆளும் வட்டங்களின் ''சமாதான நாட்டம்'' பற்றிய முகஸ்துதியான கூற்றுகளையும் சமாதான காலத்தில் இராணுவக் கருத்தினங்களின் மூலம் தாம் சிந்திப்பதில்லை என்ற அவற்றின் கூற்றுகளையும் லத்தீன் அமெரிக்காவில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக் கொள்கை ஆணித்தரமாகப் பொய்ப்பிக்கிறது. மெச்சிக்கோ, ஹைட்டி, குவாட்டிமாலா,

கியூபா, டொமினிக்கன் குடியரசு, ஹோண்டூராஸ், நிக்கராகுவா, கிரினாடா போன்ற நாடுகளைப் பொறுத்த மட்டில் இராணுவ ஆக்கிரமிப்பு, இராணுவ பலத்தைப் பயன் படுத்தியோ, பயன்படுத்துவதாக அச்சுறுத்தியோ இவற்றின் உள்விவகாரங்களில் தலையிடுவது ஆகியவை அமெரிக்க கொள்கையின் விசேஷ அம்சங்களாகும்.

இன்னுமொரு அம்சத்தையும் குறிப்பிட வேண்டும். அமெரிக்க இராணுவ-அரசியல் தலைவர்கள் ஏதோ அரசியல் கருத்துகள் இராணுவ விவகாரங்களில் குறுக்கிட அனுமதிப் பதில்லை என்ற கூற்றுகள் அமெரிக்க மற்றும் மேற்கு ஐரோப்பிய வரலாற்றியலில் கணிசமான இடத்தை வகிக்கின்றன. வேறுவித மாகச் சொன்னால், யுத்தத்தை அரசியலின் தொடர்ச்சியாக அவர்கள் பார்க்கவில்லை என்று காட்ட முயற்சி செய்யப்படுகிறது. இராணுவ வெற்றியை அடைய முயலும் அமெரிக்கத் தலைவர்கள், யுத்தத்தை நடத்து வதன் உண்மையான, அதாவது அரசியல் பொருளை ஏதோ மறக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

ஆனால் இக்கூற்று யதார்த்தத்திலிருந்து பெரிதும் விலகியுள்ளது.

200 ஆண்டு கால அமெரிக்க வரலாற்றில் இராணுவ-அரசியல் தலைவர்கள், இராணுவ பலத்தைக் கொண்டு அரசியல் லட்சியங்களை அடைவதன் அவசியத்தை நன்கு உணர்ந்திருந்த னர். 19ஆம் நூற்றாண்டு இதற்கான

பல உதாரணங்களைத் தருகிறது. 1846–1848இல் மெக்சிக்கோவுடன் அமெரிக்கா நடத்திய யுத்தம் குறிப்பிடத் தக்கது. இந்த யுத்தத்தின் விளைவாய் பெரும் சூறையாடும் ஒப்பந்தம் மெக்சிக்கோ மீது திணிக்கப்பட்டது.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது, குறிப்பாக இதன் இறுதிக் கட்டத்தில் அமெரிக்கக் கொள்கை, ஐரோப்பாவில் வளர்ந்து வரும் சோவியத் யூனியனின் செல்வாக்கை இராணுவ வழிகளைக் கொண்டு தடுத்து நிறுத்துவதை, அதாவது அரசியல் லட்சியத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

இரண்டாவது போர்முனையைத் திறப்பது சம்பந்தமான அமெரிக்கக் கொள்கை முழுவதும், இராணுவ பிரச்சினைகளை அமெரிக்கா எந்த அளவிற்கு ''அரசியல்மயப்படுத்தியது'' என்பதற்கு சான்று பகர்கிறது. யுத்தத்திற்குப் பின், கொரியாவிலும் வியட்நாமிலும் அமெரிக்க ஏகாதிபத்தியம் நடத்திய போர்களின் போது கம்யூனிசத்தைக் ''கட்டுப்படுத்தி பின்னுக்குத் தள்ளுதல்'' எனும் அரசியல் நோக்கம்தான் அமெரிக்காவின் முன் நின்றது. அமெரிக்கத் தலைமை ஏதோ ''தூய'' இராணுவ நடவடிக்கைகளை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் பொய்யான கூற்றிற்கு இது இன்னுமொரு மறுப்பாகும். இந்த யுத்தங்களில் தான் முன் வைத்த அரசியல் லட்சியங்களை

அடைய இயலவில்லை என்பது வேறு விஷயம்; இது போக, இந்த யுத்தங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டின் முழு இராணுவ, அரசியல் தோல்வியில் முடிந்தன.

மற்ற நாடுகளில் இராணுவத்தினர் போர்த் தந்திரத்தை ''மறைமுகமாக'' அணுகினார்கள் என்றால் அமெரிக்க இராணுவ தலைமை ஏதோ ''நேரடியாக'' அணுகியதாக ஒரு கூற்று பூர்ஷ்வா வரலாற்றியலில் இடம் பெற்றுள்ளது. பிரபல பிரிட்டிஷ் இராணுவ வரலாற்றாசிரியராகிய லி. கார்டின் வரையறுப் பின்படி[16] வளைந்து செல்லும் நடவடிக்கைகள், திரித்துரைத்தல், பிரச்சாரங்கள் போன்றவை ''மறைமுக'' அணுகுமுறைகளாக குறிப்பிடப்படுகின்றன; அதுவும் இதற்கான காரணம் ''உயர்வான'' லட்சியங்களிலும் அமெரிக்க மக்களிடம் தந்திரம் இல்லாததிலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆனால் கடந்த காலத்திலும் நவீன யுகத்திலும் 300 யுத்தங்கள் முற்றிலும் ''நேரடியான'' போர்த்தந்திரத்தையே பின் பற்றியதாக லி. கார்டே குறிப்பிடுகிறார். பல்வேறு மக்களினங்களும் நாடுகளும் இந்த யுத்தங்களில் ஈடுபட்டிருந்தன, எனவே அமெரிக்க ஐக்கிய நாடு விதிவிலக்கு அல்ல. கார்டின் வரையறுப்பின்படி ''நேரடியான'' மற்றும் ''மறைமுகமான'' போர்த்தந்திரங் களின் அடிப்படையில் இந்த யுத்தங்கள் நடத்தப்பட்டன. இந்த இரண்டு விதமான கோட்பாடுகளின் அடிப்படையிலும் செயல்

பட்ட போர்த்தளபதிகள் அமெரிக்க இராணுவ வரலாற்றில் இருந்தனர். ஜெனரல்கள் ஜோ. ஹூக்கெர், வி. லீ, டு. ஐசன்ஹோவர் ஆகியோர் முதலாவது கோட்பாட்டைப் பின்பற்றினர், ஜெனரல்கள் ஜா. வாஷிங்டன், நா. கிரின், சா. ஸ்காட் ஆகியோர் இரண்டாவது கோட்பாட்டைப் பின்பற்றினர். குறிப்பாக ஜெனரல் வி. ஷெர்மன் ‘‘மறை முகமான’’ போர்த்தந்திரத்தைத் தீவிரமான முறையில் ஆதரித்தார். எதிர்பாரா தாக்குதல் களைத் தொடுக்கும்படி கோரிய அட்மிரல் சே. நிமித்சும் இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவராயிருந்தார். அதே சமயம் பல அமெரிக்க இராணுவத் தளபதிகள் இரண்டு கோட்பாடுகளின் அம்சங்களையும் தம்முள் கொண்டிருந்தனர். உதாரணமாக, ஜெனரல் யூ. கிராண்ட் இவ்வகையைச் சேர்ந்தவர். இவர் ஏய்ப்பு நடவடிக்கைகளை உள்ளடக்கிய சண்டைகளையும் அலைக்கழிக்கும் நடவடிக்கை களையும் பயன்படுத்தினார்.

1950இல் கொரிய ஆக்கிரமிப்பின் போது ஜெனரல் மக்கார்தூர் கூறியதுதான் யுத்தத்தின் பாலான ‘‘நேரடியான’’ அமெரிக்க அணுகு முறையின் ‘‘சிகரமாகக்’’ கருதப்படுகிறது: ‘‘இராணுவ வெற்றிக்கு வேறொரு மாற்று கிடையாது’’ என்றார் அவர். ஆனால் மக்கார்தூரின் கண்ணோட்டங்கள் காட்டும்படி அவர் வேறொரு கருத்தை மனதில் வைத் திருந்தார். பேச்சுவார்த்தைகள் அல்லது சச்சரவு களைத் தீர்க்கும் மற்ற வழிகளை விட

இராணுவ வழிகளே சிறந்தது என்றும் இராணுவ வழிகளின் மூலம்தான் சர்வதேச நிலவரத்தைக் கண்காணிக்க முடியுமென்றும் இவர் கருதினார்.[17]

யுத்தத்தை நடத்துவது சம்பந்தமாக அமெரிக்க இராணுவ வெறி சித்தாந்தத்தில் நிலைபெற்றுள்ள பாரம்பரிய அணுகுமுறைகளின் இன்னுமொரு குறிப்பிடத் தக்க அம்சம் முற்றிலும் தொழில்நுட்ப விஷயங்களின் மீதான நம்பிக்கையாகும். முதலாளித்துவ சமுதாயத்தின் இயல்பான தன்மை, போர்வீரன் எந்த லட்சியங்களுக்காக தன் இன்னுயிரைத் தியாகம் செய்ய முடியுமோ அத்தகைய லட்சியங்கள் இல்லாமை ஆகியவற்றின் காரணமாய் அமெரிக்க இராணுவத்தில் முதலில் ஆயுதத்தை நம்புகின்றார்களே தவிர போர்வீரர்களின் தாயகப் பற்றை நம்புவதில்லை.

இரண்டு உலக யுத்தங்களில் பங்கேற்றபின் அமெரிக்க ஐக்கிய நாட்டில், இராணுவ தொழில்நுட்பங்களையும் பொருட்களையும் ''அளவிற்கு அதிகமாக உற்பத்தி செய்வதன்'' மூலமாகத்தான் இராணுவ மேம்பாடு அடையப்படுகிறது எனும் கருத்து இன்னமும் அதிகமாகப் பரவியது. இராணுவ மேம்பாட்டை மூலாதாரங்கள் மற்றும் தொழில்நுட்ப நிலையுடன் சமப்படுத்தும் ஆளும் வட்டங்களின் போக்கு மேற்கூறிய கருத்துடன் தொடர்புடையது.[18] இராணுவ-அரசியல் தலைமையின் கருத்துப்படி பின்வருபவைதான்

யுத்தத்தில் வெற்றியடைவதை நிர்ணயிக்கக் கூடிய ''நிரந்தரமாக இயங்கும் காரணி களாகும்'': ஆயுதங்களின் நிலை, முதலாவ தாக தொழில்நுட்ப திறன், டிவிஷன்களின் எண்ணிக்கையும் தரமும், படைத்தலைமையின் திறமைகள், போர்வீரர்களின் தார்மீகப் பலம், பின்னணியின் ஸ்திர நிலை.

தொழில்நுட்ப ரீதியாக உயர் வளர்ச்சி யடைந்த ஆயுத சாதனங்களை அமெரிக்கர்கள் பின்பற்றுவதானது இறுதியாகப் பார்த்தால் மிகவும் மனிதத் தன்மையற்ற யுத்த முறைகளைக் குறிக்கின்றது என்று சில ஆராய்ச்சியாளர்கள்[19] கருதுகின்றனர். இந் நோக்கிலிருந்து பார்க்கையில் வியட்நாம் யுத் தம் விசேஷமாகக் குறிப்பிடத் தக்கது. இங்கே அமெரிக்க இராணுவம் உயர் தொழில்நுட்ப வளர்ச்சியடைந்த ஆயுதங்களை (இரவைக் குண்டு முதலியவை) பயன்படுத்தியது, இவை மிகக் கொடிய விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. தம் போர்வீரர்களைக் காப்பாற்றும் பொருட்டு மிகப் பெருமளவு ஆயுதங்களைப் பயன்படுத்த அமெரிக்காவில் முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது. ஆனால் இங்கே விசேஷமாக குறிப்பிடப்பட வேண்டியது இன்னொரு அம்சமாகும்: அந் தந்த வரலாற்றுத் தருணத்தில் வெற்றி பெற வேண்டுமென இராணுவ-அரசியல் தலைமை கொண்டிருந்த உறுதி தம் போர்வீரர்களின் வாழ்வைக் காப்பாற்றும் அக்கறையைப் பன்மடங்கு விஞ்சி நின்றது.

நாட்டின் இராணுவ வரலாற்றில் மிகப் பெரும் இழப்புகளை ஏற்படுத்திய போராட்டங் களுக்குப் பல உதாரணங்கள் உள்ளன. இந்த நோக்கிலிருந்து பார்க்கையில் இரண்டா வது உலக யுத்தத்தின் போது பசிபிக் பெருங்கடலின் தீவுகளில் அமெரிக்கர்கள் நடத்திய போர்கள் குறிப்பிடத் தக்கவை.

இராணுவ வெறி கொண்ட சித்தாந்தமும் நடைமுறையும் உருவாவதன் மீது அமெரிக்க மேலாதிக்கவாதப் பாரம்பரியங்கள் செலுத் தும் செல்வாக்கின் சிறப்பியல்புகளைப் பற்றிக் கூறுகையில், இராணுவ மேம்பாட் டைப் பிரச்சாரம் செய்யும் அமெரிக்க ஐக்கிய நாடுதான், சர்வதேச நிலவரத்தின் சீர்குலைவிற்கு இட்டுச் சென்ற அழிவு ஆயுதங்களை உருவாக்குவதில் முன் நின்றது எனும் அம்சத்தைக் கவனிக்க வேண்டும். முதலில் இது, அமெரிக்க ஐக்கிய நாட்டில், இலக்கை நோக்கி சுயமாகச் செல்லவல்ல பல போர்முக ராக்கெட்டுகள், கண்டம் விட்டு கண்டம் செல்லும் பாலிஸ்டிக் ராக் கெட்டுகள் (இந்த ராக்கெட்டுகள் நீர்மூழ்கிக் கப்பல்களில் நிறுவப்பட்டிருந்தன) தோன்றி யதற்குப் பொருந்தி வரும்; அதே போல் இந்த ராக்கெட்டுகளைச் செலுத்தும் முறை இடையறாது மேம்படுத்தப்பட்டதையும் கூற வேண்டும், இது எதிரியை முடமாக்கும் முதல் தாக்குதல் திறமைகளை அடையும் நாட்டத்தைக் குறித்தது. இவ்வாறாக, தொழில் நுட்ப ரீதியாக ஆயுதங்களை இடையறாது

மேம்படுத்துவதைப் பற்றியும் இராணுவ போர்த்தந்திரக் கருத்தமைப்புகளை மேம்படுத்து வதைப் பற்றியும் இங்கே பேசப்படுகிறது. இவற்றின் உதவியால் அமெரிக்க ஐக்கிய நாடு அணு ஆயுத யுத்தம் உட்பட எல்லா யுத்தங்களிலும் வெற்றி பெறக் கூடும் என்று கருதப்படுகிறது.

அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் இதன் கூட்டு நாடுகள் சிலவற்றிலும், எதிர்த்து நிற்க முடியாத ஒரு பலம் மிக்க நாடாக அமெரிக்காவை சித்தரித்து, இச்சித்தரிப்பை பலப்படுத்தப் பெரும் முயற்சிகள் மேற்கொள் ளப்படுகின்றன. இதிலும் உள்நாட்டு யுத்தத் தின் போது ஜார்ஜியா வழியாக நடந்த பிரபல அணி நடை, டிரெஸ்டன் மீதான மிருகத்தனமான குண்டு வீச்சு, நாகசாகி மற்றும் ஹிரோஷிமாவின் மீதான அணு குண்டு வீச்சுகள் ஆகியவை அடிக்கடி மேற்கோள் காட்டப்படுகின்றன. இவ்வாறு மற்றவர்களை அச்சுறுத்தி, அவர்கள் மீது நிர்ப்பந்தம் செலுத்தும் இன்னொரு கூற்று இருக்கிறது. ‘‘முழுமுதல் கருத்தினங்களில்’’ உள்ள அமெரிக்க இராணுவ சிந்தனை பற்றிய கூற்று இதுதான். ஆம், உண்மை யிலேயே அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமை சோஷலிச நாடுகள் மற்றும் தேசிய விடுதலை இயக்கத்தை இப்படித்தான் அணுகு கிறது. முரட்டுத்தனமான இராணுவ பலம், நிர்ப்பந்தம், சகல விதமான தடைகள் ஆகியவற்றைப் பயன்படுத்திதான் இந்நாடு

களுடன் உறவு வைத்துக் கொள்ள வேண்டு மென இத்தலைமை கருதுகிறது. அதே சமயம் வாஷிங்டன், ''முழுமுதல் கருத்தினங் களில்'' சிந்திக்கும் பழக்கங்களைக் கைவிடா விட்டாலும், மாறியுள்ள சக்திகளின் சமன்நிலையைக் கணக்கில் கொள்ளவும் தன் மேலாதிக்கப் பேராசைகளை அமெரிக்கா விற்கான உண்மையான விளைவுகளுடன் (குறிப்பாக அணு ஆயுத சகாப்தத்தில்) ஒப் பிடவும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. ''பெரு மளவு பழிவாங்கல்'' சித்தாந்தம் செயல்பட்ட காலத்தில் கூட, அதாவது அமெரிக்கர்கள் தமது அணு ஆயுத மேம்பாட்டை ஆதார மாகக் கொண்டு செயல்பட்ட போது கூட அவர்கள், அந்நிய நிலப்பரப்புகளில் ஸ்தல யுத்தங்களைக் கட்டவிழ்த்து விடுவதில் சோவியத் யூனியனுடனான நேரடி மோதலின் அதிர்ச்சியைக் குறைக்கும் காரணியைக் கண்டு தம் சித்தாந்தத்தில் வளைந்து தரும் அம்சங்களைச் சேர்க்கும்படி கட்டாயப் படுத்தப்பட்டனர். உண்மையிலேயே 1950ஆம் ஆண்டுகளின் நடுப் பகுதியிலிருந்து 1966ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் அரசியல் நோக்கங்களை அடைவதற்காக அமெரிக்க இராணுவம் அடிக்கடி பயன்படுத்தப்பட்டது.[20]

முற்றிலும் அமெரிக்க இராணுவப் பாரம் பரியங்கள் மற்றும் இராணுவ-அரசியல் சிந்தனை யின் விசேஷ அம்சம் இன்னமும் எதில் அடங்கியுள்ளது? அமெரிக்க மேலாதிக்கவாதப் பாரம்பரியங்களுடன் இவை எப்படித் தொடர்பு

கொண்டுள்ளன?

அமெரிக்க ஐக்கிய நாடு சுதந்திரம் அடையும் முன்னரே அமெரிக்காவில் விசேஷ இராணுவப் பாரம்பரியங்கள் நிலைபெற ஆரம்பித்தன. பூகோள போர்த்தந்திரக் காரணி முக்கியப் பங்காற்றியது — அமெரிக்கா மாபெரும் பெருங்கடல்களாலும் பலவீன மான அண்டை நாடுகளாலும் சூழப்பட்டிருந் தது.

அமெரிக்கப் போர்வீரன் ஐரோப்பிய மன்னர் களின் இராணுவங்களில் இருந்த போர்வீரர் களைப் போல் யுத்தத்தை முழுநேரத் தொழிலாக் கருதவில்லை, மாறாக மற்ற முழுநேரத் தொழில்களில் இருந்து தற் காலிகமாக விடுதலை பெறும் ஒரு விஷய மாகத்தான் பார்த்தான். இதற்கேற்றபடி நாட்டின் இராணுவ வரலாறும் அமெரிக்க இலக்கியத்தில் அந்நிய முழுநேர இராணுவத் தினரின் மீது ''அமெரிக்க அமெச்சூர்கள்'' அடைந்த தொடர்ச்சியான வெற்றிகளின் சங்கிலித் தொடராக வியாக்கியானப்படுத்தப் பட்டது. அதுவும் நூல்களில் யுத்தங்கள் அமெரிக்கர்களின் விரைவான வெற்றியில் முடிந்தன. அணிதிரட்டுவதும் அணிகலைப்பும் விரைவான வேகங்களில் நடைபெற வேண்டும் எனும் கருத்து அக்காலத்திலிருந்து நிலை பெற்றது தற்செயல் அல்ல. ''மின்னல் வேகத்தில்'' யுத்தத்திற்கு அனுப்பப்பட்ட ''ஆட்கள்'' அதே போல் ''மின்னல் வேகத் தில்'' யுத்தத்திற்குப் பின் வீட்டிற்குத்

திரும்பி பரிசாக நிலங்களையும் பின் ஓய்வு ஊதியங்களையும் பெற வேண்டும். அன்றைய கோரிக்கைகளின்படி மூன்று மாதம் இராணுவத்திலிருந்தவர் பரிசைப் பெறத் தக்கவராக கருதப்பட்டார். தெற்கு சமஷ்டி பகுதியைத் தவிர யுத்தங்கள் அமெரிக்காவில் மிகக் குறைவான நினைவுகளை மட்டுமே விட்டுச் சென்றதில் ஆச்சரியம் ஏதுமில்லை. 1815 முதல் அமெரிக்கப் பூமியில் எந்த ஆக்கிரமிப்பாளனும் காலடி எடுத்து வைக்க வில்லை, ஒரு அன்னிய குண்டு கூட விழவில்லை.

அமெரிக்க மக்கள் கடுமையான போராட் டத்தில்தான் தம் சுதந்திரத்தை வென்று பெற்றனர். போர்க்குணமுள்ள மனப்பாங்கு அமெரிக்க ஆன்மீக வாழ்வில் தொடர்ந்து முக்கிய இடம் வகிக்கிறது. நாட்டில் ஏராளமான இராணுவப் பள்ளிகள் உள்ளன; 1839இல் தோற்றுவிக்கப்பட்ட விர்ஜீனியா இராணுவக் கல்லூரி இவற்றில் மிகப் பிரபலமான ஒன்றாகும். சுருங்கக் கூறின், இராணுவ வெறிப் பாரம்பரியங்கள் அமெரிக்க சித்தாந்த-அரசியல் வாழ்வில் ஆழமாக ஊன்றி யுள்ளன.

இராணுவ வெறியை மூட்டி விடுவதில் உயர் மட்ட அமெரிக்க முழுநேர இராணுவத் தினர் முக்கியப் பங்காற்றுகின்றனர்.

ஜெனரல் என். டுவைனிங் இந்த விஷ யத்தில் குறிப்பிடத் தக்கவர். அதிதீவிர இராணுவ வெறி மனப்பாங்கில் எழுதிய

தன் நூலில் இவர் ‘‘அணு ஆயுதத்தை எதிர்க்கும் அறிவுத் துறையினரையும்’’ அறைகளுக்குள்ளேயே அமர்ந்திருக்கும் போர்த்தந்திரவாதிகளையும் சாடி, இவர்கள் நாட்டிற்கும் அமெரிக்க சுதந்திரத்திற்கும் துரோகமிழைப்பதாகக் கூறுகிறார். ஒரு சில இராணுவ அதிகாரிகளும் இந்தத் தீய செல்வாக்கிற்கு உட்பட்டதாக அவர் கூறினார். இவையெல்லாம் ‘‘பாதுகாப்புச் செலவுகள் போதுமானவையாக இல்லாததன்’’ விளைவு. குறிப்பாக, டுவைனிங் அணு ஆயுத சோதனைகளை நிறுத்தும் ஒப்பந்தத்தை அமெரிக்காவின் ஒருதலைபட்சமான படைக் கலைப்பாகக் கருதினார்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் இராணுவ பாரம்பரியங்களின் வளர்ச்சியில் புதிய கட்டம் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய கட்டத்தை, அதாவது 1945க்குப் பிந்தைய கட்டத்தைச் சாரும். அப்போது அது ஒப்பீட்டளவில் குறைவான, அதிக செலவில்லாத இராணுவத்திற்குப் பதில் (இது தன்னிச்சையான அடிப்படையில் நிரப்பப்பட்டது) மிகப் பெரும், செலவு மிக்க இராணுவத்திற்கு மாறியது. இந்த மாற்றத்தோடு கூட இராணுவத்தினரின் பங்கு அதிகரித்தது, விரைவான அணிதிரட்டல் மற்றும் துரித யுத்தங்கள் பற்றிய கருத்துகள் கைவிடப்பட்டு முற்றிலும் புதிய கண்ணோட்டங்கள் தோன்றின: தொடர்ச்சியான சச்சரவுகள், நிலையான அரைகுறை அணிதிரட்டல் தயார்

நிலை, சிக்கனமாக இருப்பதைக் கைவிடுதல், ''பணத்தைப் பற்றி கவலைப்படாதே'' எனும் கோஷம் பிரகடனப்படுத்தப்படுதல்.[21]

ஏற்கெனவே குறிப்பிட்டபடி அமெரிக்க இராணுவ-அரசியல் சிந்தனையின் சிறப்பியல்பு களை மதிப்பிடும் போது தேசிய வரலாற்றுப் பாரம்பரியங்களைக் கணக்கில் கொள்ள வேண்டும். நிச்சயமாக, ஐரோப்பிய சிந்தனை இது உருவாவதன் மீது தாக்கம் செலுத்தியது. ஆனால் ஐரோப்பியக் கண்டப் பகுதியின் போர்த்தந்திரக் கருத்தினங்கள், அரசுகளுக்கு இடையே ஒப்பீட்டளவில் சமமான, தீவிர உறவுகள் இருந்த சூழ்நிலையிலும் ''ஆற்றின் மறு புறம்'' அல்லது நெருங்கிய மலைகளுக்கு அப்பால் பாரம்பரிய எதிரிகள் இருந்த ஒரு சூழ்நிலையிலும் உருவாயின. இப்படிப்பட்ட கருத்தினங்கள், மேற்கு கோளார்த்தத்தில் தன் பலத்தாலும் உலக சச்சரவுகளிலிருந்து தள்ளி நின்ற நிலையாலும் ''கடவுளாலேயே தரப்பட்ட'' பாரம்பரிய பாதுகாப்பாலும் தொழில்துறை உள்ளாற்றலாலும் ஈடு இணை யற்ற நிலையிலிருந்த அமெரிக்காவைப் போன்ற ஒரு நாட்டிற்குத் திருப்திகரமாக இல்லை.

ஆழ்ந்த சித்தாந்த மற்றும் வரலாற்று வேர்களை உடைய மேலாதிக்க பேராவல்கள் அமெரிக்க இராணுவ-அரசியல் சிந்தனையும் இராணுவ வெறிச் சித்தாந்தமும் உருவாவதன் மீது பெரும் தாக்கம் செலுத்தின. எனவே அமெரிக்க மேலாதிக்க மற்றும் இராணுவ வெறிக் கொள்கையின் நிறைவேற்றத்தில்

இராணுவ பலம் ஏன் பிரதானமான சாதனமாகியது என்பது புரிகிறது.

## 3. அமெரிக்க மேலாதிக்க மற்றும் இராணுவ வெறிக் கொள்கையின் நிறைவேற்றத்தில் இராணுவ பலம்

அமெரிக்க வரலாற்றாசிரியர்களின் மதிப்பீட்டின்படியே இராணுவ பலமும் நாட்டின் இராணுவ வாய்ப்புகளும் பாரம்பரியமாக நாட்டின் தேசிய வன்மையின் மிக முக்கிய அங்கமாகக் கருதப்பட்டன. அந்தந்த அரசியல் லட்சியங்களை அடைவதற்கான சாதனமாக யுத்தம் எப்போதுமே அமெரிக்க ஆளும் வர்க்கத்தால் உயர்வாக மதிப்பிடப்பட்டது என்று ஒரு சில பிரபல ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் வரலாற்றின் முதல் நூற்றாண்டில் அது மூன்று முறை பெரிய யுத்தங்களில் (1811—1814இல் பிரிட்டனுக்கு எதிரான யுத்தம், 1846—1848இல் மெக்சிக்கோவிற்கு எதிரான யுத்தம், 1861—1865இல் உள்நாட்டு யுத்தம்) பங்கேற்றது. இந்த யுத்தங்களின், குறிப்பாக முதல் இரண்டு யுத்தங்களின் சாரம் அமெரிக்கர்களிடமிருந்து மறைக்கப்பட்டது. மெக்சிக்கோ யுத்தம் சுயமான அரசிற்கு எதிராக நடத்தப்பட்டாலும், அதிகாரபூர்வமான வரலாற்று இயல் இதை மேற்கை வெல்லுவதில் ஒரு சாதாரண சம்பவமென வரையறுத்தது.

ஆனால் மெக்சிக்கோவிற்கு எதிரான யுத்தத்தில்தான் அமெரிக்க விஸ்தரிப்புக் கொள்கை முதன்முதலாக இவ்வளவு நிர்வாணமான வடிவில் வெளிப்பட்டது. இது மிகவும் இழிவான வடிவத்தில் ''தவிர்க்க இயலாத விதி'' எனும் கருத்தமைப்பால் ஆதாரப் படுத்தப்பட்டது. மேற்கூறிய கருத்தமைப்பு போர்க்குணமுள்ள இரட்சகர் கருத்தின் அமெரிக்க வடிவமாகும். இது, பிரதேச ஆக்கிரமிப்புகளை ''கிறிஸ்துவின் புகழைப்'' பரப்புவதுடன் தொடர்புபடுத்திய ஸ்பெயின் கன்கிஸ்ததோர்களின்[22] கருத்தையும், அந்நிய நிலங்களைக் கைப்பற்றுவதை காட்டுமிராண்டிகளை நாகரிகமயமாக்கும் ''வெள்ளை மனிதனின் சுமை'' என்று சித்தரித்த பிரிட்டனின் காலனியாதிக்கவாதிகளின் கருத்தையும் ஒத்திருந்தது. ''தவிர்க்க இயலாத விதிக்கு'' ஏற்ப தம் விஸ்தரிப்பு மண்டலத்திற்குள் வந்த பிரதேசங்களுக்கு அமெரிக்கா கொடுமையான அடக்குமுறையை எடுத்துச் செல்லவில்லை, மாறாக சுதந்திர நலன்களை எடுத்துச் செல்வதாக இது அனைவரையும் நம்பச் செய்ய வேண்டியிருந்தது.

மெக்சிக்கோ பரப்பு வெல்லப்பட்ட பின் ''தவிர்க்க இயலாத விதி'' என்ற கருத்தமைப்பு அமெரிக்க முறையின்படி உலகைப் பலாத்காரமாக மாற்றியமைக்கும் சாதனமாக அமெரிக்க முதலாளி வர்க்கத்தால் பயன்படுத்தப்பட்டது. உதாரணமாக, மெக்சிக்கோவைப் ''புனர் நாட்டவும்'' அதன் உள்ளே அமெரிக்கச்

சக்தியைப் ''புகுத்தவும்''[23] அமெரிக்கா திட்டமிட்டது. முதலாவது உலக யுத்தத்தில் இறங்கியதும் ஓரளவிற்கு இதே ''தவிர்க்க இயலாத விதியால்'' நியாயப்படுத்தப்பட்டது; அதுவும் யுத்தத்தின் லட்சியங்களாகப் பிரகடனப்படுத்தவற்றில் (''உலகை ஜனநாயகத்திற்குப் பாதுகாப்பானதாக ஆக்குவது'') இரட்சகர் கருத்து வெளிப்படுகிறது.

அதே நேரத்தில், நேரடியான இராணுவ பலம் மேலாதிக்க, இராணுவ வெறிக் கொள்கையின் நிறைவேற்றத்தில் பிரதான சாதனமாக இருந்தாலும் இது மட்டும் ஒரே சாதனமாக இருக்கவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும். கூட்டுகளை அமைக்கும் கொள்கையும் மிக முக்கிய சாதனங்களில் ஒன்றாகும்.

சுதந்திரம் கிடைத்ததிலிருந்து கிட்டத்தட்ட மெக்சிக்கோ-அமெரிக்க யுத்தம் வரை இளமையான, ஒப்பீட்டளவில் பலவீனமான அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு தன்னுடைய இராணுவ பலத்தைப் பெருக்குவதற்காக கூட்டுகளைப் பயன்படுத்தும் அவசியம் இருக்கவில்லை. 1812ஆம் ஆண்டு யுத்தத்திற்குப் பின்னரும் கூட, ''உலக சக்தியின் மையங்களிலிருந்து'' பூகோள ரீதியாகத் தள்ளியிருந்த அமெரிக்கா கூட்டுகளில் சேருவதில் அதிக அக்கறை காட்டவில்லை. அதே சமயம் இதற்கு பிரிட்டனுடன் பொது நலன்கள் இருந்தன, இது பிரிட்டனின் இளைய கூட்டாளி எனும் நிலையை தன் நலன்களுக்காகப் பயன்படுத்தியது. ஐரோப்பாவில் சக்திகளின் சமன்நிலையைத் தக்க

வைப்பதற்காகவும் தன்னுடைய வர்த்தக நலன்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் மேற்கத்திய கோளார்த்தத்தின் பாதுகாப்பிற் கான எல்லாச் செலவுகளையும் தான் ஏற்றுக் கொள்ளத் தயாரென பிரிட்டன் அறிவித்தது. அமெரிக்க ஐக்கிய நாடு பிரிட்டனுடன் கூட்டு சேர்ந்ததன் மூலம் மீண்டும் பிரிட்டனின் ஆதிக்கத்திற்கு உட்படும் அபாயத்தைக் கிட்டத்தட்ட அகற்றியது, அதே நேரத்தில் தன் சொந்தப் பாது காப்பைப் பலப்படுத்துவதற்காக பிரிட்டிஷ் இராஜதந்திரத்தின் வாய்ப்புகளையும் அதன் கப்பற்படையின் உதவியையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டது.

சிறிய அரசுகளுடன், முதலாவதாக லத்தீன் அமெரிக்க அரசுகளுடன் கூட்டு சேர்வதன் மூலம் தன் சக்திகளைப் பலப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு நாட்டின் முன் தோன்றியதாக அமெரிக்க வரலாற்றாசிரி யர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால் அமெரிக்க சர்வதேச அரசியல் நிபுணரும் பழமைவாதப் போக்குள்ளவருமான ஜா. லிஸ்கா எழுதியபடி சிறு நாடுகளுடனான கூட்டுகள் பெரும் அனுகூலங்களைத் தராது, இவற்றால் இந்நாடு களுக்கு வெளிப் பாதுகாப்பையும் உள்நாட்டு ஸ்திரத் தன்மையையும் அளிக்க முடியாது.[24] அமெரிக்காவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கூட்டுகளைப் பற்றிய தத்துவப்படி பல்வேறு விதமான அரசியல் மற்றும் பொருளாதார அனுகூலங்கள், வாங்குதல், இழப்புகள், நன்மை

கள் ஆகியன பெரும்பாலும் கூட்டில் இரா ணுவ ரீதியாக எந்தத் தரப்பு பலமானதோ அத்தரப்பால் பகிர்ந்தளிக்கப்பட்டன.

அமெரிக்க ஐக்கிய நாடு தன்னை ஒரு பலவீனமான அரசாகக் கருதியதால், இது லத்தீன் அமெரிக்க நாடுகளுடனான கூட்டு களில் தனக்கு குறிப்பான அனுகூலங்கள் எதையும் பார்க்கவில்லை; இதனால் இது நீண்ட காலமாக பல்வேறு கூட்டுகளிலும் அரசியல் கூட்டணிகளிலும் சேராதிருந்தது. 19ஆம் நூற்றாண்டில் இது ஐரோப்பிய சச்சரவுகளில் கலந்து கொள்ள முயலவில்லை; நாட்டின் பூகோள நிலையும் அக்காலகட்டத் தின் தொழில்நுட்ப வாய்ப்புகளும் இதற்குப் பெரிதும் காரணங்களாகும்.

அனுகூலங்களும் முதலாளிகளின் நலன் களும்தான் உலக அரங்கில் அமெரிக்க நடத்தையின் அடிப்படையாக எப்போதுமே இருந்து வந்துள்ளன. இந்த முறையில், மற்ற நாடுகளுடனான உறவுகளில் வளைந்து கொடுக் கும் தன்மையைத் தக்கவைக்கும் நாட்டம் கூட்டு சேரும் கொள்கையின் முக்கிய அம்சமாக இருந்தது. அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கை யின் ஒரு சில குறிப்பிட்ட கட்டங்களில் வெற் றாரவாரமும் தனிமைவாதமும் வெளிப்பட்டன. ஆனால் ஒரு சில அமெரிக்க ஆராய்ச்சியாளர் களின் கருத்துப்படி[25] தனிமைவாதம் என்னும் சொல் கூட்டு சேருவதைப் பற்றிய அமெரிக்கக் கொள்கையை, குறிப்பாக அரசின் ஆரம்பக் கட்டத்தில் இராணுவக் கூட்டுகளைப் பற்றிய

கொள்கையை விளக்கப் போதுமானதல்ல. தனிமைவாதச் சித்தாந்தத்தை சுற்றியுள்ள ஒருவித மாயை, தன் சொந்த அனுகூலத்தை முக்கியமாகக் கொண்டு இயங்கும் ஆளும் வர்க்கத்தின் மேலாதிக்கவாத, இராணுவ வெறிக் கொள்கையை மூடி மறைத்து, நியாயப்படுத்தவே உண்மையில் பயன்பட்டது. தனிமைவாதத்தைப் பற்றிய அமெரிக்க கருத்து வேண்டுமென்றே மறைக்கப்பட்டது, பல்வேறு விதமான வியாக்கியானங்கள் கூறப்பட்டன; இக்கொள்கையை மீண்டும் தன் நலன்களுக்காகப் பயன்படுத்தும் வாய்ப்பை இது நாட்டுத் தலைமைக்கு அளித்தது.

ஐரோப்பாவிலிருந்து தள்ளியிருந்ததும் தம் தனித்துவத்தில் அமெரிக்கர்களுக்கு இருந்த உறுதியும் உலகை அமெரிக்க விருப்பு வெறுப்பிற்கேற்ப மறுபங்கீடு செய்ய இருந்த பலத்த நாட்டத்தின் அடிப்படையாக விளங்கின. இந்த விஷயத்தில் தனிமைவாதம் தேசியப் பாதுகாப்புக் கொள்கையின் இன்னுமொரு வெளிப்பாடாக மட்டுமே இருந்தது.

அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையைப் பகுப்பாய்வு செய்யும் போது, ''தனிமைவாதக்'' காலகட்டங்களில் அமெரிக்கா உலக விவகாரங்களிலிருந்து அப்படியே ''விலகியிருந்ததைத்'' தவிர இவற்றில் ''ஒருதலைப்பட்சமாகப்'' பங்கேற்றது என்பதும் பொறுப்புகளுக்கு உள்ளாக்கும் கூட்டுகளிலிருந்து விலகியிருந்தது என்பதும் தெரிய வரும். உண்மையில், சர்வதேச விவகாரங்களில் அரசு

தீவிரமாகப் பங்கேற்பதன் மூலமும் அதே போல் ''தள்ளி நிற்கும்'' நடத்தையாலும் அரசின் பாதுகாப்பிற்கு வகை செய்ய முடியும். 19ஆம் நூற்றாண்டில் அமெரிக்க ஐக்கிய நாடு, உதாரணமாக, ஐரோப்பியக் கண்டத்தின் விவகாரங்களில் மட்டாகத்தான் பங்கேற்றது. 20ஆம் நூற்றாண்டில் இது தீவிர ஏகாதிபத்திய விஸ்தரிப்பிற்கு மாறிய பின் சர்வதேச அரசியலில் மிகப் பரவலாகத் தலையிடுவதைப் பின்பற்றுகிறது, அதே நேரத்தில், தனக்கு அனுகூலமான நிலையையும் நடவடிக்கைச் சுதந்திரத்தையும் பெறத் தன் சொந்த சக்திகளையும் மூல இருப்புகளையும் மட்டுமே இறுதியாக ஆதாரமாகக் கொள்ள முயலுகிறது. எனவேதான் நவீன காலத்தின் எல்லாக் கூட்டுகளிலும் கூட்டணிகளிலும் மற்ற தரப்புகளைக் காட்டிலும் மேலோங்கி நிற்கும் ''பிரதானக் கூட்டாளியாக'' இருக்க இது இயன்றவரை முயற்சிக்கிறது.

யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டால் தோற்றுவிக்கப் பட்ட கூட்டுகளின் வலை (இவற்றில் அமெரிக்காதான் ''பிரதானக் கூட்டாளியாக'' இருந்தது) அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் பாரம்பரியக் கோட்பாடுகளை நடைமுறைப் படுத்தி அதற்கு அனுகூலமான கொள்கையை நடத்தும் வாய்ப்பை அளித்தது. ''ஜீவாதார நலன்கள்'' எனும் கருத்தமைப்புதான் இங்கே புதியதாக இருந்தது; அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமை இவற்றை பூமிதழுவிய,

உலகளாவிய நலன்களாக மதித்தது.

கிட்டத்தட்ட உலகம் முழுவதும் அமெரிக்க நலன்களின் விஸ்தரிப்பிற்கு வகை செய்து பாதுகாக்கும் முயற்சியால் மட்டும் அமெரிக்கா வின் ஆக்கிரமிப்புத் தன்மை அதிகரிக்க வில்லை. பூஜ்யத்துடனான விளையாட் டைப் போல் (அதாவது இங்கே ஒரு அரசின் (சோவியத் யூனியனின்) வெற்றிகள் தானாகவே மறு அரசின் (அமெரிக்க ஐக்கிய நாட்டின்) இழப்பாகக் கருதப்பட்டன) அமெ ரிக்க ஆளும் வட்டங்கள் உலக நிலவரத்தைப் புரிந்து கொண்டதும் இதைப் பாதித்தது. இப்படிப்பட்ட எண்ணம், தன்னை ''மிகப் பெரும்'' வலலரசாகக் கருதும் ஒரு கருத்தால் முடுக்கி விடப்பட்டது. ஜா. லிஸ்காவின் கண்ணோட்டத்தில் இந்த வல்லரசு, தேவை யான ஒரு உலக ஒழுங்குமுறையை உருவாக்கி, பாதுகாப்பதற்கான பொறுப்புள்ள சக்தியாகும்.

அமெரிக்க கருத்தின்படி கூட்டுகளின் லட்சி யங்களில் ஒன்று, இக்கூட்டுகளை உருவாக்கும் நாட்டின் தேசியப் பாதுகாப்பு நலன்களுக்கு அனுகூலமான சர்வதேச சூழ்நிலையைத் தோற்றுவிப்பதாகும். ஆனால் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய அமெரிக்க கூட்டுகள் வேறு நோக்கங்களைக் கொண் டிருந்தன. தன் நலன்களுக்கும் தன் பாதுகாப் பிற்கும் வகை செய்யும் ''ஒருதலைப்பட்சமான'' கொள்கையைப் பயன்மிகு முறையில் நிறை வேற்றுவதற்கான சூழ்நிலைகளைத் தோற்று விப்பது இத்தகைய லட்சியங்களில் ஒன்றாகும்.

யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் அமெரிக்கா தன் பிரதேசத்தின் முன்னணி தற்காப்புக் கோட்டை மேற்கு கோளார்த் தத்திலிருந்து ஐரோப்பியக் கண்டத்திற்குக் கொண்டு வந்தது. இதோடு கூட அது, அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு, அதிசாகசக் கொள்கையுடன் தொடர்புடைய அபாயம் முழுவதையும் ஐரோப்பியப் பூமிக்குக் கொண்டு வந்தது. மட்டான அணு ஆயுத யுத்தம் பற்றிய மூர்க்கத்தனமான கருத் தமைப்புடன் ரீகன் நிர்வாகம் வெள்ளை மாளிகைக்கு வந்த பின் இந்த அபாயம் குறிப்பாக அதிகரித்தது. இராணுவக் கூட்டு களின் (இருதரப்பு, பல்தரப்புக் கூட்டுகளின்) உதவியோடு, தனக்கான மிக மலிவான விலையோடு, சோஷலிச உலகின் மீது ஆக்கிரமிப்பு நிர்ப்பந்தம் செலுத்தவும் அமெ ரிக்க ஐக்கிய நாடு முயன்றது. இந்நோக் கத்தோடு இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் அமெரிக்கா 42 நாடுகளுடன் ''தற்காப்பு உடன்படிக்கை களைச்'' செய்து கொண்டது. ரியோடி ஜெனிரோ உடன்படிக்கை என்று அழைக்கப் படும் உடன்பாடு *(1947)*, **நேட்டோ** *(1949)*, **அன்சூஸ்** *(1951)*, சீட்டோ *(1954)* போன்ற பல்தரப்பு ஒப்பந்தங்களும் பிலிப்பைன்சுடன் *(1951)*, தென் கொரியாவுடன் *(1953)*, தைவானுடன் *(1954)*, ஜப்பானுடன் *(1960)* தனித்தனியே செய்து கொள்ளப்பட்ட இரு தரப்பு ஒப்பந்தங்களும் இவற்றில் அடங்கும்.

1955ஆம் ஆண்டில் பாக்தாத் உடன்படிக்கையை உருவாக்குவதிலும் அமெரிக்கா உதவி புரிந்து, இதன் நடவடிக்கையில் அதிகாரபூர்வமற்ற வகையில் கலந்து கொண்டது. 1959இல் இராக் இதிலிருந்து வெளியேறிய பின் இது **சென்டோவாக** மாறியது.

கூட்டுகளில் அமெரிக்க பங்கேற்பின் ஒரு முக்கிய அம்சம் என்னவெனில் கூட்டிலுள்ள அரசாங்கங்களின் உள்நாட்டு கொள்கையைக் கண்காணிக்க இது மேற்கொள்ளும் முயற்சியாகும். அமெரிக்கா "நட்பு அரசாங்கங்களுக்குத்" தன் இராணுவ, பொருளாதார உதவியை அளித்து புரட்சிகர மற்றும் விடுதலை இயக்கங்களை ஒடுக்குமாறு அவற்றைக் கட்டாயப்படுத்தியது. உதாரணமாக, லத்தீன் அமெரிக்காவிலும் தெற்கு வியட்நாமிலும் இது கடைப்பிடித்த கொள்கை இதைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது; இங்கே அமெரிக்கா இழைத்த குற்றத்தின் விளைவாய் மக்கள் விரோத, கொடுங்கோல் அரசாங்கங்கள் ஆட்சியிலிருந்தன. இறுதியாக, மேலே கூறப்பட்ட கூட்டுகள் "ஒருதலைப் பட்சமான" கொள்கையையும் உலகம் முழுவதும் அமெரிக்கத் துருப்புகள் நிற்பதையும் சட்டபூர்வமானதாக்க பயன்படுத்தப்பட்டன.

அமெரிக்காவின் நலன்கள் எப்போதும் உலகளாவிய தன்மையைக் கொண்டிருந்த போது மற்ற கூட்டாளிகளின் நலன்களோ சாதாரணமாக ஸ்தல அல்லது பிரதேச நலன்களாக மட்டுமே இருந்தன; இதிலும்

''பிரதானக் கூட்டாளி'' என்ற வகையில் கூட்டுகளில் அமெரிக்காவின் பங்கு வெளிப் பட்டது. 40ஆம் ஆண்டுகளின் இறுதியில், 50ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் அமெரிக்க முன்மொழிவின் பேரில் தோன்றிய கூட்டுகளை அதன் ''ஒருதலைப்பட்சக்'' கொள்கையை நிறைவேற்றுவதற்கான கருவியாகத்தான் பார்க்க வேண்டும். இக்கூட்டுகள் பொதுச் சக்தியைப் பெருக்குவது அல்லது அதை ஒன்றிணைப்பது எனும் தமது சாஸ்திரீயப் பணியை நிறைவேற்றவில்லை. இவை பெரும் பாலும் சோவியத் யூனியனுக்கு எதிரான ஆக்கிரமிப்பின் தாக்குமுனையாக விளங்கு கின்றன, அதே நேரத்தில் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் அமெரிக்கப் பொருளாதார, அரசியல், போர்த்தந்திர நிலைகளை வலுப் படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

60ஆம் ஆண்டுகளின் இறுதியில் கூட்டுகளின் பாலான அமெரிக்கக் கொள்கையில் ஒரு சில புதிய அம்சங்கள் வெளிப்பட்டன. சோவியத் யூனியன் போர்த்தந்திர அணு ஆயுத சமன்நிலையை அடைந்துள்ளது என்பது உணரப்பட்டதே இதற்கு முக்கியக் காரணம்; அமெரிக்கா இராணுவ பலத்தைப் பயன்படுத் தும் வாய்ப்பை இது அடியோடு மாற்றியது. பதட்டத் தணிவையும் பரஸ்பர அணு ஆயுத அழிவிற்கு இட்டுச் செல்ல வல்ல சச்சரவு நிலவரங்களை மட்டுப்படுத்துவதையும் நோக் கமாகக் கொண்ட கொள்கையைதான் உலகம் எதிர்பார்க்கிறது என்று இக்காலகட்டத்தில்

யதார்த்த சிந்தனையுள்ள அரசியல்வாதிகள் புரிந்து கொள்ளத் தலைப்பட்டனர். சோவியத் யூனியனை அச்சுறுத்தி அதன் மீது நிர்ப்பந்தம் செலுத்தும் சாதனமாக கூட்டுகள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டாலும், அதே நேரத்தில் இவற்றின் இராணுவ அம்சங்களைக் குறைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டன.

உலக அரங்கில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தன்மை அதிகமாயிருந்த காலகட்டங்களிலும் இதனுடைய நலன்களின் ''ஒருதலைப்பட்சத் தன்மைதான்'' அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையின் மைய அம்சமாக இருந்தது என்று இதிலிருந்து முடிவிற்கு வரலாம். இதில் அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமை தன்னுடைய கருத்தின்படி குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் அமெரிக்க நலன்களுக்கு மிகவும் ஏற்றதாக உள்ள வெளிநாட்டுக் கொள்கைச் சாதனங்களையும் முறைகளையும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தியது, பின்பற்றியது.

அமெரிக்க ஆளும் வட்டங்கள் தமது மேலாதிக்கவாத, இராணுவ வெறிக் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தும் சாதனங்களில் இராணுவ-அரசியல் கூட்டுகளோடு கூட உலகில் ஏற்படும் புரட்சிகர மாற்றங்களுக்கு எதிரான, முதலாவதாக, தேசிய விடுதலை இயக்கத்திற்கு எதிரான (இதன் வளர்ச்சி வாஷிங்டனில் பீதியை ஏற்படுத்துகிறது) நடவடிக்கைகளுக்கு முக்கிய

இடம் இருந்துள்ளது, இருந்து வருகிறது.

அமெரிக்க இராணுவ-அரசியல் சிந்தனையில் மேலாதிக்கவாத, இராணுவ வெறிப் போக்கு ஊடுருவியுள்ளது; அதிலும் சுற்றியுள்ள உலகைப் பற்றிய அதன் கண்ணோட்டத்தில் முரட்டுப் பலம் மேலோங்கி நிற்கிறது, யுத்தம் ஒன்று மட்டுமே அதன் பார்வையில் அரசுகளுக்கு இடையேயுள்ள சச்சரவுகளைத் தீர்ப்பதற்கான ஒரே சாதனம். சர்வதேச உறவுமுறையானது ஒரு சில அரசுகள் மற்ற சில அரசுகளைப் பலியிட்டு தம் செல்வாக்கு மண்டலத்தை விரிவுபடுத்திக் கொள்வதற்காக இடையறாது நடத்தும் சண்டையாகப் பார்க்கப்படுகிறது; இதில், ஒரு அரசு, மற்ற அரசுகள் தம் நோக்கங்களை அடையும் பாதையில் தடையாக உள்ளதாகக் கருதப்படுகிறது, அண்டை நாடுகள் தொல்லைகளின் நிரந்தரக் காரணமாகக் கருதப்படுகின்றன.

அமெரிக்க ஆளும் வட்டங்களின் மேலாதிக்கவாதப் பேராசைகள் குறிப்பாகக் கடும் ஆவேசமடைந்ததானது, அணு ஆயுதங்கள் தோன்றியதுடனும் இவற்றின் மீதான ஏகபோகத்துடனும் தொடர்புடையது என்பதைக் குறிப்பிட வேண்டும். உலகம் முழுவதன் மீதான அமெரிக்க ஆதிக்கத்தை நிறைவேற்றுவதற்கான முக்கிய சாதனமாக அணு ஆயுதங்கள் கருதப்படலாயின. அணு ஆயுத யுத்தத்தைப் பற்றி விரைவிலேயே வெளியான தத்துவார்த்த படைப்புகள் இதை மனிதகுலத்திற்கு எதிரான குற்றமாகச் சுட்டிக்காட்டிக்

கண்டிக்காதது மட்டுமல்ல, மாறாக, இதைப் பற்றிய சந்தேகங்களையும் அச்சத்தையும் குறைக்கும் நோக்கத்தோடு அணு ஆயுத யுத்தத்தை நடத்துவது சம்பந்தமான முற்றிலும் தொழில்நுட்ப சிறப்பியல்புகளைக் கோடிட்டுக் காட்டின. அமெரிக்க இராணுவ தலைமை மற்றும் அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் பெரும் ஆக்கிரமிப்பு குணமுள்ள வட்டங்களின் சித்தாந்தவாதிகளுடைய மதிப்பீட்டின்படி இந்த அச்சம் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ''சித்தத்தை'' முடமாக்கும், தன் நோக்கங்களை அடைவதில் இதன் ''உறுதியைக்'' குறைக்கும். மேலும், இத்தகைய பிரசுரங்கள் அணு ஆயுத யுத்த வாய்ப்போடு கூட ''சகவாழ்வு'' கருத்திற்குப் பொது மக்களைப் பழக்கும் ஒரு சித்தாந்த-மனநிலை சூழ்நிலையைத் தோற்றுவிக்கும்.

கடும் சோவியத் எதிர்ப்பாளனும் ஹாத்ஸன் கல்லூரியின் டைரெக்டரும் ''கழுகுமான'' ஹெ. கானின் நூல்கள் இந்த விஷயத்தில் குறிப்பாகக் கவனிக்கப்பட வேண்டியவை. இவை அணு ஆயுத யுத்தம் தவிர்க்க இயலாதது எனும் கருத்திற்கு அமெரிக்கர்களைப் ''பழக்கப்படுத்துவதில்'' குறிப்பாகத் தீய பங்காற்றின. அணு ஆயுத யுத்தத்தை நடத்தும் வாய்ப்புகளைப் பற்றி உறுதியிட்டு கூறும் நவீன ''அணு ஆயுதக் கழுகுகளின்'' முழு தலைமுறையே இந்நூல்களின் அடிப்படையில் பயிற்றுவிக்கப்பட்டது. உதாரணமாக, தெர்மோ அணு ஆயுத யுத்தம் எனும் நூலில் கான், மூன்றா

வது உலக யுத்தத்தின் ஆயுத முறைகளைப் பற்றி மட்டுமின்றி, அதற்குப் பிந்தைய உலக யுத்தங்களின் ஆயுதங்களையும் வருணிக்கின் றார். இத்தகைய அணுகுமுறையே மூன்றாவது உலக யுத்தத்தால் மரண அபாயம் எதுவு மில்லை, இதைச் சமாளித்து விடலாம் எனும் நம்பிக்கை கானிடம் இருப்பதை நிரூபிக்கிறது.

50ஆம் ஆண்டுகளின் இறுதியில், கம்யூனிசத் தைப் ''பின்னுக்குத் தள்ளும்'' கருவியாக ''பெருமளவு பழிவாங்கல்'' எனும் சித்தாந் தத்தைப் பயன்படுத்துவதானது சோவியத் அணு ஆயுத உள்ளாற்றல் பலமடைந்துள்ள சூழ்நிலைகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கே கேடான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்பது தெளிவான போது அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமை மட்டான யுத்தம் எனும் கருத்தமைப்பின் மீது மேன் மேலும் அதிக கவனம் செலுத்த ஆரம்பித்தது. அமெரிக்காவிற்கு அதிக பாதுகாப்பான யுத்த முறைகளையும் சோஷலிச உலகம் மற்றும் தேசிய விடுதலை இயக்கத்தின் மீது நிர்ப்பந்தம் சேலுத்தும் முறைகளையும் தேடுவதுதான் ''பெருமளவு பழிவாங்கல்'' எனும் கருத்தமைப் பிலிருந்து சிறிது பின்வாங்கக் காரணமாகும். ''மட்டான யுத்தம்'' இராணுவ நடவடிக்கை களின் அளவைக் கண்காணிக்கும் வாய்ப்பைத் தருமென அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமை கருதியது; இக்கருத்தின்படி இது, அமெரிக்க ஐக்கிய நாடு கூட்டாளிகள், வாடிக்கையாளர்களுக்கு முன் தன் கடமை



6-1

களை நிறைவேற்றும் என்ற நம்பிக்கையை வலுப்படுத்தியது. மேலும், ''மட்டான யுத்தம்'' எனும் கருத்து அரசியல் நோக்கங்களை அடையும் பொருட்டு பலத்தைப் பயன்படுத்து வதற்கு எதிராக அமெரிக்க பொதுமக்களின் மத்தியில் ஏற்பட்ட எதிர்ப்பைக் குறைக்கிறது என்ற காரணியும் கணக்கில் கொள்ளப்பட்டது. ஆனால் இக்கணிப்பு வீணானதாக இருந்தது. வியட்நாமில் ''மட்டான யுத்தத்திற்கு'' எதிராக உலக மக்கள் காட்டிய எதிர்ப்பு இந்தோ சீனாவில் அமெரிக்க ஐக்கிய நாடு தோல்வி யடைந்ததற்கான காரணிகளில் ஒன்றாகும்.

இவ்வாறாக மேலாதிக்கவாத, இராணுவ வெறிக் கொள்கையை நிறைவேற்றுவதற்காக இராணுவ பலத்தை ''மட்டாகப்'' பிரயோகித் ததும் எதிர்பார்த்த பலன்களைத் தரவில்லை. இச்சாதனங்கள் அனைத்தும்—இராணுவ பலத் தை வெளிப்படையாகப் பிரயோகித்ததிலிருந்து இதைப் பயன்படுத்துவதான அச்சுறுத்தல் வரை—எதிர்பார்த்த பலன்களைத் தரவில்லை என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். என்றாலும் இச்சாதனங்களும் முறைகளும் இன்று வரை அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமையின் சிந்தனையில் மேலோங்கி நிற் கின்றன, அதன் இராணுவ வெறிச் சித்தாந்தத் தின் அடிப்படையாகத் திகழ்கின்றன. அணுச் சகாப்தத்தில் அது சர்வதேச பிரச்சினை களுக்கு அளிக்கும் தீர்வில் யுத்தத்தை ''நல்ல தாக்கும்'' கருத்தும் இதை சாதாரண அரசியல் கருவியாகப் பார்க்கும் கருத்துமே அடங்கி

யுள்ளன. இதிலிருந்துதான், ''தேசியக் கொள்கை யின் விவேகமான, பயன்மிகு கருவியாக அமெரிக்க ஐக்கிய நாட்டால் இன்று இராணுவ பலத்தை எப்படிப் பயன்படுத்த இயலும்?''[26] என்ற மையப் பிரச்சினை அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமையின் முன் தோன்றுகிறது.

தமது மேலாதிக்கவாத, இராணுவ வெறி நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அமெ ரிக்க இராணுவ-அரசியல் தலைமை தீட்டும் திட்டங்கள் இன்று உலக சமாதானத்திற்கு மட்டுமின்றி மனித வாழ்விற்கே ஆபத்தானவை.

*அத்தியாயம் இரண்டு*

# இராணுவ இயந்திரம் — யுத்தத்திற்குப் பின் உலக ஆதிக்கத்தை வெல்லும் கொள்கையின் முக்கியக் கருவி

## 1. சோவியத் யூனியன் — அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு நோக்கங்களின் முக்கிய இலக்கு

இரண்டாவது உலக யுத்தத்தின் இறுதிக் கட்டத்திலேயே அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவ மற்றும் அரசியல் தலைமை, யுத்தத்திற்குப் பிந்தைய உலகில் உலக மேலாதிக்கத்தை நோக்கிய வாஷிங்டனின் பாதையில் பிரதானத் தடையாகவும் எனவே முக்கிய எதிரியாகவும் சோவியத் யூனியன் இருக்கும் என்ற முடிவிற்கு வந்தது. ஐரோப்பாவில் ஹிட்லரிசமும் ஆசியாவில் ஜப்பானிய இராணுவ வெறியும் முறியடிக்கப்பட்டது, தோல்வியுற்ற நாடுகளின் பொருளாதாரத்தைப் போன்றே வெற்றி பெற்ற நாடுகளின் (அமெரிக்காவைத் தவிர) பொருளாதார உள்ளாற்றலும் கடுமையாகப் பலவீனமடைந்தது ஆகியவற்றால் உருவான வரலாற்று நிகழ்ச்சிகளின் ஈடு இணையற்ற இணைப்பு அமெரிக்காவின் உலகப் பார்வையை நிர்ணயித்தது. யுத்தத்தின் இழப்புகள் எல்லா நாடுகளையும் குறிப்பாக சோவியத் யூனியனை

வெகுவாகப் பாதித்தாலும் அமெரிக்காவைப் பாதிக்கவில்லை. இது போதாதென்று அமெரிக்கர்களிடம் மட்டுமே புதுவகை ஆயுதமாகிய அணு குண்டு இருந்தது; இதனால் அமெரிக்க ஆளும் வட்டங்களின் மேலாதிக்கப் பேராசைகள் கொழுந்து விட்டு எரிந்தன. இத்தருணத்தில் அமெரிக்க பெடரல் ரிசர்வ் வங்கியில் உலக தங்க இருப்புகளில் 68% சதவிகிதம் சேர்ந்ததும் இப்பேராசைகளை ஊக்குவித்தது. சுருங்கச் சொன்னால் இடிபாடுகளில் கிடந்த, பலவீனமடைந்த உலகத்தை Pax Americanaவாக (அமெரிக்க முறைப்படியான உலகாக) மாற்ற கவர்ச்சிகரமான இலக்காக இருந்தது. இப்படிப்பட்ட நிலைமையில் இராணுவ பலத்தின் அடிப்படையிலான கொள்கை — எப்போதும் ஒரே அளவில் இல்லை என்றாலும் — மேலாதிக்க வாதத்தின் சிறப்பு அம்சமாகியது.

யுத்தத்திற்குப் பிந்தைய உலகின் அரசியல் நிலவரத்தில் தோன்றிய குணாம்ச ரீதியாகப் புதிய போக்குகளாலும் உலக மேலாதிக்கத்தின் பாலான நாட்டம் வலுத்தது என்பதைக் குறிப்பிட வேண்டும். முதலாவதாக, ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் யுத்தத்தின் விளைவாய் பழக்கமான, பாரம்பரியமான சக்திகளின் சமன்நிலை முறை சீர்குலைந்தது. உதாரணமாக, பிரிட்டன் இரண்டாம்பட்ச சக்தியாக ஆனது; பாரம்பரியமாக இது மேற்கு கோளார்த்தத்தில் அமெரிக்க நலன்களையும் ஆதிக்கத்தையும் பாதுகாப்பதில் ஒருவித ''முதல் வரிசையில்'' இருக்குமென்று அமெ

ரிக்கா கணித்தது; குறிப்பாக யுத்தத்திற்கு முன் கடல் மார்க்கங்களில் பிரிட்டிஷ் கடற்படை ஆதிக்கம் செலுத்தியது. இத்தகைய சூழ்நிலையில், உருவாகிய ''வெற்றிடத்தை'' இட்டு நிரப்பவும் தமது ஏகாதிபத்திய, சுயநல நலன்களுக்கு வகை செய்து, உலகில் மேலாதிக்கத்தை நிலைநாட்ட உதவும் அரசியல், பொருளாதாரக் கட்டமைப்பை ஐரோப்பாவில் திரும்ப ஏற்படுத்தவும் பலப்படுத்தவும் வாஷிங்டனில் அவசரப்பட்டனர்.

அந்தத் தருணத்திலோ, கூடிய விரைவிலோ அமெரிக்கப் பாதுகாப்பிற்கு எவ்வித உண்மையான அபாயமும் நிலவவில்லை என்பது மறுக்க முடியாத விஷயமாகும். அமெரிக்க ஆளும் வர்க்கம் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. ஒன்று, ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணி, சோவியத் யூனியனுடனான இராணுவ ஒத்துழைப்பின் நல் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில், சோவியத் யூனியனின் பாதுகாப்பிற்கு வகை செய்யும் நலன்களை ஒப்புக்கொண்டு பரஸ்பர நலன்களுக்காக, சர்வபொது சமாதானத்திற்காக யுத்தத்திற்குப் பிந்தைய ஒத்துழைப்பை உருவாக்க வேண்டும்; அல்லது அணு ஆயுத மேன்மையையும் பொருளாதார விஸ்தரிப்பையும் ஆதாரமாகக் கொண்டு உலக மேலாதிக்கத்தை நோக்கிய பாதையில் செல்ல வேண்டும். இறுதியாக அமெரிக்க ஆளும் வர்க்கம் இரண்டாவது பாதையை, சோஷலிசத்திற்கு எதிரான உலகளாவிய மோதல்

பாதையைத் தேர்ந்தெடுத்தது.

சோவியத் யூனியனின் பால் அமெரிக்க இராணுவத் தலைவர்கள் மேற்கொண்ட நிலை பெரிதும் முரண்பாடானதாயிருந்தது. அரசியல் தலைமையின் மேலாதிக்கவாதப் பேராசைகளைப் பகிர்ந்து கொண்ட அவர்கள் யுத்தத்திற்குப் பிந்தைய உலகில் ''நுழையத்'' தீவிரமாகத் தயாராகத் துவங்கினர். ஆனாலும் 1944 கோடையில் படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி, முதலில் யுத்தத்தை வெல்வதும் ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தில் பங்கேற்க சோவியத் யூனியனின் ஒப்புதலைப் பெறுவதோடு கூட பசிபிக் சமுத்திர யுத்தத்தில் அமெரிக்கர்களுக்கு உதவ சோவியத் யூனியன் கொண்டுள்ள உறுதியைக் குலைக்கக் கூடிய எதையும் செய்யாமலிருப் பதும் அவசியமென கருதியது. எப்போதுமே சோவியத் எதிர்ப்பு மனநிலைகளை வெளிப் படுத்திய ஜெனரல் அர்னோல்டு 1944 ஆகஸ் டில் சோவியத் யூனியனுக்கு B-24 விமா னங்களைத் தர வேண்டுமென கூறியது இத்தகைய உதவி எவ்வளவு அவசியமாகக் கருதப்பட்டதென்பதற்குச் சான்றாகும். இந்த விமானங்கள் ''ருஷ்ய கனரக குண்டு வீச்சு விமானப்படையின் அடிப்படையாக'' விளங்கி பசிபிக் சமுத்திரத்தில் போர் நடவடிக்கை களை நடத்துவதற்கான போக்குவரத்து வாய்ப்புகளுக்கு வகை செய்யும்.[27] பல அரசியல்வாதிகளுக்கு மாறாக அமெரிக்க இராணுவத் தலைவர்கள், சோவியத் யூனிய

னுக்குத் ''தாராளமான உதவி'' வழங்கினால் அது பசிபிக் சமுத்திரப் போர் களத்தில் அமெரிக்கர்களுடன் ஒத்துழைக்கும்படி சோவியத் யூனியனைத் தூண்டுமெனக் கணித்து ''லேண்ட்-லீசை''[28] ஆதரித்தனர். இவ்வாறாக ஒரு சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட காலகட்டத்திற்கு தற்காலிக இராணுவ நோக்கங்கள் நீண்டகால அரசியல் திட்டங்களை விஞ்சி நின்றன.

அதே பொழுது 1944 கோடையில்தான் சோவியத் யூனியனின் மீது தன் சித்தத்தைத் திணிக்கவும் அதன் சட்டபூர்வமான நலன்களுக்குப் பங்கம் விளைவிக்கவும் அமெரிக்க அரசியல் தலைமை மேற்கொண்ட முயற்சிகள் மேன்மேலும் தெளிவாயின. இதே காலகட்டத்தில், சோவியத் ஆட்சி முறையும் மாபெரும் வல்லரசுகளுக்கு இடையிலான சமாதான உறவுகளும் ''பொருந்தாது'' எனும் கருத்துகள் தோன்றின. அமெரிக்க இராணுவ அமைச்சராகிய ஹெ. ஸ்டீம்சன், ஏதோ ''சோவியத் அமைப்பின் தன்மையிலேயே'' ஆக்கிரமிப்புக் குணம் உள்ளதாகக் குறிப்பிட்டார்.[29] இவ்வாறாக இரண்டாவது உலக யுத்தம் முடிவடைவதற்கு ஓராண்டு முன்னராகவே அமெரிக்க ஆளும் வட்டங்களில் ''கெடுபிடி யுத்தத்தின்'' சித்தாந்த அடிப்படைகள் தோன்றலாயின. அணு ஆயுத உற்பத்தி பற்றிய எல்லா விவரங்களையும் அறிந்திருந்த ஸ்டீம்சன் 1944 டிசம்பரில், சோவியத் யூனியனின் மீது அவசியமான நிர்ப்பந்தத்தைச் செலுத்த

தேவையான பலத்தை அணு குண்டு தரும் என்று பி. ரூஸ்வெல்டிடம் கூறினார்.

யால்டாவில் நடைபெற்ற மகாநாட்டில் சோவியத் யூனியன் ஜப்பானுக்கு எதிராக தான் யுத்தத்தில் இறங்கும் நேரத்தை நிர்ணயித்தது. ஆனால் இந்நேரத்திலேயே அமெரிக்க அரசியல் வட்டங்களில் சோவியத் எதிர்ப்பு போக்குகள் அதிகரித்தன. மாஸ் கோவிலிருந்த அமெரிக்கத் தூதரகம், குறிப்பாக இராணுவப் பிரிவின் தலைவனாகிய ஜெனரல் தின், மாஸ்கோவிற்கு எதிராக ஒடுக்குமுறை களைக் கடைப்பிடிக்குமாறும் பொருளாதார நிர்ப்பந்தம் செலுத்துமாறும் இராஜதந்திர நிலைகளைக் கடுமையாக்குமாறும் வாஷிங்ட னிற்கு ஏராளமான சிபாரிசுகளை அனுப்பினார் கள். அமெரிக்க ஐக்கிய நாடு, கொடுமை யான முறையில் ''ஐரோப்பாவில் நுழை வதைத்''[30] தவிர்க்க இயலாதவாறு சந்திக்க நேரிடுமென தூதரகத்திலிருந்து கணித்துக் கூறினர். அமெரிக்கத் துருப்புகள் பசிபிக் சமுத்திரத்தில் முன்னேறுவதைச் சுட்டிக் காட்டிய இவ்வட்டங்களின் பிரதிநிதிகள், ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தில் சோவியத் யூனியன் பங்கேற்றதன் மதிப்பு ஏதோ கணிசமாக குறைந்து விட்டதாகக் கூறினர். எனவே இதன் நலன்களைக் கணக்கில் கொள்ள வேண்டாமாம்.

யுத்தத்தின் கடைசி மாதங்களில் பிரிட்டிஷ் பிரதமர் வி. சர்ச்சில் மத்திய ஐரோப்பாவின் தலைநகரங்களை முதலாவதாகக் கைப்

பற்றலாமென அமெரிக்கர்களுக்கு முன்மொழிந் தார். ஆனால் ஜெனரல் மார்ஷலும் ஜெனரல் ஐசன்ஹோவரும் இந்த ஆலோசனை களை நிராகரித்தனர். இத்தகைய நட வடிக்கைகள் பசிபிக் சமுத்திரத்தில் நடக்கும் யுத்தத்தில் சோவியத் பங்கேற்பிற்கு அபாயம் விளைவிக்க கூடுமென்றும் இந்தப் போர்க் களத்திற்கு அமெரிக்கத் துருப்புகளை அனுப்பு வதைத் தாமதப்படுத்துமென்றும் இவர்கள் கருதினர். என்றாலும் 1945ஆம் ஆண்டு ஏப்ரல் 23ந் தேதி ஜனாதிபதி ட்ரூமன் அமெரிக்க இராணுவ மற்றும் அரசியல் தலைவர்களின் விசேஷக் கூட்டத்தை நடத்தி னார். சோவியத் யூனியனுடனான ஒப்பந்தங் கள் ஏதோ அதற்கு மட்டுமே பயனுள்ளவை என்பதால் இவற்றைப் பற்றி இக்கூட்டத்தில் ஜனாதிபதி சந்தேகம் தெரிவித்தார். சாராம் சத்தில் ஜனாதிபதி சோவியத் யூனியனுடன் சச்சரவுக் கொள்கையைத் துவக்கும் தன் முடிவை அறிவித்தார்.

ஆனால் வெள்ளை மாளிகையில் நடந்த ஏப்ரல் கூட்டத்தில் இருந்த இராணுவத் தலைவர்கள் தமது சொந்த காரணங்களுக் காக சோவியத் யூனியனுக்கு எதிராக சச்சரவை வளர்ப்பது குறித்து எச்சரிக்கை செய்தனர். இரண்டு வல்லரசுகளின் அகால மோதல் பசிபிக் சமுத்திரத்தில் யுத்தத்தை இழுத்தடிக்குமென்றும் அமெரிக்க இழப்புகளை அதிகமாக்குமென்றும் அவர்கள் கருதினர். அதே நேரத்தில், சோவியத் யூனியனின்

விஷயத்தில் மிகவும் கடுமையாக இருக்க வேண்டியதன் அவசியம் பற்றி, உதாரணமாக அதற்களிக்கும் உதவியைக் குறைப்பது பற்றி அமெரிக்க இராணுவத் தலைவர்கள் மத்தியில் ஒற்றுமை நிலவியது. ருஷ்யாவிற்கு எதிராக மேற்கு ஐரோப்பிய-அமெரிக்க இராணுவ பல அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென பெண்ட கனின் ஒரு சில நிபுணர்கள் 1945ஆம் ஆண்டின் முதல் பாதியிலேயே முன்மொழிந் தனர். அக்காலகட்டத்தின் ஆவணங்களில், ''சோவியத் விஸ்தரிப்பு'', ''சோவியத் யூனிய னின் ஆக்கிரமிப்பு'' போன்ற சொற்கள் மேன்மேலும் அதிகமாகத் தென்படலாயின.

1945ஆம் ஆண்டு ஜூன் 18ந் தேதி ஜனாதி பதியும் முப்படைத் தளபதிகளும் ஜப்பானுக்கு எதிரான யுத்தத்தின் மேற்கொண்ட திட்டங் களைப் பற்றி விவாதித்தனர். ஜப்பானைச் சரணடையச் செய்வதற்காக முற்றுகையிடுதல், அணு ஆயுதத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பு உட்பட குண்டு வீசுதல், படையிறக்கம், சோவியத் யூனியன் யுத்தத்தில் இறங்குதல் போன்ற ஏராளமான அச்சுறுத்தல்களை மார்ஷல் முன்மொழிந்தார். சோவியத் யூனி யன் இந்த யுத்தத்தில் பங்கேற்பது அமெரிக்கத் திட்டங்களுக்கு ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இக்கூட்டத்தில் மார்ஷல் இரு பொருளின்றி திட்டவட்டமாக அறிவித் தார். நேச நாட்டுக் கடமைகளுக்கு விசுவாச மாக சோவியத் துருப்புகள் ஆகஸ்டு 8ந் தேதி மஞ்சூரியாவை விடுவிக்க ஆரம்பித்தன.

சோவியத் யூனியன் யுத்தத்தில் இறங்கியது தான் ஜப்பானிய அரசாங்கத்தைச் சரணடை யுமாறு நிர்ப்பந்தித்ததே தவிர அமெரிக்க அணு குண்டுகள் வீசப்பட்டது அல்ல. ஜப்பானிய ஆவணங்கள் இதை மெய்ப்பிக் கின்றன.

நாகசாகி, ஹிரோஷிமா நகரங்களின் மீது அணு குண்டுகளை வீசியதற்குப் பின் அமெ ரிக்க இராணுவத் தலைமையின் மத்தியில் சோவியத் யூனியனுக்கு எதிராக சச்சரவு நடவடிக்கைகளில் ஈடுபடும் மனநிலை கோட் பாட்டு ரீதியாக இறுதியாக உருவாகியது. இதற்கு முன்னராக பல மாதங்களுக்கு அரசுத் துறையும் இராணுவ அமைச்சகத்தின் ஒரு சில தலைவர்களும் உலகில் சோவியத் செல்வாக்கு அதிகரித்து வருவதைப் பற்றி பீதியைக் கிளப்பி விட்டனர். இராணுவ அமைச்சர் ஸ்டீம்சன், அட்மிரல் லேகி, எல்லாவற்றிற்கும் மேலாக கடல் படை அமைச்சர் பாரெஸ்டல் ஆகியோர் இந்த மனநிலைகளுக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்தனர். யுத்தத்திற்குப் பிந்தைய சோவி யத்-அமெரிக்க ஒத்துழைப்பின் சாத்தியத்தின் மீதான ‘‘நம்பிக்கையை’’ ஜெனரல் மார்ஷல் தொடர்ந்து வெளிப்படுத்தி வந்தபோதிலும் சச்சரவு மனநிலை (இதன் வெளிப்பாடுகளில் ஒரு சில வேறுபாடுகள் இருந்தாலும்) மேன்மேலும் வலுவடைந்து வந்தது.

1945 இலையுதிர் காலத்தில் கூட்டு கமிட்டி யின் ஆவணங்களில் அமெரிக்க ஐக்கிய

நாட்டின் விரோதிகள் பட்டியலில் சோவியத் யூனியன் முதலிடத்தில் இருந்தது. சோவியத் யூனியனும் அதன் கூட்டாளிகளும் அல்லது சோவியத் யூனியன், மற்ற நாடுகளின் கூட்டணிதான் ''இராணுவ ரீதியாக நம்மை அச்சுறுத்த வல்ல''[31] ஒரே சக்தி என்று கருதப்பட்டது. சோவியத் யூனியனின் லட்சியங்கள் ''முன்னேறி வரும் விஸ்தரிப்பு'' என்று மதிப்பிடப்பட்டன. ஜனாதிபதி ட்ரூமன் அவருடைய நெருங்கிய ஆலோசகர்கள் மத்தியில் ஏற்பட்ட மாற்றங்கள், இவர்களின் மனநிலையில் அதிகரித்த ஆக்கிரமிப்பு தன்மை, அமெரிக்கர்களின் குற்றத்தால் லண்டனில் நடைபெற்ற அயல் விவகாரத் துறை அமைச்சகர்களின் கூட்டம் தோல்வியடைந்தது ஆகியவைதான் இராணுவத் தலைவர்களின் நிலைக்கு முக்கியக் காரணமாகும்.

யுத்தம் முடிவடைந்த பின் அமெரிக்காவில் படைகளைக் கலைப்பது பற்றி தோன்றிய பிரச்சினை சோவியத் எதிர்ப்பு வெறியையும் இராணுவ வெறியையும் தூண்டிவிட உதவியது. இராணுவத்தை வெகு விரைவில் கலைத்து போர்வீரர்களை சமாதான உழைப்பிற்குத் திருப்பி அனுப்ப வேண்டுமென நாட்டின் பொதுஜனக் கருத்து கோரியது. இக்கோரிக்கை இராணுவ-அரசியல் தலைமையின் திட்டங்களுக்குப் பெரும் ஆபத்தானதாக விளங்கியது.

படைக்கலைப்பு மனநிலைகளை ஒடுக்கி இராணுவ முறையின் அடிப்படைகளைத் தக்கவைப்பதற்காக (இதைக் கொண்டு உலக

ஆதிக்கத்தை வெல்லுவதற்காக உலகளாவிய வாய்ப்புகளுடன் இராணுவ இயந்திரத்தை ஏற்படுத்தலாம்) அமெரிக்க ஆளும் வட்டங்கள் நிலவரத்தைக் கடுமையாக சிக்கலானதாக ஆக்குவதிலும் சோவியத்-அமெரிக்க உறவுகளில் பதட்ட நிலையைத் தூண்டிவிடுவதிலும் ஏதோ ''சோவியத் இராணுவ அபாயம்'' நிலவுவதாக அமெரிக்கர்களை நம்பச் செய்வதற்காக தெட்டத் தெளிவான பித்தலாட்ட நடவடிக் கைகளிலும் இறங்கின. உள்நாட்டு அரசியல் காரணங்கள் வெளிநாட்டு அரசியல் திட்டங் களோடு ஒன்றிணைந்து, ''சோவியத் அபாயத் தை'' மூட்டிவிட அமெரிக்க இராணுவ-அரசியல் தலைவர்களுக்கு ஒரு சாக்கைத் தந்த சூழ்நிலையாக இது இருந்தது.

சோவியத் யூனியனுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளைத் திட்டமிட்ட அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமை சோவியத் நாட்டிற்கு எதிரான யுத்தத் திட்டங்களைத் தீட்ட ஆரம்பித்ததிலிருந்தே (1945 செப் டெம்பர்) தீர்மானகரமான, ஆழ்ந்த விளைவு களை ஏற்படுத்த வல்ல நோக்கங்களைக் கொண்டிருந்தது.

படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டிக்காக கூட்டு வேவுக் கமிட்டியால் 1945 நவம்பரில் மேற்கொள்ளப்பட்ட இரகசிய ஆராய்ச்சி—''மட்டான வான் தாக்குதல் தொடுக்கப்பட்டால் ருஷ்யாவிற்கு ஏற்படும் போர்த்தந்திர ரீதியான பாதிப்பு'' என்பது இதன் பெயர்—சோவியத் யூனியனின் மீது

தடுப்பு அணு ஆயுதத் தாக்குதலைத் தொடுப்பதன் அவசியம் குறித்து பகுப்பாய்வு செய்தது. சோவியத் தாக்குதல் அபாயம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் மட்டுமின்றி, எதிரியின் தொழில்துறையும் விஞ்ஞான வாய்ப்புகளும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் மீதான சாத்தியமான தாக்குதலுக்கு அல்லது தாக்குதலுக்கு எதிரான பாதுகாப்பிற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்தினாலும் அணு ஆயுதத் தாக்குதலைத் தொடுக்குமாறு கமிட்டி சிபாரிசு செய்தது. இவ்வாறாக, அமெரிக்க ஐக்கிய நாட்டின் விருப்பத்திற்கேற்ப முதலாவதாக தடுப்பு தாக்குதலைத் தொடுக்கும் கருத்தமைப்பு எந்தவித நிபந்தனையுமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது. நகர மையங்களில் மக்களைப் பெருமளவில் அழிப்பதற்காகவே முக்கியமாக அணு குண்டுகளைப் பயன்படுத்த வேண்டுமென கமிட்டியின் ஆவண வாசகம் கூறுகிறது.[32]

அணு ஆயுதத்தை உருவாக்கிப் பயன்படுத்த திட்டமிட்ட அமெரிக்க ஆளும் வட்டங்கள் முதலிலிருந்தே இதன் உதவியால் சோவியத் யூனியனுக்குத் தம் சித்தத்தைக் கட்டளையிட முடியும் என்றும் உலகம் முழுவதும் அமெரிக்க மேலாதிக்கத்திற்கு வழிகோல முடியுமென்றும் கருதின என்பதைக் குறிப்பிட வேண்டும். அணு ஆயுதத்தை ஏற்படுத்துவது 1940இல் துவங்கியது. 1942இல் இராணுவப் படைத்தலைமை திட்ட நகலைக் கண்காணிக்க ஆரம்பித்தது. யுத்தத்தில் அணு சக்தியைப் பயன்படுத்துவது தகாதது எனும் கருத்தை ஜனாதிபதியோ

பொறுப்பான அரசாங்க உறுப்பினர்கள் வேறு எவருமோ கூறியதை 1941 முதல் 1945 வரை தான் ஒருபோதும் கேள்விப்பட்டதில்லையென இராணுவ அமைச்சர் ஸ்டீம்சன் குறிப்பிட்டார். ''முதலாவதாக அணு ஆயுதத்தை உருவாக்கிப் பயன்படுத்துவதுதான் யுத்தக் காலம் பூராவும் பொது லட்சியமாக இருந்தது''[33] என்று ஸ்டீம்சன் கோடிட்டுக் காட்டினார். 1943ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே அணு குண்டு அமெரிக்க இராஜதந்திரத்தின் எதிர்கால சாதனமாகப் பார்க்கப்பட்டது. ''அணு குண்டானது ஒரு ஆக்கிரமிப்பு ஆயுதமாகும், இதைப் பயன்படுத்தும் முறையானது முதலாவதாக திடீர்த் தாக்குதலுக்கு ஆதாயமானது''[34] என்பதை அமெரிக்காவில் புரிந்து கொண்டனர். எனவே அணு குண்டைக் கையில் வைத்திருப்பதன் மூலம் ''எல்லா சீட்டுகளும் அமெரிக்க கரங்களில் இருப்பதாயும் இவற்றை அமெரிக்க சீட்டுகளாக மட்டுமே விளையாடப் போவதாயும்''[35] நாட்டின் ஆளும் வட்டங்கள் கருதின.

அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமை முதலாவதாக இந்த ''சீட்டுகளை'' சோவியத் யூனியனுக்கு எதிராகப் பயன்படுத்த திட்டமிட்டது. இதற்கு முன்னராக, அணு குண்டை ஏற்படுத்தியதை நேச நாடாகிய சோவியத் யூனியனுக்குத் தெரியப்படுத்துவதன் விவேகத்தைப் பற்றி கருத்துப் போராட்டம் நடைபெற்றது. இந்தக் குண்டைப் பயன்படுத்தும் முன் இதைப் பற்றி எதையும் சோவியத்

யூனியனுக்குத் தெரியப்படுத்தக் கூடாதென ஜனாதிபதி ட்ரூமனுக்கு சிபாரிசு செய்யப்பட்டது.[36] ''அணு ஆயுத இரகசியத்தை'' சோவியத் யூனியனுக்குச் சொல்லுவது தகுமா என்பது பற்றியும் உள் போராட்டம் மூண்டது. இப்பிரச்சினைகள் சோவியத்-அமெரிக்க உறவுகளின் சாரத்திற்கு மட்டுமின்றி இவற்றின் போக்கிற்கும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்கின என்று தெரிகிறது.

உண்மையில், தன்னுடைய முக்கிய நேச நாட்டிடமிருந்து இந்தப் பண்பு ரீதியாகப் புதிய ஆயுதத்தை மறைத்து வைத்ததானது அமெரிக்க ஐக்கிய நாட்டின் நேர்மை சம்பந்தமாகக் கணிசமான சந்தேகங்களை ஏற்படுத்தியது, இதன் மேற்கொண்ட திட்டங்களைக் கேள்விக் குறியாக்கியது. போட்ஸ்டாம் மகாநாட்டில் குண்டைப் பற்றி நடந்த இழுபறி விவாதங்கள் வெள்ளை மாளிகையின் எஜமானருடைய திட்டங்களை சோவியத் தலைமைக்குத் தெட்டத் தெளிவாகக் காட்டின. இதனிடையே, சோவியத் யூனியனின் உள்நாட்டு ஒழுங்குமுறைகளைத் ''தளர்த்துவது'', கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அரசாங்கங்களின் தன்மையை மாற்றுவது, அணு சக்தி பற்றிய சர்வதேச கண்காணிப்புக் கமிஷன் வடிவத்தில் அமெரிக்க அணு மேலாதிக்க முறையில் சோவியத் யூனியன் பங்கேற்பது ஆகியவற்றிற்குப் ''பதிலாக'' அணு குண்டின் இரகசியத்தை சோவியத் நாட்

டிற்குத் தெரியப்படுத்தும் வாய்ப்பு குறித்து ட்ரூமன் நிர்வாகத்தின் ஒரு சில உறுப்பினர்கள், உதாரணமாக இராணுவ அமைச்சர் ஸ்டீம்சன் ஜனாதிபதியுடன் விவாதித்தனர்.[37] அமெரிக்க அரசியல் சிந்தனையின் வர்த்தக மனப்பாங்கு இங்கே வெளிப்பட்டது தெட்டத் தெளிவு. இத்தகைய அணுகுமுறையை ஜனாதிபதி முதலில் பெரிதும் ஏற்றுக் கொள்வதாகத் தோன்றியது என்றார் ஸ்டீம்சன்.

நிதித் துறை அமைச்சர் பி. வின்சனும் கப்பற்படை அமைச்சர் ஜே. பாரெஸ்டலும்தான் அணு ஆயுத இரகசியத்தை சோவியத் யூனியனுக்குத் தெரியப்படுத்துவதை மிகவும் கடுமையாக எதிர்த்தனர். ஜப்பானியர்கள் பேர்ல் ஹார்பர் மீது கயமைத்தனமாகத் தாக்குதல் தொடுத்ததை ஜாடையாகக் காட்டி, ருஷ்யர்கள் ''கிழக்கத்திய'' சிந்தனை முறையைப் பின்பற்றுகிறார்கள் என்றும் எனவே அவர்களை நம்பக் கூடாது என்றும் பாரெஸ்டல் கூறினார். சோவியத் யூனியனுக்கு அணு குண்டை உருவாக்கப் பத்து முதல் இருபது ஆண்டுகள் வரை தேவைப்படும் என்ற கணிப்பில்தான் நேச நாட்டுடன் நேர்மையான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள எதிர்ப்பு காட்டப்பட்டது.

சோவியத்-அமெரிக்க உறவுகளில் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைக்கான சிபாரிசுகளைப் பற்றி 1946 ஜூலை நடுவில் ஜனாதிபதி இராணுவ அமைச்சர் ரா. பாட்டர்சனைக் கேட்டார். ட்ரூமனுக்கு அனுப்பிய பதிலில்

இராணுவ அமைச்சர் சோவியத் அரசுக்கு எதிராக ஒரு ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள போராட்டச் செயல்திட்டத்தை மிக வெளிப் படையாகக் குறிப்பிட்டிருந்தார். மிகப் பெரும் இராணுவ மேன்மையும் அணு ஆயுதத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பும் (தடுப்பு நோக்கங் களிலும் கூட) இச்செயல்திட்டத்தின் அடிப் படையாக விளங்கின. அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவ-அரசியல் தலைமை ஒரு சில மாற்றங்களுடன் இதை பல பத்தாண்டு களுக்குப் பின்பற்றியது.

அணு ஆயுதத்தைப் பயன்படுத்தி சோவியத் யூனியனுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை களுக்கு ஏற்பாடு செய்வது குறித்து ஒரு சில திட்டங்கள் நிலவின: ''டொடேலிடி'' என்ற சங்கேதப் பெயரையுடைய திட்டம் (1945ஆம் ஆண்டின் முடிவு) — ஐரோப்பாவில் சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தம்; ஏற்கெனவே கூறப்பட்ட கூட்டு வேவுக் கமிட்டியின் சிபாரிசுகள் (1945 நவம்பர்); ''சாரியடீர்'' திட்டம் (1948) — சோவியத் யூனியனுக்கு வந்தன: ''கோக்வில்'', ''கன்பவுடர்'', ''டபிள்ஸ் பின் பல திட்டங்களும் சிபாரிசுகளும் வந்தன ''கோக்வில்'', ''கன்பவுடர்'', ''டபிள்ஸ் டார்'', ஏபிசி — 101'', ''டியுவலிசம்'', கடைசி யாக 1949ஆம் ஆண்டின் இறுதியைச் சேர்ந்த ''டிராப்ஷாட்'' திட்டத்தின்[38] நேரடி ''முன்னோடியாக'' ''பிளீட்வுட்'' திட்டம்.

மூன்று பெரிய தொகுதிகளில் வெளியிடப் பட்டுள்ள ''டிராப்ஷாட்'' திட்டம், படைத்

தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி யால் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதி ட்ரூமனால் அங்கீகரிக்கப்பட்டது. இதன்படி யுத்தத்தை 1957ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி துவக்கப் பூர்வாங்கமாகத் திட்டமிடப்பட்டது. இதில் சோவியத் யூனியனின் பாலான அமெரிக்க கொள்கையின் ஆக்கிரமிப்புத் தன்மை தெட்டத் தெளிவாகப் பிரதிபலித்தது. இத்திட்டத்தைப் ''பெரும் முக்கியத்துவம் வாய்ந்த ஆவண மாக''[39] அமெரிக்க நிபுணர்கள் மதிப்பிட்டது தற்செயல் அல்ல. இத்திட்டத்தின் உள்ளடக்கம் சோவியத் யூனியனை அணு சுவாலையில் சுட்டுப் பொசுக்கும் எண்ணத்திற்கு சான்று பகர்ந்ததோடு கூட சோவியத் யூனியனை அமெரிக்கா ஆக்கிரமிப்பதையும் முன்னனுமா னித்தது; சோவியத் சமூக-அரசியல் முறையை அழிப்பதை யுத்தத்தின் பிரதான அரசியல் லட்சியமாக முன்வைத்தது, எதிர்காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் உலக மேலாதிக் கத்தை நிலைநாட்டுவதற்கு எதுவும் தடை யாக இருக்கக் கூடாது என்பதற்காக சோவியத் யூனியனின் ஒரே அரசு முறையை ஒழிக்கவும் திட்டமிடப்பட்டது.

சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்த திட்டம் தடுப்பு தாக்குதலைத் தொடுக்கத் திட்டமிட்டது. இந்த வாய்ப்பு பெண்டகனின் பல்வேறு ஆவணங்களில் முற்றிலுமாக ஆராயப்பட்டது. 1949 ஆகஸ்டிற்குப் பின் சோவியத் யூனியனுக்கு எதிரான தடுப்பு யுத்த திட்டங்கள் அமெரிக்க இராணுவ-

அரசியல் தலைமையின் மையக் கவனத்தில் இருந்தன. சோவியத் யூனியனில் அணு ஆயுதம் சோதிக்கப்பட்ட பின் போர்த்தந்திர அணு ஆயுதச் சக்திகளில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் மேன்மை தற்காலிகமானது என்ற முடிவிற்கு பெண்டகன் வந்தது. சோவியத் யூனியனை விட அமெரிக்கா பலம் மிக்கதாக இருக்கும் போதே முதலாவதாகத் தாக்கு தலைத் தொடுக்கலாமே என்று இராணுவ இலாக்காவில் யோசித்தனர். 1949ஆம் ஆண் டின் இறுதியில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் போர்த்தந்திர இராணுவத் தளவாடங்களில் குறைந்தபட்சம் 300 அணு குண்டுகளும் 840 குண்டு வீச்சு விமானங்களும் இருந்தன என்பதை பெண்டகனின் திட்டவாதிகள் கவனத்தில் கொண்டனர். அவர்களுடைய கணிப்பின்படி சோவியத் யூனியனிடம் அதிக பட்சம் 200 போர்த்தந்திரக் குண்டு வீச்சு விமானங்கள் மட்டுமே இருந்தன, ஒரு அணு ஆயுதம் கூட இருக்கவில்லை. அவர்களுடைய மதிப்பீட்டின்படி 50ஆம் ஆண்டுகளில் சோவியத் யூனியன் 100க்கும் மேற்பட்ட அணு குண்டு களைப் பெற்றிருக்கும்.

அமெரிக்காவைப் பொறுத்த மட்டில் இது எதைக் குறித்தது? போர்த்தந்திர விமானப் படைத் தலைமையின் செயல்வன்மையைப் பற்றி 1950இல் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: அமெரிக்க ஐக்கிய நாட்டின் இலக்குகள் மீது பத்து முதல் ஐம்பது வரையிலான அணு

குண்டுகள் வீசப்பட்டால், அவை ''அணி திரட்டும் நம் முயற்சிகளைப்'' பெரிதும் குலைக்கும், திட்டமிடப்பட்டுள்ள ''அணு ஆயுதப் போர்த்தந்திரத் தாக்குதலைக்'' கணிசமாகத் தாமதப்படுத்தும். ''இப்போது நடைபெறும் அரசியல் யுத்தத்தின் நோக்கங்களுக்காக, ஜெர்மனி மற்றும் ஜப்பானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளைத் துவக்குவதற்கு முன் திட்டமிடப்பட்டதை விட அதிக உறுதியான, போர்க்குணமுள்ள ஒரு நிலையை இந்த சமாதான நேரத்திலும் ருஷ்யாவுடனான தொடர்பில் பின்பற்றும் நிர்ப்பந்தத்திற்கு அரசாங்கம் உள்ளாகியுள்ளது''[40] என்று அதே ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், இத்தகைய மனநிலைகளுடன் தடுப்பு யுத்தம் சாத்தியமானது என்பதோடு கூட விரும்பத்தக்கதுமாகும் என்று பெண்டகன் கருதியது.

அதே நேரத்தில், அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆக்கிரமிப்பு மற்றும் பகைமை நோக்கங்களின் காரணமாய் சோவியத் யூனியன் தனது தற்காப்பு ஆற்றலைப் பலப்படுத்தியதால் அமெரிக்காவிலிருந்த பல இராணுவ-அரசியல் தலைவர்களின் கண்கள் திறக்கப்பட்டன.

என்றாலும் இவ்வாறு மயக்கம் தெளிந்தது ஒப்பீட்டளவில் குறைவாகவே இருந்தது. ஏனெனில், சோவியத் யூனியனுக்கு எதிராக அணு ஆயுதத்தைப் பயன்படுத்தும் திட்டங்களை

அமெரிக்க இராணுவ-அரசியல் தலைவர்கள் என்றுமே கைவிட்டதில்லை, இந்த ஆயுதத்தை முதலாவதாகப் பயன்படுத்தும் வாய்ப்பையும் அவர்கள் மறுக்கவில்லை. இதற்காகத்தான் விஞ்ஞான ஆராய்ச்சிப் பணிகள் முடுக்கிவிடப் பட்டன, இதற்காக தாராளமாக நிதிகள் ஒதுக்கப்பட்டன, முதல் தடுப்புத் தாக்குதலைத் தொடுப்பதற்கான தொழில்நுட்ப வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. அணு ஆயுதத்தைப் பயன்படுத்தும் பிரச்சினையைப் பற்றிய கருத் தமைப்புகளும் சித்தாந்தங்களும் பின்வரும் அடிக்கோள்களை ஆதாரமாகக் கொண்டிருந் தன: சோவியத் யூனியனை அணு ஆயுத ரீதியாக விஞ்சி, அந்த மேன்மையைத் தக்கவைப்பது, பழிவாங்கும் பதிலடியிலிருந்து அமெரிக்கப் பரப்பைக் காப்பாற்றும் சாதன மாக முதலாவதாகத் தாக்குதலைத் தொடுப் பது, மட்டான அணு ஆயுத யுத்தம் என் பவையே அந்த அடிக்கோள்களாகும்.

இராணுவ போர்த்தந்திர சமன்நிலை உருவாகியுள்ளதே ஏதோ சோவியத் யூனியனின் தரப்பிலிருந்து அபாயம் வருவதைக் குறிப்ப தாகவும் அமெரிக்காவின் இராணுவ மேன்மை இல்லாமல் சமத்துவம் மற்றும் ஒரே மாதிரி யான பாதுகாப்புக் கோட்பாட்டைப் பின்பற்ற முடியாதென்றும் இன்று மக்களை நம்ப வைக்க அமெரிக்காவில் குறிப்பிட்ட அரசியல் வட்டங்கள் மேன்மேலும் விடாப்பிடியாக முயற்சி செய்வதைக் குறிப்பிட வேண்டும். பாரம்பரியமான அமெரிக்க இராணுவ வெறித்

தத்துவம் இதில் வெளிப்படுகிறது, அமெரிக்கப் போர்வீரனின் ''ஆன்மீக மனநிலையையும்'' போர் குணத்தையும் தக்க வைப்பதற்காகவும் படைத் தளபதிகளின் தன்னம்பிக்கையைப் பலப்படுத்துவதற்காகவும் இராணுவ மேன்மையை ஆதாரமாகக் கொள்ளும் போக்கு இங்கே தெரிகிறது. அதே நேரத்தில் இத்தகைய அணுகுமுறை ஒரே மாதிரியான ''அமெரிக்க முறைக்கு'' ஒத்துப் போகிறது; இதன்படி எதிரிலிருப்பவனை விட ஒரு டாலர் தன் பையில் கூடுதலாக இருந்தால் அது மேம்பாட்டு உணர்வை ஏற்படுத்துகிறது, பேச்சுவார்த்தைகளுக்கு ஒப்புக் கொண்டாலோ அது பலவீனத்தைக் குறிக்கிறது.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி, அமெரிக்க ஆளும் வர்க்கம் இரண்டாவது உலக யுத்தத் திற்குப் பின் பிரம்மாண்டமான இராணுவ இயந்திரத்தை உருவாக்கியது. யுத்தத்திற்குப் பிந்தைய தரைப்படை, விமானப்படை, கடற் படைக் கட்டுமானங்களும் இவற்றிற்கான செலவுகளும் யுத்தத்திற்கு முந்தியவற்றுடன் ஒப்பிடும் போது மிகப் பெரும் அளவுகளை எட்டின. 1931ஆம் ஆண்டிற்கும் 1940க்கும் இடைப்பட்ட காலத்தில் 650 மில்லியன் டாலர்களுக்கு அதிகமாயிராத இராணுவச் செலவினங்கள் 1948ஆம் நிதி ஆண்டில் 12 பில்லியன் டாலர்களாக ஏறி, 1970இல் 80 பில்லியன் டாலர்கள் வரை வந்து, 1982இல் 200 பில்லியன் டாலர்களையும் விஞ்சின. இன்று 32 நாடுகளின் பரப்பில்

15,000க்கும் அதிகமான அமெரிக்க இராணுவத் தளங்களும் அமைப்புகளும் உள்ளன. இவை யனைத்தும் ஆக்கிரமிப்புத் தாக்குமுனைகளாகும். இவற்றில் 5 லட்சத்திற்கும் அதிகமான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலத்தில் இச்சக்திகள் அமெரிக்க ஐக்கிய நாட்டால் பன்முறை பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிட வேண்டும்.

யுத்தத்திற்குப் பிந்தைய கட்டத்தில் அமெரிக்க இராணுவ இயந்திரத்தின் போருக்குத் தயாரான நிலை, ஆக்கிரமிப்புத் திட்டங்கள், குறிப்பாக சோவியத் யூனியனின் மீது தடுப்புத் தாக்குதல்களைத் தொடுக்கும் திட்டங்கள் ஆகியன சோவியத்-அமெரிக்க உறவுகளில் பதட்டத்தை ஏற்படுத்தி மோசமாக்கின. 1947ஆம் ஆண்டிற்குப் பிந்தைய காலகட்டத்தில் போர்த்தந்திர வான்படைத் தளபதியாகிய மேஜர் ஜெனரல் கே. லேமேய் கூறியதை நினைவு கூர்வதே போதுமானது: ''பூமியின் மிகப் பெரும் நிலப்பரப்பில் மனித உயிர்களை அழித்து, ஆக்கபூர்வமான மனித நடவடிக்கையின் மிகச் சிறு சுவடுகளை மட்டுமே விட்டு வைக்கும் வாய்ப்புகள் அமெரிக்க ஐக்கிய நாட்டிடம் உள்ளன''[41]. ஐ. நா. சங்க அமர்வுகளிலும் மற்ற சர்வதேச ஸ்தாபனங்களிலும் சோவியத் பிரதிநிதிகள் அமெரிக்காவின் திட்டங்களை அம்பலப்படுத்தினர், சோவியத் யூனியனின் மீது அமெரிக்கா அணு ஆயுதத் தாக்குதலைத் தொடுக்கத்

திட்டமிடுவதைச் சுட்டிக் காட்டினர். அதே நேரத்தில் அந்தந்த அமெரிக்க நிர்வாகங்களின் அதிகாரபூர்வமான பிரதிநிதிகள் சோவியத் யூனியனின் குற்றச்சாட்டை மறுத்தனர். இந்த மறுப்புகள் எவ்வளவு போலியானவை என்பது இன்று ஆதாரபூர்வமாக நிரூபிக்கப் பட்டுள்ளது.

அமெரிக்க இராணுவ இயந்திரத்தின் தலை வர்கள் சோவியத் யூனியனுக்கு எதிரான அணு அயுத சச்சரவுப் பாதைக்கு மாறியதில் ஆழ்ந்த முரண்பாடு அடங்கியிருந்தது. அமெ ரிக்க இராணுவ, அரசியல் தலைவர்கள் ஆயுதப் போட்டியைக் கட்டவிழ்த்து விட்டனர். இது இறுதியாக அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பைப் பலவீனப்படுத்த மட்டுமே செய்தது. இவர்களில் தொலை நோக்குப் பார்வையுடையவர்கள், அணு ஆயுதப் போட்டி யானது அமெரிக்காவின் பாதுகாப்பு அரிக்கப் படுவதைத்தான் தவிர்க்க இயலாது குறிக்கு மென்றும் அணு சக்தியைக் கட்டுப்படுத்துவது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் மிகவும் விரும்பத்தக்கவையென்றும் ஒப்புக் கொண் டனர். ஆனாலும் இவர்களால் ஆயுதப் போட்டிக்கான மாற்றை முன்மொழிய இயல வில்லை.

உலகைத் தன் கரங்களில் எடுத்துக் கொள்ள வல்லரசு, மேலாதிக்கவாதப் பேராசை கள் கொண்டிருந்த நாட்டத்தின் முன் நிதான சிந்தனையுள்ள, விவேகமான அணுகு முறையின் அம்சங்கள் எடுபடவில்லை. தொழில்

முறையும் தொழில்நுட்பமும் ''சர்வவல்லமை படைத்தது'' என்ற அமெரிக்கர்களின் நம்பிக்கை பரவியிருந்ததும், இராணுவப் பிரச்சினைகள் தொழில்நுட்பத்தின் மூலமாயும் அரசியல் பிரச்சினைகள் இராணுவச் சாதனங்களின் மூலமும் தீர்க்கப்படுகின்றன என்ற நம்பிக்கையும், உலக மக்கள் அனைவரையும் அமெரிக்க ஐக்கிய நாடு விஞ்சியிருப்பதான நம்பிக்கையும் இக்காலகட்டத்தில் கணிசமான முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தன. சோவியத் அரசின் பாலான வெறுப்பு, உலக நிகழ்ச்சிப் போக்குகளின் மீது இது செலுத்தும் தாக்கத்தைப் பற்றிய அச்சம், Pax Americanaவை நோக்கிய பாதையில் முக்கியமான, சாராம்ச ரீதியாக ஒரே தடை சோவியத் யூனியன்தான் என்று புரிந்து கொண்டது ஆகியவை அணு ஆயுத அச்சுறுத்தல் மற்றும் பலாத்கார இராஜ தந்திரக் கொள்கையின் அடிப்படையாக விளங்கின.

இக்கொள்கைக்கு விசேஷ அமெரிக்க சிறப்பியல்புகள் இருந்தன. இவை இக்கொள்கை நிறைவேற்றப்பட்ட வடிவங்களில் பங்காற்றின. இரண்டாவது உலக யுத்தத்தின் இறுதியில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவ-அரசியல் தலைமையும் விஞ்ஞான வட்டங்களின் பிரதிநிதிகளும் ''தயார் நிலை'' எனும் ஒரு கருத்தமைப்பை ஏற்படுத்தினர். அமெரிக்காவின் பலவீனங்கள்தான் 1930ஆம் ஆண்டுகளில் அச்சு நாடுகளின் தலைவர்களை ஆக்கிரமிப்பைப் பற்றிய சிந்தனைக்கு இட்டுச்

சென்றன என்பதை இக்கருத்தமைப்பு ஆதார மாகக் கொண்டிருந்தது. எனவே பலமான இராணுவம் இருந்தால் அது அமெரிக்காவின் எதிர்கால எதிரிகளைத் தடுத்து நிறுத்தும். பேர்ல் ஹார்பர் மீதான தாக்குதலும் இதற்கு முன் புதிய வகை ஆயுதங்கள் தோன்றியதும் திடீர் தாக்குதலின் முன் நாடு எப்படி பாதுகாப்பற்று உள்ளது என்பதைக் காட்டின; எனவே எந்த ஒரு பிளீட்ஸ்கிரிகையும்[42] எதிர்த்து நிற்பதற்காக இதுவரையில்லாத அளவிற்கு இராணுவ பலத்தைப் பெருக்க வேண்டியதன் அவசியத் தையும் இது வெளிப்படுத்தியது. இந்தக் கருத்தமைப்பில் புதிய அம்சங்கள் குறை வாகவே இருந்தன. ஆனால் இது இராணுவ-அரசியல் மேல் மட்டத்தின் கண்ணோட்டங் களின் ஒற்றுமைக்கான அடிப்படையை உரு வாக்கியது. ஏனெனில் இது மிக ஊதாரித் தனமான நிதி கோரிக்கைகள் உட்பட சகலவித கோரிக்கைகளையும் ஆயுதங்கள் மற்றும் இராணுவத்தைப் பெருக்கும் கோரிக்கை களையும் அதிசாகசத் திட்டங்களைத் தீட்டு வதையும் நியாயப்படுத்துவதாகத் திகழ்ந்தது.

முழுநேர இராணுவத்தினருக்கு எவ்விதத் திலும் குறையாமல் சிவில் தலைவர்களும் விஞ்ஞானிகளும் வர்த்தக உலகின் பிரதிநிதி களும் ''தயார் நிலைக்கு'' ஆதரவாகப் பிரச்சாரம் செய்தனர் என்பதும் முக்கியமாகக் கவனிக்கத் தக்கது. இரண்டு ஜனாதிபதிகளுமே (ரூஸ்வெல்ட், ட்ரூமன்) ''தயார் நிலைக்கு''

உறுதியான ஆதரவளித்தனர், பல காங்கிரஸ் பிரதிநிதிகள் இதைப் பரவலாகப் பிரச்சாரம் செய்தனர். இந்த வெளிப்படையான ஆக்கிர மிப்பு மற்றும் மேலாதிக்க கருத்தமைப்பின் அடிப்படையில்தான் ''கெடுபிடி யுத்தப்'' போக்கும் சிந்தனையும் உருவாயின. இந்த சூழ்நிலையில் எதிரி மிகவும் அவசியமானவனாக இருந்தான்! வாஷிங்டனின் கண்களிலோ இந்த எதிரி — சோவியத் யூனியன் — ஏற் கெனவே முன் நின்றது. மிகப் பெரும் இழப்புகளை விலையாகத் தந்து சோவியத் யூனியன் இரண்டாவது உலக யுத்தத்தில் வெற்றி பெற்றதும் ஐரோப்பியக் கண்டத்தில் அமெரிக்க ஆளும் வர்க்கத்திற்குப் பழக்கமான சக்திகளின் நிலவரம் மாறியதும் அசாதா ரணமாக வாஷிங்டனைப் பீதியடையச் செய் தன. மாபெரும் பொருளாதார மந்தம் திரும்ப வரக் கூடுமென்று ஆளும் வர்க்கம் அஞ்சியதும் ''தயார் நிலைக்'' கருத்தமைப்பு பரவப் பெரிதும் உதவியது. நாட்டைக் ''கெடுபிடி யுத்தப்'' பாதைக்கு மாற்றியதா னது அது பொருளாதாரத்தின் இராணுவத் தொழில்துறைப் பிரிவைக் கலைப்பதைத் தவிர்த்ததோடு இதை வளர்த்து பலப்படுத்த வும் உதவியது. யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் ''தயார் நிலை'' அமெரிக்க ஐக்கிய நாடு உலக போலீசாக உதவியது, இதன் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நியாயப் படுத்தியது. இக்கருத்தமைப்பு அணு ஆயுத அச்சுறுத்தலுக்கும் மற்ற நாடுகளின் உள்விவ

காரங்களில் தலையிடவும் வழிகோலியது.

இவ்வாறாக ''கெடுபிடி யுத்தக்'' கொள்கைக்கும் ஆயுதப் போட்டிக்கும் மாறியதானது அமெரிக்க ஏகாதிபத்தியம் நிறைவேற்றி வந்த சோவியத் எதிர்ப்பு இராணுவத் தயாரிப்புகளின் (குறிப்பாக இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் இவை பரவலான அளவுகளில் செய்யப்பட்டன) நியதியான விளைவாக இருந்தது.

## 2. ''கெடுபிடி யுத்தத்திற்கு'' மாறியதும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவ-அரசியல் திட்டங்களும்

1947ஆம் ஆண்டில் ஜனாதிபதி ட்ரூமனின் உரையில் பிரகடனப்படுத்தப்பட்ட ''கட்டுப்படுத்தி வைக்கும்'' கொள்கை என்பது சோவியத் அரசை முறியடிக்கும் ஆக்கிரமிப்புத் திட்டங்கள், ''கெடுபிடி யுத்தத்திலிருந்து'' உண்மையான யுத்தம் வரை செல்லும் அளவிற்கு சர்வதேசப் பதட்ட நிலையை இடையறாது அதிகப்படுத்துதல் ஆகியவற்றின் வெளிப்பாடாக இருந்தது. யுத்தத்திற்குப் பிந்தைய உலகில் நடைபெறும் ஆழ்ந்த சமூக மாற்றங்களின் புறவய ரீதியான நிகழ்ச்சிப் போக்கின் வேகத்தைக் குறைப்பது, முதலாளித்துவ ஒழுங்குமுறைகளைத் தக்க வைப்பது, யுத்தத்திற்கு முந்தைய எல்லைகளுக்கு சோஷலிசத்தைப் ''பின்தள்ளுவது'' ஆகியனதான் ''கட்டுப்படுத்தி வைக்கும்''

கொள்கையின் நோக்கங்களாகும். ஏகாதிபத்தியத்தின் பெரும் ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள பிரதிநிதிகளோ இன்னமும் ஒரு படி அதிகமாகச் சென்று ''அடிமைப்படுத்தப் பட்ட மக்களை (அதாவது கிழக்கு ஐரோப்பிய மற்றும் சோவியத் யூனியனின் மக்களை) விடுவிக்க வேண்டுமெனக்'' கோரினர். மக்கள் ஜனநாயக, சோஷலிசக் கட்டுமானப் பாதைக்கு வந்த நாடுகளில் முதலாளித்துவ முறைகளைத் திரும்பவும் ஏற்படுத்த வாஷிங்டன் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இதைப் பற்றி கூறும் போது, இராணுவ-அரசியல் திட்டமிடுதல் இரண்டாவது உலக யுத்தம் முடிவதற்கு முன்பாகவே ஆரம்பமாகி விட்டது என்பதைக் குறிப்பிட வேண்டும். படை வகைகளுக்கு இடையிலான போட்டி இங்கே முக்கியக் காரணிகளில் ஒன்றாக அமைந்தது. Pax Americanaவைத் தோற்றுவிப்பதில் இவை ஒவ்வொன்றும் தம் பங்கை ஆற்ற முயன்றன.

உதாரணமாக, வான்படை 1943ஆம் ஆண்டிலேயே திட்டமிடத் துவங்கியது. விமானப் படையை தரைப் படையிலிருந்து பிரிப்பது அவசியமென இது கருதியது. நவீன விமானப் படையால் நடைமுறைத் தந்திர கடமைகளை மட்டுமின்றி போர்த்தந்திரக் கடமைகளையும் சுயமாகத் தீர்க்க முடியும் என்பதை இந்த அணுகுமுறைக்குக் காரணமாக வான்படையின் தலைமை கூறியது.

அட்மிரல் கிங்கின் கட்டளைப்படி 1943இல்

காரங்களில் தலையிடவும் வழிகோலியது.

இவ்வாறாக "கெடுபிடி யுத்தக்" கொள்கைக்கும் ஆயுதப் போட்டிக்கும் மாறியதானது அமெரிக்க ஏகாதிபத்தியம் நிறைவேற்றி வந்த சோவியத் எதிர்ப்பு இராணுவத் தயாரிப்புகளின் (குறிப்பாக இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் இவை பரவலான அளவுகளில் செய்யப்பட்டன) நியதியான விளைவாக இருந்தது.

## 2. "கெடுபிடி யுத்தத்திற்கு" மாறியதும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவ-அரசியல் திட்டங்களும்

1947ஆம் ஆண்டில் ஜனாதிபதி ட்ரூமனின் உரையில் பிரகடனப்படுத்தப்பட்ட "கட்டுப்படுத்தி வைக்கும்" கொள்கை என்பது சோவியத் அரசை முறியடிக்கும் ஆக்கிரமிப்புத் திட்டங்கள், "கெடுபிடி யுத்தத்திலிருந்து" உண்மையான யுத்தம் வரை செல்லும் அளவிற்கு சர்வதேசப் பதட்ட நிலையை இடையறாது அதிகப்படுத்துதல் ஆகியவற்றின் வெளிப்பாடாக இருந்தது. யுத்தத்திற்குப் பிந்தைய உலகில் நடைபெறும் ஆழ்ந்த சமூக மாற்றங்களின் புறவய ரீதியான நிகழ்ச்சிப் போக்கின் வேகத்தைக் குறைப்பது, முதலாளித்துவ ஒழுங்குமுறைகளைத் தக்க வைப்பது, யுத்தத்திற்கு முந்தைய எல்லைகளுக்கு சோஷலிசத்தைப் "பின்தள்ளுவது" ஆகியனதான் "கட்டுப்படுத்தி வைக்கும்"

கொள்கையின் நோக்கங்களாகும். ஏகாதிபத்தியத்தின் பெரும் ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள பிரதிநிதிகளோ இன்னமும் ஒரு படி அதிகமாகச் சென்று ''அடிமைப்படுத்தப் பட்ட மக்களை (அதாவது கிழக்கு ஐரோப்பிய மற்றும் சோவியத் யூனியனின் மக்களை) விடுவிக்க வேண்டுமெனக்'' கோரினர். மக்கள் ஜனநாயக, சோஷலிசக் கட்டுமானப் பாதைக்கு வந்த நாடுகளில் முதலாளித்துவ முறைகளைத் திரும்பவும் ஏற்படுத்த வாஷிங்டன் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இதைப் பற்றி கூறும் போது, இராணுவ-அரசியல் திட்டமிடுதல் இரண்டாவது உலக யுத்தம் முடிவதற்கு முன்பாகவே ஆரம்பமாகி விட்டது என்பதைக் குறிப்பிட வேண்டும். படை வகைகளுக்கு இடையிலான போட்டி இங்கே முக்கியக் காரணிகளில் ஒன்றாக அமைந்தது. Pax Americanaவைத் தோற்றுவிப்பதில் இவை ஒவ்வொன்றும் தம் பங்கை ஆற்ற முயன்றன.

உதாரணமாக, வான்படை 1943ஆம் ஆண்டிலேயே திட்டமிடத் துவங்கியது. விமானப் படையை தரைப் படையிலிருந்து பிரிப்பது அவசியமென இது கருதியது. நவீன விமானப் படையால் நடைமுறைத் தந்திர கடமைகளை மட்டுமின்றி போர்த்தந்திரக் கடமைகளையும் சுயமாகத் தீர்க்க முடியும் என்பதை இந்த அணுகுமுறைக்குக் காரணமாக வான்படையின் தலைமை கூறியது.

அட்மிரல் கிங்கின் கட்டளைப்படி 1943இல்

கடற்படையும் திட்டமிடுவதில் இறங்கியது. இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன் அமெரிக்க கடற்படை அட்லாண்டிக், பசிபிக் சமுத்திரங்களில் தீவிரமாக இயங்கியது என்றால், 1943—1944ஆம் ஆண்டுகளின் திட்டங்களில் கடற்படைத் தலைமை யுத்தத்திற்குப் பிந்தைய கடமைகளை உலகளாவிய கடமைகளாகப் பார்த்தது. புதிய கோரிக்கைகளுக்கேற்ப, பெரும்பாலான உலக நீர்பரப்புகளில் இயங்கும் முக்கியத் தாக்குதல் குழுக்களாக கடற்படையைப் பிரித்து அமைக்கத் திட்டமிடப்பட்டது.

தரைப்படை தன் பங்கிற்கு 15 லட்சம் போர்வீரர்களடங்கிய இராணுவத்தை ஏற்படுத்த திட்டமிட்டது. வான்படையில், சர்வ பொது இராணுவக் கல்வியின் அடிப்படையில் ஆண்டுதோறும் 7,00,000 பேர்களை இராணுவ சேவைக்காக அழைத்து பயிற்சியளிக்கவும் திட்டமிடப்பட்டது. உலகின் எந்த ஒரு பகுதியிலும் தாக்குதலைத் தொடுக்க வல்ல பயணப் படைகளை அல்லது முக்கியத் தாக்குதல் சக்திகளை ஏற்படுத்த தரைப் படை முன்மொழிந்தது.

''யுத்தத்திற்குப் பிந்தைய அமெரிக்க கடமைகள் நாட்டின் வரலாற்றில் இதற்கு முன் எப்போதும் இருந்ததை விட அதிக அளவு உலகளாவியவையாக இருக்கும்'' என்ற அடிப்படையிலும் ''சர்வதேச பாதுகாப்பிற்கு வகை செய்யும் ஒருவித அமைப்பின்''[43] பகுதியாக அமெரிக்க ஐக்கிய நாடு இருக்கும் என்ற

அடிப்படையிலும்தான் முப்படையிலும் திட்டம் தீட்டப்பட்டது.

இதற்குப் பின், யுத்தம் முடியும் வரையில் இராணுவத்தின் திட்டமிடுதலில் குறிப்பிட்ட திருத்தங்கள் செய்யப்பட்டன. இவை முக்கிய மாக எண்ணிக்கை வரம்புகளையும் கணிசமான அளவு அதிகரித்துள்ள முப்படைச் சக்திகளைப் பராமரிப்பதில் காங்கிரஸ் தயாராக உள்ளதைப் பற்றிய மதிப்பீட்டையும் பொருத்தவையாக இருந்தன. 1944 மார்ச் மாதம் யுத்தத்திற்குப் பிந்தைய தற்காப்புக் கொள்கை பற்றிய கமிட்டி காங்கிரசில் ஏற்படுத்தப்பட்டது.

இதன் தொடர்பாக, சமாதான காலத்தில் இராணுவக் கொள்கை பற்றிய பிரச்சினை களில் அமெரிக்க இராணுவத் தலைவர்களின் நிலை கவனிக்கத் தக்கது. உதாரணமாக, கடற்படை மற்றும் விமானப்படைத் தலைமை யின் மத்தியில் எதிரியின் மீது தடுப்புத் தாக்குதல்களைத் தொடுக்க வல்ல படைகளை வைத்துக் கொள்ளும் நாட்டம் மேன்மேலும் தெளிவாக வெளிப்பட்டது. தரைப்படையின் பிரதிநிதிகள், முதலாவதாக ஜெனரல் மார் ஷல், யுத்தத்திற்குப் பிந்தைய உலகின் அமைப்பு அமெரிக்க விருப்பங்களுக்கு ஏற்ற தாக இருக்கும் என்பதை ஆதாரமாகக் கொண்டு இயங்கினர். ''சிக்கனமான'' இரா ணுவத்தை ஏற்படுத்துமாறு அறைகூவல் விடுத்த அவர் அதே நேரத்தில், எதிர்கால யுத்தத்தின் பயங்கரங்களைச் சொல்லி மக் களை அச்சுறுத்தி பொதுமக்களின் மனநிலை

யை மாற்றத் துவங்குவதும் அவசியமெனக் கருதினார். 1945 ஜூன் 30இல் காங்கிரசிற்கு சமர்ப்பித்த அறிக்கையில் அவருடைய இந்தப் போக்கு தெளிவாக தென்பட்டது. இதன் விளைவாய் இராணுவ அமைச்சகத்தின் சம்பந்தப்பட்ட கமிட்டி, யுத்தம் முடிந்து மூன்று ஆண்டுகள் கழித்த பின் புதிய இராணுவச் சக்திகளைக் கொண்டு வர முடிவு செய்தது.

மற்ற நாடுகளின் நலன்கள் அமெரிக்க தேசிய நலன்களோடு ஒத்துப் போக வேண்டும், இதே மாதிரியாக இருக்க வேண்டும் என்ற கருத்து ஜனாதிபதி ரூஸ்வெல்டைச் சுற்றியிருந்தோர் மத்தியிலும் அமெரிக்க ஆளும் வட்டங்களிலும் மேலோங்கி யிருந்தது. இதையும் அமெரிக்க ஐக்கிய நாடு, இதன் கடல் கடந்த சொத்துகளின் ''நேரடிப் பாதுகாப்பு'' நலன்களையும் அடிப் படையாகக் கொண்டு படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி 1943 நவம்பரில் 570ஆம் ஆணையை உருவாக்கி யது. அந்நிய நிலப்பரப்புகளில் வாஷிங்டன் பெற விரும்பிய விமானத் தளங்களின் பட்டியல் இதில் அடங்கியிருந்தது. இந்த ஆணையை ஜனாதிபதி ரூஸ்வெல்டின் முன் நியாயப்படுத்திய ஜெனரல் அர்னோல்டு, ஏதோ சில நாடுகள் எதிர்காலத்தில் அமெரிக்காவைத் தாக்கக் கூடுமென்றும் எனவே ''எந்த ஒரு பேர்ல் ஹார்பரின் அனுபவத்தையும் விஞ்சக் கூடிய எதிர்பாரா

அழிவிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டின் எந்த ஒரு பகுதியையும் காப்பாற்றுவதற்காக நமது சொந்த எல்லைகளில் இருந்து இயன்ற அளவு தொலைவில் இந்தத் தாக்குதலை சந்திக்க வேண்டுமென்றும்...''[44] வலியுறுத்தினார். சிறு திருத்தங்களுடன் இப்பட்டியலை ஆமோதித்த ஜனாதிபதி அந்நிய நிலப்பரப்புகளில் விமானப்படைத் தளங்கள் மற்றும் தரைப்படை, கடற்படை, நிர்வாக அமைப்புகளைப் பெறுவது சம்பந்த மான இராஜதந்திர அம்சங்களைப் பரிசீலிக் கும் பொறுப்பை அரசுத் துறை செயலர் கோ. ஹாலுக்கு அளித்தார்.

பாதுகாப்புக் கருத்தைப் பற்றிய வரை யறுப்பு படிப்படியாக மேன்மேலும் வெளிப் படையாக ஆக்கிரமிப்புத் தன்மையைப் பெற் றது. உதாரணமாக, இதைப் பற்றி பாரெஸ் டல் பின்வருமாறு அறிவித்தார்: ''யுத்தத்தின் பயங்கரங்கள், அழிவுகளிலிருந்து அமெரிக் காவைப் பாதுகாக்க நாம் விரும்பினால் நம்முடைய கரைகளிலிருந்து இயன்ற அளவு தொலைவில் நம் எதிரிகளின் மீது நாம் தாக்குதலைத் தொடுக்க வேண்டும்''[45]. அமெ ரிக்க இராணுவத் தலைமைக்கு நெருக்கமான விஞ்ஞானியாகிய எ. எர்ல் 1944 செப்டெம் பரில் படைத்தலைமையின் முன் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: ''போலந்து மற்றும் பேர்ல் ஹார்பர் மீதான தாக்குதல் முறையைப் பயன்படுத்தும் ஆக்கிரமிப்பாளனின் பெரும் ஆதாயங்களைக் கவனத்தில் கொள்

ளும் போது தற்காப்பிற்கு பெரும் உட்பொருள் எதுவும் கிடையாது. இதுவேதான் சமாதானத்திற்கும் பொருந்தும். தன் மீது தாக்குதல் தொடுக்கப்படும் வரை ஒரு தேசிய இனம் தாக்குவதற்குத் தயாராக இல்லையெனில் செயல்வன்மையுடன் தற்காத்து கொள்ள அதனால் இயலாது''[46].

ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணியில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் முக்கிய கூட்டு நாடுகளில் ஒன்றாகிய சோவியத் யூனியனின் பால் பகைமை மற்றும் விரோத அம்சங்கள் 1943, 1944ஆம் ஆண்டுகளிலேயே தோன்றியபோதிலும் இன்னமும் அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமை எதிர்கால எதிரியாக அல்லது எதிரிகளாக தான் யாரைக் கருதுகிறது என்பதைத் திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை. பேர்ல் ஹார்பரின் அனுபவமும் சோவியத் யூனியன் மீது பாசிச ஜெர்மனி திடீர் தாக்குதல் தொடுத்த அனுபவமும், அவர்களுக்குத் தோன்றியபடி தேவையான அளவு இராணுவத் தீர்மானங்களைத் தேடும்படி குறிப்பிட்ட அளவிற்கு அமெரிக்க ஆளும் வட்டங்களுக்கு கட்டளையிட்டன. இரண்டாவது உலக யுத்தம் வெற்றிகரமாக முடிந்தது, அமெரிக்க ஐக்கிய நாட்டின் பெரும் இராணுவ, பொருளாதாரப் பலத்தைப் பற்றிய உணர்வு ஆகியவற்றின் பின்னணியில் அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமை உலகை அமெரிக்க இராணுவ பலத்தைக் காட்டுவதற்குரிய ஒரு ''களமாகக்'' கருத ஆரம்பித்தது.

அங்கே தடுப்பு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தாக்குதல்கள் உட்பட சகலமும் அனுமதிக் கப்பட்டன.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் தான் மறு ஆயுதந்தரித்ததையும் (பின் சகலவிதங்களிலும் எல்லா ஆயுதங்களையும் பெருக்கியதையும்) ஏதோ சோவியத் யூனிய னின் இராணுவ மேன்மையின் காரணமாய் தோன்றிய அவசியமென அமெரிக்கா ''ஆதா ரப்படுத்தியதைக்'' கோடிட்டுக் காட்டுவது அவசியம். இந்தக் கட்டுக்கதை ''கெடுபிடி யுத்தம்'' நடந்த 25 ஆண்டுகளாக கூறப்பட்டு வந்தது. 1961ஆம் ஆண்டில்தான் இராணுவ, குறிப்பாக அணு ஆயுத மேன்மை அமெரிக்க ஐக்கிய நாட்டின் தரப்பிலிருந்தது என்பதை ஒப்புக் கொள்ளும்படி வாஷிங்டன் நிர்ப் பந்திக்கப்பட்டது. ஆனாலும் ஓரளவிற்கு இவ்வாறு ஒப்புக் கொண்டதும் கூட ''சோவியத் அபாயம்'' மற்றும் ''சோவியத் மேன்மை'' என்று அமெரிக்க பிரச்சாரம் கிளப்பி விட்டுள்ள கட்டுக்கதைகளை அமெ ரிக்க ஆளும் வட்டங்கள் கைவிட்டதைக் குறிக்கவில்லை. இது தவிர அமெரிக்க ஆளும் வட்டங்கள் வளர்முக நாடுகளிலும் ''கெடுபிடி யுத்தத்தைக்'' கட்டவிழ்த்து விட் டன. ''கம்யூனிச அபாயத்திற்கு'' எதிரான போராட்டம் எனும் பொய்யான சாக்கின் கீழ் வாஷிங்டன் மிகப் பிற்போக்கான, மக்கள் விரோத ஆட்சிகளை ஆதரித்தது, அமெரிக்க எதிர்ப்பு போக்குகளைக் கொண்

டிருந்ததாக தான் சந்தேகித்த அரசாங்கங்களைக் கவிழ்த்தது. ஐரோப்பா மட்டுமின்றி ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் விருப்பத்தின்படி ''கெடுபிடி யுத்த'' மண்டலங்களாயின.

அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமையால் கட்டவிழ்த்து விடப்பட்ட ''கெடுபிடி யுத்தம்'' உலக மேலாதிக்கத்தின் பால் அமெரிக்க முதலாளித்துவம் கொண்டிருந்த நாட்டத்தால் கட்டளையிடப்பட்டது. இந்த லட்சியத்தின் பேரால் சர்வதேச உறவுகளைச் சீர்குலைக்கவும் இவற்றை மிகவும் பதட்டமானவையாக ஆக்கவும் இல்லாத ஒரு ''வெளி அபாயத்தை'' இருப்பதாகக் காட்டவும் இதற்காக சோவியத் யூனியனைக் குற்றஞ் சாட்டவும் அமெரிக்கா முயன்றது. யதார்த்த சிந்தனையுள்ள பல அமெரிக்க ஆராய்ச்சியாளர்களும் இன்று இப்படித்தான் யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தின் அமெரிக்க கொள்கையை மதிப்பிடுகின்றனர்.[47]

''கெடுபிடி யுத்தம்'' கட்டவிழ்த்து விடப்பட்டதன் காரணங்களையும் இக்கொள்கை நிறைவேற்றப்படும் முறையையும் மதிப்பிடும் போது, இக்கொள்கையில் அக்கறையுள்ள, இதில் ஒட்டிக் கொண்டு வாழக் கூடிய, இதிலிருந்து நேரடி பொருளாதார ஆதாயத்தைப் பெறும் குழுக்கள் அமெரிக்க முதலாளித்துவ சமுதாயத்தில் உள்ளன என்பதை முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆயுத

உற்பத்தி சம்பந்தமான அரசாங்க கட்டளை களை நிறைவேற்றும் இராணுவத் தொழில் துறை முதலைகள்; சோவியத் யூனியனின் பால் காழ்ப்புணர்ச்சியைத் தூண்டி விட்டு இத்திசையில் அமெரிக்க அரசு இயந்திரத்தின் மீது தாக்கம் செலுத்தும் பல்வேறு விதமான நாடுபெயர்ந்த குழுக்கள்; இராணுவ-அரசியல் அதிகாரத் துறையினர் (இவர்களின் பொரு ளாயத ரீதியான மலர்ச்சியும் இயக்கமும் இராணுவச் செலவுகள் இடையறாது அதி கரிப்பதைப் பெரிதும் பொறுத்துள்ளன); சோவியத் எதிர்ப்பு, கம்யூனிச எதிர்ப்பின் அடிப்படையில் வாக்காளர்களின் வாக்குகளை வெல்ல முயலும் அரசியல்வாதிகள்; இறுதி யாக, ''கெடுபிடி யுத்தத்தின்'' ஒருவித சித்தாந்த அமைப்பாகிய முழுநேர கம்யூனிச எதிர்ப்பு சித்தாந்தவாதிகளின் குழு ஆகியோர் இவற்றில் அடங்குவர்.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் இருந்த எல்லா அமெரிக்க நிர்வாகங்களும் சர்வதேச உறவுகளை மேலாதிக்கவாத நோக்கில் பார்த்தன. எனவேதான் சோவியத் யூனியனை விஞ்சி நிற்க முயலும் முகமாக வாஷிங்டன் தன் இராணுவ பலத்தை இடையறாது பெருக்கியது. இந்த மேன்மை நிலையை ஆதாரமாகக் கொண்டு சோவியத் யூனியனைக் ''கட்டுப்படுத்தி வைக்கும்'' கொள் கையைப் பின்பற்றுவதில் அது இறங்கியது. நடைமுறையில் இது அரசியல் நிர்ப்பந்தத் தையும் அச்சுறுத்தலையும் குறித்தது. ''பெரு

மளவு பழிவாங்கல்'' சித்தாந்தம் தோன்றியது இதற்கான எடுத்துக்காட்டாகும். அமெரிக்கா தேவையெனக் கருதும் போது சோவியத் யூனியனுக்கு எதிராக அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவதாக இது அச்சுறுத்தியது.

1950ஆம் ஆண்டிலேயே NSC-68 ஆணையில் வாஷிங்டன் ''கட்டுப்படுத்தி வைக்கும்'' கொள்கையின் முக்கிய அம்சங்களை வரையறுத்தது.[48] ஒரு சில அமெரிக்க நிபுணர்கள் கூட இதைக் கண்டனம் செய்தனர் என்பது கவனிக்கத் தக்கது. இவர்களுடைய கருத்தின் படி இவர்கள் ஒரு ''வியத்தகு'' அம்சத்தைக் கண்டனர். அதாவது ''சோவியத் அபாயங்களுக்கான'' அமெரிக்காவின் ''சமச்சீரற்ற'' பதில் நடவடிக்கை ''ஒவ்வொரு குறிப்பிட்ட காலகட்டத்திலும் ருஷ்யர்களின் உண்மையான நோக்கங்களை மிகக் குறைவாகவே ஒத்திருந்தது. 1947ஆம் ஆண்டிலிருந்து துவங்கி கட்டுப்படுத்தி வைக்கும் போர்த்தந்திரத்தில் தோன்றிய சகலவித மாற்றங்களும் கிரெம்ளினின் புதிய நடவடிக்கைகளுடன் குறைவாகவே பொருந்தி வந்தன, மாறாக, வாஷிங்டன் வசம் உருவான புதிய வாய்ப்புகளால் தான் இவை அதிகமாக தோன்றின. சோவியத் யூனியனின் தரப்பிலிருந்து வந்த உண்மையான அச்சுறுத்தல்களை விட புதிய வாய்ப்புகள் தோன்றியதுதான் சோவியத் யூனியனின் பாலான கொள்கையை உருவாக்குவதில் கணிசமான அளவு அதிகப் பங்காற்றியது.''[49]

வரலாற்றின் உண்மைகளைப் பார்த்தால், 1945 செப்டெம்பரிலேயே அமெரிக்கா தன் கூட்டு நாடாகிய சோவியத் யூனியனுடன் முதல் வெளிப்படையான சச்சரவில் இறங்கியது தெரியும். லண்டனில் நடைபெற்ற அயல்விவகாரத் துறை அமைச்சர்களின் மகாநாட்டில் முந்தைய ஜெர்மானியத் துணை நாடுகளுடன் சமாதான ஒப்பந்தங்களை உருவாக்கி கையெழுத்திடுவதைத் தன் நோக்கங்களுக்காகக் குலைக்க அது முயன்றது. அநேகமாக 1946 மார்ச்சிலிருந்தே அமெரிக்க நிர்வாகம் சோவியத் யூனியனை ஒரு விரோதியாகப் பார்த்தது என்று அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்; அமெரிக்காவின் ஜீவாதார நலன்களுக்கு ஆபத்து ஏற்படுத்தாமல் சோவியத் யூனியனின் ஜீவாதார நலன்களை அங்கீகரிக்க முடியாதென அமெரிக்க நிர்வாகம் கருதியது. அமெரிக்கா சோவியத் யூனியனுடன் இனி "சமரசங்களுக்குச் செல்லக் கூடாதென்று ஜனாதிபதி ட்ரூமன் முடிவு செய்தார்: "ருஷ்யாவிற்கு நாம் நமது இரும்பு முஷ்டியைக் காட்டி, பலமான தொனியில் அதனுடன் பேசும் வரை அடுத்த யுத்தம் தவிர்க்க இயலாதது.... ருஷ்யர்களுக்கு செல்லம் கொடுத்து எனக்கு அலுத்து விட்டது"[50] என்று அவர் வெளிப்படையாக அறிவித்தார்.

அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையில் சோவியத் எதிர்ப்பு போக்கை உருவாக்கியதில் அ. வான்தென்பெர்க் மற்றும் ஜா. டால்லஸ்

தலைமையிலான குடியரசுக் கட்சியின் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கும் ட்ரூமன் நிர் வாகத்தின் உள்ளேயே இருந்த "கழுகு களுக்கும்" இடையிலான கூட்டு முக்கியப் பங்காற்றியது. சோவியத் யூனியனுடன் இனி எந்த சமரசம் செய்து கொண்டாலும் அது ஜனநாயகக் கட்சியினரின் அரசியலுக்கு எதி ராக வெளிப்படையான பிரச்சாரத்தைத் துவக்குமாறு தம்மை நிர்ப்பந்திக்கும் என்று குடியரசுக் கட்சியின் தலைவர்கள் அறிவித்த னர்.

அமெரிக்காவின் ஆக்கிரமிப்புத் தன்மை அணு குண்டு தயாராக இருந்த செய்தியைப் பெரிதும் ஆதாரமாகக் கொண்டிருந்தது என்பதில் எவ்வித இரகசியமும் இல்லை. "நியூ மெக்சிக்கோவின் நிலவரம் (இங்குதான் முதன்முதலாக அமெரிக்க அணு குண்டு வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது. — ஆ-ர்.) நம் கரங்களில் பெரும் சக்தியைத் தந்துள்ளது. நம் கருத்துப்படி இது இறுதியில் சம்பவங் களைக் கண்காணிக்கும்"[51] என்று அரசுத் துறைச் செயலர் ஜே. பிர்ன்ஸ் தன் சக ஊழியர்களிடம் குறிப்பிட்டார். சோவியத் யூனியனுடனான உறவுகளில் அதிகமான இடர்ப்பாடுகளை அமெரிக்க இராணுவ வட்டங்கள் பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டன. இது சோவியத் யூனியனை எதிரியாகச் சித்தரித்தது. இதன் அடிப்படையில் அவை இராணுவ நிதி ஒதுக்கீடுகளைப் பெருக்க வேண்டுமென்றும் இராணுவத்தின்

தயார் நிலையை அதிகப்படுத்த வேண்டு மென்றும் கோரின. 1947 டிசம்பரில் தொலை கிழக்கிலிருந்த அமெரிக்க வான்படைச் சக்தி களின் தளபதி வான்படைத் தலைமை யகத்தின் தலைவராகிய ஜெனரல் ஸ்பாவாட் சிற்குப் பின்வருமாறு எழுதினார்: "என் கருத்துப்படி அடுத்த சில மாதங்களில் சோவியத் யூனியனுக்கு எதிராக யுத்தம் மூளும் அபாயம் தோன்றியுள்ளதை நான் கோடிட்டுக் காட்ட கடமைப்பட்டுள்ளேன்"[52].

1946, 1947ஆம் ஆண்டுகளிலும் 1948ஆம் ஆண்டின் முதல் பாதியிலும் அமெரிக்கா தற்காப்புச் சக்திகளைப் பகுதியளவிற்கு அணிதிரட்டுவதில் இறங்கியது; இதன் மூலம் நிரந்தரத் தயார் நிலைக்கு வகை செய்து, கணிசமான அளவு தொழில்துறைப் பிரிவுகள், விஞ்ஞான அறிவுஜீவிகள் அடங்கிய ஒருவித இராணுவ அமைப்பைத் தோற்றுவிக்க ஆரம் பித்தது. மற்ற நாடுகளுடனான பல இரா ணுவ ஒப்பந்தங்களும் மேலாதிக்க கொள்கை யுடனும் யுத்தத்திற்குப் பிந்தைய அமெரிக்க இராணுவ இயந்திரக் கட்டுமானத்துடனும் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தன. அமெரிக்க ஐக்கிய நாடு சர்வபொது மறு ஆயுதந்தரித்தலைத் துவக்கியது. அது முதற் கொண்டு அமெரிக்க இராணுவ-அரசியல் தலை மையின் கண்களில் ஆயுதப் போட்டியானது சோவியத் யூனியனுக்கு எதிரான அரசியல் போராட்டத்தின் தீவிரத்தைக் காட்டும் குறியீடாக மாறியது.

ஆனால் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் அமெரிக்காவில் நிலவிய உள்நாட்டு அரசியல் நிலவரம் இத்தகைய திட்டங்களுக்கு முற்றிலும் துணை புரியவில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும். மாபெரும் தேசபக்த யுத்தத்தில் சோவியத் மக்களின் வீரச் செயல்களை நினைத்துக் கொண்ட, ஐரோப் பாவிலும் ஆசியாவிலும் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளால் களைத்துப் போயிருந்த பொதுமக்கள் அமெரிக்க மேலாதிக்கவாத லட்சியங்களை அடையவும் ''அமெரிக்க முறைப் படியான உலகை'' ஏற்படுத்தவும் புதிய பலிகளுக்கு மனநிலை ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தயாராக இல்லை.

இப்படிப்பட்ட நிலைமையில் இராணுவ இயந்திரத்தை ஏற்படுத்துவது சம்பந்தமான நிர்வாகத்தின் திட்டங்களை காங்கிரஸ் ஊர் ஜிதப்படுத்தும் வாய்ப்புகள் சந்தேகமானவை யாக இருந்தன. 1945 அக்டோபரில் ஜனாதிபதி பகுதியளவு கட்டாய இராணுவச் சேவையைத் தொடருமாறும் சர்வபொது இராணுவக் கல்வியை ஏற்படுத்துமாறும் முன்மொழிந்தார். இரண்டு முன்மொழிவுகளுமே மக்களிடம் கடும் எதிர்ப்பை ஏற்படுத்தின. சமாதானக் காலத்தில் நிரந்தர இராணுவச் சேவையை இதற்கு முன் அவர்கள் கேள்விப்பட்டதே கிடையாது. மேலும் யுத்தம் முடிவுற்றதை யடுத்து வரிச் சுமை குறையுமென பல அமெரிக்கர்கள் நம்பினர். ''சர்வதேச நிலவரம் மிகவும் அச்சுறுத்தும் ஒரு வளர்ச்சியைப்

பெறாமலிருந்தால்''[53] சர்வபொது இராணுவக் கல்வி பற்றிய செயல்திட்டத்தை காங்கிரஸ் அங்கீகரிக்கும் வாய்ப்புகள் மிகக் குறைவே என்று 1945 டிசம்பரில் *Newsweek* இதழ் எழுதியது. இப்படி செயற்கையாக நிலவரத்தை சீர்கேடு அடையச் செய்ததுதான் படைகளைக் கலைத்த வேகத்தைக் குறைக்க உதவியது.

1946–1947இல் பட்ஜெட் நிதி ஒதுக்கீடுகளில் பெரும் பங்கிற்காக வான்படைக்கும் கடற்படைக்கும் இடையே போராட்டம் மூண்டது. அதிகாரவர்க்கத் தன்மையைப் பெற்றிருந்த இந்த இலாக்காச் சண்டையில் இரு தரப்பாரும் ''சோவியத் இராணுவ அபாயம்'' எனும் கட்டுக்கதையைப் பரவலாகப் பயன்படுத்தினர். இத்தகைய ஒரு கூற்றின் அபத்தம் மிகவும் தெளிவானதாக இருந்ததால் வான்படை வேவுப் பிரிவின் இயக்குனரே இதை நிராகரித்து, சோவியத் நீர்மூழ்கிக் கப்பல்களின் ''அபாயம்'' என்பது கற்பனையான ஒன்று எனக் கூறினார்: ''இன்று பரந்த அளவில் ருஷ்யர்களின் அச்சுறுத்தல் என்பது முற்றிலுமாக மிகைப்படுத்தப்பட்டது, இதற்கும் யதார்த்தத்திற்கும் சம்பந்தமேயில்லை''[54].

சோவியத் யூனியனின் உள்நாட்டு அமைப்பை மாற்றும் நோக்கத்தோடு இதன் உள் விவகாரங்களில் தலையிட்டதும் வாஷிங்டனின் வல்லரசு பேராசைகளைக் காட்டியது. அமெரிக்கா பல்வேறு தரப்புகளிலிருந்து இதில் இறங்கியது. நிச்சயமாக இது இராணுவ

பலத்தைப் பிரதான சாதனமாகக் கருதினா லும், மிக அழிவுகரமான ஒரு யுத்தத்தில் கடுமையான இழப்புகளைச் சந்தித்த ஒரு நாட்டை நேரடியாக அரசியல், பொருளாதார ரீதியாக மிரட்டுவதையும் மறுக்கவில்லை. ட்ரூமன் நிர்வாகம் அரசியல் துறையில் இணக்கங்களைப் பெறும் முகமாக சோவியத் யூனியனுக்குப் பொருளாதார உதவி அளிப் பதைக் ''கெடுபிடி யுத்தத்தின்'' ஆயுதமாகப் பயன்படுத்தப் பன்முறை முயன்றபோதிலும் பயனேதும் கிட்டவில்லை.

அமெரிக்க ஆளும் மேல் மட்டத்தில் இரண்டு போக்குகளுக்கு இடையிலான போராட்ட சூழ்நிலையில்தான் ''கெடுபிடி யுத்தக்'' கொள்கை உருவாக்கப்பட்டது. இந்த இரு போக்குகளும் சோவியத் யூனியனின் நோக் கங்களை வெவ்வேறாக மதிப்பிட்டன. அமெ ரிக்க ஆளும் வர்க்கத்தின் பெரும் போர்க்குண முள்ள, ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள பிரதிநிதி கள் அடங்கிய ஒரு கோஷ்டி சோவியத்-அமெரிக்க கருத்து வேறுபாடுகளை அகற்றும் வாய்ப்பை முற்றிலுமாக மறுத்தது, ஏதோ சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கொள்கை ''எல்லையற்ற விஸ்தரிப்பை'' நோக்கமாகக் கொண்டுள்ளதாக அறிவித்தது. மேற்கொண்டு அமெரிக்கா இணங்கிப் போனால் அது சோவியத் யூனியனின் ''பசியைக் கொழுந்து விட்டு எரியச் செய்யும்'' என்று இவர்கள் கூறினர். இவர்களுடைய கருத்தின்படி, சோவி யத் ''விஸ்தரிப்பைத்'' தடுத்து நிறுத்தி,

உலகில் நிலவும் சக்திகளின் சமன்நிலையை மேற்கு உலகிற்கு ஆதரவாகப் புனர்நாட்ட அமெரிக்காவும் இதன் மேலைய கூட்டு நாடுகளும் தம் இராணுவ முயற்சிகளையும் பொருளாதார மூலாதாரங்களையும் ஒன்று திரட்ட வேண்டும்.

இரண்டாவது கோஷ்டி (இதுவும் நிர்வாகத்தில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளது) அமெரிக்காவைப் போன்றே சோவியத் யூனியனும் எதிர்கால யுத்தங்களைத் தடுப்பதற்காக உலக பாதுகாப்பு அமைப்பை ஏற்படுத்துவதில் அக்கறை கொண்டுள்ளதாகக் கருதியது. அமெரிக்காவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையே தீவிர கருத்து மாறுபாடுகள் தோன்றியுள்ளதை ஒப்புக்கொண்ட இவர்கள், இரு தரப்பாரும் பேச்சுவார்த்தைகளுக்கும் சமரசத்திற்கும் தயாராக இருந்தால் இவற்றை அகற்றலாம் என்று கருதினர். இந்தக் கோஷ்டி சோவியத் அரசின் பாதுகாப்பு நலன்களை ஓரளவு புரிந்து கொண்டது, தன் கூட்டு நாட்டின் பாலான அமெரிக்காவின் பாரபட்ச நடவடிக்கைகளைக் கண்டித்தது.

1945 இலையுதிர்க் காலம் வரை ட்ரூமனின் நிர்வாகம் இந்த இரண்டு கோஷ்டிகளின் நிர்ப்பந்தத்தின் கீழிருந்தது. இவை இரண்டுமே ஜனாதிபதியைத் தம் பக்கம் இழுக்க முயன்றன. படிப்படியாக காங்கிரசின் தலைவர்களும் பெரும்பாலான இராணுவத் தலைவர்களும் ஆக்கிரமிப்பு நோக்கமுள்ள, சோவியத் எதிர்ப்புக் கொள்கையின் ஆதரவாளர்களுடன்

சேர்ந்து கொண்டனர். நிர்வாகத்தின் உள்ளேயும் வெளியேயும் இருந்த வலதுசாரி கோஷ்டிகளின் ஐக்கிய முன்னணி வல்லரசுப் பேராசைகளாலும் ''அமெரிக்க முறைப்படியான உலகின்'' வெறியாலும் உந்தப்பட்டு அமெரிக்க கொள்கையைக் ''கெடுபிடி யுத்தப்'' பாதையில் தள்ளியது. இப்பாதையில் இது மேன்மேலும் வேகமாகச் சென்றது.

''கெடுபிடி யுத்த'' தத்துவமும் யுத்தத்திற்குப் பிந்தைய பத்தாண்டுகளில் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குத் தலைமை தாங்கிய ஆளும் இராணுவ-அரசியல் கோஷ்டியின் சிந்தனையைப் பிரதிபலிக்கும் இராணுவத் திட்டங்களும் NSC-68 *(1950 ஏப்ரல்)*, NSC-162 *(1953 அக்டோபர்)* எனும் இரண்டு ஆணைகளில் இடம் பெற்றுள்ளன. இந்த ஆவணங்கள் குறைந்தபட்சம் பத்தாண்டுகளுக்கும் மேலாக இயங்கின, அமெரிக்க இராணுவ இயந்திரத்தின் நடைமுறை நடவடிக்கையைப் பெரிதும் நிர்ணயித்தன. ஜனாதிபதி கென்னடியின் காலத்தில் இரண்டு ஆணைகளையுமே கைவிட்டாலும், இவற்றில் இடம் பெற்றுள்ள ''தத்துவம்தான்'' அமெரிக்க ஆளும் வட்டங்களின் சிந்தனையில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறது என்பதிலும் இவற்றின் நடவடிக்கைகளை நிர்ணயிக்கிறது என்பதிலும் சந்தேகமில்லை.

NSC-68 ஆணைக்கு ''தேசியப் பாதுகாப்புத் துறையில் அமெரிக்க ஐக்கிய நாட்டின் நோக்கங்களும் செயல்திட்டங்களும்'' என்று பெயர். சோவியத் யூனியனில் அணு

ஆயுதம் தயாரிக்கப்பட்டது, சீன மக்கள் குடியரசின் தோற்றம், அமெரிக்கா தெர்மோ அணு ஆயுதத்தை உற்பத்தி செய்வதென முடிவு செய்தது ஆகியவற்றையடுத்து தோன்றிய விளைவுகள் அனைத்தையும் பகுப்பாய்வு செய்யுமாறு ஜனாதிபதி ட்ரூமன் விடுத்த கட்டளைக்குப் பதிலாக இது 1950 பிப்ரவரி–மார்ச்சில் தயாரிக்கப்பட்டது. டி. ஆச்செசனின் பொதுவான மேற்பார்வையின் கீழ், அரசுத் துறை திட்டப் பிரிவின் அன்றைய தலைவர் பா. நித்செவின் நேரடி தலைமையின் கீழ் அரசுத் துறை திட்டப் பிரிவு மற்றும் பாது காப்பு அமைச்சகத்தின் ஊழியர்கள் அடங்கிய ஒரு விசேஷக் குழுவால் இது தயாரிக்கப் பட்டது.

இந்த ஆணை 1950 ஏப்ரலில் ஜனாதிபதியின் முன் சமர்ப்பிக்கப்பட்டது, 1950 செப்டெம்பர் 30இல், அதாவது கொரியாவில் அமெரிக்க ஆக்கிரமிப்பு ஆரம்பமாகிய பின் அவரால் அங்கீகரிக்கப்பட்டது. 1975ஆம் ஆண்டின் துவக்கத்தில் முன்னாள் அரசுத் துறைச் செயலர் ஹெ. கிஸ்ஸின்ஜெர் தன் அரசியலின் முக்கிய நோக்கங்கள் மற்றும் அமெரிக்காவின் பாரம்பரியமான கொள்கைப் போக்கு ஆகிய வற்றின் தொடர்ச்சியை ஊர்ஜிதப்படுத்து வதற்காக இந்த ஆவணத்தைப் பற்றிய இரகசியத்தை வெளிப்படுத்தினார்.

இந்த ஆணையில் இன்றைய உலக நெருக்கடியின் சாரம் ‘‘சுதந்திர உலகிற்கும்’’ ஏதோ உலக ஆதிக்கத்தை நாடும் சோவியத்

யூனியனுக்கும் இடையிலான முழு சச்சரவாக சித்தரிக்கப்பட்டுள்ளது. சோவியத் யூனியனின் ‘‘ஆக்கிரமிப்புத் தன்மையும்’’ ‘‘விஸ்தரிப்பு குணமும்’’ ஒரு சர்வாதிபத்திய அரசியல் அமைப்பின் இயல்பிற்குரிய அம்சங்கள் என்றும் இந்த அமைப்பில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தாமல் ‘‘சோவியத் நடத்தையை’’ மாற்ற முடியாதென்றும் எனவே சோவியத்-அமெரிக்க சச்சரவை நிறுத்துவது இயலாது என்றும் அறிவிக்கப்பட்டது.

தம் பங்கிற்கு இந்த நோக்கத்தை அடைவதற்காக சோவியத் யூனியனின் மீதான பன்முக நிர்ப்பந்தத்தைப் பெரிதும் அதிகப் படுத்துவதும் இதன் ‘‘விஸ்தரிப்பை’’ நிறுத்துவதுமே போதுமானது என்று கருதப்பட்டது; இந்த ‘‘விஸ்தரிப்பு’’ இல்லாமல் (அதே தர்க்கத்தின்படி) ஏதோ சோவியத் சமூக அமைப்பால் நிலவ முடியாதாம். எனவே ‘‘சோவியத் முறையைக் கட்டுப்படுத்தி வைப்பதுதான்’’ அமெரிக்க ஐக்கிய நாட்டின் முக்கியக் கடமையெனப் பிரகடனப்படுத்தப் பட்டது; இது ‘‘இறுதியில் சோவியத் முறையின் உள்ளே சுய அழிவிற்கான விதைகளை விதைத்து குறைந்தபட்சம் அது தன் நடத்தையை மாற்றிக் கொள்ளும்படி நிர்ப்பந்திக்கும் வகையில் கிரெம்ளினின் அதிகாரத்தை மட்டுப்படுத்தி சோவியத் யூனியன் மீது தாக்கம் செலுத்துவதை’’[55] முன்னனுமானித்தது. இராணுவ பல மேன்மை இந்நோக்கத்தை அடைவதற்கான முக்கிய சாதனமாகக்

கருதப்பட்டது.

அமெரிக்க அரசியல் நோக்கங்களை அடைவதற்குப் பல நடவடிக்கைகள் அடங்கிய ஒரு முழு முறையே தேவையென அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இராணுவச் செலவினங்களைக் கணிசமான அளவு அதிகரிப்பது, இராணுவ உதவி செயல்திட்டங்களை விரிவுபடுத்துவது, சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடுகளுக்கு எதிராக வெளிப்படையான மனநிலை யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடுவது, பொருளாதார, அரசியல், மனநிலை யுத்த துறைகளில் இரகசிய நடவடிக்கைகளை அதிகப்படுத்துவது, சோஷலிச நாடுகளில் கிளர்ச்சியைத் தூண்டுவது வரை அதிருப்தியை மூட்டி விடுவது, அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்பை பலப்படுத்துவது, சிவில் பாதுகாப்புச் செயல்திட்டங்களை நிறைவேற்றுவது, வேவுபார்க்கும் நடவடிக்கைகளை மேம்படுத்துவது, தற்காப்புச் செலவுகளைத் தவிர சகலவித சமஷ்டிச் செலவினங்களையும் குறைப்பது, அந்நிய உதவியைக் குறைப்பது, வரிகளை அதிகமாக்குவது ஆகிய நடவடிக்கைகள் இதிலடங்கும்.

இந்த முன்மொழிவுகள் எல்லாம் 50ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் நிறைவேற்றப்பட்டன. 1950–1952ஆம் ஆண்டுகளில் இராணுவச் செலவுகள் மும்மடங்கிற்கும் அதிகமாகப் பெருகின.

NSC-68 ஆணையைப் பிரபல அமெரிக்க அரசியல் பிரமுகர் ஜா. கென்னன் கண்டித்

தார். சோவியத் யூனியனின் ''விஸ்தரிப்பு'' நோக்கங்களை இப்படி விமரிசித்ததையும் இராணுவ பலத்தை இப்படி ஒருதலைப்பட்ச மாக ஆதாரமாகக் கொண்டதையும் இவர் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் ஆச்செசனும் நித்செவும் NSC-68 ஆணையின் பிரதானக் கடமையை சோவியத் யூனியனின் நோக்கங் களைப் பற்றிய யதார்த்தமான மதிப்பீட்டில் பார்க்காமல், அதிகக் கடுமையான, தாக்குதல் நோக்கமுடைய சோவியத் எதிர்ப்புக் கருத் தொற்றுமையைச் சுற்றி (இது அந்நேரத்தில் விவாதத்திற்குரியதாயிருந்தது) அமெரிக்க அரசி யல் மேல் மட்டத்தை அணிதிரட்டுவதில் பார்த்தார்கள். பாதுகாப்பு அமைச்சகம் 1950 நிதியாண்டிற்கு 13.5 பில்லியன் டாலர்களை மட்டுமே இராணுவச் செலவு களுக்காக ஒதுக்கத் திட்டமிட்டது, பாது காப்பு அமைச்சர் ஜான்சன் பணவீக்கம் ஏற்படக் கூடுமென்று அஞ்சி இராணுவ பட்ஜெட்டைக் கணிசமாகப் பெருக்குவதை எதிர்த்தார். காங்கிரசும் மிகவும் கட்டுப்பா டான போக்கையே வெளிப்படுத்தியது. இந்தச் சூழ்நிலையில் ஆயுதப் போட்டிக்குக் கூடுதல் உந்து சக்தி தேவைப்பட்டது. எனவே பெரும் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் ஆவணத்தில் பயன்படுத்தப்பட்ட, சோவியத் நோக்கங்களைப் பற்றி திரித்துரைக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு முற்றிலும் திட்டவட்டமான லட்சியம் இருந்தது. தேசியக் கொள்கையை இராணுவ வெறித் திசையில் திருப்புவது

என்பதுதான் அது.[56]

1953 அக்டோபர் 29ந் தேதி தேசியப் பாதுகாப்புக் கவுன்சில் NSC-162 ஆணையை ஆமோதித்தது. ''தேசியப் பாதுகாப்புத் துறையில் கடைபிடிக்க வேண்டிய கொள்கையின் பிரதானப் போக்குகளின் சுருக்கம்'' என்று இந்த ஆணைக்குப் பெயர்.

''செல்வாக்கு மண்டலங்களைப் பலப்படுத்தி விரிவுபடுத்துவதும் இறுதியாக, கம்யூனிசம் நிலவாத உலகில் ஆதிக்கம் செலுத்துவதும் தான்'' சோவியத் யூனியனின் அடிப்படை லட்சியங்களென ''பொதுப் பிரச்சினைகள்'' என்ற பிரிவில் கூறப்பட்டுள்ளது. இதோடு கூட, ''சோவியத் யூனியன் கணிசமான காலகட்டத்திற்கு ஏதாவது திட்டவட்டமான பிரச்சினைகளைத் தீர்க்கவும் பதட்ட நிலையைத் தணிக்கவும் அல்லது இராணுவத் தயாரிப்புகளைக் குறைக்கவும் முயலக் கூடும்'' என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. மறுபுறத்தில் காரணமின்றியே, எவ்வித அடிப்படைகளும் இல்லாமலேயே (நிச்சயமாக இவை இருந்திருக்கவும் முடியாது) ஏதோ ''ஒருவேளை வெகு விரைவிலேயே சோவியத் யூனியனால் நம் தொழில்துறை ஆதாரக் கட்டுமானத்தின் மீது அழிவுத் தாக்குதலைத் தொடுத்து யுத்தத்தை நடத்தும் நம் திறமையை முடமாக்க முடியும்'' என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஏதாவது ஒரு சோஷலிச நாடு சோவியத் யூனியனிடமிருந்து பிரிந்து சென்றால் அது ''சோவியத் யூனியனின்

செல்வாக்கைப் பெரிதும் பாதிக்கும், சோவியத் இராணுவ உள்ளாற்றலுக்கு ஒரு குறிப்பிட்ட இழப்பை ஏற்படுத்தியிருக்கும்'' என்று அதே பிரிவில் கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது. ''சோவியத் யூனியன் அமெரிக்காவிற்கு ஏதிராக திட்டமிட்ட முழு யுத்தத்தை துவக்க அதிக வாய்ப்பில்லை.... நேட்டோ நாடுகள் அல்லது மற்ற நாடுகள் மீது தாக்கும் வாய்ப்பும் குறைவே'' என்றும் இப்பிரிவில் எழுதப்பட்டிருந்தது. ஆனால் சிபாரிசுகளிலோ, முழு யுத்தம் ஏற்பட்டால் வெற்றிக்கு வகை செய்வதற்காக, ''தாக்குதல் ஆயுதத்தின் உதவி கொண்டு பரவலான பதிலடி தரும் திறமையின் மீது விசேஷக் கவனம் செலுத்தி இராணுவ பலத்தையும் ஆயுதங்களையும்'' வளர்ப்பதைப் பற்றிய கட்டளைகள் இடம் பெற்றிருந்தன.[57]

பின்வரும் கடமைகள் ஒற்றாடல் ஸ்தாபனங்களின் முன் வைக்கப்பட்டன: ''அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு நேரடித் தொடர்புள்ள பிரச்சினைகளில், சீர்குலைவுத் தன்மையுள்ள இராணுவ, அரசியல், பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்''. ''அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் ஆயுத சாதனங்களில் மேலோங்கி நிற்க வகை செய்யும் நோக்கத்தோடு விஞ்ஞான ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகளுக்கு சகல விதங்களிலும் உதவ வேண்டும்.... தேவையான காலம் பூராவும் பகுதியளவு படைத் திரட்டலைப் பராமரிக்க வேண்டும்.'' ''போதுமான அளவு அணு ஆயுதங்களும்

இவற்றை எடுத்துச் செல்ல வல்ல செயல்வன் மையுள்ள சாதனங்களும்'' அமெரிக்காவிடம் இருக்க வேண்டியதன் முழு அவசியம் ஆணையில் கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தது; அமெரிக்கப் போர்த்தந்திரம் அணு ஆயுதத் தைப் பயன்படுத்துவதை ஆதாரமாகக் கொண் டிருக்க வேண்டுமென்றும் அமெரிக்காவின் பிரதானக் கூட்டாளிகள் இதை உறுதியாக நம்ப வேண்டுமென்றும் அதில் குறிப்பிடப் பட்டிருந்தது.[58]

''அமெரிக்கப் பாதுகாப்பின் அடிப்படை நலன்களுக்கு முரண்படாத வகையில் சோவி யத் யூனியனுடன் உடன்பாட்டை அடையும் வாய்ப்பை அமெரிக்கா மறுக்கவில்லையென் றும்.... தன் கூட்டு நாடுகளின் ஆதரவைத் தக்கவைத்து கொள்ள, உடன்படிக்கையை அடைய தனக்குள்ள நாட்டத்தை அவை நம்புமாறு செய்ய முயல வேண்டும்'' என்றும் அந்த ஆணையில் சுட்டிக் காட்டப் பட்டிருந்தது. சோவியத் எதிர்ப்புக் கூட்டணி யின் நிலையை மதிப்பிடும் போது, ''தன் அணு ஆயுதத்தையும் பேரழிவுச் சக்திகளையும் பயன்படுத்துவதில் அமெரிக்காவிற்கு உள்ள தீர்மானகரமான உறுதியில்தான்'' முக்கிய அம்சம் அடங்கியுள்ளதென இந்த ஆணை குறிப்பிட்டது.[59]

நாட்டு மக்களின் மனநிலையில் சோவியத் எதிர்ப்பு, கம்யூனிச எதிர்ப்பு போக்குகளை ஏற்படுத்துவதன் மீதும் இந்த ஆணையில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. அதாவது,

''தேசிய இனத்தின் ஆன்மீக மனப்பாங்கையும் தேசியப் பாதுகாப்பிற்கு அவசியமான நடவடிக்கைகளுக்கும் இதற்கு அவசியமான பலிகளுக்கும் இடையில் சரியான சமன்நிலையைத் தேர்ந்தெடுப்பதில் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க நாட்டு மக்கள் அனைவரின் அரசியல் தயார் நிலையையும் ஊக்குவிக்க வேண்டும். இதற்கேற்ப சோவியத் கம்யூனிச அபாயத்தின் தன்மையை அமெரிக்கர்கள் சரியானபடி மதிப்பிட வேண்டும்.... இதற்கெதிரான போராட்டத்திற்கு அவசியமான ஆன்மீக, பொருளாயத மூலாதாரங்களை அணிதிரட்டும் அவசியத்தை உணர வேண்டும்.''[60]

''அரசியல் முடிவுகள். தேசியப் பாதுகாப்புத் துறையில் முக்கிய அரசியல் பிரச்சினைகள்'' என்ற பிரிவில், அணு ஆயுத உள்ளாற்றல், பெருமளவுத் தாக்குதல் மற்றும் தேவையான இராணுவத் தளங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ''பதிலடித் தாக்குதலின் ஆயுதப் பலத்திற்கு முக்கியக் கவனம் செலுத்தி'' அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவ பலத்திற்கு ஆதரவளிக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. ''சுதந்திர உலகை நம்பகரமாகப் பாதுகாப்பது அமெரிக்க இராணுவத்தைப் பெருக்குவதுடன் பிரிக்க இயலாதவாறு தொடர்புடையது'' என்று உலகின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள தன் கூட்டாளிகளை நம்பவைப்பதுதான் அமெரிக்க இராஜதந்திர நடவடிக்கையின் முக்கியப் போக்காக வரையறுக்கப்பட்டது.

சோவியத் யூனியனைப் பொறுத்த மட்டில் பின்வரும் செயல்திட்டம் ஆமோதிக்கப்பட்டது: ''உலகில் நிலவும் சக்திகளின் சமன்நிலையில் சோவியத் கூட்டின் நிலையை மோசமாக்கி தன் நிலையையும் சுதந்திர உலகின் மற்றப் பகுதிகளின் நிலையையும் பலப்படுத்த அமெரிக்கா முயல வேண்டும்.... சோவியத் ஆட்சியின் செயல்வன்மையுள்ள கருவிகளாகிய சோவியத் செல்வாக்கையும் சித்தாந்தத்தையும் களங்கப்படுத்தவும் கம்யூனிஸ்டுக் கட்சிகள், மற்ற சோவியத் ஆதரவுச் சக்திகளின் சக்தியைப் பலவீனப்படுத்தவும் வெளிப்படையான மற்றும் இரகசிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சுதந்திர உலகின் எந்த ஒரு நாட்டிலும் தலைமை நிலையைக் கைப்பற்ற சோவியத் யூனியனின் நேரடி அல்லது மறைமுக கண்காணிப்பின் கீழுள்ள எந்த ஒரு கட்சியும் அல்லது தனிப்பட்ட நபர்களும் செய்யும் முயற்சிகளை சகல விதங்களிலும் எதிர்ப்பதற்காகப் பயனளிக்கக் கூடிய எல்லா இராஜதந்திர, அரசியல், பொருளாதார மற்றும் இரகசிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். சுதந்திர உலகின் எந்த ஒரு பிரதேசத்தின் மீதும் கம்யூனிசக் கண்காணிப்பை அகற்றுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட, செயல்வன்மையுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கேற்ப அமெரிக்க ஐக்கிய நாடு சோவியத் யூனியனுக்கு இக்கட்டான பிரச்சினைகளை முதலில் ஏற்படுத்தி பின் அவற்றைத் தன்னு

டைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தவும் சோவியத் யூனியனுக்கும் கம்யூனிச சீனாவிற்கும் இடையில் உள்ள உறவுகளை வேண்டுமென்றே மோசமாக்கவும் தன்னுடைய கூட்டாளி களாகிய துணை நாடுகளின் மீது சோவியத் யூனியனுக்கு உள்ள கண்காணிப்பைச் சிக்க லாக்கவும் சோவியத் கூட்டின் இராணுவ, பொருளாதார உள்ளாற்றலின் வளர்ச்சியை மந்தமாக்கவும் பயன் தரும் அரசியல், பொருளாதார, பிரச்சார நடவடிக்கைகளை முடிந்த அளவிற்கு மேற்கொள்ள வேண்டும்.''[61]

இவ்வாறாக இந்த ஆணையும் அமெரிக்கப் போக்கிற்கு ஏற்றபடியான உலகை உருவாக்கு வதைத் தன் இறுதி லட்சியமாகப் பிரகடனப் படுத்தியது.

மேற்கூறிய இரு ஆவணங்களும் ''கெடுபிடி யுத்தக்'' காலகட்டத்தில் அமெரிக்க இராணுவ-அரசியல் திட்டமிடுதலின் முக்கியப் போக்கு களை உள்ளடக்கியிருந்தன. மேற்கூறிய போக்குகளுடன்தான் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் அமெரிக்க இராணுவ இயந்திரம் கட்டமைப்பு ரீதியாகவும் வளர்ச்சியடைந்தது.

## 3. இராணுவ ஐக்கியக் கட்டமைப்பின் தோற்றமும் யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் இதன் வளர்ச்சியும்

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் தோற்றுவிக்கப்பட்ட அமெரிக்க இராணுவ

இயந்திரம் வளர்ந்து பெருகியது. சோவியத் யூனியனுடனான உறவுகளின் பிரச்சினை அமெரிக்க இராணுவத்தின் எதிர்காலக் கட்டு மானத்துடன் இருபொருளின்றி தொடர்பு படுத்தப்பட்டது. சோவியத் யூனியனுக்கு எதிராக யுத்தத்தை (சாதாரண யுத்தத்தை மட்டுமல்ல, அணு ஆயுத யுத்தத்தையும்) நடத்தி வெற்றி பெறும் நிலையிலிருக்கும் கடமை இந்த இராணுவத்தின் முன் வைக்கப்பட்டது. இதை நிறைவேற்ற அமெரிக்க இராணுவத்தின் ஐக்கியக் கட்டமைப்பை ஏற்படுத்துவது உகந்த தாக இருக்குமென்று அமெரிக்க இராணுவ-அரசியல் திட்டங்களைத் தீட்டுவோர் முடிவு செய்தனர். ஆனால் பட்ஜெட்டில் தம் பங்கிற்காகவும் செல்வாக்கிற்காகவும் முப்படை களின் படைத்தலைமைகளுக்கு இடையில் நடைபெற்ற உள் போராட்டம் யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் இப்பாதையில் முக்கியத் தடையாக இருந்தது.

*1943*ஆம் ஆண்டு அமெரிக்க தரைப்படையின் படைத்தலைமையகத் தலைவனாகிய ஜெனரல் மார்ஷல் அமெரிக்க இராணுவத்தின் ஐக்கியக் கட்டமைப்பை ஏற்படுத்தும் பிரச்சினையை காங்கிரசின் முன் பரிசீலனைக்கு வைத்தார். ஜெனரல் வி. டோம்கின்சன் தலைமையில் விசேஷத் திட்டப் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப் பட்டது. ‘‘சமாதான காலத்தில் இராணுவத் தின் போர்த்தந்திரத்தையும் கொள்கையை யும்’’[62] உருவாக்கும் கடமை இப்பிரிவிற்கு வழங்கப்பட்டது.

உலகளாவிய கொள்கையின் நலன்களை ஆதாரமாகக் கொண்டு, இரண்டாவது உலக யுத்த அனுபவங்களைக் கவனத்தில் கொண்டு யுத்த காலத்திய ஐக்கிய மற்றும் விசேஷப் படைத்தலைமைகள் அமெரிக்க இராணுவ அமைப்பில் உறுதியடைந்தன, படைத்தலை மையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி இரண்டாவது உலக யுத்தக் காலகட்டத்தின் போது ஒன்றுபடுத்தப்பட்ட இராணுவக் கொள்கையின் பிரச்சினைகள் சம்பந்தமாக ஜனாதிபதிக்கு "கூட்டு ஆலோசகனாக" இருந்ததைப் போன்றே இப்போதும் இருந்தது. "அசாதாரண சம்பவங்கள் பற்றிய திட்டமிடு தலை சர்வதேச நடவடிக்கையின் மற்ற துறை களிலுள்ள திட்டங்களுடன் — வேவு பார்த்த விவரங்களைச் சேகரித்து மதிப்பிடுவது, அந்நிய அரசுகளுக்கு இராணுவ உதவியையும் மற்ற வகையான உதவிகளையும் அளிப்பது, ஐ. நா. சபை முதல் பிரதேசக் கூட்டுகள் மற்றும் தனிப்பட்ட நாடுகள் வரையிலான எல்லா மட்டங்களிலும் இராஜதந்திர ரீதியாக சுறுசுறுப்பாக இயங்குவது, பொது அரசு மட்டத்தில் மூலாதாரங்களைத் திட்டமிடுவது ஆகியவற்றுடன் — இணைப்பதை அதிகப்படுத்து வது அவசியமென அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமை ஒப்புக்கொண்டது."[63]

அமைச்சகங்களுக்கு இடையிலான மட்டத் திலும் பெண்டகனின் உட்பிரிவுகளுக்கிடை யேயும் நிலவிய ஒருங்கிசைவுப் போக்குகளுக்கு அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நோக்குடைய

வெளிநாட்டு மற்றும் இராணுவக் கொள்கையைப் பயன்மிகு வகையில் நிறைவேற்றும் எண்ணங்கள் காரணமாக இருந்ததோடு கூட மற்ற சில சிறப்பு அம்சங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன. முதலாவதாக, மிகப் பெருமளவிலான இராணுவச் செலவினங்கள் அமெரிக்கப் பொருளாதாரத்தின் கட்டமைப்பின் ஸ்திரத் தன்மைக்கும் கணிசமான வளர்ச்சிக்கும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடும். இரண்டாவதாக, கம்யூனிச எதிர்ப்பு வெறி அமெரிக்க அரசு நிறுவனங்களில் சோவியத் யூனியனின் ஏஜெண்டுகள் பெருமளவில் ''ஊடுருவக் கூடுமென்ற'' பயங்கரக் கனவுகளை ஏற்படுத்தியது.

1946 இலையுதிர்க் காலத்தில்தான் யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் இராணுவத்தின் ஐக்கியக் கட்டமைப்பு இறுதியாக ஏற்படுத்தப்பட்டது. அப்போதுதான் ஐக்கியப் படைத்தலைமை கட்டமைப்பை ஏற்படுத்துவது சம்பந்தமாக விரிவாக உருவாக்கப்பட்ட முன்மொழிவுகளை ஜெனரல் நோர்ஸ்தேதும் அட்மிரல் ஷெர்மனும் முன்வைத்தனர். படைத் தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி இந்த முன்மொழிவுகளை ஏற்றது. மார்ஷல், பின்னால் ஐசன்ஹோவர், யாங், கிங், நிமித்ஸ், அர்னோல்டு போன்ற பிரபல இராணுவத் தலைவர்கள் இதில் இடம் பெற்றிருந்தனர். உலகின் எல்லாப் பிரதேசங்களிலும் தன் இராணுவத்தை நிறுத்தவும் அமெரிக்காவின் இராணுவத்தை செயல்வன்

மையோடு பயன்படுத்த உதவ வல்ல ஒரு இராணுவ அமைப்பை ஏற்படுத்தவும் அமெரிக்கா கொண்டுள்ள உலகளாவிய பேராசைகள் இந்த முன்மொழிவுகளில் பிரதிபலித்தன. முப்படைகளின் பங்கு மற்றும் கடமைகளைப் பற்றிய இரண்டாவது ஆவணத்தையும் ஜெனரல் நோர்ஸ்தேதும் அட்மிரல் ஷெர்மனும் தயாரித்தனர். இந்த ஆவணங்கள் தேசியப் பாதுகாப்பைப் பற்றிய 1947ஆம் ஆண்டு சட்டத்துடன் நேரடித் தொடர்புடையவையாக இருந்தன. கடல் கடந்த ஐக்கியப் படைத்தலைமைகளைத் தோற்றுவித்ததானது மத்தியப்படுத்தப்பட்ட ஒருங்கிசைவையும் தலைமையையும் அவசியமாக்கியது, தம் பங்கு மற்றும் கடமைகளைப் பற்றி முப்படைப் படைத்தலைமையகத் தலைவர்களின் கருத்தொற்றுமை மத்தியப்படுத்தலை சாத்தியமாக்கியது.

இத்தருணத்தில் உலக மேலாதிக்க கோரிக்கைகள் அமெரிக்காவின் இராணுவத் தலைமை முழுவதாலும் ஆதரிக்கப்பட்டன என்பதைக் குறிப்பிட வேண்டும். இக்காலகட்டத்தின் ஆவணங்கள் சிலவற்றில் ஜெனரல் மார்ஷல் அமெரிக்க இராணுவம் முழுவதையும் ஒரே அமைச்சரவையின் கீழ் ஒன்றிணைக்கும் ஆலோசனையை ஆதரித்தார்; இருபடியாக்குதலைத் தவிர்க்குமாறும் சர்வபொது இராணுவக் கல்விதான் யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் இராணுவ இயந்திரத்தின் அடிப்படையாக இருக்கும் என்பதை ஆதார

மாகக் கொள்ளுமாறும் படைத்தலைமை யகத் தலைவர்களின் கூட்டு கமிட்டியின் திட்ட உறுப்புகளுக்குப் பொறுப்பளித்தார். தேசியப் பாதுகாப்பைப் பற்றிய சட்ட நகல் நோர்ஸ்தேதாலும் ஷேர்மனாலும் தயாரிக்கப் பட்டது. நகல் ஜனாதிபதியால் ஆமோதிக்கப் பட்டது. இராணுவ விவகாரங்களைப் பற்றிய செனட்டுக் கமிட்டியின் கூட்டங்களில் செனட்டு உறுப்பினர்கள் படைத்தலைமை யகத் தலைவர்களின் கூட்டு கமிட்டியின் பிரதிநிதிகளின் கருத்தைக் கவனமாகக் கேட்டு சாரத்தில் எவ்வித குறிப்பிடத் தக்க திருத்தல்களும் இன்றி நகலை ஆமோதித்த னர்.

என்றாலும், நாம் ஏற்கெனவே கூறியபடி, முப்படைகளின் படைத்தலைமைகளுக்கு இடை யிலான கருத்து மாறுபாடுகள் யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் அமெரிக்க இராணு வம் ஒரே கட்டமைப்பாக ஒன்றிணையும் நிகழ்ச்சிப் போக்கின் மீது தாக்கம் செலுத்தின. உதாரணமாக, இராணுவ நடவடிக்கைகளில் தரைப்படைச் சக்திகளுக்கு முக்கியப் பங்குண்டு என்று அமெரிக்க தரைப்படைத் தலைமை எப்போதுமே கருதி வந்துள்ளது என்பது அமெரிக்க நிபுணர்களின் கருத்தாகும்.

வான்படைத் தலைமையானது தரைப் படைச் சக்திகளின் விஷயத்தில் தன் துணைப் பங்கை ஒப்புக்கொள்கிறது; ஆனால் அதே நேரத்தில், புதிய வகையான இராணுவ நடவடிக்கைகளுக்கு வழிகோலியுள்ள புதிய

ஆயுதங்களும் தொழில்நுட்பமும் நவீன போர்க் களத்தை முந்தைய போர்க் களத்திலிருந்து பெரிதும் வேறுபடுத்துகின்றன என்று உறுதியாக நம்புகிறது. கடற்படையின் தலைமை தன் பங்கும் மிக முக்கியமானதெனக் கருதுகிறது. தரைச் சண்டைகளில் ஈடுபட வல்ல கப்பல் காலாட்படை இருப்பது, நீரிலும் நிலத்திலும் இயங்கும் கணிசமான சக்திகள், நடைமுறை தந்திர வான் ஆதரவை அளிக்க வல்ல விமானந்தாங்கிக் கப்பல்கள், அங்குமிங்கும் செல்வதிலும் துருப்புகளுக்கு சப்ளை செய்வதிலும் நிலவும் நெகிழ்வுத் தன்மையுள்ள வாய்ப்புகள், இறுதியாக கடற்படைக் கப்பல்களில் உள்ள அணு ஆயுதம் — இவையனைத்தும் கடற்படையை சுதந்திரமான, சுயமாகத் தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் படையாக மாற்றுகின்றன. இதற்கேற்றபடி இது மற்ற வகையான படைகளின் தலையீடு இன்றியே சுயமாக நிறைவேற்ற வல்ல சிக்கலான போர்க் கடமைகளை முன்வைக்கிறது.

இராணுவத்தை ஒன்றிணைப்பதைப் பற்றிய விவாதத்திற்கு சாதாரண சொந்த நலன்கள், தன் படையின் மீதான பற்று ஆகியவற்றைத் தவிர மேலும் ஆழமான காரணங்களும் அடிப்படையாக இருந்தன. தரைப்படைச் சக்திகள் இராணுவ நடவடிக்கைகளில் இறங்குவதில் உள்ள சிறப்பியல்புகள், ஒரு தளபதியின் தலைமையில் உயர்வான அளவில் மையப்படுத்தப்பட்ட இராணுவக் கட்டமைப்பை ஏற்படுத்

துவதன் அவசியத்தைத் தரைப்படைத் தலைமைக்கு நன்கு உணர்த்தின. அதே நேரத்தில் வான்படையானது சுயமான போர்த்தந்திரக் கடமைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில் சுதந்திரமான பங்கிற்கு வழிகோல முயன்றது. கடற்படையைப் பொறுத்த மட்டில் அது மையப்படுத்தப்படாத கட்டமைப்பிற்குத் தான் ஆதரவாக இருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், தேசியப் பாதுகாப்பைப் பற்றிய 1947ஆம் ஆண்டு சட்டம், போட்டியிடும் படை வகைகளுக்கும் காங்கிரசுக்கும் இடையேயான சமரசமாக விளங்கியது.

ஐக்கிய இராணுவ அமைப்பு இருந்த காலம் முழுவதும் இதன் கட்டமைப்பு மாற்றியமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டு வந்தது. நடைமுறையில் ஒவ்வொரு பத்தாண்டும் இது நடைபெற்றது: 1958ஆம் ஆண்டு ஐசன்ஹோவர் ஜனாதிபதியாக இருந்த போது 1947ஆம் ஆண்டின் தேசியப் பாதுகாப்பு சட்டத்தில் தீவிர திருத்தங்கள் செய்யப்பட்டன; பின்னர் இராணுவ அமைப்பில் ரா. மக்னமாராவின் ‘‘நிர்வாகப் புரட்சி’’ என்றழைக்கப்பட்ட பத்தாண்டும் நிக்சன், போர்டு, கார்ட்டர் ஆகியோரின் ஆட்சிக் காலங்களும் வந்தன. இவர்கள் இராணுவ இயந்திரத்தின் கட்டமைப்பிலும் நிர்வாகத்திலும் படிப்படியான மாற்றங்களைச் செய்தனர்.

அமெரிக்கத் தலைமை 1947இல் சந்தித்த பல பிரச்சினைகள் இன்றுவரை தீர்க்கப்படவில்லை. உதாரணமாக, 1977இல் ஜெனரல்

மா. டெய்லர் தன் உரைகளில் ஒன்றில் படை வகைகளின் பங்கையும் கடமைகளையும் மறுபரிசீலனை செய்யும் அவசியத்தைப் பற்றிக் கூறினார். உலக நிலவரம் மாறியுள்ளது, ஆனால் படை வகைகளின் கடமைகள் 1948இல் கிவெஸ்டில் நடைபெற்ற மகாநாட் டிற்குப் பின் விவாதிக்கப்படவில்லை, மறுபரி சீலனை செய்யப்படவில்லை.

30 ஆண்டுகளுக்கும் மேலாக ஐக்கிய இரா ணுவக் கட்டமைப்பு நிலவும் அனுபவமானது ''தேசியப் பாதுகாப்பின்'' போர்த்தந்திரத் திட்டமிடுதல் சம்பந்தமான பிரச்சினை இன்ன மும் தீர்க்கப்படவில்லை என்பதற்கும் சான்று பகர்கிறது: ஒரு புறம், இராணுவ-அரசியல் திட்டமிடுதலில் வழக்கமாக அரசுத் துறை ஆதிக்கம் செலுத்துவதில்லை, எனவே பாது காப்பு அமைச்சகம் அரசியல் லட்சியங்களை யும் எண்ணங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். மறுபுறம், இராணுவத் தலைமை தன் முடிவுகளிலும் நடவடிக்கைகளிலும் முற்றிலும் அரசியல் தன்மையுள்ள நோக்கங் களை ஆதாரமாகக் கொள்ள மறுக்கிறது. இராணுவத்தை ஒன்றிணைத்து தேசியப் பாதுகாப்புக் கவுன்சிலைத் தோற்றுவித்ததன் பயனாய் பல இராஜதந்திரப் பிரச்சினைகள் அயல்நாட்டு அரசியல் இலாக்காவிலிருந்து எடுக்கப்பட்டு மேற்கூறிய கவுன்சிலின் வரம்பு களுக்குள் இலாக்காக்களுக்கு இடையிலான விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டன.

திட்டம் தீட்டும் துறையில் அரசுத்

துறையை விட பெண்டகன் கணிசமான அளவு ஊழியர் மேம்பாட்டைப் பெற்றிருப் பதானது ''தேசியப் பாதுகாப்பைத்'' திட்ட மிடுதலில் இராணுவத் துறையினரின் குரலை வலுப்படுத்தியிருக்க வேண்டுமெனத் தோன்றும். ஆனால் அமெரிக்க நிபுணர்களின் மதிப் பீட்டின்படியே படைத்தலைமையகத் தலை வர்களின் கூட்டு கமிட்டி ஐக்கிய உறுப்பு என்ற வகையில் சப்ளையைத் திட்டமிடுவதில் மட்டுமே தன் பங்கை நிறைவேற்றியது. ஆரம்பத்திலிருந்தே சித்தாந்தங்களை உருவாக்கு வது படைத்தலைமையகங்களின் தனிப்பட்ட தலைவர்களின் பொறுப்பில் விடப்பட்டதால் ஐக்கிய சித்தாந்த உறுப்பு தோற்றுவிக்கப் படவில்லை.

புதிதாக ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு அமைச்சகம் பல பிரச்சினைகளைச் சந்தித்தது. இவற்றில் முக்கியமானவை புதிய ஆயுதங்களைப் பெற்றதுடனும் (இவை இந்நேரத்தில் ஏற் கெனவே தோற்றுவிக்கப்பட்டிருந்தன) முதலாவ தாக அணு ஆயுதங்கள் மற்றும் இவற்றை ஏந்திச் செல்லும் சாதனங்களைப் பெற்ற துடனும் பட்ஜெட்டை உருவாக்குவதுடனும் தொடர்பு கொண்டிருந்தன. புதிய ஆயுதங் களையும் நவீன சண்டையில் இவற்றின் பங்கையும் மதிப்பிடுவதில் முப்படைகளின் படைத்தலைமையகத் தலைவர்கள் குறிப்பிட்ட இடர்ப்பாடுகளைச் சந்தித்தனர். தரப்புகளின் கருத்தைக் கேட்கும் முறை தோன்றியது. இதில் தொழில்துறையின் பிரதிநிதி அல்லது

ஒப்பந்தத்தைப் பெறும் வேட்பாளரும் எந்த வகைப் படை இந்த ஆயுதத்தை ஏற்றுக் கொள்ள முன்மொழிகிறதோ அதன் சீனியர் இராணுவ அதிகாரியும் இடம் பெற்றிருந் தனர். புதிய ஆயுதத்தைத் தேர்ந்தெடுப்பதன் அடிப்படையில் ஒரு கோட்பாடு வைக்கப்பட் டது. இதன்படி சுதந்திரமான, ஒருதலைப் பட்ச நலன்கள் இல்லாத சோதனை இருந்தால் மட்டுமே இறுதி முடிவு எடுக்கப்பட் டது. இதன் அவசியம் பாதுகாப்பு ஆராய்ச்சி கள் மற்றும் தொழில்நுட்பம் சம்பந்தமான இயக்குநர் நிர்வாக உறுப்பை ஏற்படுத்து வதற்கு இட்டுச் சென்றது. ''சிந்தனை ஆலை களின்'' உதவிக்கான தேவையும் அதிகரித்தது. இவை படைத்தலைமையகத் தலைவர்களுக்கு சுதந்திரமான மதிப்பீடுகளைத் தந்தன. இத் திசையில் முயற்சிகளை ஒன்றிணைப்பதற்காக 1956இல் பாதுகாப்பு அமைச்சர் வில்சனும் படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டியின் தலைவர் அட்மிரல் ரெட்போர்டும் பாதுகாப்பைப் பற்றிய பகுப்பாய்வு நிலை யத்தை உருவாக்கினர். இது இக்கமிட்டியின் பகுப்பாய்வுப் பணிகளுக்குச் சேவை புரிந்தது.

ஆயுதங்களின் விலை பெரிதும் கூடியதானது பட்ஜெட்டை ஓரளவு மாற்றியமைக்கும்படி கட்டாயப்படுத்தியது. 1953ஆம் ஆண்டுதான் கண்காணிப்பு-பட்ஜெட் காரியாலயத்தை மாற்றி யமைக்கும் உரிமையைப் பாதுகாப்பு அமைச்சர் பெற்றார். ''கீழ்ப்படியாத'' படை வகைகள், பிரிவுகளின் மீதான கண்காணிப்பிற்காகப்

பட்ஜெட்டைப் பிரயோகிக்கும் உரிமையை பெண்டகனின் தலைவர் முதன்முதலாகப் பயன்படுத்த முடிந்தது. ஓய்வு பெற்ற அட்மிரல் மக்னில் காரியாலயத்தின் முதல் தலைவராக இருந்தார். ஐசன்ஹோவர் ஜனாதிபதியாக இருந்த காலம் பூராவும் இராணுவ இயந்திரத்திற்கான நிதியுதவி முப்படைகளில் ஒவ்வொன்றின் தேவைக்கும் ஏற்ப நிறைவேற்றப்பட்டது. மூன்று படைத் தலைமையகங்களும் திட்டமிடும் கடமைகளின் அடிப்படையில் பாதுகாப்பு அமைச்சகத்தின் பொதுத் தேவைகளை யாரும் கணக்கில் கொள்ளவில்லை, யாரும் திட்டமிடவும் இல்லை. பழைய முறையே வழக்கத்தில் இருந்தது. இதன்படி தரைப்படை, கடற்படை, வான்படைகளுக்கு இடையே நிதியை சம மாகப் பங்கிடுவதைக் கண்காணிப்பதுதான் பெண்டகனின் தலைவருக்கு முக்கியக் கடமை யாக இருந்தது. தரைப்படைக்கு இதில் இழப்பேற்பட்டது. 1955 முதல் 1959 வரை தரைப்படைத் தலைமையகத்தின் தலைவராக இருந்த ஜெனரல் மா. டெய்லர், இந்த நான்காண்டுகளில் இராணுவ பட்ஜெட்டில் தரைப்படை கிட்டத்தட்ட 23 சதவிகிதத்தை யும், கடற்படை 28 சதவிகிதத்தையும் வான்படை 46 சதவிகிதத்தையும் பெற்றன என்கிறார்.

ஜனாதிபதி ஐசன்ஹோவரின் குடியரசுக் கட்சி நிர்வாகத்தின் போது படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டியில் கணிசமான

மாற்றங்கள் ஏற்பட்டன. இரண்டாவது உலக யுத்தம் முடிந்த பின் 1949 வரை இதில் தலைவர் பதவி இருக்கவில்லை. இப்பதவி முதலில் மிக எளிமையான பொறுப்புகளுடன் ஏற்படுத்தப்பட்டது: கூட்டங்களை நடத்துவது, நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பது, நிலவரம் மிகவும் பதட்டமானதாக இருந்தால் அதைத் தணிக்க முயலுவது ஆகியவைதான் இப்பணிகளாகும். படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டியின் முதல் தலைவராகிய ஜெனரல் ஓ. பிரெட்லி எத்தகைய கருத்தைக் கொண்டிருக்கிறார் என்பதை நிர்ணயிக்க முடியாமல் இருந்தது; இவ்விதத்தில் அவர் வேறுபட்டு நின்றார். அவர் பிரச்சினைகளின் விவாதங்களில் மட்டுமே ஈடுபட்டார், அமெரிக்காவின் வாதங்களை, உதாரணமாக எங்கெல்லாம் அவசியமென்றும் எப்போது தேவையென்றும் அமெரிக்கர்கள் கருதுகின்றார்களோ அப்போது பேரழிவிற்காக சகலவித அணு ஆயுதங்களையும் பயன்படுத்துவதைப் பற்றிய வாதங்களைத் தொகுத்துரைத்தார்.

''பெருமளவு பழிவாங்கல்'' சித்தாந்தம்தான் இராணுவத்தின் கட்டமைப்பையும் நிர்ணயித்தது. அணு ஆயுதத்தை, இலக்கை நோக்கி எடுத்துச் செல்ல வல்ல தொலை தூர வான்படைச் சக்திகள் இதில் ஆதிக்கம் செலுத்தின. பின்னர் கடற்படைச் சக்திகளும் வளரத் துவங்கின, அதிலும் குறிப்பாக அணு ஆயுதங்களை ஏந்திச் செல்பவையாக இவை விளங்கின. அமெரிக்காவின் தரைப்படைத்

தலைமையைப் பொறுத்த வரை இது இக்கட்டத்தில் தரைப்படைச் சக்திகளின் எதிர்காலம் பற்றி பெரும் கவலை கொண்டிருந் தது. ''பெருமளவு பழிவாங்கல்'' சூழ்நிலையில் தரைப்படையின் கடமைகளைப் பற்றிய கேள்விக்குப் பின்வரும் பதில் வந்தது: கப்பற்படையும் விமானப்படையும் அல்லது கப்பல் காலாட்படை அல்லது இவையெல்லாம் சேர்ந்து வெற்றிகளை ஈட்டும்.

இக்காலகட்டத்தில் படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டியின் உறுப்பினர் களிடையே பெரும் பதட்டமான உறவுகள் உருவாயின. முன் போன்றே, இராணுவ பட்ஜெட்டை (1957க்குப் பின் இது 38 பில்லியன் டாலர்களாயிருந்தது) முப்படை வகைகளுக்கு அனுகூலமாகப் பகிர்ந்தளிப்பதற் கான போராட்டம்தான் இக்கருத்து மாறுபாடு களின் அடிப்படையாக இருந்தது. ஆனால் இத்தருணத்திலேயே அமெரிக்க ஐக்கிய நாட் டில் ''பெருமளவு பழிவாங்கல்'' சித்தாந்தத்திற் கான கண்டனம் வலுத்தது. சோவியத் அரசின் தற்காப்பு வல்லமை அதிகமாக அதிகமாக, குறிப்பாக் முதல் செயற்கைத் துணைக்கோள் ஏவப்பட்ட பின் மயக்கம் தெளிய ஆரம்பித்தது. ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் எல்லையில் ரோந்து மோதல் போன்றவற்றிற்காக அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவது உகந்ததாக இருக்குமா என்பது குறித்து சந்தேகங்கள் எழுப்பப்படலா யின, இப்படி நடந்தால் அதற்குப் பதிலாக

அமெரிக்க நிலப்பரப்பு அணு ஆயுதத் தாக்குதலுக்கு உட்படுத்தப்படலாம்.

ஆனால் ஐசன்ஹோவர் நிர்வாகத்தின் தலைவர்கள் உலகில் ஏற்படும் மாற்றங்களை ஒப்புக்கொள்ளாமல் இந்த சித்தாந்தத்தைத் தொடர்ந்து உறுதியாக ஆதரித்தனர்.

சாராம்சத்தில் அப்போதே, சோவியத் பரப்பிலும் மேற்கு ஐரோப்பாவிலும் மட்டும் அணு ஆயுத யுத்தத்தை நடத்தலாம் என்றும் இது மட்டற்று அணு ஆயுதங்கள் பயன்படுத் தப்படும் ஒரு உலகளாவிய யுத்தமாக வளரும் என்று கட்டாயமில்லை என்றும் ஒரு மாயை உருவாகியது. சோவியத் யூனியனுக்கும் தேசிய விடுதலை இயக்கத்திற்கும் எதிரான போராட்ட சாதனமாக சாதாரண யுத்தங்கள் தவிர்க்க இயலாதவை எனும் கூற்றுகள் ஐசன்ஹோவர் ஆட்சியின் இறுதியில் அதிகாரபூர்வமான மட்டத்தில் அடிக்கடி கூறப்படலாயின. ஆனால் எட்டு ஆண்டுகளாக (''நெகிழ்வோடு பதிலளித் தல்'' சித்தாந்தத்திற்கு அதிகாரபூர்வமாக மாறும் வரை) ''பெருமளவு பழிவாங்கல்'' சித்தாந்தத்திலிருந்து விலகுவதைப் பற்றிய ஒரு அதிகாரபூர்வமான கட்டளை கூட நிலவவில்லை.

பல அமெரிக்க நிபுணர்களின் மதிப்பீட் டின்படி ஐசன்ஹோவர் காலத்தில் படைத் தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி செயல்வன்மையோடு இயங்கவில்லை. பல பிரச்சினைகளின் மீது கமிட்டி உறுப்பினர்கள் ஒருமித்த கருத்திற்கு வர இயலவில்லை,

இக்கமிட்டியின் விவகாரங்களில் தலையிட சிவில் தலைவர்கள் விரும்பாததால் இந்நில வரம் மோசமாகியது. பாதுகாப்பு அமைச்சர் வில்சன் உறுதியின்மையை வெளிப்படுத்தி னார், மிகச் சிறிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் போது கூட இவர் ஜனாதிபதி யின் ஆதரவை நாடினார். ஜனாதிபதியோ பெண்டகனின் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்த்தார்.

படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டிக்கு செயல் நடவடிக்கை கடமைகள் உண்டு. இவற்றில் ஒன்று 1947ஆம் ஆண்டு சட்டத்தின்படி வரையறுக்கப்பட்டது. இதன் படி இக்கமிட்டி பாதுகாப்பு அமைச்சர், தேசியப் பாதுகாப்புக் கவுன்சில் மற்றும் ஜனாதிபதியின் பிரதான இராணுவ ஆலோ சனை உறுப்பாகும். மற்ற கடமை சட்டத்தால் வரையறுக்கப்படாவிட்டாலும் உருவாகிய நடை முறையின் அடிப்படையில் தோன்றியது: கடல் கடந்த படைத்தலைமைகள், தமக்கு அளிக் கப்பட்ட மற்ற இராணுவத் துணைப் பிரிவு களுக்குத் தலைமை தாங்க இக்கமிட்டியும் அதன் ஐக்கியப் படைத்தலைமையகமும் பாதுகாப்பு அமைச்சருக்கு சாதாரண படைத் தலைமையக உறுப்பாக இருக்கும். இக்கமிட்டி யின் ஐக்கியப் படைத்தலைமையகம் தோற்று விக்கப்பட்ட போது இது போர்த்தந்திரம், நடைமுறைத் திட்டம் தீட்டுதல், துருப்பு களுக்கான சப்ளை முதலிய பிரச்சினைகளைக் கவனித்த ஐக்கியக் கமிட்டிகளால் ஆனதாக

இருந்தது. 1958ஆம் ஆண்டு லெபனான் நெருக்கடி தோன்றிய போதுதான் வெளி நாட்டு நடவடிக்கைகளை வழிநடத்துவதில் உள்ள இடர்ப்பாடுகளை பெண்டகனின் தலைமை சந்தித்தது. இதன் விளைவாய் 1958இல் பல்வேறு பிரிவுகளை ஏற்படுத்தி படைத்தலைமையகத்தை மாற்றியமைத்தனர். இவை ஐக்கிய மற்றும் விசேஷக் கடல் கடந்த படைத்தலைமையகங்களைப் போன்று படைவீரர்கள், வேவு பார்த்தல், திட்டமிடு தல், நடவடிக்கைகளை மேற்கொள்வது, துருப்புகளுக்கான சப்ளைகளை அளித்தல் ஆகியவற்றைக் கவனித்தன.

ஐசன்ஹோவர் காலத்துடன் ஒப்பிடுகையில் கென்னடியும் ஜான்சனும் ஜனாதிபதிகளா யிருந்த போது பெண்டகனின் பாலான இவர்களது உறவு முறைகள் மாறின. இது தேசியப் பாதுகாப்புக் கவுன்சிலின் பங்கைச் சாரும். முக்கிய அரசுப் பிரச்சினைகளை விவாதித்து தீர்ப்பதில் ஐசன்ஹோவர் தேசியப் பாதுகாப்புக் கவுன்சிலையும் இதன் இயந் திரத்தையும் மிகத் தீவிரமாக ஈடுபடுத்தி னார். ஆனால் ஜான் கென்னடி ஐசன்ஹோ வரின் முறைக்கு எதிரான பெரும் விரோதத் தோடு ஆட்சிக்கு வந்தார். கடந்த காலத்தில் பிரபலமாயிருந்த ரா. லோவெட், ஜா. மக் லோய் போன்ற அரசுப் பிரமுகர்கள்தான் இத்தகைய மனப்போக்குகளை இவருக்கு ஊட்டினர். இம்முறை காகித மலையைத் தவிர வேறெதையும் ஏற்படுத்தவில்லையென

இவர்கள் கருதினர். முக்கியமானது என்ன வெனில் ஜனாதிபதியின் தீர்மானங்கள், ஆணை களின் நிறைவேற்றம் சரிவரக் கண்காணிக்கப் படவில்லை. இதன் பின் ஜான் கென்னடி தான் ஏற்கெனவே செய்த தீர்மானங்களின் மீது முத்திரை குத்த மட்டுமே தேசியப் பாதுகாப்புக் கவுன்சிலைப் பயன்படுத்தினார்.

பெண்டகனுடனும் படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டியுடனும் உள்ள உறவுகளிலும் கணிசமான மாற்றங்கள் ஏற் பட்டன. பன்றி வளைகுடாவில் படையிறக்கம் தோல்வியடைந்த பின் ஜான் கென்னடி தன் ஆலோசகர்கள் மீது பெரும் அதிருப்தி கொண்டு 1961 மே 27இல் இக்கமிட்டியின் முன் உரையாற்றினார்.

அப்போது இக்கமிட்டியின் தலைவராக இருந்த ஜெனரல் மா. டெய்லரின் குறிப்புகளின் படி ஜனாதிபதி, தன்னுடைய பிரதான இராணுவ ஆலோசகர்கள் என்ற வகையில் படைத்தலைமையகத் தலைவர்களின் முக்கியக் கடமையை நினைவுபடுத்தி, அவர்களின் ஆலோசனை வடிகட்டப்படாமல் நேரடியாகத் தன்னை வந்தடையும் என்று நம்பிக்கை தெரிவித்தார். அவர்களின் ஆலோசனை முற்றிலும் இராணுவ ஆலோசனையாக இருக்க வேண்டியதில்லை, இருக்கவும் கூடாது. ஏனெ னில் ஜனாதிபதி என்ற வகையில் அவருடைய பெரும்பாலான பிரச்சினைகளுக்கு அரசியல், பொருளாதார, மனநிலை மற்றும் இராணுவத் தன்மை உண்டு, ஜனாதிபதி என்ற முறையில்

அவர் எல்லாவற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எந்த ஒரு குறிப்பிட்ட அரசியல் கொள்கைக்கும் ஆதரவாகவோ எதிராகவோ படைத்தலைமையகத் தலைவர்கள் தம்முடைய இராணுவக் கண்ணோட்டத்தை எவ்வித அச்சமும் ஊசலாட்டமும் இன்றி தெரிவிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் அதே நேரத்தில் தான் அவர்களை இராணுவ நிபுணர்களை விட உயர்வாக மதிப்பதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்தார். எந்த ஒரு நிலவரத்தின் பொது சூழ்நிலைக்கும் ஏற்ப இராணுவத் தேவைகளை மாற்றியமைக்கும் விஷயத்தில் ஜனாதிபதி அவர்களின் உதவியை நாடினார். பல அமைச்சகங்களின் எல்லா எளிய மேம்பாடுகளையும் ஒன்றிணைந்த, செயல்வன்மையுள்ள மாதிரியாக மாற்றுவது தான் ஒருவேளை அரசாங்கத்தின் மிகக் கடினமான பிரச்சினையாக இருக்கக் கூடும் என்று கருதிய அவர் இதைச் செய்யப் படைத்தலைமையகத் தலைவர்கள் உதவுவார் களென நம்பிக்கை தெரிவித்தார். விரைவி லேயே படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டிக்கு முன் ஜனாதிபதி பேசியது தேசியப் பாதுகாப்புக் கவுன்சிலின் நிர்வாக நினைவறிக்கையாக வடிவமைக்கப்பட்டு ஜனாதி பதியின் கொள்கையாக கவுன்சிலால் முறைப் படி ஆமோதிக்கப்பட்டது.

ஜான்சன் வெள்ளை மாளிகைக்கு வந்த பின் இந்த நினைவறிக்கை ஊர்ஜிதப்படுத்தப்பட்டு

இவருடைய பதவிக் காலம் முழுவதும் மற்றும் நிக்சன் முதல் முறை ஜனாதிபதியாக இருந்த போதும் இயங்கியது.

ஜான் கென்னடியின் காலத்தில் பெண்ட கனில் ''சிவில் போர்த்தந்திரவாதிகள்'' பெரும் செல்வாக்கு பெற்றனர். ஆனால் முழுநேர இராணுவத்தினரின் கருத்துப்படியே இந்தச் செல்வாக்கு கணிசமான அளவு மிகைப் படுத்தப்பட்டது, என்றாலும், பாதுகாப்பு அமைச்சகத்தில் இந்தப் போர்த்தந்திரவாதிகள் அதிகமாக இருப்பதைப் பற்றி இராணுவத் தலைவர்கள் கவலை தெரிவித்தனர். இராணுவ முடிவுகளின் மீது சிவில் நபர்களின் செல் வாக்கைக் குறைக்கும் நோக்கத்தோடு படைத் தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி யின் தலைவர் மா. டெய்லர், முதலில் படைத்தலைமையகத் தலைவர்களைக் கேட்கும் உறுதி மொழியைப் பாதுகாப்பு அமைச்சர் ரா. மக்னமாராவிடமிருந்து பெற்றார். ஆனால் தன் சிவில் ஊழியர்கள் பேசுவதைக் கேட்க மாட்டேன் என்றும் மக்னமாரா உறுதி மொழி தரவில்லை.

பல அமெரிக்க ஆராய்ச்சியாளர்களின் கருத் துப்படி மேற்கூறிய கமிட்டியின் பணியின் பொதுவான செயல்வன்மையும் ஜனாதிபதி அரசியல் முடிவுகளை ஏற்பதன் மீது இதன் செல்வாக்கும் இன்னமும் அதிகமானவையல்ல. அதிகாரவர்க்கத் தன்மையுள்ள விஷயங்கள்தான் இதற்கு முக்கியக் காரணங்களாகும்.

அமெரிக்க இராணுவ இயந்திரம் விரி

வடைந்து வருகையில் இதன் பாத்திரமும் இதிலுள்ள தனிப்பட்ட அங்கங்களின் பாத்திரமும் மாறி வந்துள்ளது என்பதைக் கோடிட்டுக் காட்ட வேண்டும். படை வகைகள், பிரிவுகளின் எண்ணிக்கை கூடியதும் இவற்றிற்கு புதிய, விலையுயர்ந்த ஆயுதங்களை அளிப்பதும் அரசாங்க இயந்திரத்தில் இராணுவத்தினரின் முக்கியத்துவத்தைப் புறவய ரீதியாக அதிகப் படுத்தின. அதே நேரத்தில் புதிய ஆயுதங்கள் தோன்றியதால் அமெரிக்க இராணுவ இயந்திரத்தில் தரைப்படை முன்போன்று ஆதிக்கம் செலுத்தவில்லை. பாதுகாப்பு அமைச்சகமும் 1947இல் தனியாக வான்படை அமைச்சகமும் தோற்றுவிக்கப்பட்டதும் பாதுகாப்பு அமைச்சரின் அதிகாரம் படிப்படியாகப் பலப்படுத்தப் பட்டதும், இவையனைத்தும் இரண்டாவது உலக யுத்தக் காலகட்டத்துடனும் ஏன் யுத்தத்திற்கு முந்தைய காலகட்டத்துடனும் ஒப்பிடும் போது தரைப்படைச் சக்திகளின் முக்கியத்துவத்தைக் கணிசமாகக் குறைத்தன.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தன்மை அதிகரித்ததால் (இது அதன் மேலாதிக்கவாதக் கொள்கையோடு பிரிக்க முடியாதபடி தொடர்புடையது) வெளிநாட்டுக் கொள்கையில் இராணுவ இயந்திரத்தின் பங்கும் அதிகமாகியது, ஆனால் இந்த இயந்திரத்தின் உள்ளே தரைப்படையின் பங்கு கணிசமாகக் குறைந்தது.

1945–1950ஆம் ஆண்டுகளில் அமெரிக்கத் தரைப்படைச் சக்திகளின் படைத்தலைமையும்

நாட்டின் இராணுவ-அரசியல் தலைமையும், அடுத்த யுத்தம் முந்தைய யுத்தத்திலிருந்து அதிகம் மாறுபடாது என்றும் இம்முறை எதிரி நாடாக சோவியத் யூனியன் இருக்கு மென்றும் அனேகமாக இராணுவ நடவடிக்கை கள் ஐரோப்பாவில் நடைபெறுமென்றும் கணித்தன. தீவிரமான தரைப்படைச் சக்தி களைப் பயிற்றுவிப்பது, இவற்றை உயர்வான இராணுவத் தயார் நிலைக்கு கொண்டு வரு வது ஆகியவற்றின் மீது முயற்சிகள் ஒருமுனைப் படுத்தப்பட்டன. இதில் நன்கு தயார்படுத்தப் பட்ட பெரும் சேம இருப்பும் இதற்கேற்ற படி அணிதிரட்டப்பட்ட தொழில்துறையின் தயார் நிலையும் இருக்க வேண்டும். இது முழு அளவு இராணுவ உற்பத்திக்கு விரைவாக மாற வகை செய்திருக்கும். இப்போர்த் தந்திரம் அமெரிக்க அணு ஆயுத ஏகபோகத் தின் மீதான நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டிருந்தது.

இத்தகைய போர்த்தந்திரத்தின், நிச்சயமாக மேலாதிக்கவாதக் கொள்கையின் வெளிப்பாடு களில் ஒன்றுதான் கொரியாவில் நடத்தப்பட்ட ஆக்கிரமிப்பாகும். இது சாதாரண ஆயுதத் தைப் பயன்படுத்திய தரைப்படை யுத்தமாக ஆரம்பமானது, இதற்குத் தரைப்படையிலிருந்து கணிசமான முயற்சிகள் தேவைப்பட்டன. 1950 ஜூன் முதல் 1951 ஜூன் வரை இதன் எண்ணிக்கை மும்மடங்கு அதிகரித்து கிட்டத் தட்ட 20 லட்சத்தை எட்டியது. அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படாமலேயே கொரிய

யுத்தம் முடிவடைந்ததற்கு அமெரிக்கத் தரப்பின் ''மனிதாபிமான'' நோக்கங்கள் ஒன்றும் பெரிய காரணமில்லை. இராணுவத் தலைமையிலிருந்த பெரும்பாலோர் இதைப் பயன்படுத்துவதற்குத்தான் ஆதரவாக இருந் தனர். ஆனால் விஷயம் என்னவெனில், கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசின் பரப்பில் அமெரிக்கா புகவிருந்த முன்னணைப் பொழுதில் தேசியப் பாதுகாப்பு பிரச்சினைகள் சம்பந்தமாக ஜனாதிபதியின் நினைவறிக்கை (NSC-68) ஏற்கப்பட்டது. இது ''அமெரிக்க ஐக்கிய நாடு மறு ஆயுதந்தரிப்பது சம்பந் தமான சர்வபொது செயல்திட்டத்தை'' உரு வாக்கியிருந்தது. கட்டுப்படுத்தி வைக்கும் கொள்கையை, அதாவது ஐரோப்பாவில் சோவியத் யூனியனுக்கு எதிரான ஆக்கிரமிப்பை நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகளைத் தோற்று விப்பதுதான் இதன் முக்கியப் போக்காகும். கொரியாவிற்கு எதிராக அமெரிக்க ஐக்கிய நாடு அணு ஆயுதத்தைப் பயன்படுத்தாததற் கான காரணங்களில் ஒன்று ஐரோப்பியக் களத்தில் சோவியத் யூனியனுக்கு எதிராகத் தாக்குதல் தொடுக்க இது தயாராக இருந்த தாகும். கொரியாவில் அமெரிக்க ஆக்கிரமிப்புச் சக்திகள் தோல்வியடைந்ததானது மற்ற எல்லாவற்றோடும் கூட பொதுமக்களின் கருத் தில் தரைப்படையின் செல்வாக்கைக் குறையச் செய்தது.

கொரிய அதிசாகச செயலை முடித்து வைத்த ஐசன்ஹோவர் நிர்வாகம் ஆட்சிக்கு

வந்ததானது மேலாதிக்கவாதம், மற்ற அரசுகளின் உள்விவகாரங்களில் தலையிடுதல் கொள்கையிலிருந்து எந்த விதத்திலும் பின்வாங்கியதைக் குறிக்கவில்லை. மாறாக அரசுத் துறை (மூர்க்கத்தனமான சோவியத் எதிர்ப்புவாதியாகிய ஜா. டால்லஸ் இதன் தலைமையில் இருந்தார்) மேன்மேலும் புதிய இராணுவ உடன்படிக்கைகளை ஏற்படுத்தி, அமெரிக்க விஸ்தரிப்புத் துறைகளை விரிவுபடுத்தும் போக்கைப் பின்பற்றியது. இந்நிர்வாகம் சோவியத் யூனியனுக்கு எதிராக நீண்ட கால யுத்தத்தை மனதில் கொண்டு துரிதமான வேகங்களில் தன் சக்திகளைப் பெருக்கத் துவங்கியது. இந்த லட்சியங்களை அடைவதற்காக ''பெருமளவு பழிவாங்கல்'' சித்தாந்தம் பிரகடனப்படுத்தப்பட்டது.

இதனிடையே யுத்தத்தில் அந்தந்த படைவகைகளின் பங்கைப் பற்றிய விவாதங்கள் தொடர்ந்தன. சாராம்சத்தில், உலக ஆதிக்கத்தை அடைவதில் எந்த துருப்புகள் பெரும் பங்காற்றும் என்பதைப் பற்றி விவாதிக்கப்பட்டது.

50ஆம் ஆண்டுகளின் இறுதியில், தற்காப்பு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள விஞ்ஞான மையங்களிலும் ''சிந்தனை ஆலைகளிலும்'' ''மட்டான யுத்தம்'' பற்றிய புதிய சித்தாந்தங்களை உருவாக்கத் துவங்கினர். சோவியத் யூனியன் அணு ஆயுத சமன்நிலையை நோக்கி நெருங்கி வரும் போது, அமெரிக்க ஐக்கிய நாடு முற்றிலுமாக பதிலடிக்கு

உள்ளாகும் ஒரு சூழ்நிலை உருவாகிய போது (இதன் விளைவுகள் அதற்கு ஏற்க முடியாத வையாக இருக்கும்) வெளிநாட்டு அரசியல் லட்சியங்களை அடைவதுதான் இந்தப் புதிய சித்தாந்தங்களின் நோக்கமாகும். சாராம் சத்தில், அமெரிக்கா கடைப்பிடிக்கும் மேலாதிக்க வாதக் கொள்கையின் விளைவாய் அதற்கே ஏற்படும் அபாயத்தைக் குறைப்பதைப் பற்றி பேசப்பட்டது.

''மட்டான யுத்த'' சித்தாந்தத்திற்கு அர்ப் பணிக்கப்பட்ட நூல்கள் (இதை எழுதியது ஹெ. கிஸ்ஸின்ஜெரும் ரா. ஒஸ்கூதும் ஆவார்கள்) 1957ஆம் ஆண்டில் அமெரிக்காவில் வெளியாயின. இந்நூல்கள் தோன்றிய பின் இச்சித்தாந்தம் இராணுவ மற்றும் சிவில் தத்துவ வாதிகளின் கண்களில் ஏதோ ஒருவித மதிப்பைப் பெற்றது.[64] ''மட்டான யுத்தத் தின்'' தத்துவகர்த்தாக்களில் பெரும்பான்மை யினர் அரசியல் நோக்கங்களுக்காக அணு ஆயுதத்தைப் பயன்படுத்த முடியுமென நம்பி னர். அதே பொழுது அவர்கள் ''பெருமளவு பழிவாங்கல்'' கருத்தமைப்பையும் கைவிட வில்லை.

''மட்டான யுத்த'' தத்துவத்தை உருவாக்கும் போது கிஸ்ஸின்ஜெரும் மற்றவர்களும் விசே ஷமாக அமெரிக்கத் தரைப்படையைக் குறிப் பிடவில்லை. நாட்டின் அரசியல் மேல் மட்டத்திற்குப் புதிய இராணுவ போர்த்தந்திரக் கருத்துகளை அளிப்பதுதான் அவர்களின் எண்ணமாக இருந்தது. ஆனால் தரைப்படைத்

தலைவர்கள், அணு ஆயுத சகாப்தத்தில் தரைப்படைச் சக்திகளுக்கு ''கௌரவமான இடத்தை'' அளிக்க வல்ல ஒரு ''தத்துவத்தை'' உருவாக்குவதற்காக இவற்றைப் பயன்படுத்திக் கொண்டனர். பழிவாங்குவதற்காகப் பதிலடி தொடுக்கும் வாய்ப்பை சோவியத் யூனியன் பெற்றுள்ளதானது வானில் அணு ஆயுத மேன்மையின் முக்கியத்துவத்தை முற்றிலுமாக இல்லாததாக ஆக்கிவிடுகிறது என்று முதலாவ தாக அறிவித்தவர்களில் ஒருவராக தரைப் படையின் படைத்தலைமையகத் தலைவர் ஜெனரல் ரிஜுவே (1953—1955) விளங்கினார். புதிய சூழ்நிலையில் முப்படைகள் சமமான பங்காற்ற வேண்டுமென அவர் குறிப்பிட்டார். இது சம்பந்தமாக பல ஆராய்ச்சிகளை ரிஜுவே ஊக்குவித்தாலும் பாதுகாப்பு அமைச் சரின் இயந்திரத்தில் இவருக்கு ஆதரவு கிட்டவில்லை.

என்றாலும் தரைப்படைத் தலைமையகத் தின் புதிய தலைவராகிய மா. டெய்லர் தரைப்படை அமைச்சர் வி. புரூக்கெரின் உதவியோடு தன் முன்னோடியின் கொள் கையை ஆதரித்தார் (ஜெனரல் ரிஜுவே 1955இல் ஓய்வு பெற்றார்). ''மட்டான யுத்தம்'' பற்றிய கருத்தமைப்பிற்குத் தரைப் படையைத் தயார்படுத்தும் பொருட்டு டெய்லர் பல திட்டவட்டமான முன்மொழிவுகளை முன்வைத்தார். இவை தரைப்படை அமைச் சரால் ஆமோதிக்கப்பட்டு 1956ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தில் படைத்தலைமையகத்

தலைவர்களின் கூட்டு கமிட்டிக்கு முன் வைக்கப்பட்ட ‘‘தேசிய இராணுவ செயல் திட்டம்’’ என்ற ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

புதிய சூழ்நிலைகளில் உயர்வான மட்டத்திலும் தாழ்வான மட்டத்திலும் கட்டுப்படுத்திக் கொள்ளும் வாய்ப்புகளுக்கு வகை செய்வதும் ஸ்தல யுத்தம் முதல் போர்த்தந்திர அணு ஆயுத யுத்தம் வரை சகலவிதமான யுத்தங்களை நடத்தும் வாய்ப்புகளை அளிப்பதும் அவசியம் என்பதுதான் மா. டெய்லரின் வாதமாகும். ‘‘நெகிழ்வோடு பதிலளித்தல்’’ என்று பெயரிடப்பட்ட புதிய சித்தாந்தம், மட்டான அல்லது ஸ்தல யுத்தம் ஒன்றில் தரைப்படைச் சக்திகள் பிரதான ஏன் மிக முக்கியப் பங்காற்றும் எனும் நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டிருந்தது. போர்த்தந்திர அணு ஆயுத யுத்தத்தில் கூட இதன் எல்லாக் கட்டங்களிலும் தரைப்படையால் கணிசமான பங்காற்றக் கூடுமென இப்போது இராணுவத் தத்துவவாதிகள் வலியுறுத்திக் கூறினர். இக்கால கட்டத்தில் தரைப்படையின் தலைமை தன் சொந்த அணு ஆயுதப் படைத் தளவாடங்களை ஏற்படுத்தும் கருத்தை முன்வைத்து நடைமுறைத் தந்திர அணு ஆயுதங்களை உருவாக்குவதிலும் இதைப் பயன்படுத்தும் நடைமுறை வழிகளை உருவாக்குவதிலும் இறங்கியது. ஐம்படை டிவிஷன் எனும் கருத்தமைப்பு பிறந்தது. இதில் 5 போர்த் தொகுதிகள் இருந்தன, இவற்றின் வசம்

ராக்கெட்டுகள், பீரங்கிகள், அணு குண்டு களையும் சாதாரண குண்டுகளையும் கொண்ட தனிப்பட்ட ஆயுதங்கள் முதலியவை இருந்தன.

60ஆம் ஆண்டுகளில் ஜான் கென்னடி ஆட்சிக்கு வந்ததையடுத்து ''நெகிழ்வோடு பதிலளித்தல்'' சித்தாந்தத்தை நிர்வாகம் முழுமையாக ஏற்றுக் கொண்டது. ''மட்டான யுத்த சக்திகளைத்'' தோற்றுவிக்கும்படி இது கோரியது. பாதுகாப்பு அமைச்சராகிய மக்ன மாராவின் வரையறுப்பின்படி இச்சக்திகள் ''கொரில்லா யுத்தம் முதல் முழு அளவு மட்டான யுத்தம் வரை சகலவித யுத்தங்களை யும் நடத்தக் கூடிய அளவில் பயிற்றுவிக்கப் பட்டு ஆயுதந்தரிக்கப்பட்டு நிறுத்தப்பட வேண்டும்''[65]. இதன் மூலம் ''நெகிழ்வோடு பதிலளித்தல்'' சித்தாந்தம் நாட்டின் இராணுவ அமைப்பில் தரைப்படையின் நிலையைப் பலப்படுத்தியது. 1963இல் இதன் எண்ணிக்கை 16 டிவிஷன்கள் வரையும் ஒரு விமான மொபைல் டிவிஷன் வரையும் (15,000 பேர்கள் இதிலிருந்தனர்) உயர்ந்தது.

இக்காலகட்டத்தில்தான் ''மட்டான யுத்தத் தில்'' நடைமுறைத் தந்திர அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவது சம்பந்தமான கருத்திலிருந்து இயன்ற அளவு குறைவான மட்டத்தில் யுத்தத்தை நடத்தத் தயாராகும் கருத்திற் கான மாற்றம் நடந்தது. இங்கே முதலாவ தாக, புரட்சிகர, தேசிய விடுதலை இயக் கங்களை எதிர்த்து செயல்படுவது குறிப்பிடப் படுகிறது. இதன் விளைவாய் ஐம்படை

டிவிஷன்கள், பலப்படுத்தப்பட்ட பீரங்கிப் படை ஆதரவையும் சாதாரண யுத்தத்தை நடத்த அதிகரித்துள்ள வாய்ப்புகளையும் கொண்ட மற்ற டிவிஷன்களால் மாற்றப் பட்டன. இது தவிர கொரில்லா எதிர்ப்பு யுத்ததிற்கான தயாரிப்புகளும் வலுத்தன. விசேஷ துணைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டதில் இது வெளிப்பட்டது.

ஆனால் இது விஷயத்தின் ஒரு புறமாக மட்டுமே இருந்தது. 1965இல் தரைப் படையின் சித்தாந்தம் தரைப்படை இராணுவ நடவடிக்கைகளின் மூன்று வகைகளைப் பற்றிய (அணு ஆயுத யுத்தம், சாதாரண யுத்தம், கிளர்ச்சியை அடக்கும் நடவடிக் கைகள்) கருத்தமைப்பை வரையறுத்தது. வியட்நாமிய மக்களுக்கு எதிராக அமெரிக்க ஐக்கிய நாடு கட்டவிழ்த்து விட்ட கீழ்த்தர மான யுத்தத்தின் போது இக்கருத்தமைப்பு நடைமுறையில் செயல்பட்டது.

வியட்நாமிய யுத்தத்தில் ஆக்கிரமிப்பாளர் களுக்கு வெட்கக்கேடான தோல்வி ஏற்பட்டது. பிரதேசக் கண்காணிப்பிற்கு வகை செய்ய வல்ல ஸ்தல முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியைக் கூட தரைப்படையால் அடைய இயலவில்லை. யுத்தம் இழுபறித் தன்மையைப் பெற்றது. இது உள்நாட்டிலும் உலகம் பூராவும் பொதுமக்களின் பரவலான எதிர்ப் பை ஏற்படுத்தியது. இவையெல்லாம் போர் வீரர்களைக் கணிசமான அளவு பாதித்தன. காலனியாதிக்க அதிசாகசத்தின் பால் வெறுப்பு

கொண்டிருந்த இளைஞர்கள்தான் இராணுவத்தில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள் என்பதைக் கவனத்தில் கொண்டால் இந்தத் தரைப்படையில் ஏன் ஒழுங்கின்மை தோன்றியது, போதைப் பொருட்கள் பயன் படுத்தப்படலாயிற்று, இராணுவ அதிகாரிகள் மற்றும் நாட்டின் அரசியல் தலைமையின் பால் அதிருப்தி தோன்றியது என்பவை நன்கு புரியும். இப்பொருளில் பார்க்கும் போது, அமெரிக்கத் தரைப்படையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ‘‘மட்டான யுத்தம்’’ என்ற கருத்தமைப்பு பெரிதும் ஆதாரமற்றதாக இருந்ததில் வியப்பேதுமில்லை: இது மிக முக்கியமான காரணியாகிய மானுட அம்சத்தை, அதாவது இத்தகைய யுத்தத்தின் லட்சியங்கள் அமெரிக்க மக்களிடம் எந்த அளவிற்கு ஆதரவைப் பெறும் என்பதை கவனத்தில் கொள்ளவில்லை.

தனிப்பட்ட அடக்குமுறை நடவடிக்கைகளாலும் உலகின் தொலை தூரப் பிரதேசங்களில் ஆக்கிரமிப்பை விஸ்தரிப்பதன் மூலமாகவும் சுதந்திரமான, விடுதலை நாட்டமுள்ள மக்களின் மீது அமெரிக்க அரசியல் சித்தத்தைத் திணிப்பது மிகவும் கடினமானது என்பதுதான் வியட்நாமிய யுத்தத்திற்குப் பின் அமெரிக்க ஆளும் வட்டங்கள் செய்த முக்கிய முடிவாகும்.

ஆனால் இம்முடிவு அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையின் சாதனங்களாக ஆக்கிரமிப்பைக் கைவிடுவதைக் குறிக்கவில்லை. அரசியல் லட்சியங்களை அடைவதற்காகப் பலத்தைப்

பயன்படுத்துவதைப் பற்றியே மீண்டும் பேசப் பட்டது. தரைப்படைத் தலைமை ''நெகிழ் வோடு பதிலளித்தல்'' சித்தாந்தத்தைத் தொடர்ந்து பின்பற்றியது.

* * *

அமெரிக்க இராணுவத்தின் ஐக்கியக் கட் டமைப்பைத் தோற்றுவித்ததும் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலத்தில் இதன் வளர்ச்சியும் ஆக்கிரமிப்புக் கொள் கையின் பிரதானக் கருவியாகிய அமெரிக்க இராணுவ இயந்திரத்தை மேம்படுத்துவதைத் தான் நோக்கமாகக் கொண்டிருந்தன.

**1962**இல் ஜெனரல் மக்கார்தூர் வெஸ்ட் போயின்ட்டில் உள்ள இராணுவக் கல்லூரியில் பயிலுபவர்கள் மத்தியில் பேசும் போது பின்வருமாறு கூறினார்: ''உங்களுடைய கடமை வெள்ளிடைமலை... அமெரிக்கா நடத் தும் யுத்தங்களில் நீங்கள் வெற்றியடைய வேண்டும். உங்களுடைய மற்ற எல்லாக் காரியங்களும் இந்தப் பிரதான நோக் கத்திற்கு உட்பட வேண்டும்''[66]. இதற்குப் பின் எவ்வளவோ விஷயங்கள் நடந்து விட்டன. இன்று இராணுவ இயந்திரம் முழு வதுமே அரசியல்மயப்படுத்தப்படுகிறது. முடிவு களை எடுக்கும் போது வெறும் இராணுவ விளைவுகளை மட்டுமின்றி பொருளாதார, அரசியல் விளைவுகளையும் கணக்கில் கொள் ளுமாறு இதனிடம் கோரப்படுகிறது. இதன்

தூய இரணுவப் பணியும் இராணுவத்தின் வேலை நோக்கும் மறுக்கப்படுகின்றன. ஜனாதி பதிகளாயிருந்த ஐசன்ஹோவர், கென்னடி, ஜெனரல் மா. டெய்லர், இன்னும் சில செல்வாக்கு மிக்க இராணுவத் துறையினர் ஆகியோர் இக்கருத்தைத்தான் கொண்டிருந் தனர். உதாரணமாக, 1955இல் திறக்கப்பட்ட வான்படைக் கல்லூரியில் அரசியல் விஞ்ஞா னங்களின் பங்கு கணிசமாக அதிகரித்ததிலும் இது நடைமுறையில் வெளிப்பட்டது. ஜூனியர் மற்றும் சீனியர் இராணுவ அதிகாரிகளின் பயிற்சித் திட்டங்களும் இதற்கேற்றபடி மாற்றி யமைக்கப்பட்டன.

ஆக, நம் முன் நாட்டின் அரசியல் மற்றும் இராணுவ மேல் மட்டங்கள் இணையும் போக்கு காணப்படுகிறது. இடை யறாது வளர்ந்து வரும் இப்போக்கை இன்றைய அமெரிக்க அரசியல் வாழ்வில் ஆதிக்கம் செலுத்தும் போக்காகக் கருதலாம். ஒரு சில சிவில் மற்றும் இராணுவ நிபுணர்கள் அமெரிக்க இராணுவ இயந்திரத்தை அரசியல் மயப்படுத்துவதைக் கண்டித்தாலும், இப்போக் கின் சாரத்தின் மீது இவர்களுக்கு அக்கறை யில்லை, அரசியல் ஆர்வம் அதிகமானால் இராணுவத்தினரின் தொழில் திறமை குறைந்து விடுமே என்றுதான் இவர்கள் கவலைப்பட்டனர்.

80ஆம் ஆண்டுகளில் ‘‘தேசியப் பாது காப்பை எதிர்நோக்கியுள்ள பயங்கர அபாயங் களைப்’’ பற்றிய நாடகம் இன்று அமெரிக்

காவில் நடக்கிறது. இது நன்கு தெரிந்த ஒன்று. நாட்டின் ஆளும் வர்க்கமும் இதன் இராணுவ-அரசியல் தலைமையும் கடந்த காலத்தைப் போன்றே இன்றும் கற்பனை யான, யதார்த்தத்திற்கு அப்பாற்பட்ட ''அபா யங்களைச்'' செயற்கையாகத் தோற்றுவித்து பின் அவற்றிற்கெதிராகப் போராடும் பாரம் பரிய வழியில் செல்கின்றன. இதில் ''சோவியத் இராணுவ அபாயத்திற்கு'' ஒரு முக்கிய இடமுண்டு. அதே சமயம், இன்றைய உலகில் அமெரிக்காவின் நிலை மாறியுள்ளதை ஒப்புக்கொண்டு (குறிப்பாக வியட்நாம் யுத்தத் திற்கு முந்தைய காலகட்டத்துடன் ஒப்பிடும் போது) உலக நிகழ்ச்சிகளின் மீது பலத்தின் மூலம் தாக்கம் செலுத்தும் வாய்ப்புகள் அதனிடம் குறைந்துள்ளதைப் பற்றிக் கூறும் நிதான புத்தியுள்ளவர்களும் இன்று அமெரிக் காவில் உள்ளனர்.

சமீப பத்தாண்டுகளில் அமெரிக்க ஆளும் வட்டங்கள் ஜீவாதார நலன்கள் என்பதை ''எந்த ஒரு அரசோ அரசுகளின் கூட்டோ அமெரிக்கப் பாதுகாப்பை அச்சுறுத்தாத ஒரு பன்முக உலகைப் பேணிக் காப்பது''[67] என்று வரையறுத்து வந்துள்ளன. இது இராணுவ மேம்பாட்டிற்கான போட்டிக்குத் தர்க்க் ரீதியாக இட்டுச் செல்கிறது. இது அமெரிக் காவின் எதிரிகளுக்கும் கூட்டாளிகளுக்கும் அபாயத்தை ஏற்படுத்துகிறது.

இன்றைய குடியரசுக் கட்சி நிர்வாகமும் பேரரசு போர்த்தந்திரவாதிகளின் வழக்கமான

சிபாரிசுகளை எடுத்துக் கொண்டுள்ளது. இவை 1981இல் வெளியான **அமெரிக்க தேசியப் பாதுகாப்பு** எனும் நூலில் வெளிப்படையாக, இருபொருளின்றி கூறப்பட்டுள்ளன. இந்நூல் அமெரிக்க உயர் கல்விக் கூடங்களில் அதிகாரபூர்வமான பாட நூலாக வைக்கப்பட்டுள்ளது. இந்நூலில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: ''இராணுவ ரீதியாக மற்றவர்களை விஞ்சி நிற்கும் வகையில் உறுதியான, யதார்த்தமான 'பலாத்கார அரசியலை' நடத்துவதுதான் அமெரிக்காவிற்கு வெற்றியை நோக்கிய மிக சிறந்த பாதையாகும்... உலக அரசியலில் பலத்தின் முக்கியத்துவம் பற்றிய பழைய பாடங்களை அலட்சியப்படுத்த துணிந்த பேரரசுகள், அரசுகளின் இடிபாடுகளைப் பற்றிய பல நினைவுச் சம்பவங்கள் வரலாற்றில் உள்ளன.''[68]

சோவியத் யூனியனின் விஷயத்தில் இந்த அமெரிக்க மேலாதிக்கவாதத்தின் பழைய இராணுவ வெறி சிபாரிசுகள் ''கட்டுப்படுத்தி வைத்தல்'' எனும் ஏதோ ஒரு புதுப்பிக்கப்பட்ட அரசியல் வடிவமாகின்றன. சக்திகளின் சமன்நிலையைத் தக்கவைப்பது எனும் சாக்கில் சோவியத் நாட்டிற்கெதிராக அமெரிக்கா முதலில் அணு ஆயுதத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்பதே முன்போன்றே இக்கொள்கையின் மைய அம்சமாக உள்ளது. சாதாரண ஆயுதத்தின் அழிவுத் தன்மை அதிகரித்துள்ளதையும் இதனுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆயுதங்களைச் செலுத்தும்

முறைகள் மற்றும் விண்வெளியிலிருந்து வேவு பார்க்கும் சாதனங்கள் நவீனமயப்படுத்தப் படுவதன் விளைவாக இது சாத்தியமாகியது. ஒரு சில அமெரிக்க நிபுணர்கள் இவற்றை யுத்தம் நடத்தும் முறைகளில் ஒருவித புரட்சியாகக் கருதுகின்றனர். இவர்கள் இவற் றின் முக்கியத்துவத்தை 1945இல் அணு ஆயுதம் கண்டுபிடிக்கப்பட்ட முக்கியத்துவத் துடன் ஒப்பிடுகின்றனர். இந்நிபுணர்களின் கருத்துப்படி சாதாரண ஆயுதங்களைக் கொண்டு இலக்குகளை வெகு துல்லியமாகத் தாக்கும் வாய்ப்பை மேற்கத்திய நாடுகள் சோவியத் யூனியனுக்கு எதிரான தடுப்பு யுத்தத்தில் முழுமையாகப் பயன்படுத்த வேண் டும்.

ஆக, இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய படிப்பினைகளோ, வெளிநாட்டுக் கொள்கையின் தோல்விகளோ, போர்த் தோல் விகளோ, 70ஆம் ஆண்டுகளில் சர்வதேச நிலவரம் சுமுகமடைந்ததன் அனுபவமோ அமெரிக்க இராணுவ இயந்திரத்தின் சாரத் தைச் சிறிது கூட மாற்றவில்லை. இன்று வரை இது அமெரிக்க மேலாதிக்கவாதக் கொள்கையின், உலக ஆதிக்கத்தை வெல்லும் அமெரிக்க நாட்டத்தின் முக்கியக் கருவியாகத் திகழுகிறது.

## அத்தியாயம் மூன்று

# அரசுக் கொள்கையில் அணு ஆயுத வெறி

### 1. அணு ஆயுதப் போர்த்தந்திரத்தின் அடிப்படைகளை உருவாக்குதலும் அணு ஆயுத மிரட்டல் கொள்கையும்

*1945ஆம் ஆண்டு ஜூலை 19ந் தேதி அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமை அணு குண்டு முதன்முதலாக வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டதை அறிந்தது. இச்செய்தி சோவியத் யூனியனின் பாலான அமெரிக்க நிலையை இப்போது கடுமையானதாக ஆக்கலாம் என்ற நம்பிக்கையை ஜனாதிபதி ட்ரூமனுக்கும் அவருடைய ஆலோசகர்களுக்கும் ஏற்படுத்தி அவர்களுக்குப் பேருவகையை ஏற்படுத்தியது. அப்போதே, வாஷிங்டனுக்கு உகந்தபடி யுத்தத்திற்குப் பிந்தைய உலகை மாற்றியமைக்கும் சாதனமாக அணு ஆயுதத்தைப் பயன்படுத்தும் கருத்து உருவெடுக்க ஆரம்பித்தது.*

*ஆரம்பத்தில் அமெரிக்க ஆளும் வட்டங்களின் கவனம் புதிய ஆயுதத்தின் இராணுவ வாய்ப்புகளின் மீதிருந்தது. ''யுத்தத்தின் முடிவைத் துரிதப்படுத்துவதற்காக'' அணு குண்டைப் பயன்படுத்துவதென 1944 செப்டெம்பர் 6ந் தேதியே ஜனாதிபதி ரூஸ்வெல்டும்*

பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலும் முடிவு செய்த னர். மேலே குறிப்பிட்டபடி, ''அணு சக்தியை யுத்தத்தில் பயன்படுத்தக் கூடாதென ஜனாதி பதியோ, அரசாங்கத்தில் உள்ள வேறெந்த அதி கார பூர்வமான நபரோ 1941 முதல் 1945 வரை கூறியதாக நான் கேள்விப்பட்டதில்லை''[69] என்று இராணுவ அமைச்சராகிய ஸ்டீம்சன் கூறினார். துருப்புகளின் உதவியைக் கொண்டு இல்லாமல் தொழில்நுட்ப சாதனைகளின் உதவி கொண்டு இயன்ற வரை விரைவாக வெற்றியை அடையும் நாட்டம்தான் அணு ஆயுதத்தின் பாலான இத்தகைய அணுகு முறைக்கான முக்கியக் காரணமாகும். இப் பொருளில் அணு குண்டை இராணுவ ரீதியாகப் பயன்படுத்துவது இக்கொள்கையின் தர்க்க ரீதியான தொடர்ச்சியாக இருந்தது.

ஆனால் முக்கியமான விஷயம் வேறொன்றில், அதாவது அணு குண்டின் இராணுவ ரீதியான வாய்ப்புகளை விட அதிகமாக இதன் அரசியல் வாய்ப்புகளில் அடங்கியிருந்தது. வாஷிங்டன் அரசியல்வாதிகள் எதிர்பார்த்த படியே அணு ஆயுதம் தோன்றியதானது யுத் தத்திற்குப் பிந்தைய சக்திகளின் சமன்நிலை யைப் பெரிதும் மாற்றும், உலகம் முழுவதன் மீதும் தன் சித்தத்தைத் திணிப்பதற்கான அரசியல் வாய்ப்பை அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு ஏற்படுத்தும்.

அமெரிக்க நிர்வாகத்தின் பிரதிநிதிகள் இது போன்ற கருத்துகளைப் பகிரங்கமாகத் தெரி விக்கவில்லையென்பது உண்மைதான். ஆனால்

சோவியத் யூனியனின் மீது பலாத்காரமாக நிர்ப்பந்தம் செலுத்தவும் கிழக்கு ஐரோப்பா விலும் உலகின் மற்ற பிரதேசங்களிலும் இதன் பாதுகாப்பின் சட்டபூர்வமான நலன்களுக்குப் பங்கமேற்படும் விதத்தில் இதனிடமிருந்து அரசியல் இணக்கங்களைப் பெறவும் அணு ஆயுத ஏகபோகத்தைப் பயன்படுத்துவதைப் பற்றி ஜனாதிபதி ட்ரூமனும் அவருடைய ஆலோசகர்களும் திட்டமிட்டனர் என்பதைக் காட்டுவதற்கு இன்று போதுமான அளவு ஆவணபூர்வமான சாட்சியங்கள் உள்ளன. இக்கருத்துதான் இதற்குப் பின் கிட்டத்தட்ட எல்லா வெளிநாட்டுக் கொள்கை நடவடிக்கை களிலும் அமெரிக்க இராணுவ-அரசியல் தலை மையின் நடைமுறை நடவடிக்கையை வழி நடத்தியது.

ஜப்பான் சரணடைந்த பின் ட்ரூமனின் நிர்வாகம் இராணுவ நோக்கங்களில் அணு சக்தியைப் பயன்படுத்துவதன் அரசியல் விளைவு களை ஆராய்வதில் இறங்கியது. அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமையின் முன் இரண்டு வாய்ப்புகள் தோன்றின: அணு குண்டை அரசியல் நோக்கங்களில் பயன்படுத்துவதற்காக அதன் மீதான ஏகபோகத்தைத் தக்கவைப்பது அல்லது இது மிரட்டுதல் மற்றும் வன்முறையின் நிரந்தர அபாயமாக மாறிவிடாமலிருப்பதற் காக இப்புதிய ஆயுதத்தை மனித வாழ்வி லிருந்து அகற்றும் வழிகளைத் தேடுவது.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவ-அரசியல் தலைமை எந்த வித விசேஷ ஊச

லாட்டங்களுமின்றி அணு ஆயுதப் போட்டிப் பாதையை, இராணுவ மேன்மையைத் தக்க வைத்து பெருக்கும் பாதையைத் தேர்ந் தெடுத்தது. 1945 அக்டோபர் 27இல் நியூ யார்க்கில் ஜனாதிபதி ட்ரூமன் ஆற்றிய உரை யில் இந்தத் தீர்மானத்திற்கான சித்தாந்த பூர்வமான ஆதாரம் வெளிப்படுகிறது. ''இந்தப் புதிய அழிவு சக்தி நம் கரங்களில் இருப்பதை நாம் ஒரு புனிதமான வரப்பிரசாதமாகக் கருதுகிறோம்''[70] என்று அவர் கூறினார். அமெரிக்காவின் வெளிநாட்டு மற்றும் இரா ணுவக் கொள்கையில் அணு ஆயுதத்தை ஒரு நிரந்தர அம்சமாகப் புகுத்தியதில் முக்கியப் பங்கு நாட்டின் உயர் மட்ட அரசியல் தலைமையைச் சாரும்.

அமெரிக்க ஆளும் வட்டங்கள் 1947 வசந்த காலத்திலிருந்து அணு குண்டை இராணுவ திட்டமிடுதலின் மையத்தில் வைத்தன. இவ்வட் டங்களின் கருத்துப்படி இது நாட்டின் வெளிநாட்டு நலன்களுக்கு வகை செய்தது. 1946 கோடையில் கடற்படை அணு ஆயுதத் தை ஏந்திய விமானந்தாங்கிக் கப்பலைக் கட்டத் திட்டமிடத் துவங்கியது கவனிக்கத் தக்கது. ஆனால் வான்படைத் தலைமை அணு குண்டின் அளவைப் பற்றிய ஆவணங்களைக் கடற்படைக்கு அளிக்க மறுத்தது.[71] ஜப்பான் சரணடைந்த தற்கு இரண்டு மாதங்களுக்குப் பின் சோவியத் யூனியனின் மீது அணு ஆயுத தாக்குதலைத் தொடுக்கும் வாய்ப்புகள் ஆராயப்படலாயின. ''மட்டான வான் தாக்குதல் தொடுக்கப்பட்டால்

ருஷ்யாவிற்கு ஏற்படும் போர்த்தந்திர ரீதியான பாதிப்பு'' என்ற பெயரில் இதற்கேற்ற ஆவணம் படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டியால் தயாரிக்கப்பட்டது. ஜப்பானுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட அதே வகையான அணு குண்டுகள்தான் சோவியத் யூனியனுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படும் என்பதை ஆதாரமாகக் கொண்டு இந்த ஆவணத்தில் அணு ஆயுதத் தாக்குதலுக்கு ''ஏற்ற'' இருபது சோவியத் நகரங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. முக்கியமான தொழில்துறை மையங்கள், இராணுவ ஆராய்ச்சி நிறுவனங்கள், பிரதான அரசாங்க, நிர்வாக ஊழியர்கள், அதிகாரிகள் இருக்கும் இடங்கள் ஆகியவற்றிற்கேற்ப இலக்குகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

தரைப்படைக்கும் கடற்படைக்கும் இடையேயான கருத்து வேறுபாடுகள் மேற்கூறிய ஆவணத்தை ஒரே நடைமுறைத் திட்டமாக மாற்றுவதை இயலாததாக ஆக்கின. இந்த வேறுபாடுகள் சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்தின் அவசியத்தைப் பற்றியவையாக இருக்கவில்லை, இத்தகைய யுத்தம் தவிர்க்க இயலாததாக இரு தரப்பாலுமே ஒப்புக்கொள்ளப்பட்டது. இருபது சோவியத் நகரங்களை அழிக்கும் அம்சம், உண்மையிலேயே சோவியத் யூனியனைச் சரணடையும்படி நிர்ப்பந்திக்குமா, இல்லையா என்பது போன்ற பிரச்சினைகளின் மீதுதான் விவாதம் நடந்தது. வேறுவிதமான கருத்து மாறுபாடுகளும் நிலவின. சோவியத் யூனியனிடம் ''பழம் பாணியான'' விமானத் தொழில்துறைதான்

உள்ளது, ஒரு முழு தலைமுறையின் வாழ்க்கை காலம் பூராவும் இதனால் இராணுவ அபாயம் இல்லை என்ற அடிப்படையில் அமெரிக்க வான்படைத் தலைமை 1945ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே ''சோவியத் இராணுவ அபாயத்தின்'' வாய்ப்பை நிராகரித்தது. ஆனால் 1945 ஜூலையிலேயே வான்படைத் தலைமையகத்தின் ஒற்றாடல் மதிப்பீடுகளில், ''அந்நாடு (சோவியத் யூனியன் — ஆ-ர்.) அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு ஆபத்தை ஏற்படுத்த வல்லது'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அடுத்த ஐந்து அல்லது பத்து ஆண்டுகளில் அமெரிக்காவை விட சோவியத் யூனியன் வான் துறையில் விஞ்சி நிற்கும் பிரச்சினை தோன்றக் கூடுமென 1945 இலையுதிர்க் காலத்தில் அதே ஆவணங்களில் கூறப்பட்டிருந்தது.[72]

கடற்படையின் தலைமை தன்னுடைய அமைச்சராகிய ஜே. பாரெஸ்டலால் ஊக்குவிக்கப்பட்டு தன் பங்கிற்கு யுத்தத்திற்குப் பிந்தைய அமெரிக்கத் திட்டங்களில் உலகளாவிய பாத்திரத்தைத் தான் பெற முயற்சித்தது. ஆனால் பிரச்சினை என்னவெனில், தரைப்படையைப் போல் ஐரோப்பாவில் இராணுவ நடவடிக்கைகளில் கடற்படையால் பங்கேற்க முடியாது, வான்படையைப் போல் சோவியத் பரப்பின் உட்பகுதியில் தாக்குதல்களைத் தொடுக்க இயலாது. அணு குண்டு இருந்ததும் வலுவடைந்து வந்த கம்யூனிச எதிர்ப்பு மனநிலைகளும் கடற்படையின் வாய்ப்புகளைப் பெருக்கும் முடிவிற்கு இறுதியாக இட்டு வந்தன என்று இதன் தொடர்

பாக அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் குறிப் பிடுகின்றனர். பின்னால் பாரெஸ்டல், கடற் படையில் அணு ஆயுதத்தைப் புகுத்துவது குறித்து உற்சாகமாக இருந்த அட்மிரல்கள் நிமித்ஸ், ரெட்போர்ட் ஆகியோருடன், புதிய கடற்படை யின் ஆதரவாளர்களோடு சேர்ந்து கொண் டார். ‘‘ருஷ்யாவின் இதயத்தின்’’ மீது தாக்கு தலைத் தொடுப்பதற்காக அணு குண்டு வீச்சு விமானங்களை ஏந்திச் செல்ல வல்ல, எல்லை யற்ற தொலைவு இயங்க வல்ல சூப்பர் விமானந் தாங்கிக் கப்பல்களைப் பற்றி இவர்கள் திட்டம் தீட்டினர்.

புதிய அணு ஆயுதம் தோன்றியதற்குத் தரைப் படையின் பதில் இன்னமும் சிக்கலானதாக இருந்தது. இது யுத்தத்தின் தன்மையையே மாற்றியுள்ளது என்பதை தரைப்படையின் திட்டம் தீட்டுபவர்கள் முதலில் அடியோடு மறுத்தார்கள். உதாரணமாக, மூன்றாவது உலக யுத்தம் ஐந்தாண்டுகள் நீடிக்கும் என்பதை ஆதாரமாகக் கொண்டு தரைப்படையின் விசேஷ திட்டப் பிரிவு இயங்கியது. இத்தகைய ஒரு யுத்தம் துவங்கும் முன் ஓராண்டு ‘‘பூர்வாங்க கட்டம்’’ இருக்கும் என்றும் இதில் அமெரிக் காவால் முழுவதுமாக அணிதிரள முடி யுமென்றும் முன்னனுமானிக்கப்பட்டது. நடை பெறவிருக்கும் சண்டைகளில் அணு குண்டு குறிப்பிட்ட பங்காற்றும் என்றும் ஆனால் இது வான் தாக்குதலின் பிற்சேர்க்கையாக மட்டுமே இருக்குமென்றும் தரைப்படையின் திட்டம் தீட்டுபவர்கள் கருதினர்.[73] புதிய ஆயுதம்

தரைப்படைப் பிரிவுகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு இட்டுச்செல்லும் என்ற அச்சமே தரைப்படைத் தலைமையின் இந்நிலைக்கு காரணமாகும். ஏனெனில் துருப்புகளைப் பெருமளவில் குவித்து வைப்பது மிக ஆபத்தானதாகியது.

அமெரிக்கப் போர்த்தந்திரத்தில் அணு ஆயுதத்தின் பங்கை இயன்ற அளவு விரிவாக உருப்படுத்தி சொல்லுவதன் மூலம் கருத்து வேறுபாடுகளை சமரசப்படுத்த படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி முயன்றது. இதன் போர்த்தந்திர விமரிசனக் கமிட்டி, போர்த்தந்திரத்தின் மீதான அணு ஆயுதத்தின் செல்வாக்கைப் பற்றிய மதிப்பீடு அடங்கிய யுத்தத்திற்குப் பிந்தைய முதல் ஆவணத்தில் பின்வருமாறு கூறியது: இத்தகைய ஆயுதம் இருப்பது எதிர்காலத்தில் இராணுவ தளங்களின் தற்காப்பைச் சிக்கலாக்கும், இது தவிர, இந்த ஆயுதத்திற்கான பெரும் செலவும் இதன் மட்டான எண்ணிக்கையும் இராணுவ நடவடிக்கைகளின் மீதான இந்த ஆயுதத்தின் செயலாக்கத்தைக் குறைக்க கூடும். ‘‘கட்டுப்பாடுகள், பெரும் முக்கியத்துவம் வாய்ந்த அமைப்புகளுக்கு எதிராக மட்டுமே இதைப் பயன்படுத்துமாறு செய்யும்.... எனவே அசாதாரண நிலைமைகள் மட்டுமே தரைப்படை, கடற்படை, விமானப்படை நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இதை நடைமுறையில் பயன்படுத்துவதை நியாயப்படுத்துகின்றன.’’[74]

இதற்குப் பின் நாட்டின் இராணுவ-அரசியல் தலைமைக்காக படைத்தலைமையகத் தலை

வர்களின் கூட்டு கமிட்டியால் தயாரிக்கப்பட்ட ஆராய்ச்சியிலும் அணு ஆயுதத்தைப் பயன் படுத்தும் வாய்ப்புகளில் உள்ள கட்டுப்பாடுகள் கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தன. இராணுவப் போர்த்தந்திரத்தின் மீதான அணு குண்டின் தாக்கத்தைப் பண்பு ரீதியாக இல்லாமல் அளவு ரீதியாக மட்டுமே இக்கமிட்டி பார்த்தது. படைத்தலைமையகத் தலைவர்கள் இறுதியாக தரைப்படையின் கருத்தை ஏற்றுக் கொண்டனர் — அணு குண்டு தோன்றியது சாதாரண சக்திகளின் பங்கைக் குறைக்காதது மட்டுமல்ல, மாறாக இவற்றை அதிகப்படுத்து வதையும் இது முன்னனுமானிக்கிறது; எதிரியின் மீது எந்தத் தளங்களிலிருந்து தாக்குதலைத் தொடுக்கத் திட்டமிடப்படுகிறதோ அவற்றைப் பாதுகாக்க இது அவசியம். அணு ஆயுதத்தைக் கொண்டு நடத்தப்படும் எதிர்கால யுத்தத்திற்கு எதிரியின் பரப்பைக் கைப்பிடித்து ஆக்கிரமிக்க வேண்டும், ஏனெனில் அப்போதுதான் எதிரியை சரணடையும்படி நிர்ப்பந்திக்க முடியுமென்றும் கமிட்டி கூறியது.[75]

நாட்டில் மேலோங்கியிருந்த மனநிலைகளின் மீதான தாக்கம்தான் படைத்தலைமையகத் தலைவர்களின் நிலைக்கான முக்கியக் காரண மாகும். விஷயம் என்னவெனில், ஹிரோஷிமா, நாகசாகியின் அழிவிற்குப் பின், அணு குண்டுகள் யுத்தத்தின் தன்மையையே இந்த அளவிற்கு மாற்றியுள்ளதால் பாரம்பரியமான ஆயுதப்படைகள் இனித் தேவையில்லையென்ற கருத்து பரவலாகப் பரவியிருந்தது.

அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடும்படி, யுத்தத்திலிருந்து சமாதானத்திற்குச் செல்லும் மாறுகாலத்தில் முப்படைகளுக்கு இடையிலான கருத்து மாறுபாடுகளைத் தவிர்ப்பதும் படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டியின் அக்கறையாக இருந்தது; அணு குண்டு சம்பந்தமான இதன் அதிகாரபூர்வமான நிலை இராணுவம் முழுவதன் நலன்களையும் திருப்திபடுத்தியது, ஏனெனில் அணு ஆயுதத் தாக்குதலைத் தொடுத்த பின் எதிரியின் பரப்பைக் கடல் மற்றும் வான் முற்றுகைக்கு உள்ளாக்கி ஆக்கிரமிக்க வேண்டியதன் அவசியம் அதில் கோடிட்டுக் காட்டப் பட்டிருந்தது. இராணுவ இலக்குகளை விட சிவில் இலக்குகளுக்கு எதிரான போர்த்தந்திர ஆயுதமாக அணு குண்டை வரையறுத்ததானது சமரசத்தின் வெளிப்பாடாக, இராணுவம் முழுவதன் பணிகளையும் தன்மையையும் மாறாத வடிவத்தில் தக்கவைக்கும் முயற்சியாக இருந்தது. ஆனால் இக்கமிட்டியின் சமரச நிலையானது விரைவிலேயே இராணுவ அதிகாரிகளின் இளம் தலைமுறையினரின் கண்டனத்திற்கு உள்ளானது. எதிர்கால யுத்தத்தின் விவரங்கள் சம்பந்தமான பெண்டகனின் மதிப்பீடுகளும் திட்டங்களும் சந்தேகத்திற்குள்ளாக்கப்பட்டதோடு கூட அமெரிக்க இராணுவ சிந்தனையைப் புதிய, யுத்தத்திற்குப் பிந்தைய போர்த்தந்திரத் திசையில் (அணு குண்டுதான் இதன் முக்கிய அம்சமாகும்) திருப்பவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

*1946 வசந்த காலத்தின் ஆரம்பத்தில் படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி அமெரிக்க இராணுவப் போர்த்தந்தி ரத்தின் மீதான அணு குண்டின் செல்வாக் கைப் பற்றிய ஆவணத்தை மறுபரிசீலனை செய்தது. மற்ற வகையான ஆயுதங்களோடு ஒப்பிடும் போது அணு குண்டு ''முன்னோக்கி எடுத்து வைக்கப்பட்ட'' ஒரு பெரும் அடி என்றும் இது இராணுவ நடவடிக்கைகளை நடத்துவதன் மீது தாக்கம் செலுத்துமென்றும் படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டியைச் சேர்ந்த போர்த்தந்திர விமரி சனக் கமிட்டியின் புது பதிப்பில் (ஆறு மாதங்களுக்கு முன் கூறப்பட்டிருந்ததற்கு மாறாக) நிபந்தனையற்று கூறப்பட்டிருந்தது. படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி சோவியத் யூனியனின் பாலான தன் உறவை இறுதியாக மறுபரிசீலனை செய்தது. யால்டா மகாநாட்டின் போது கமிட்டியின் ஆவணங்களில் சோவியத் நோக்கங்களும் லட்சியங்களும் பெரும்பாலும் தற்காப்புத் தன்மையை உடையவையாகச் சித்தரிக்கப்பட் டன என்றால், யால்டா மகாநாட்டிற்குப் பின் 18 மாதங்கள் கழித்து, அசாதாரணத் திட்டமிடுதல் பற்றிய பெண்டகனின் ஆவ ணங்களில் ''சோவியத் கம்யூனிசத்தின் எல்லை யற்ற விஸ்தரிப்பும் இதனோடு கூட ருஷ்ய ஏகாதிபத்தியத்தின் கணிசமான பிரதேச விஸ்தரிப்பும்தான்''[76] சோவியத் யூனியனின் பிரதான லட்சியம் என்று அறிவிக்கப்பட்டது.*

சோவியத் எதிர்ப்புவாதம், கம்யூனிச எதிர்ப்பு வாதத்தின் பின்னணியில்தான் அமெரிக்க இராணுவ-அரசியல் தலைவர்கள் தமது கவனத்தை அணு குண்டின் போர்த்தந்திர முக்கியத்துவத்தின் மீது ஒருமுனைப்படுத்தினர்.

இராணுவத் திட்டமிடுதலில் அதிகரித்து வரும் இதன் முக்கியத்துவம் அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமையின் சிந்தனை மீது தவிர்க்க இயலாதவாறு தாக்கம் செலுத்தியது. ''கட்டுப்படுத்தி வைத்தல்'' என்ற கருத்தமைப்பை (அதாவது அணு ஆயுத யுத்தத்தை அனுமதிப்பதில்லை) பின்பற்றுவதாக வார்த்தைகளில் அறிவித்த அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமையின் பிரதிநிதிகள் நடைமுறையில் முதலாவதாக அணு ஆயுதத்தைப் பயன்படுத்தும் வாதத்தின் மீது மேன்மேலும் அதிக அழுத்தத்தைத் தந்தனர்.

இத்தகையதொரு அணுகுமுறை ''கட்டுப்படுத்தி வைக்கும்'' அவசியப் போர்வையின் கீழ் அணு ஆயுத ஆக்கிரமிப்பை அங்கீகரித்தது. முதலாவதாக அணு ஆயுத தாக்குதலைத் தொடுக்கும் திட்டங்களின்படி யுத்தத்தின் ஆரம்பத்திலேயே நகரங்களை முழுமையாக அழிப்பதானது இரண்டாவது உலக யுத்த காலத்தில் ஆங்கிலேயர்களாலும் அமெரிக்கர்களாலும் நடத்தப்பட்ட போர்த்தந்திரக் குண்டு வீச்சுகளின் ஒரு வித உச்ச கட்டமாக அமைந்தது. அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமை கருதியபடி[77] அணு ஆயுதத்தை வைத்திருந்தது, தன் இராணுவ பலத்தில்

எண்ணிக்கை ரீதியான ஒரு பாய்ச்சலை மட்டும் குறிக்கவில்லை. மிகக் குறைவான நேரத்தில், ஒப்பீட்டளவில் எளிதாக மிகப் பெரும் இழப்பை ஏற்படுத்த வல்ல அணு ஆயுதம் இராணுவ பலத்திற்கும் வெளிநாட்டுக் கொள்கைக்கும் இடையிலுள்ள உறவு முறையையே மாற்றியமைத்தது. முன்னர் நீண்டகால இராணுவ நடவடிக்கைகள் மற்றும் ஒரு நாட்டின் இராணுவத்தை முறியடித்தது அல்லது அவ்வாறு முறியடிப்பதாக அச்சுறுத்தியது போன்றவற்றின் விளைவாக ஒரு அரசு சரணடையுமாறு அல்லது இணங்கிப் போகுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டது என்றால் அணு ஆயுதம் இவை எல்லாவற்றையும் ஆட்டங் காண வைத்தது. ஒரு குண்டு நொடிப் பொழுதில் ஒரு பெரிய நகரத்தையே சுட்டுப் பொசுக்கி சாம்பலாக்கி விடும். ஒரு அரசு, எந்த ஒரு சமரிலும் தோல்வியுறாமல், அணு ஆயுதத்தைப் பயன்படுத்தி ஈடு செய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தி, எதிர் நாட்டை இடிபாடுகளில் மூழ்கடிக்கக் கூடும்.

இத்தகைய வாய்ப்புகள் அப்போதே அமெரிக்க ஆளும் வட்டங்களுக்குப் பெரிதும் கவர்ச்சிகரமானவையாக இருந்தன என்று அமெரிக்க நிபுணர்களே குறிப்பிடுகின்றனர். அணு குண்டு ஒரு புறம், இவற்றின் வெளி நாட்டு அரசியல் இலக்குகளை அடைய வகை செய்தது, மறுபுறம், யுத்தத்திற்குப் பிந்தைய ஆபத்தான பணவீக்கத்தைத் தவிர்க்கவும் குறைவான விலையைத் தந்து உலக

மேலாதிக்கத்தை அடையவும் உதவியது. சோவியத் யூனியனுக்கு எதிராக அணு ஆயுதத்தைப் பயன்படுத்தும் அச்சுறுத்தலை (அதுவும் முதலாவதாக இதைப் பயன்படுத்தும் சாத்தியக்கூறை மறுக்காமல்) ஆதாரமாகக் கொண்டு இயங்க அமெரிக்க ஐக்கிய நாடு முடிவு செய்தது.[78]

1946 ஜூன் மாதம் படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்தின் முதல் திட்டத்தை தீட்டுவதை முடித்தது. இது ''பின்செர்'' என்ற சங்கேதப் பெயரைப் பெற்றது. மூன்று மாதங்களுக்கு குறையாத பூர்வாங்க அச்சுறுத்தல் கட்டத்திற்குப் பிறகு 1946 கோடையிலோ 1947இலோ சோவியத்-அமெரிக்க யுத்தம் நடைபெறுமென்று இத்திட்டம் மதிப்பிட்டது. இத்திட்டம் ''பரிசோதனைத் திட்டமாகக்'' கருதப்பட்டது. சோவியத் யூனியனிலுள்ள இலக்குகளைத் தாக்குவதற்காகப் பயன்படுத்தப்படக் கூடிய அணு குண்டுகளின் எண்ணிக்கை சம்பந்தமாக படைத் தலைமையகத் தலைவர்களின் மத்தியிலிருந்த உறுதியின்மையை இது பிரதிபலித்தது. ஜெனரல் லேமேயால் 1946 இலையுதிர்க் காலத்தில் உருவாக்கப்பட்ட ''ஹார்ரோ'' எனும் ஆவணம் பிற்சேர்க்கையாக இத்திட்டத்துடன் சேர்க்கப்பட்டது. 20 சோவியத் நகரங்களை அணு குண்டு வீச்சிற்கு உள்ளாக்கி அழிப்பது பற்றிய திட்டக் குறிப்புகள் இந்த ஆவணத்தில் அடங்கியிருந்தன, இவை 1945

இலையுதிர்க் கால ஆராய்ச்சியைத் திரும்ப எடுத்துரைத்தன.

''பின்செர்'' திட்டத்தை தீட்டுகையில் படைத் தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி யின் திட்டத் துறையினர் ''பரிசோதனைக்'' கருத்தமைப்புகள் வான்படையின் வாய்ப்பு களுக்கு அப்பால் செல்வதைக் கண்டுபிடித் தனர்: இலக்குகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சோவியத் நகரங்கள், ஐரோப்பியத் தளங் களிலிருந்து சோவியத் யூனியனின் மீது தாக்குதல்களைத் தொடுப்பதற்காக ஒதுக்கப் பட்ட B-29 குண்டு வீச்சு விமானங்கள் செல்ல முடியாத தூரத்தில் இருந்தன. இதோடு கூட, ''வான்-அணு ஆயுதத்'' தாக்குதலுக்கும் பாக்கூவில் உள்ள எண்ணெய் எடுப்பு பிரதேசங்களைத் தாக்கவும் துருக்கி யின் பரப்பு பயன்படுத்தப்படுமென்று திட்டத் தில் குறிப்பிடப்பட்டிருந்தது.[79] அதே நேரத் தில் படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி சோவியத் தரைப்படைச் சக்திகளின் பலத்தையும் இவை பூகோள ரீதியாக நிறுத்தப்பட்டிருந்த தன்மையையும் கணக்கில் கொண்டது; இந்தக் காரணிகள் அணு ஆயுதத்தின் நடைமுறை ரீதியான செயல்வன்மையில் சந்தேகம் கொள்ளும்படி வைத்து இவர்கள் ஒதுங்கி நிற்கும்படி செய்தன.[80]

நாட்டின் அரசியல் தலைமைக்கு ஏற்ற ஒரு வடிவத்தில் கூட ''கட்டுப்படுத்தி வைக்கும்'' கருத்தமைப்பையே படைத்தலைமையகத் தலை

வர்கள் இக்கட்டத்தில் எதிர்த்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. சோவியத் யூனியன் அணு குண்டைக் கண்டுபிடித்தால் அது அந்நாட்டிற்கு எதிரான உறுதியான நடவடிக்கைகளிலிருந்து அமெரிக்காவைக் ''கட்டுப்படுத்தும்'', ஏனெனில் ''நமது பாதுகாப்பிற்கு ஆபத்தான ஒரு நிலை உருவாகக் கூடும், எதிர்கால பேரழிவு யுத்தத்தைப் பற்றிய பயங்கரங்களின் தாக்கத்தின் கீழ் மக்கள் இருப்பார்கள்''[81] என்று படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி கவலைப் பட்டது.

அணு ஆயுத சகாப்தத்தில் யுத்தத்தில் வெற்றி பெறுவதன் மூலமின்றி, இதை தவிர்த்து தடுப்பதன் மூலம் பாதுகாப்பிற்கு வகை செய்யலாம் என்ற ஒரு கருத்து 1946இல் சிவில் போர்த்தந்திரவாதிகளின் வட்டங்களில் நிலவியதைக் குறிப்பிட வேண்டும். 1946இல் முழுமுதல் ஆயுதம் என்ற நூலை[82] வெளியிட்ட பிரபல அமெரிக்க ஆராய்ச்சியாளர் பே. பிரோடி இவர்களில் ஒருவர். அணு குண்டு தோன்றியதானது, எண்ணிக்கை ரீதியான மேம்பாடு பெரிதும் வெற்றிக்கு வகை செய்கிறது எனும் மூலவுண்மை உட்பட பாரம்பரியமான இராணுவ அடிக்கோள்களைக் கேள்விக் குறியாக்குவதாக பிரோடியும் நூலின் மற்ற ஆசிரியர்களும் முடிவு செய்தனர். நிலையான அணு ஆயுத சமன்நிலை (இதில் சோவியத் யூனியனும் அமெரிக்காவும் சமமான நிலையிலிருக்கும்) ''சமாதானத்திற்

கான சிறந்த உத்திரவாதமாக இருக்கும், இரு நாடுகளின் கண்ணோட்டங்களும் நலன்களும் நெருங்கி வர வேறெதையும் விட அதிகமாக உதவும்''[83] என்று நூலாசிரியர்களில் ஒருவ ரான அ. வோல்பெர்ஸ் எழுதினார்.

ஆனால் அணு ஆயுத சகாப்தத்தில் யுத்தத் தைத் தவிர்க்கும் அவசியத்திலிருந்து அமெரிக்க இராணுவ சித்தாந்தம் வெகு தொலைவி லிருந்தது. ஆரம்பத்திலிருந்தே இது வெற்றி பெறும் வாய்ப்பை ஆதாரமாகக் கொண் டிருந்தது. மேலும் 1946 ஜனவரியில் ஜெனரல் குரோவுஸ் ''நம்முடைய எதிர்கால இராணுவ மும் அணு ஆயுதத்தின் செல்வாக்கும்'' எனும் தன்னுடைய அறிக்கையில் அணு ஆயுதத்தைக் கண்டுபிடிப்பதற்கு வெகு அருகிலிருக்கும் எந்த ஒரு தேசிய இனத்திற்கு எதிராகவும் தடுப்பு அணு ஆயுதத் தாக்குதலைத் தொடுக்கு மாறு அறைகூவல் விடுத்தார்.[84] இதனிடையே தடுப்பு தாக்குதல் தொடுக்கும் வாய்ப்பை அமெரிக்க இராணுவத் தலைவர்கள் பகிரங் கமாக உறுதியோடு மறுத்தனர். உதா ரணமாக, தரைப்படைத் தலைமையகத் தலைவர் ஐசன்ஹோவர் இதைப் பற்றி கூறினார். ஆனால் ஆவணங்கள் காட்டும்படி, படைத்தலைமையகத் தலைவர்கள் தமது இரகசியக் கூட்டங்களில் இத்தகையதொரு வாய்ப்பை மறுக்கவில்லை.[85] உதாரணமாக, ஹிரோஷிமா அழிக்கப்பட்டு மூன்று வாரங்கள் கழித்து படைத்தலைமையகத் தலைவர்கள், முதல் தாக்குதலைத் தொடுக்க வேண்டுமென்ற

கடற்படையின் ஆலோசனையை ஆமோதித்த னர்; ''அமெரிக்க ஐக்கிய நாட்டின் மீது தாக்குதல் தொடுக்கும் வாய்ப்போ, நமது தாக்குதலிலிருந்து பாதுகாத்து கொள்ளும் வாய்ப்போ''[86] சோவியத் யூனியனிடம் தோன் றினால் ''பின்செர்'' திட்டத்தைச் செயல்படுத் தும்படி படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டியின் வேவு கமிட்டி சிபாரிசு செய்தது. சோவியத் தாக்குதலைத் தடுப்பதற் காக 20 சோவியத் நகரங்களின் மீது தாக்குதல் தொடுக்கத் திட்டமிடப்பட்டது.

1947 ஜூனில் படைத்தலைமையகத் தலைவர் களின் கூட்டு கமிட்டி ''ஆயுதம் என்ற வகை யில் அணு குண்டின் பரிணாம வளர்ச்சி'' எனும் ஆராய்ச்சியை மேற்கொண்டது. இதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது: ''பெரு மளவில் அணு குண்டுகளைப் பயன்படுத்தினால் அவை எந்த ஒரு அரசின் சகலவித இராணுவ முயற்சிகளையும் ஒன்றுமில்லாததாக ஆக்கு வதோடு கூட அதன் சமூக, பொருளாதாரக் கட்டமைப்பை அழிக்கும், நீண்ட காலத்திற்கு இதைப் புனரமைக்க இயலாதவாறு செய் யும்''[87]. இக்கமிட்டியின் புதிய ஆராய்ச்சி, 1947 மார்ச்சில் இராணுவ அமைச்சர் பாட்டர்சன் ஐசன்ஹோவருக்கு ''யுத்தத்தை நடத்துவதற்காக அணு சக்தியை மட்டற்று பயன்படுத்துவதை முன்னனுமானிக்கும் கொள் கையைக் கடைப்பிடிக்குமாறு''[88] சுட்டிக் காட்டியதை அடிப்படையாகக் கொண்டிருந் தது. சோவியத் யூனியனுக்கு எதிராக ஒரு

யுத்தம் மூண்டால் அமெரிக்கா பெறப்போகும் ''தீர்மானகரமான'' மேம்பாட்டின் வெளிப் பாடுதான் அணு குண்டு என்று இராணுவத் தலைவர்களின் மத்தியில் தோன்றிய உறுதியும் இந்த முடிவிலிருந்துதான் தோன்றியது.

1947 ஆகஸ்டு இறுதியில் படைத்தலைமை யகத் தலைவர்களின் கூட்டு கமிட்டியின் திட்டத் துறையினர் ''பின்செர்'' திட்டத்தை மறுபரிசீலனை செய்து ''புரோய்லர்'' எனும் புதிய திட்டத்தை தீட்டினர். முந்தைய திட்டத்தோடு ஒப்பிடுகையில் இதில் ஒரு முக்கிய ''மாற்றம்'' அடங்கியிருந்தது. அமெ ரிக்க இராணுவ சித்தாந்தத்தில் ''வான்-அணு ஆயுதப்'' போர்த்தந்திரம் இறுதியாக வெற்றிக் கொடி நாட்டியதை இது காட்டியது. முந்தைய திட்டத்தைப் போன்றே இதுவும் சோவியத் யூனியனுக்கு எதிராகப் போர்த் தந்திர வான்-அணு ஆயுதத் தாக்குதலைத் தொடுப்பதை முன்னனுமானித்தது. இதன் வெற்றி இந்தத் தாக்குதலின் ஆரம்பக் கட்ட முடிவுகளைப் பொறுத்திருந்தது. அணு குண்டி னுடைய செயல்வன்மையின் வெற்றியில் முழு உறுதி தெரிவிக்கப்பட்டது.

''பின்செர்'' திட்டம் சோவியத் யூனியனின் இராணுவ உள்ளாற்றலை மட்டான அளவிற்கு அழிக்கத் தீர்மானித்தது என்றால் (இதுதான் அப்போது முக்கிய லட்சியமாக இருந்தது) ''புரோய்லர்'' திட்டம் கணிசமான அளவு முன் சென்றது: கிழக்கு ஐரோப்பாவை ''விடுவிக்கவும்'' சோவியத் யூனியனை சரண

டைய வைக்கவும் திட்டமிடப்பட்டது; அணு குண்டைப் பயன்படுத்தி நடத்தப்படும் நடவடிக்கையின் ஆரம்பக் கட்டத்தையடுத்து உடனடியாக இது நடைபெற வேண்டும். ''புரோய்லர்'' திட்டத்திற்கும் முந்தைய திட்டத்திற்கும் இடையிலிருந்த இன்னொரு வேறுபாடு, புதிய திட்டத்தில் கணிசமான அளவு அரசியல் நோக்கங்களுக்கு ஏற்ப சோவியத் யூனியனில் இலக்குகள் தேர்ந்தெடுக்கப்பட்டதாகும். ''சோவியத் அரசின் அரசியல், அரசாங்க, நிர்வாக, தொழில்நுட்ப, விஞ்ஞான அங்கங்களின் மீது'', குறிப்பாக ''நகரங்களில் உள்ள முக்கிய அரசாங்க, நிர்வாக உறுப்புகளின் மீது''[89] முதலாவதாகத் தாக்குதலைத் தொடுக்கத் திட்டமிடப்பட்டது.

இவ்வாறாக, சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்தில் அணு ஆயுதம்தான் முக்கிய சாதனம் என்ற ஒரு கருத்து அமெரிக்க ஐக்கிய நாட்டின் இராணுவ-அரசியல் தலைமையின் சிந்தனையில் உறுதியாகப் புகுந்ததைப் புதிய திட்டம் நிரூபித்தது.

இவையெல்லாம் இருந்தும், அமெரிக்கப் போர்த்தந்திரவாதிகளே ஒப்புக்கொண்டபடி ''புரோய்லர்'' திட்டத்தில் ஒரு அடிப்படைக் குறை இருந்தது: சோவியத் யூனியன் எப்போது அணு குண்டைக் கண்டுபிடிக்கும் என்ற கேள்விக்கு இதனால் பதிலளிக்க இயலவில்லை. இக்கேள்வி 1945இலிருந்து அமெரிக்க அரசியல் மற்றும் இராணுவத் தலைமையின் எல்லா மட்டங்களிலும் எதிரொ

லித்தது. எது எப்படியிருப்பினும் அமெரிக்க ஏகபோகம் 1956ஆம் ஆண்டு வரை ''அல்லது அதற்குப் பின்னரும் கூட'' நிலைத்திருக்குமென திட்டம் தீட்டியவர்கள் கருதினர்.

ருஷ்யர்கள் எப்போது அணு குண்டைக் கண்டுபிடிப்பார்கள் என்பதை நிலைநாட்ட 1947ஆம் ஆண்டின் இறுதியில் மத்திய ஒற்றாடல் ஸ்தாபனமும் (சி.ஐ.ஏ.) அரசுத் துறையும் அணு சக்தி கமிஷனும் தம் பங்கிற்கு ஒரு முயற்சியை மேற்கொண்டன. நீண்ட முயற்சிகளுக்குப் பின் இவை, 1953ஆம் ஆண்டிற்கு முன் ருஷ்யர்களால் அணு குண்டைக் கண்டுபிடிக்க முடியாதென்றும் நிச்சயமாக 1951ஆம் ஆண்டிற்கு முன் இதைச் செய்ய முடியாதென்றும் முடிவும் செய்தன. முதல் கட்டத்தில் சோவியத் யூனியனால் மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளில் ஆண்டொன்றிற்கு எட்டு முதல் பதினைந்து குண்டுகள் வரையிலும் பின்னர் ஆண்டிற்கு ஒன்று அல்லது இரண்டு குண்டுகளையும் உற்பத்தி செய்ய முடியுமென்றும் ஆராய்ச்சி முடிவுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த மதிப்பீடு அமெரிக்காவில் மிகவும் கௌரவமான ஒரு மதிப்பீடாகக் கருதப்பட்டது. ஆராய்ச்சியில் ஓரளவு திட்டவட்டமான தேதி குறிப்பிடப் படாதது இராணுவ-அரசியல் தலைமையைக் கவலைக்குள்ளாக்கவில்லை. கூடிய விரைவில் சோவியத் யூனியனால் அணு குண்டை உற்பத்தி செய்ய முடியாது என்ற கூற்றே அதற்கு முற்றிலும் போதுமானதாயிருந்தது.

அணு ஆயுத ஏகபோகம் நீண்ட காலத்திற்கு நீடிக்கும் என்ற நம்பிக்கை 1947ஆம் ஆண்டின் இறுதியில் அமெரிக்க ஆளும் வட்டங்களில் கோலோச்சியது. பே. பாருஹ் ''வெற்றிகர மான ஆயுதம்'' என்று குறிப்பிட்டாரே அதை வைத்திருந்ததால் வாஷிங்டன் விரும்பியபடி அமெரிக்க அதிகாரத்திற்குக் கட்டுப்படும் படியோ, அணு ஆயுதங்களின் விஷயத்தில் பாரபட்சமான நிபந்தனைகளில் ''சர்வதேச கண்காணிப்பிற்கு'' உடன்படும்படியோ சோவி யத் யூனியனை நிர்ப்பந்திக்க இயலவில்லை. தன்னிடம் மட்டும் அணு ஆயுதம் இருந்தது, சோவியத் எதிர்ப்பு, மேலாதிக்கவாத பேராசை கள், மற்ற மக்களினங்களின் வாய்ப்புகள் பால் வழக்கமான அலட்சியப் போக்கு— இவையனைத்தும் அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமையின் கண்களைக் குருடாக்கி நிலவரத்தை நிதான புத்தியோடு மதிப்பிட இடையூறு செய்தன.

1948ஆம் ஆண்டின் துவக்கத்தில் இராணுவ-அரசியல் தலைமை சோஷலிச நாடுகளின் மீதான நிர்ப்பந்தத்தைப் பலப்படுத்த முயலும் முகமாக கம்யூனிசத்தைப் ''பின்தள்ளும்'' பல்வேறு வழிமுறைகளைத் தேடியது. இத் தகைய ''முயற்சிகளின்'' விளைவாய் அது அணு ஆயுத உற்பத்தியை விரிவுபடுத்த முடிவு செய்தது.[90] இந்த முடிவில் வாஷிங்டனின் இராணுவ வெறிக் கொள்கை, அணு ஆயுத மிரட்டல் கொள்கை கண்ணாடியில் பிரதிபலிப் பதைப் போல் பிரதிபலித்தது. இதன்

அடிப்படையில், 1948ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அணு ஆயுதத்தை ஏந்திச் செல்ல வல்ல 31 குண்டு வீச்சு விமானங்களை வைத்திருந்த வான்படைத் தலைமை 1949 நவம்பர் வாக்கில் 120 B-29 ரக குண்டு வீச்சு விமானங்களைப் பெறத் திட்டமிட்டது. அணு சக்தி கமிஷன் அணு குண்டுகளை உற்பத்தி செய்யும் பிரிகேடுகளின் எண்ணிக்கையை 1949 ஜூன் வாக்கில் மூன்றிலிருந்து ஏழாக உயர்த்துவதென முடிவு செய்தது.[91] பேரழிவு ஆயுத உற்பத்தியில் ஏற்பட்ட ''முன்னேற்றம்'' அமெரிக்கப் பாதுகாப்பிற்கான நிபந்தனையற்ற உத்திரவாதமாகத் தோன்றியது. நாட்டில் சோவியத் எதிர்ப்பு வெறியும் போர் வெறியும் மூட்டிவிடப்பட்டன. ஜனாதிபதியின் முடிவிற்கேற்ப வான்படை சம்பந்தமான பிரச்சினைகளைப் பற்றிய கமிஷன் தோற்றுவிக்கப்பட்டது. 1948 பிப்ரவரியில் படைத் தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்திற்காக போர்த்தந்திரப் பொருட்களைச் சேமிக்கும் திட்டத்தை ஆமோதித்தது. 1948 ஜனவரியில் கிவெஸ்டில் (புளோரிடா மாநிலம்) நடைபெற்ற படைத்தலைமையகத் தலைவர்களின் மகாநாட்டில் சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தத்தின் வாய்ப்பைப் பற்றிய பிரச்சினை கருத்து மாறுபாடுகளைத் தோற்றுவிக்கவில்லை. மாறாக மகாநாட்டில் பங்கேற்றோர் அசாதாரண கருத்தொற்றுமையை வெளிப்படுத்தினர். இதன் விளைவாய் ''கிரா

பெர்'' எனும் சங்கேதப் பெயரில் சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தம் பற்றிய ''குறுகிய கால அவசரத் திட்டம்'' ஆமோதிக் கப்பட்டது.

இந்தக் கடைசித் திட்டத்திற்கும் முந்தைய திட்டங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்னவெனில், இக்கடைசித் திட்டம், எந்த ஒரு தருணத்தில் வேண்டுமானாலும் யுத்தம் துவங் கலாம், திடீரென தாக்குதல் தொடுத்தால் தடுப்புக் கட்டம் மிகச் சிறியதாக இருக்கும், அல்லது இருக்கவே இருக்காது என்பதை ஆதாரமாகக் கொண்டிருந்தது ஆகும். அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவதன் மீது இன்னமும் அதிகமான அழுத்தம் தரப்பட்டது.

1948 மார்ச்சில் தேசியப் பாதுகாப்புக் கவுன்சில் தனது சொந்த முன்முயற்சியின் பேரில் முப்படைகளின் படைத்தலைமைகள், அரசுத் துறை, சி.ஐ.ஏ. ஆகியவற்றின் பங் கேற்போடு அமெரிக்கப் போர்த்தந்திரத்தை மறுபரிசீலனை செய்வதில் இறங்கியது. NSC-7 என்று அறியப்படும் ஆவணத்தில்தான் (''சோவி யத் யூனியனின் தலைமையிலான உலக கம்யூனிசத்தின் பால் அமெரிக்க ஐக்கிய நாட்டின் கொள்கை'') ''கெடுபிடி யுத்தம்'' என்ற வார்த்தை நிர்வாகத்தினரால் முதன்முத லாகப் பயன்படுத்தப்பட்டது.[92] இந்த ஆவணம் சோவியத் யூனியனைப் ''பின்தள்ளுவதற்காக'' அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சக்திகளை மேற்கொண்டு அணிதிரட்டும் திட்டமாக அமைந்தது. ''தற்காப்பு'' போர்த்தந்திரத்தை

எதிர்த்த தேசியப் பாதுகாப்புக் கவுன்சிலின் உறுப்பினர்கள் பின்வருமாறு முன்மொழிந்த னர்: சர்வபொது இராணுவக் கல்வி முறை யைப் பயன்படுத்தி அமெரிக்கா மறு ஆயுதந் தரிக்க வேண்டும்; அணு ஆயுதத்தில் அமெரிக் காவின் மிகப் பெரும் மேம்பாட்டைத் தக்க வைக்க வேண்டும்; ''இரும்புத் திரைக்குப்'' பின்னால் உள்ள தலைமறைவு எதிர்ப்பு இயக்கங்களுக்கு ஆதரவு தரும் ஒருங்கிசைவு செயல்திட்டம் உட்பட மேற்கு ஐரோப்பா விற்கு அளிக்கப்படும் அமெரிக்க ''உதவியை'' அதிகப்படுத்த வேண்டும்; உள்நாட்டில் ''கம்யூ னிச அபாயத்தை'' ஒடுக்குவதற்காக நடவடிக் கைகளைத் திட்டமிட வேண்டும். நடைமுறை யில் இந்த ஆணை, உள்ளிருந்தே சோஷலி சத்தை சீர்குலைத்தல் மற்றும் சொந்த நாட்டின் உள்ளிருக்கும் முற்போக்கு சக்திகளின் மீதான தாக்குதல் எனும் செயல்தந்திரத்திற்கு அமெரிக்கா இறுதியாக மாறியதைக் குறித்தது.

பெர்லின் நெருக்கடி சமயத்தில், சோவியத் தரப்பிற்கு ஆக்கிரமிப்பு நோக்கங்கள் இல்லை யென்று மாஸ்கோவிலிருந்த அமெரிக்கத் தூதரகமும், ஏன் சி.ஐ.ஏ.வும் கூட நிர்வாகத் திற்குத் தெரிவித்தபோதிலும் அமெரிக்காவில் புதிய போர் வெறி அலை பொங்கியது.[93] சோவியத் யூனியனுடன் யுத்தம் மூண்டால் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மறு பரிசீலனை செய்யும்படி ஜனாதிபதி ட்ரூமன் படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டிக்கு கட்டளையிட்டார். கிட்டத்தட்ட

இதே நேரம், ஏப்ரலில், யுத்தம் மூண்டால் அமெரிக்க குண்டு வீச்சு விமானங்களை பிரிட்டிஷ் தீவுகளுக்கு கொண்டு வரும் பிரச்சினை பிரிட்டிஷ் பிரதிநிதிகளுடன் விவாதிக்கப்பட்டது. பேச்சுவார்த்தைகளின் விளைவாய் விசேஷத் திட்டம் ஒன்று தீட்டப்பட்டது. இது படைப் பிரிவுகளிடையே அமெரிக்க அணு ஆயுதத்தைப் பிரித்தளிக்கத் தயாராவதை முன்னனுமானித்தது. முன்னர் நடந்தது போன்றே முப்படைகளுக்கு இடையே, யார் தலைமை தாங்குவது என்ற போட்டி தோன்றியது.

இராணுவ வெறியின் மயக்கச் சூழ்நிலையில் இராணுவ அமைச்சகம் அமெரிக்க குண்டு வீச்சு விமானங்களை பிரிட்டனில் உள்ள தளங்களுக்கு மாற்றுமாறு முன்மொழிந்தது. இது சோவியத் யூனியனின் உட்பகுதியின் மீது தாக்குதலைத் தொடுக்க உதவிகரமாக இருந்திருக்கும்,

குண்டு வீச்சு விமானங்களை இவ்வாறு இடம் மாற்றுவது ஓரளவிற்கு சோவியத் யூனியனை மிரட்டுவதாக இருந்திருக்கும், ஏனெனில் B-29 ரக குண்டு வீச்சு விமானங்கள் நவீன அணு குண்டுகளுக்கேற்ப இன்னமும் மாற்றியமைக்கப்படவில்லை; நிச்சயமாக இது பெரும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. என்றாலும், ''உடனடியாகப் பயன்படுத்துவதற்காக பிரிட்டனிலும் இன்னும் வேறு எங்காவதும் ஒரு சில அணு குண்டுகளை வைத்திருப்பது'' அவசியம் என்றும் ''இவற்றைப்

பயன்படுத்துவதைப் பற்றி இராணுவத்தினர் தான் முற்றிலுமாக முடிவு செய்ய வேண்டும்''[94] என்றும் தரைப்படையின் அமைச்சர் கே. ரோய் யாலின் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இவ்வாறாக 1948இல் அணு குண்டு சோவியத் யூனியனைப் பொறுத்த விஷயத்தில் வாஷிங்டனின் அரசியல் மற்றும் இராணுவப் போர்த்தந்திரத்தின் பிரதான வாதமாகியது. அதே நேரத்தில்தான் ''கெடுபிடி யுத்தத்தை'' நடத்தி வெற்றி பெறும் போர்த்தந்திரம் முறைப்படுத்தப்பட்டது. அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமை அணு ஆயுத மிரட்டலை நாடிய முதல் சர்வதேச சச்சரவாக பெர்லின் நெருக்கடி அமைந்தது; பெர்லினைச் சுற்றிய நிலவரம் கிட்டத்தட்ட சீரான போது, 1948 ஆகஸ்டில் இன்னமும் 30 B-29 ரக குண்டு வீச்சு விமானங்களை அமெரிக்கா பிரிட்டனில் கொண்டு வந்து நிறுத்தியது.

1948ஆம் ஆண்டின் இரண்டாவது பாதியில் படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி ''பிளீட்வுட்'' என்ற புதிய அவசர இராணுவ திட்டத்தைத் தீட்டத் துவங்கியது. இது சோவியத் நகரங்களின் மீதான வான் தாக்குதலிலும் சோவியத் கரையோரப் பகுதியை முற்றுகையிடுவதிலும் கடற்படைக்கு கணிசமான அளவு கூடுதல் பங்கையளித்தது. ஆனால் இத்திட்டத்தின் மிக முக்கிய அம்சம் என்னவெனில், சோவியத் யூனியனின் மீது திடீரென அணு ஆயுதத் தாக்குதலைத் தொடுப்பதன் தீர்மானகரமான முக்கியத்துவம்

இதில் ஒளிவு மறைவின்றி ஒப்புக்கொள்ளப் பட்டிருந்ததாகும்; போர்த்தந்திரவாதிகளின் கணிப்பின்படி இது நீண்டகால சாதாரண யுத்தத்தைத் தவிர்க்க உதவ வேண்டும்.[95] அமெரிக்க ஆளும் வட்டங்களில் அதிகரித்து வந்த சோவியத் எதிர்ப்பு வெறியைப் பிரதி பலித்த ''பிளீட்வுட்'' திட்டம் 133 குண்டு களைக் கொண்டு ஒரே நேரத்தில் பெருமளவுத் தாக்குதலைத் தொடுப்பதன் மூலம் 70 சோவியத் நகரங்களை அழிக்கத் திட்டமிட் டது. வாஷிங்டனின் கணிப்பின்படி இத்தகைய தொரு குண்டு வீச்சு சோவியத் யூனியனின் எஞ்சிய மக்களின் மீது திகைப்பூட்டும் ஒரு மனநிலை தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

''பிளீட்வுட்'' திட்டம் உடனடியாக படைத் தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி யால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேற்றத்திற்காக 1948ஆம் ஆண்டு செப்டெம்பர் 1ந் தேதி முப்படைகளின் படைத்தலைமையகங்களுக்கு அனுப்பப்பட்டது.

பெர்லின் நெருக்கடிக்குப் பின் அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமையின் சிந்தனையில் அணு குண்டும் இதைப் பயன்படுத்துவதோடு தொடர்புடைய எதிர்பார்ப்புகளும் ஆதிக்கம் செலுத்தின என்பதற்குப் போதுமான விஷயங் கள் உள்ளன. உதாரணமாக, **நேட்டோவை** உருவாக்குவது பற்றி 1948 ஜூலையில் லண்டனில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட பிரதிநிதிகளுக்கு தேசியப் பாதுகாப்புக் கவுன்சிலால் அனுப்பப்பட்ட

ஆணையில், யுத்தத்தில் அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவது சம்பந்தமாக அமெரிக்க கொள்கையையோ திட்டங்களையோ ஒரு குறிப்பிட்ட காலம் வரை வெளிப்படுத்தக் கூடாதென கூறப்பட்டிருந்தது.[96] ஐரோப்பா வில் அமெரிக்க உத்திரவாதங்களின் முக்கிய அம்சம் அணு குண்டில்தான் உள்ளது என்று அறிவிக்க வாஷிங்டன் நிர்வாகம் கொண்டிருந்த முடிவைப் பேச்சுவார்த்தைகள் தெளிவாக வெளிப்படுத்தின. பாருஹின் வரையறுத்தபடி அணு குண்டுதான் ''ஐரோப்பிய ஆயுதத் தளவாடங்களில் நமது முக்கிய ஆயுதமாகும்''[97].

1948 செப்டெம்பரில் ஆமோதிக்கப்பட்ட NSC-30 ஆணை, மேற்கு ஐரோப்பாவில் அமெ ரிக்கத் திட்டங்கள் (இதன் பொருளாதாரப் புனரமைப்பு உட்பட) அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவதை அல்லது இதைப் பயன்படுத்து வதாக அச்சுறுத்துவதை ஆதாரமாகக் கொண் டுள்ளன என்பதை ஊர்ஜிதப்படுத்தியது.[98] ''தேவையெனில் தனக்கு எதிராக அணு ஆயுதத்தைப் பயன்படுத்தாமல் இருப்பதைப் பற்றி அமெரிக்கா சிந்திக்கக் கூடும் என்று கருத மிகச் சிறு வாய்ப்பு கூட சோவியத் யூனியனிடம் எப்போதுமே தோன்றாமலிருக் குமாறு''[99] அமெரிக்கா இயங்க வேண்டுமென அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

சோவியத் யூனியனுக்கு எதிராக யுத்தம் மூண்டால், சோவியத் யூனியனைச் சரணடை யுமாறு செய்வதற்காக முதலாவதாக அணு ஆயுதத்தைப் பயன்படுத்த அமெரிக்கா தயார்

என்பதை NSC-30 ஆணை ஊர்ஜிதப்படுத்தியது.

## 2. சோவியத் யூனியனுக்கு எதிரான தடுப்பு அணு ஆயுத யுத்த திட்டங்களின் பரிணாம வளர்ச்சி

1949ஆம் ஆண்டு ''டிராப்ஷாட்'' எனும் பெயரில் சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தம் பற்றிய அடுத்த திட்டம் (இந்த யுத்தத்தை 1957இல் துவங்கத் திட்டமிடப்பட்டது. —ஆ-ர்.) படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டியிலிருந்து வந்தது. எதிர்காலத்தில் அரசியல் மற்றும் இராணுவ சம்பவங்களின் வளர்ச்சியைப் பற்றி முன்னறிவிக்க இதில் முயற்சி செய்யப்பட்டது. சோவியத் யூனியனை விட அமெரிக்கா அணு ஆயுத மேன்மையை நிரந்தரமாகத் தக்க வைக்கும் உறுதியில்தான் பிரதான ''முன்னறிவிப்பு'' அடங்கியிருந்தது.

''சாரியடீர்'' எனும் சங்கேதப் பெயரின் கீழ் வான்படையால் உருவாக்கப்பட்ட ஆவணம் திட்டத்தோடு சேர்க்கப்பட்டிருந்தது. 1957ஆம் ஆண்டு வாக்கில் சோவியத் யூனியனிடம் ஒரு சில அணு குண்டுகள் இருக்கலாமென இதில் குறிப்பிடப்பட்டிருந்தது; ஆனால் விகிதம் அமெரிக்காவிற்கு ஆதாயமாக 10:1 என்று இருக்குமென்றும் தமது அணு ஆயுதங்களின் தரம் முற்றிலுமாக மேலோங்கியிருக்குமென்றும் இத்திட்டத்தைத் தீட்டியவர்கள்

கருத்து தெரிவித்தனர். ‘‘பேரழிவு ஆயுதத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படும் அறிவுக்கெட்டாத தீய விளைவுகளைப் பொருட்படுத்தாது, இயன்ற அளவு விரைவாகவும் எதிர்ப்பிற்கான வாய்ப்புகளை ஒடுக்க அவசியமான அளவுகளிலும் இந்த ஆயுதத்தைப் பயன்படுத்த வேண்டும்’’ என இத்திட்டம் எடுத்துரைத்தது. படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டியின் விசேஷ வேண்டுகோளின்படி தேசியப் பாதுகாப்புக் கவுன்சில் அமெரிக்க உள்நாட்டு அரசியல் நிலவரத்தை மதிப்பிட்டு, விசுவாசமற்றவர்கள் என்று சந்தேகிக்கப்படும் அமெரிக்கர்களைப் பெருமளவில் கைது செய்யும்படி முன்மொழிந்தது.[100]

‘‘முற்றிலும் இரகசியமானது’’ என்ற கண்டிப்பான முத்திரைகள் இருந்தும் கூட 1949ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ‘‘டிராப்ஷாட்’’ திட்டம் மற்றும் இதற்கு முன்னிருந்த திட்டங்களின் ஒரு சில கருத்து நிலைகள் பத்திரிகைகளின் கரங்களில் கிட்டின. பெண்டகனின் எந்தப் பிரதிநிதிகள் தம்முடைய படைவகையை விளம்பரப்படுத்தினார்களோ, சோவியத் யூனியனை ‘‘அச்சுறுத்த’’ விரும்பினார்களோ அவர்கள்தான் இந்தக் ‘‘கசிவிற்கு’’ ஏற்பாடு செய்தார்கள். இது சம்பந்தமான ஏராளமான செய்திகள் அமெரிக்க சஞ்சிகைகளின் பக்கங்களில் வெளியாயின.[101] இச்செய்திகள் எல்லாம் அமெரிக்க அணு ஆயுத மேன்மையை அடிப்படையாகக் கொண்டிருந்தன, முற்றிலும் எதிர்கால நம்பிக்கையுள்ள தொனியில் சம்பவங்

களின் வளர்ச்சியைச் சித்தரித்தன. 1951 இலையுதிர்க் காலத்தில் *Collier's* என்னும் சஞ்சிகை சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்த திட்டத்தை விவரித்தது. இதன்படி அமெரிக்காவிற்கு எதிரான சோவியத் தாக்குதலைத் ''தடுப்பதற்காக'' சோவியத் அணு குண்டுகளை அழிப்பதற்காக உரால் மலைக்கு அப்பால் அமெரிக்க கப்பல் காலாட்படை வீரர்கள் பாராசூட்டுகளுடன் இறக்கப்பட்டனர்.[102]

தடுப்பு அணு ஆயுதத் தாக்குதல், நகரங்களிலுள்ள பாமர மக்களை அழிப்பது பற்றிய நெறியற்ற போர்த்தந்திரம் அப்போது அமெரிக்காவில் பரந்த அளவில் கண்டிக்கப்படவில்லை என்றும் கவலை தெரிவிக்கும் தனிப்பட்ட கருத்துகள் மட்டுமே எடுத்துரைக்கப்பட்டன என்றும் அமெரிக்க நிபுணர்கள் சுட்டிக் காட்டினர். உதாரணமாக, அணு சக்தி கமிஷனின் தலைவராகிய டே. லில்லியென்தால், அணு குண்டு ஒழுக்கநெறியின் அடிப்படைகளை அழிக்கிறது என்றும் ''மனிதன் எந்தக் காட்டிலிருந்து வந்தானோ அதே இடத்திற்கு அவனைப்'' பின்னுக்குத் தள்ளுகிறது... ''யுத்தத்தின் எல்லா நீதிநெறி கட்டுப்பாடுகளும் மறைந்தன''[103] என்றும் தன் நாட்குறிப்பில் எழுதினார்.

1949 ஜனவரியில் படைத்தலைமையகங்களின் தலைவர்கள், அணு குண்டுகளின் உற்பத்தியைக் கணிசமாகவும் இடையறாதும் அதிகரிக்க வேண்டுமென அணு சக்தி கமிஷனுக்குத் தெரியப்படுத்தினார்கள். அமெரிக்காவின் போர்த்தந்திர தேவை (படைத்தலைமையகத் தலைவர்களின்

கூட்டு கமிட்டியின் ஒப்புதலின்படியே இது அணு ஆயுதத்தைப் பெருக்கும் அவசியத்தை ஏற்படுத்த வில்லை) இதன் முக்கிய நோக்கமாக இருக்க வில்லை, மாறாக மேம்பாட்டு நிலையைத் தக்கவைக்கும் முயற்சிதான் முக்கிய நோக்கமாக இருந்தது. ஜனாதிபதி ட்ரூமன் அணு ஆயுதத்தின் மீது அளவிற்கதிகமாக நம்பிக்கை வைத்திருப் பதாக லில்லியென்தால் கவலை தெரிவித்தார்; ''அணு குண்டுதான் பிரதான ஆதாரம் என்றும் இதுதான் தன்னிடம் உள்ள எல்லாம்''[104] என்றும் ஜனாதிபதி கூறினார்.

1949 ஏப்ரலில் பட்ஜெட் காரியாலயத்தின் இயக்குநராகிய பி. பேய்ஸ் ஜனாதிபதிக்கு ஒரு அறிக்கையை அனுப்பினார். வான்-அணு ஆயுதப் போர்த்தந்திரத்தை நிபந்தனையின்றி ஆமோதிப் பதானது சோவியத் யூனியனை நிபந்தனையற்று சரணடையச் செய்யும் பொருட்டு யுத்தத்தில் அணு ஆயுதத்தை முழு அளவில் பயன்படுத்து மாறு ஜனாதிபதியை நிர்ப்பந்திக்கும் என்று அதில் எச்சரிக்கப்பட்டிருந்தது. இந்தப் போர்த் தந்திரம் அரசியல் மாற்றுகளைத் தேடுவதைத் தவிர்த்தது என்று பேய்ஸ் சுட்டிக் காட்டினார். பாமர மக்களை அழிப்பதானது எதிரியை மேலும் உக்கிரப்படுத்தி, எவ்வித ஒப்பந்தங்களையும் இயலாததாக ஆக்கியது. இந்த அறிக்கைக்குப் பின் ஜனாதிபதி வான்படைத் தலைமையிடம் அதன் யுத்த திட்டங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரினார். ''டிரயான்'' எனும் திட்டத்தைப் பற்றி அவருக்குத் தெரிவித்தார்கள். இது பேய் சின் கருத்தை ஊர்ஜிதப்படுத்தியது. ஐரோப்பிய

தளங்களில் இருந்து B-29, B-50 ரக விமானங்களின் மூலமும் அமெரிக்கப் பரப்பிலிருந்து B-36 ரக விமானங்களின் மூலமும் சோவியத் நகரங்கள் மற்றும் தொழில்துறை நிறுவனங்கள் மீது முழு அளவிற்கு அணு குண்டுத் தாக்குதலைத் தொடுக்க இத்திட்டம் முன்மொழிந்தது. இத் திட்டத்தைத் தீட்டியவர்களின் கணிப்பின்படி குண்டு வீச்சின் விளைவாய் 30 லட்சம் முதல் 50 லட்சம் வரையிலான சோவியத் மக்கள் மாள வேண்டும், 2 கோடியே 80 லட்சம் வரை யிலானோர் வீடுவாசல்களை இழக்க வேண்டும்.

1949 கோடையில் படைத்தலைமையகத் தலை வர்களின் கூட்டு கமிட்டி சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தம் பற்றி ''ஓப்தேக்கல்'' எனும் புதிய அவசரத் திட்டத்தை தீட்டுவதில் இறங்கி யது. இத்திட்டம் ''பிளீட்வுட்'' திட்டத்திற்கு மாற்றாக அமைந்தது. அமெரிக்கத் தரப்பிலிருந்து யுத்தத்தை நடத்த அணு ஆயுத பிளீட்ஸ்கிரிக் மட்டுமே ஒரே சாதனமாக இருக்குமென்பதை இது ஆதாரமாகக் கொண்டிருந்தது. ஐரோப் பிய பரப்பிலிருந்தும் சோவியத் யூனியனுக்கு எதிராக அணு ஆயுதம் பயன்படுத்தப்படுமென திட்டத்தில் கூறப்பட்டிருந்தது. 1949 ஆகஸ்டு இறுதியில் படைத்தலைமையகத் தலைவர்கள் தேசியப் பாதுகாப்புக் கவுன்சிலுக்கு ஒரு ஆணை யின் நகலைச் சமர்ப்பித்தனர். இது ஐரோப்பா வில் அமெரிக்கா முதலாவதாக அணு ஆயுதத் தைப் பயன்படுத்துவதற்கு அனுமதியளித்தது. இது ஆமோதிக்கப்பட்டு NSC-57 ஆவணம் எனும் பெயரைப் பெற்றது. ஐரோப்பாவின் மீதான

''அணு ஆயுதக் குடை'' (இது அமெரிக்க அணு ஆயுத ஏகபோகத்தால் வகை செய்யப்படும்) எனும் கருத்தமைப்பு முதன்முதலாக இதில் வடிவமைக்கப்பட்டிருந்தது.

ஆனால் 1949 செப்டெம்பரில் நடந்த ஒரு சம்பவம் அமெரிக்கப் போர்த்தந்திரத் திட்டமிடுதலின் அடிப்படைகளையே பெரிதும் தகர்த்தது: சோவியத் யூனியன் தன் அணு குண்டு சோதனையை நடத்தியது. இதைப் பற்றிய செய்தி வாஷிங்டனில் உண்மையான அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஆனால் அகந்தை மிகு வாஷிங்டன், குறிப்பாக, அரசாங்க சேவை நிறுவனங்களின் ஆருடங்களும் கணிப்புகளும் தோல்வியடைந்ததால் அதிர்ச்சியுற்ற ஜனாதிபதி ட்ரூமனும் பாதுகாப்பு அமைச்சர் ஜான்சனும் உண்மைகளை நம்ப சிரமப்பட்டனர். சோவியத் யூனியனில் நடந்த அணு குண்டு சோதனைகளைப் பற்றிய செய்தி செப்டெம்பர் 12ஆம் தேதியே ஜனாதிபதிக்கு கிடைத்தும் கூட அவர் இதைப் பற்றி உடனடியாக அறிவிக்கத் துணியவில்லை. செப்டெம்பர் 23ந் தேதிதான் அவர் நடந்த சம்பவத்தைப் பற்றி அமைச்சரவைக்கும் நாட்டிற்கும் அறிவித்தார். லில்லியென்தாலின் கணிப்பின்படி சோவியத் அணு ஆயுத சோதனை ''நிலவரத்தை அடியோடு மாற்றியது''[105]. சோவியத் யூனியனின் வாய்ப்புகளைக் குறைத்து மதிப்பிட்டதுதான் அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமைக்கு மிகவும் அதிர்ச்சியூட்டுவதாக அமைந்தது.[106]

கம்யூனிசத்தைப் ''பின்தள்ளுதல்'' மற்றும்

சோவியத் யூனியனின் மீது ''திடீர் அணு ஆயுதத் தாக்குதலைத் தொடுப்பது'' பற்றிய தனது கருத்தமைப்புகள் ஆதாரமற்றவைகளாக மறுபரிசீலனை செய்யும் வாய்ப்பு அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமையின் முன் தோன்றியது. தண்டனையின்றி தப்பும் காலமும் ''வாய்ப்புகளிலிருந்த ஆண்டுகளும்'' பழமையாகி வந்தது தெளிவாயிற்று. இதுதான் பல ஆண்டு கள் முன்னராகவே அமெரிக்க ஐக்கிய நாட்டின் அரசியலை நிர்ணயித்த விஷயத்தை முடிவு செய் வதற்கு அனுகூலமான தருணமாக இருந்தது. ஆனால் நாட்டை வேறொரு பாதையில் இட்டுச் செல்லவும் புதிய யதார்த்தங்களைக் கணக்கில் கொள்ளவும் வல்ல செல்வாக்கு மிக்க சக்திகள் அமெரிக்காவில் கிடைக்கவில்லை. ''சோவியத் அபாயம்'' எனும் சாக்கின் கீழ், ''தேசியப் பாதுகாப்பின்'' பெயரால் அணு ஆயுதத்தை இடையறாது பெருக்குவது சோவியத் யூனிய னிடம் எத்தகைய ஒரு எதிர்ச் செயலைத் தோற்றுவிக்கும் என்பதைப் பற்றி யாருமே யோசிக்கவில்லை.

குறுகிய நோக்கம், அகம்பாவம் இவற்றோடு சேர்ந்து மேலாதிக்கவாதம், கம்யூனிச எதிர்ப்பு ஆகியன அமெரிக்க ஆளும் வர்க்கத்தை ஆயுதப் போட்டிப் பாதைக்கும் மாயையான மேம்பாட் டிற்கான போட்டிக்கும் தள்ளின. சோவியத் யூனியன் அணு ஆயுதத்தைச் சோதித்ததற்கான அமெரிக்க நிர்வாகத்தின் முதல் எதிர்ச் செயலே தோன்றியுள்ள புதிய யதார்த்தங்களை அது கவனத்தில் கொள்ளவில்லை என்பதற்கு

சான்று பகர்ந்தது. ''நாம் இப்போது ருஷ்யர்களுடன் போட்டியிடும் நிலையில் இருக்கின்றோம்''[107] என்று ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவித்தார். ''சூப்பர்'' எனும் ஹைட்ரஜன் குண்டை உருவாக்கும் திட்ட நகல் உடனடியாகப் புனரமைக்கப்பட்டது. பௌதீக விஞ்ஞானிகளாகிய ஏ. தேல்லெரும் எ. லோவுரென்சும் இதில் குறிப்பான அக்கறை செலுத்தினர், செனட்டர் பி. மாக்மாகோனும் அணு சக்தி கமிஷனின் புதிய தலைவராகிய லி. ஸ்டிராவுசும் இவர்களுக்குத் தீவிர ஆதரவளித்தனர். அதே பொழுது, ஹைட்ரஜன் குண்டை உற்பத்தி செய்யும் வாய்ப்புகள் மற்றும் இதன் விளைவுகளைப் பற்றி ஆராய்வதற்காக 1949 அக்டோபர் இறுதியில் அணு சக்தி கமிஷனின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட பிரதான நிபுணர் கமிட்டியில் இடம் பெற்றிருந்த பெரும்பாலான விஞ்ஞானிகள் இதைத் தோற்றுவிப்பதற்கு எதிராக இருந்தனர். ஆனால் விஞ்ஞானிகளின் கருத்துகள் இராணுவ-அரசியல் தலைமையின் தீர்மானங்களின் மீது எவ்வித நடைமுறை ரீதியான செல்வாக்கையும் செலுத்தவில்லை. ''சூப்பர்'' திட்டம் ''இன அழிவு ஆயுதம்'' என்ற பெயரைப் பெற்றது.

அரசுத் துறையின் உள்ளும், பதவியிலிருந்து ஒய்வு பெற்ற கென்னனுக்கும் கொள்கை திட்டமிடும் பிரிவின் இயக்குநராக இப்பதவியில் அவரை மாற்றிய நித்செவிற்கும் இடையே ''சூப்பர்'' திட்டம் பற்றி விவாதம் எழுந்தது. நித்செ ஹைட்ரஜன் குண்டைத் தோற்றுவிக்கும் கருத்தை முழுவதுமாக ஆதரித்தார். ஆனால்

கென்னன் அணு ஆயுதம் பற்றிய அமெரிக்க கொள்கையில் ''தூய்மையான, நேர்மையான கோட்பாட்டிற்கு'' அறைகூவல் விடுத்தார். அவருடைய கருத்தின்படி, முதலாவதாக அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவதில்லை என்ற மறுப்பும் இதன் மீதான சர்வதேச கண்காணிப்பை ஏற்பாடு செய்வதற்கான தீவிர முயற்சிகளுக்குத் திரும்பி வருவதும் இக்கொள்கையில் அடங்கியிருக்கும்.[108]

*1949* இலையுதிர்க் காலத்தில் படைத்தலைமையகத் தலைவர்கள் ஹைட்ரஜன் குண்டு யுத்த ஆயுதம் என்பதை விட இது சர்வபொது அழிவிற்கான ஒரு கருவி என்ற முடிவிற்கு வந்தனர். ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் (1950 ஜனவரி) அணு குண்டுகளின் உற்பத்தியைப் பெருக்குவதன் அவசியத்தை ஆதாரப்படுத்திய படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி எதிர்கால இராணுவ தேவைகளுக்காக ஹைட்ரஜன் குண்டைப் பற்றி குறிப்பிடக் கூட இல்லை. ஹைட்ரஜன் குண்டைப் பயன்படுத்துவதை நியாயப்படுத்தக் கூடிய வகையில் சோவியத் யூனியனில் 4 இடங்கள் மட்டுமே உள்ளன என்று கூட்டு கமிட்டி கருதியது. ஆனால் சொந்த தர்க்கத்திற்கு மாறாக, அனேகமாக வெள்ளை மாளிகையின் மனநிலைகளுக்கு இணங்கி இக்கமிட்டி, ஹைட்ரஜன் குண்டிடம் தேர்ந்தெடுத்து இயங்கும் தன்மை இல்லாததில், அதாவது இத்தகைய குண்டு பெரும் அழிவுகளை ஏற்படுத்தக் கூடும் என்பதில் அதன் ''மேன்மைகளைத்'' திடீரென கண்டுபிடித்தது. எனவே

தான் கூட்டு கமிட்டியின் தலைவராகிய ஜெனரல் பிரெட்லி, சோவியத் யூனியனின் மீதான ஹைட்ரஜன் குண்டின் மனநிலை தாக்கம் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று அறிவித்தார். மனநிலை ரீதியான மேம்பாட்டை அடைவது ஹைட்ரஜன் குண்டைப் பிரச்சாரம் செய்த இராணுவத்தினரின் பிரதான நோக்காகியது.

சோவியத் யூனியனுக்கு எதிரான தடுப்பு யுத்தம் பற்றிய கருத்து இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் அமெரிக்க போர்த்தந்திரத் திட்டங்களில் முக்கிய இடத்தைப் பெற்றது. நிச்சயமாக இது பகிரங்கமாக விவாதிக்கப்பட வில்லை, சோவியத் யூனியனின் மீதான திடீர் தாக்குதல் திட்டங்கள் முற்றிலுமாக மறைக்கப் பட்டன. அமெரிக்க ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி, இவை வெளிப்படையாக விவாதிக் கப்படவில்லை, ஏனெனில் இத்தகையதொரு தாக்குதலை எந்தத் தருணத்திலும் தொடுக்க அமெரிக்கா தயாராக இருந்தது.[109] 1946இல் பாருஹும் சிர்ல்சும் சோவியத் யூனியனுக்கு எதிராக தடுப்பு அணு ஆயுத யுத்தத்தைத் துவக்கலாமென்று படைத்தலைமையகத் தலை வர்களின் கூட்டு கமிட்டிக்கு முன்மொழிந்தனர். அணு ஆயுதத்தை சோவியத் யூனியன் விரைவி லேயே உற்பத்தி செய்யும் என்பது தெளிவாகும் போது (சோவியத் யூனியனிடம் இது தோன்று வதே அமெரிக்காவின் பாலான ஆத்திரமூட்டும் செயலாக மதிப்பிடப்பட்டது) தடுப்பு யுத்தத்தை ஒத்த அமெரிக்காவின் ஒரு சில நடவடிக்கை களை ஆராயுமாறு படைத்தலைமையகத் தலை

வர்களே பின்னால் ஜனாதிபதிக்கும் காங்கிரசிற்கும் முன்மொழிந்தனர்.

சோவியத் யூனியனில் அணு குண்டு சோதிக்கப்பட்டது தெரிய வந்த போது, 1949 செப்டெம்பரில் அணு சக்தி பற்றிய காங்கிரசின் ஐக்கியக் கமிட்டி உறுப்பினர்களும் தடுப்பு யுத்தத்தின் வாய்ப்புகளைப் பற்றி விவாதித்தனர். 1950 வசந்த காலத்தில், நித்செவால் தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் இப்பிரச்சினை மீண்டும் எழுப்பப்பட்டது: இவர் சோவியத் யூனியனுக்கு எதிரான தடுப்பு யுத்தத்தை ஒரு வாய்ப்பாக முன்மொழிந்தார். ஒரு சில செனட்டர்களும் சோவியத் யூனியனுக்கு எதிரான தடுப்பு யுத்தப் பிரச்சினையை அரசுத் துறை செயலர் ஆச்செசனுக்கு முன் வைத்தனர். ''மிகவும் காலம் தாழ்ந்து போகும் முன்னரே'' இது தேவையென அவர்கள் நேரடியாக சுட்டிக் காட்டினர். கடற்படை அமைச்சர் பி. மாத்யுசும் இராணுவக் கல்லூரியின் இயக்குநர் ஓ. அன்டார்சனும் இதே கண்ணோட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். உதாரணமாக, ட்ரூமன் நிர்வாகம் ''சமாதானத்தின் பேரால் முதல் ஆக்கிரமிப்பாளனாக ஆகுமாறு'' மாத்யுஸ் நிர்வாகத்திற்கு அறைகூவல் விடுத்தார்.

தடுப்பு தாக்குதலைப் பற்றிய கருத்து (அமெரிக்க அணு ஆயுத மேன்மையின் அடிப்படையில் இது தோன்றியது) அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமையின் உணர்வில் பல ஆண்டுகளுக்கு நிலைத்து நின்றது. அணு ஆயுத சமன்நிலையை நோக்கிய சோவியத் யூனியனின் முயற்சிகள்

அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் குறிப்பிட்ட பகுதியின் கண்களைத் திறந்தன; ஆனால் தமது சொந்த தன்னலங்களுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்ய தயாராக இருந்த மற்ற பிரதிநிதிகளை இது குறைவாகவே பாதித்தது. குறிப்பிட்ட சில கட்டங்களில் பேரரசு, மேலாதிக்கவாதப் பேராசைகளில் தொடர்ந்து சிக்கியிருக்கும் அதிசாகசவாதிகள் வாஷிங்டனின் அதிகார வட்டங்களில் செல்வாக்கு செலுத்துகின்றனர்.

அமெரிக்க அணு ஆயுத ஏகபோகமும் தண்டனையின்றி தப்பும் நிலையும் நிலவிய ஆண்டுகளில் ஒரு தடுப்பு யுத்தம் மூலம் சோவியத் யூனியனை முறியடிக்க வர்க்கப் பகைமையால் கண்ணவிழ்ந்து போயுள்ள ஏகாதிபத்தியவாதிகள் கொண்டுள்ள நாட்டத்தைப் புரிந்து கொள்ளலாம் என்றாலும் இதை நியாயப்படுத்த முடியாது. ஆனால் அமெரிக்க ஐக்கிய நாட்டையும் பழிவாங்கும் அபாயம் எதிர்நோக்கிய போது இந்நிலைகளை இவர்கள் பிடிவாதத்துடன் பின்பற்றியதைப் புரிந்து கொள்ள முடியாது. இதில் தான் அமெரிக்க ஆளும் வர்க்கத்திலுள்ள மிக ஆக்கிரமிப்பு குணமுள்ள பிரதிநிதிகளின் கடைக்கோடி அதிசாகசத் தன்மை வெளிப்படுகிறது.

ஹைட்ரஜன் ஆயுதத்தின் உற்பத்தியைத் துவங்கும் தன் முடிவை அமைச்சரவைக் கூட்டத்தில் அறிவித்த ட்ரூமன் ''ருஷ்யர்களுடன் பேரம் பேச''[110] இது தேவை என்றார். ஹைட்ரஜன் குண்டை உற்பத்தி செய்வதென்ற ட்ரூமன் நிர்வாகத்தின் முடிவு, அமெரிக்கப் போர்த்தந்திரம் மேன்மேலும் அதிகமாக அணு ஆயுதத்தை சார்ந்

திருப்பதை ஊர்ஜிதப்படுத்தியது என்று அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டனர். இந்தப் போர்த்தந்திரம் அணு ஆயுதப் போட்டியில் மேம்பாட்டு நிலையைத் தக்கவைக்கலாம் என்ற ''நொய்ந்த நம்பிக்கையையும்'' சார்ந்திருந்தது.

''சூப்பர்'' ஆயுதத்தின் உற்பத்தியைத் துவங்க முடிவெடுக்கப்பட்ட பின் ''கெடுபிடி யுத்தத்தை'' நடத்தும் கொள்கையைப் பரவலாக மறுபரிசீலனை செய்யுமாறு ஜனாதிபதி கட்டளையிட்டார். **1950** பிப்ரவரியில் படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி சில திட்ட மற்றும் வேவு ஆவணங்களை உருவாக்கியது; வளர்ந்து வரும் ''சோவியத் அபாயம்'' எனும் அம்சம் இவற்றில் பல விதங்களிலும் விவரிக்கப்பட்டது. தற்காப்பு அணு ஆயுத வாய்ப்புகள் சோவியத் யூனியனிடம் தோன்றியுள்ளதற்குப் பதிலாக நகரங்களுக்கு எதிராக அல்லாமல் அணு சக்தி மையங்கள், சோதனைக் கூடங்களுக்கு எதிராக தடுப்பு தாக்குதலைத் தொடுக்க வேண்டுமென ஒரு ஆவணத்தில் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. **நேட்டோவின்** எதிர்காலம் பற்றிய ஆணையில், மேற்கு ஐரோப்பாவைப் ''பாதுகாக்க'' அமெரிக்க அணு குண்டுகளைப் பயன்படுத்த சோவியத் அணு ஆயுத வாய்ப்புகள் தடையாக இருக்கக் கூடுமென குறிப்பிடப்பட்டிருந்தது.[111]

**1950** பிப்ரவரி இறுதியில் இராணுவ தகவல் தொடர்பு கமிட்டி (பெண்டகன் மற்றும் அணு சக்தி கமிஷனின் உயர் மட்ட ஊழியர்கள் இதில் அடங்கியிருந்தனர்) அரசாங்கத்திற்கு முற்றிலும் இரகசியமான ஒரு அறிக்கையை

அனுப்பியது. இதில், சோவியத் ''அணு ஆயுதத் தளவாடங்களும் நடப்பு உற்பத்தி வாய்ப்புகளும் அனேகமாக பலத்திலும் எண்ணிக்கையிலும் நம்மை விஞ்சியுள்ளன'' என்றும் சோவியத் ஹைட்ரஜன் குண்டு ''அனேகமாக ஏற்கெனவே உற்பத்தி செய்யப்படும் நிலையில் உள்ளது''[112] என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இதே அதிகாரிகள்தான் குறைந்தபட்சம் 1957 வரை அமெரிக்க ஐக்கிய நாடு அணு ஆயுதங்களைப் பொறுத்த மட்டில் சோவியத் யூனியனை பத்து மடங்கு விஞ்சி நிற்குமென ஓராண்டிற்கு முன் கூறினர். இப்படித்தான் அதிகரித்து வரும் சோவி யத் வாய்ப்புகளைப் பற்றிய கருத்து வளர்ந்து வரும் ''சோவியத் அபாயமாகத்'' தானாகவே மாறியது.

வாஷிங்டன் அணு ஆயுதத்தை தன்னுடைய மேலாதிக்கவாத வெளிநாட்டுக் கொள்கையின் கருவியாக ஆக்கியது. ஆனால் அணு குண்டால் பாதுகாப்பையோ, மேலாதிக்க லட்சியங்களை அடைவதையோ உத்திரவாதம் செய்ய இயல வில்லை. பலாத்காரம், சூப்பர் ஆயுதம் ஆகிய வற்றை ஆதாரமாகக் கொண்ட கொள்கை யால் இன்றைய சூழ்நிலைகளில் வெற்றியடைய இயலவில்லை. இது இகழார்ந்த தோல்விகளுக்கு இட்டுச் சென்றது.

1950 ஜூனில் அமெரிக்கா கொரியாவில் ஆக் கிரமிப்பைத் துவங்கியது. கொரிய மக்கள் ஜன நாயகக் குடியரசிற்கு எதிரான யுத்தத்திலும் சீன மக்கள் குடியரசிற்கு எதிராகவும் மொத்தத் தில் தொலை கிழக்கிலும் அணு ஆயுதத்தைப்

பயன்படுத்துவது பற்றிய அமெரிக்கத் திட்டங்கள் மிகக் குறுகிய வட்டத்திற்கு மட்டுமே தெரிந் திருந்தன. ''தன்னிடமுள்ள எந்த ஆயுதத்தை வேண்டுமானாலும்'' அமெரிக்கா பயன்படுத்தும் என்றும், தேவையான ஆயுதத்தைப் பயன்படுத் தும் முடிவை எடுக்கும் பொறுப்பு போர்க்கள கமாண்டர்களின் வசம் ஒப்படைக்கப்படலாம் என்றும் நவம்பர் 30ந் தேதி பத்திரிகையாளர் மகாநாட்டில் ஜனாதிபதி அறிவித்தார்.[113] இதற்குப் பின்னால் 1952ஆம் ஆண்டு ஜனவரி 27ந் தேதி தன் நாட்குறிப்பில் ட்ரூமன் எழுதிய குறிப்பு கொரியாவிலும் சீன மக்கள் குடியரசிற்கு எதிராகவும் அணு ஆயுதத்தைப் பயன்படுத்த அவர் கொண்டிருந்த நோக்கங்களுக்கு சான்று பகர்கிறது. ''அது சர்வபொது யுத்தத்தைக் குறிக் கும்'' என்று அவர் எழுதினார்.[114] இத்தகைய ஒரு நிலை வெளிப்படையான அணு ஆயுத மிரட்டலைக் குறித்தது. இது அமெரிக்காவின் கூட்டு நாடாகிய பிரிட்டனுக்கு கூட கவலையை ஏற்படுத்தியது.

1951 ஜனவரியில் ''சிக்கலான சர்வதேச சூழ் நிலையில் சிபாரிசு செய்யப்படும் கொள்கையும் நடவடிக்கைகளும்'' என்ற ஒரு ஆவணம் (NSC-100) ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அமெரிக்கா அணு ஆயுதத்தைப் பயன்படுத்தி தாக்குதலை மேற்கொள்ள வேண்டுமென அதில் கூறப்பட்டிருந் தது. கொரியத் தீபகற்பத்திலிருந்து அமெரிக்கத் துருப்புகளை வெளியேற்றி, அணு ஆயுதத்தைப் பயன்படுத்தி சீன மக்கள் குடியரசிற்கு எதிராக ஒன்றிணைந்த வான், கடல் யுத்தத்தை துவக்க

திட்டமிடப்பட்டது. சோவியத் யூனியனுக்கு அணு ஆயுதக் கெடு அளிக்க வேண்டுமென்றும் ஆவணத்தில் முன்மொழியப்பட்டிருந்தது. வெகு விரைவில் சோவியத் யூனியன் வேண்டுமென்றே யுத்தத்தை துவக்கும் என்ற கூற்று இம்முன் மொழிவின் அடிப்படையாக இருந்தது. NSC-100 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்த பல கருத்து களை ஐசன்ஹோவர் நிர்வாகம் எடுத்துக் கொண்டது. இந்த ஆவணம் ''பெருமளவு பழி வாங்கல்'' போர்த்தந்திரத்தையும் குடியரசு நிர் வாகத்தால் பின்பற்றப்படும் ''தூய யுத்தம்'' எனும் சித்தாந்தத்தையும் முன்னறிவித்தது. ''கெடுபிடி யுத்தத்தில்'' முன்முயற்சியைத் தக்க வைப்பதன் மீதான அழுத்தம், தரைப்படை சக்திகளுக்கு இழப்பேற்பட்டாலும் கடல் மற்றும் வான் படைகளின் பலத்தைப் பெருக்குவது, தடுப்பு அணு ஆயுதத் தாக்குதல் பற்றிய திட்டங் கள் ஆகியவற்றை ட்ரூமன் நிர்வாகத்திடமிருந்து ஐசன்ஹோவர் பெற்றார்.

வெள்ளை மாளிகைக்கு வந்த சிறிது காலத் திற்குள்ளாகவே, நிர்வாகத்தின் புதிய கருத்து நிலைகளை ஒட்டி கொரியாவில் அணு ஆயுதத் தைப் பயன்படுத்தும் பிரச்சினையை மறுபரிசீ லனை செய்யுமாறு ஐசன்ஹோவர் கட்டளையிட் டார். கொரியாவில் வெற்றி பெறுவதற்காக உலக யுத்தம் மூளும் அபாயத்தை சந்திக்க நிர்வாகம் தயாரெனில் சீன மக்கள் குடி யரசிற்கும் கொரிய மக்கள் ஜனநாயகக் குடி யரசிற்கும் எதிராகப் போர்த்தந்திர மற்றும் நடைமுறைத் தந்திர அணு ஆயுதத்தை ''தீவிர

மாகப்'' பயன்படுத்துமாறு 1953 மேயில் படைத் தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி தேசியப் பாதுகாப்புக் கவுன்சிலுக்கு சிபாரிசு செய்தது. படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டியின் சிபாரிசுகளை தேசியப் பாது காப்புக் கவுன்சில் ஒப்புக்கொண்டது. ஆனால் இரண்டு மாதங்களுக்குப் பின் கொரியாவில் சமரசம் கையெழுத்தானதால் இப்பிரச்சினை மேற்கொண்டு விவாதிக்கப்படவில்லை.[115]

1953 கோடையில் புதிய நிர்வாகத்தின் விசேஷக் குழு ''கெடுபிடி யுத்தப்'' போர்த்தந்திரத் தைப் பற்றி சொந்த ஆராய்ச்சியை (''சல்யாரி சம்'') நடத்தியது. ''பெருமளவு பழிவாங்கல்'' என்ற புதிய சித்தாந்தம் மேலாதிக்கவாத லட்சி யங்களை அடைவதற்காக அணு ஆயுத யுத்தத் தைக் கட்டவிழ்த்து விடும் நிரந்தர அபாயத்தைத் தோற்றுவித்து தக்கவைப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது ட்ரூமனிலிருந்து துவங்கி இதற்குப் பின் வந்த ஒவ்வொரு ஜனாதிபதிக்கும் படைத்தலைமையகத் தலைவர்கள் குறிப்பிட்ட நிபந்தனைகளில் அணு ஆயுத யுத்தத்தை ஆரம்பிப் பது சம்பந்தமாக முற்றிலும் தீவிரமான முன் மொழிவுகளை முன்வைத்தனர். குறைந்தபட் சம் நான்கு ஜனாதிபதிகள் முதலாவதாக அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவதோடு தொடர் புடைய, ஆழ்ந்த விளைவுகளை ஏற்படுத்த வல்ல தயாரிப்புகளுக்கு இரகசியமாக அனுமதி யளித்தனர், அல்லது ஏதாவது ஒரு நெருக்கடி யின் போது இதைப் பயன்படுத்தப் போவதாக அச்சுறுத்தினர்.[116] 1954இல் அணு ஆயுதத்தைப்

பயன்படுத்தி தியென்பியென்பூவில் பிரெஞ்சுத் துருப்புகளை முற்றுகையிலிருந்து விடுவிக்கும் பிரச்சினை அமெரிக்காவால் ஆலோசிக்கப்பட்டது என்பதற்கான சான்றுகள் நிக்சனின் நினைவுக் குறிப்புகளில் உள்ளன.[117] 1958இல் குவேமாய் தீவு சம்பந்தமாக சீனாவுடன் சச்சரவு மூண்ட நேரத்தில் நடைமுறைத் தந்திர அணு ஆயுதத்தை முழு அளவில் பயன்படுத்த தயாராகுமாறு ஜனாதிபதி ஐசன்ஹோவர் கட்டளையிட்டார்; ''லெபனான் நெருக்கடி'' என்றழைக்கப்படும் காலகட்டத்தின் போதும் 1958இல் இதே மாதிரியான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.[118] 1961இல் லாவோசில் அணு ஆயுதத்தைப் பயன்படுத்துமாறு படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி கென்னடிக்கு முன்மொழிந்தது. 1968இல் வியட்நாமில் அமெரிக்க கப்பல் காலாட்படை சுற்றி வளைக்கப்பட்ட போது இதிலிருந்து மீளுவதற்காக அணு ஆயுதத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பை ஜனாதிபதி ஜான்சன் நிராகரிக்கவில்லை. ஜனாதிபதி நிக்சனின் முன்னாள் உதவியாளர் தன்னுடைய நினைவுக் குறிப்புகளில் வியட்நாமிய யுத்தத்திற்கு முடிவு கட்டுவது சம்பந்தமான ஜனாதிபதியின் இரகசியத் திட்டங்களை அம்பலப்படுத்தினார். 1969இல் ஆட்சிக்கு வந்த நிக்சன், தான் யுத்தத்தை விரிவுபடுத்தக் கூடுமென்றும் இதில் அணு ஆயுதமும் பயன்படுத்தப்படலாமென்றும் வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் அரசாங்கத்தையும் இதன் கூட்டாளிகளையும் ஒளிவுமறைவின்றி அச்சுறுத்தினார்.[119] 1980 ஜனவரியில் ஜனாதிபதி

கார்ட்டரும் சோவியத் யூனியனுக்கு எதிராக அணு ஆயுதத்தைப் பயன்படுத்தப் போவதாக அச்சுறுத்தினார்.

கடந்த பத்தாண்டுகளில் அமெரிக்க ஜனாதிபதிகள் பன்முறை அணு ஆயுத மிரட்டல்களை நாடியுள்ளனர். இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய இருபத்தைந்து ஆண்டுகளாக அமெரிக்க ஐக்கிய நாடு அணு ஆயுத மேன்மையை நம்பியிருந்தது, எனவேதான் சமாதானத்தையும் சர்வதேசப் பாதுகாப்பையும் பேணிப் பாதுகாப்பதற்கான வேறு மாற்றுகளைத் தேடுவதன் மீது எவ்வித அக்கறையையும் காட்டவில்லை. சூப்பர் ஆயுதத்தைக் கொண்டு சகல விதப் பிரச்சினைகளையும் தீர்த்து விடலாமென்றும் உலக அரசியலின் சிக்கலான முடிச்சுகளை அவிழ்த்து விடலாமென்றும் வாஷிங்டனில் நம்பினார்கள்.

''சோவியத் இராணுவ மேம்பாட்டைப்'' பற்றிய கட்டுக்கதைகள் கிட்டத்தட்ட யுத்தத்திற்குப் பிந்தைய ஆண்டுகள் பூராவும் அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமையால் வேண்டுமென்றே இட்டுக் கட்டப்பட்டன. அமெரிக்க ஐக்கிய நாடு ராக்கெட்டுகளின் விஷயத்தில் ''பின் தங்கியுள்ளதாக'' வேண்டுமென்றே கற்பனையாக நடத்தப்பட்ட பிரச்சாரம் இதற்கான தக்க உதாரணங்களில் ஒன்றாகும். இப்பிரச்சாரம் **1958–1960**ஆம் ஆண்டுகளில் உக்கிரமமாக நடத்தப்பட்டது. இதன் போக்கில், **1961**ஆம் ஆண்டு வாக்கில் ஏதோ சோவியத் யூனியனிடம் **500** அல்லது இதற்கு அதிகமான ராக்கெட்டுகள்

இருக்கும் என்றும் இதனால் அமெரிக்க ராக்கெட் தளங்கள் மீது சோவியத் யூனியனால் திடீர் தாக்குதலைத் தொடுக்க முடியுமென்றும் ஒரு கூற்று பரப்பப்பட்டது. உண்மையில் ''சோவியத் அபாயம்'' பன்மடங்கு அதிகப்படுத்தப்பட்டது என்று பெண்டகனுக்கு நம்பத் தக்க தகவல் இருந்தும் கூட இப்பொய் பிரச்சாரத்தால் மிகைப்படுத்தப்பட்டது. சோவியத் எதிர்ப்பு பொய்யின் அடிப்படையில் ''மினிட்மென்'' எனும் 1,000 ராக்கெட்டுகளை உற்பத்தி செய்ய அமெரிக்க நிர்வாகம் முடிவு செய்தது, பயந்து போயிருந்த காங்கிரசிடம் இதற்கான நிதி ஒதுக்கீட்டைப் பெற்றது.

இதே பொய் கூச்சலின் அடிப்படையில் உலகம் முழுவதும் அமெரிக்க நடைமுறைத் தந்திர ராக்கெட்டுகளை நிறுத்த முடிவெடுக்கப்படுகிறது. ''அபாயத்தின்'' உண்மையைக் காட்டுவதற்காக நிர்வாகம் வானில் போர்த்தந்திர குண்டு வீச்சு விமானங்களின் 24 மணி நேர ரோந்திற்கு ஏற்பாடு செய்தது; இந்த விமானங்கள் ஒவ்வொன்றிலும் தலா 24 மெகாடன் பலமுள்ள 4—5 ஹைட்ரஜன் குண்டுகள் இருந்தன. ''ராக்கெட்டுகள் துறையில் பின்தங்கியிருப்பது பற்றிய பொய் சம்பந்தமாக வான்படையிலும் பெண்டகனிலும் இருந்த பல ஊழியர்கள் பெருமை கொண்டனர். நமது மேம்பாட்டு நிலையைத் தக்கவைப்பதற்கு அவசியமான ஆயுத அமைப்புகளைத் தோற்றுவிக்கப் போதுமான நிதி ஒதுக்கீடுகளைப் பெற வேறு வழியில்லையென அவர்கள் கூறினர். இது உண்மையான

ஒரு பிரச்சினையாக இருந்தது. இப்போது நம் மிடம் 'மினிட்மென்' ராக்கெட்டுகளும் B-52 ரக குண்டு வீச்சு விமானங்களும் உள்ளன.''[120]

லாபம் பெறுவதில் இராணுவ-தொழில்துறை இணையத்திற்கு இருந்த வேட்கையைத் தவிர மேற்கூறிய பொய்களுக்கு வேறு ஒரு காரணமும் உண்டு. அணு ஆயுதங்களில் சோவியத் யூனியன் சமன்நிலையை பெற விடாமல் செய்ய, அல்லது குறைந்தபட்சம் இந்த வாய்ப்பையே தள்ளி வைக்க இருந்த நாட்டம்தான் அக்காரண மாகும். இதே லட்சியத்துடன்தான் அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமை ஆயுதக் கண் காணிப்பு பற்றிய சோவியத் முன்மொழிவு களை முறையாக நிராகரித்து வந்தது.

1979ஆம் ஆண்டின் இறுதியில் போர்த்தந்திர ஆராய்ச்சிகள் பற்றிய லண்டன் கல்லூரியில் பேசும் போது கிஸ்ஸின்ஜெர் பின்வருமாறு ஒளிவு மறைவின்றி ஒப்புக்கொண்டார்: ''நமது போர்த் தந்திர சித்தாந்தம் மிகப் பெருமளவு, முற்றிலு மாக நமது மேன்மையான போர்த்தந்திர பலத் தை ஆதாரமாகக் கொண்டிருந்தது. சோவியத் யூனியன் எப்போதுமே மேன்மையான போர்த் தந்திர பலத்தை ஆதாரமாகக் கொண்ட தில்லை.''[121] சமன்நிலையைப் பற்றி பேச்சு வரும் போது பல அமெரிக்க அரசுப் பிரமுகர்களுக்கே உரித்தான ஒருவித முரண்பாடு இதிலிருந்து பிறக்கிறது: ஒரு புறத்தில், தவிர்க்க இயலாத பழிவாங்கலைக் குறித்த அச்சம் அவர்களை ஆட்கொள்கிறது, மறுபுறத்தில், கடந்த காலச் சுமை அவர்களை அழுத்துகிறது, மேம்பாட்டை

நோக்கிய மாயையான போட்டிக்குத் தள்ளு கிறது. இன்று ரீகன் நிர்வாகம் இப்போட்டியை நோக்கி இன்னும் தள்ளுகிறது. இது அமெரிக்க இராணுவ மேம்பாட்டு நிலையை புனர்நாட்ட தன்னுடைய சக்திகள் அனைத்தையும் அணி திரட்டுகிறது. இராணுவ கட்டுமானத் துறையில் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னிருந்த அமெரிக்கத் தலைவர்கள் அனைவருக்கும் உரித் தான வல்லரசு மேலாதிக்கவாத பேராசைகள் இன்று மீண்டும் முன்னுக்கு வருகின்றன. எந்த ஒரு எதிரியின், முதலாவதாக சோவியத் யூனி யனின் இராணுவ வாய்ப்புகளை விஞ்சி நிற்கும் ஒரு இராணுவ இயந்திரத்தை தோற்றுவிக்க அவர்கள் விரும்புகின்றனர்.

50 மற்றும் 60ஆம் ஆண்டுகளில் சோவியத் யூனியனுக்கு எதிரான யுத்தம் பற்றிய திட்டங் கள் அணு ஆயுதத்தில் அமெரிக்க ஐக்கிய நாட் டின் மேன்மையை ஆதாரமாகக் கொண்டிருந்தன என்று அமெரிக்க நிபுணர்கள் குறிப்பிட்டனர். உதாரணமாக, பெண்டகனின் போர்த்தந்திரத் திட்டமிடுதலில் பங்கேற்றவரும் படைத்தலைமை யகத் தலைவர்களின் கூட்டு கமிட்டிற்கான அர சியல் ஆணைகளை உருவாக்குவதில் கலந்து கொண்டவருமான டே. எல்ஸ்பெர்க் இதைப் பற்றி பின்வருமாறு கூறினார்: ‘‘உலகின் எந்தப் பகுதியிலாவது ருஷ்யத் துருப்புகளுக்கு எதிராக நம்முடைய துருப்புகள் போர் நடவடிக்கை களைக் கட்டவிழ்த்து விட்டால், இது எப்படி நடந்தாலும் சரி, நம்மிடமுள்ள சகலவித அணு ஆயுதங்களையும் பயன்படுத்தி சோவியத் யூனி

யனின் மீது முழு அளவு அணு ஆயுத தாக்கு தலைத் தொடுக்கவும் ருஷ்யாவிலும் சீனாவிலும் உள்ள இராணுவ இலக்குகளுடன் சேர்ந்து எல்லா நகரங்களையும் இயன்ற அளவு விரை வாகத் தாக்கவும் நமது திட்டங்களில் உத் தேசிக்கப்பட்டது. வேறு வார்த்தைகளில் சொல் வதெனில், அமெரிக்க ஐக்கிய நாடு சர்வபொது அணு ஆயுத யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டு, சோவியத் யூனியனின் மீது முதல் அணு ஆயுதத் தாக்குதலைத் தொடுக்கும் இராணுவ திட்டங் களை நான் 1960, 1961ஆம் ஆண்டுகளில் பார்த் தேன்.... இது ருஷ்யாவிலும் சீனாவிலும் 325 மில்லியன் பேரைச் சாகடிக்கும் என்று படைத் தலைமையகத் தலைவர்கள் கணக்கிட்டனர்.... இத்தோடு பழிவாங்கும் முகமாக ருஷ்யா தொடுக் கும் தாக்குதலையும் ஐரோப்பிய ஆயுதத்தையும் சேர்த்துக் கொண்டால் 500 மில்லியனுக்கு சற் றும் குறையாக மக்கள் உயிரிழக்கும் ஒரு யுத்த மாக அது இருக்கும் எனலாம். சர்வபொது அழிவைப் பற்றிய அமெரிக்கத் திட்டங்கள் இப்படிப்பட்டவையாகத்தான் இருந்தன.''[122]

முன்போன்றே அமெரிக்க ஆளும் மேல் மட் டத்தின் மிகுந்த ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள வட்டங்கள் முற்றிலும் இராணுவ-தொழில்நுட்ப காரணியின் மீதுதான் தம்முடைய பிரதான நம்பிக்கைகளை வைக்கின்றன. சாராம்சத்தில் இவை நெடு நாட்களுக்கு முன்பே உண்மையி லேயே ஆக்கபூர்வமான அரசியல்-போர்த்தந்திர முன்மொழிவுகள் எதையும் முன்வைக்கும் திறமை யை இழந்து விட்டன. இத்தகைய திறமை

இழப்பு ஆபத்தான மாயைகளைத் தோற்றுவிக்கிறது. ''முதலாவதாக தடுப்பு தாக்குதலைத் தொடுப்பதற்கு பெண்டகனின் போர்த்தந்திரத் திட்டங்களில் முக்கியக் கவனம் செலுத்தப்படுகிறது.''[123]

மற்ற காரணங்கள் ஒரு புறமிருக்க, சோவியத் யூனியன் சாதாரண சக்திகளை அல்லது அணு ஆயுதத்தை அல்லது இரண்டையும் பயன்படுத்தி ஏதோ ஆக்கிரமிப்பை நடத்தப் போகிறது எனும் பொய்யான சாக்கின் அடிப்படையில் அமெரிக்காவில் போர்த்தந்திரத் திட்டமிடுதல் நிறைவேற்றப்பட்டது. ஒவ்வொரு திட்டத்திலும் இப்படிப்பட்ட தாக்குதலுக்கு சாத்தியமான காலக்கெடு கூட வரையறுக்கப்பட்டிருந்தது. ஆனால் சோவியத் யூனியனுக்கு இப்படிப்பட்ட எண்ணங்கள் இல்லை, இருக்கவும் முடியாது, ஏனெனில் இது அதனுடைய கோட்பாடு வழிப்பட்ட சமாதான கொள்கைக்கே முரண்பாடானது என்பது அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமைக்கு நன்கு தெரியும்.

இதனிடையே சோவியத் யூனியனின் ''எண்ணங்களைப்'' பற்றிய பொய்யான செய்திப் பெருக்கில் அதிக நிதானமான, யதார்த்தமான மதிப்பீடுகளும் இருந்தன என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். இவை ''சோவியத் ஆக்கிரமிப்புத் தன்மை'' பற்றிய கருதுகோளை சந்தேகத்திற்குள்ளாக்கின. ஆனால் கழுகுகளின் கூச்சல்கள் இவற்றை அடக்கின. சொந்த மக்கள் உட்பட உலக மக்களின் முன் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த ஆக்கிரமிப்பு வட்டங்களின்

மேலாதிக்கவாத, வல்லரசு நோக்கங்களை நியாயப்படுத்துவதற்காகத்தான் சோவியத் யூனியனின் ''ஆக்கிரமிப்புத் திட்டங்களைப்'' பற்றிய கட்டுக்கதை தேவை. மேலாதிக்கவாத வெறியும் சூப்பர் அணு ஆயுதங்களில் ஒரு மேலான நிலையின் உதவியால் உலக ஆதிக்கத்தை வெல்லும் நம்பிக்கைகளும் ஒழுக்க வரையளவுகளை அழித்தன, ''நாத்திக கம்யூனிசத்திற்கு'' எதிராகப் போராட எல்லா வழிகளையும் அனுமதித்தன. ''ஆக்கிரமிப்புத் தன்மை'' மற்றும் ''சோவியத் இராணுவ அபாயத்தைப்'' பற்றிய கட்டுக்கதைகள் இந்த நோக்கத்திற்குதான் உதவின.

இன்றும், சோவியத் யூனியன் ஆக்கிரமிப்பு நோக்கங்களைக் கொண்டிருப்பதாக கூறப்படுகிறது, உண்மைக்கு அப்பாற்பட்ட மிகப் பொய்யான திட்டங்களை இது தீட்டுவதாகப் பழி சுமத்தப்படுகிறது. பிரபல இராணுவத் தளபதியும் சோவியத் மார்ஷலுமாகிய நி.வ. அகார்க்கவ் பின்வருமாறு கூறினார்: ''சோவியத் யூனியனுக்குத் தன் எல்லைகளை விரிவாக்க வேண்டுமென்ற அவசியம் எதுவுமில்லை.... ஆனால் சோவியத் மக்களுக்கு எது சொந்தமானதோ, எது இவர்களின் உழைப்பால் தோற்றுவிக்கப்பட்டுள்ளதோ அதை இவர்கள் உறுதியாகவும் தீவிரமாகவும் சமரசத்திற்கு இடமின்றியும் பாதுகாத்து நிற்பார்கள்.''[124]

### 3. அணு ஆயுதமும் ஜனாதிபதியின் அதிகாரமும்

சமீப காலத்தில் அமெரிக்க இராணுவ மற்றும்

அரசியல் வட்டங்களில் அணு ஆயுதப் போர்த்தந்திரம் சம்பந்தமான விவாதம் தீவிரமடைந்துள்ளது. குறிப்பாக இதில் அணு ஆயுதத்தைப் பயன்படுத்தும் விஷயத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பற்றிய பிரச்சினை ஆலோசிக்கப்படுகிறது. சர்வதேச பதட்ட நிலை அதிகமாகியுள்ளது, அமெரிக்க ஆளும் மேல் மட்டத்தின் மிக ஆக்கிரமிப்புத் தன்மையுள்ள கோஷ்டிகள் ''மட்டான'' அணு ஆயுத யுத்தத்தை நடத்தும் வழிகளைத் தேடுவதில் கொண்டுள்ள நாட்டம், அணு ஆயுத சச்சரவு ''தற்செயலாக'' மூளும் வாய்ப்பு அதிகரித்துள்ளது ஆகியவற்றுடன் இப்பிரச்சினையின் விவாதம் தொடர்புடையது.

1945 ஆகஸ்டில் ஹிரோஷிமா, நாகசாகி மீது அணு குண்டுகளை வீச ட்ரூமன் ஆணை பிறப்பித்ததிலிருந்து, அமெரிக்கா பங்கேற்கும் இராணுவ சச்சரவில் அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவது சம்பந்தமாக ஜனாதிபதிக்கு உள்ள உரிமை அவருடைய மிக முக்கிய தனிச்சிறப்புரிமைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. அமெரிக்க சட்ட விஞ்ஞானம் இந்த உரிமையை, முப்படைத் தளபதி என்ற வகையில் ஜனாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்களின் ஒரு அங்கமாகக் கருதுகிறது. இது அரசியல் அமைப்புச் சட்டத்தில் எழுதப்பட்டுள்ளது.

இவ்வாறாக, ஒரு நாடு என்ற முறையில் அமெரிக்கா நிலவுவதே அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவதா இல்லையா என்ற முடிவைப் பொறுத்து இருந்தாலும் அமெரிக்க சட்டத்தைப் பொறுத்த மட்டில் இம்முடிவு முழுக்க

முழுக்க ஜனாதிபதியால் எடுக்கப்படலாம்.

ஜனாதிபதியின் இராணுவ அதிகாரங்கள் அரசியல் அமைப்புச் சட்ட உரிமை மட்டுமின்றி வரலாற்று வளர்ச்சியின் விளைபொருளுமாகும். அனேகமாக எல்லா அமெரிக்க ஜனாதிபதிகளும் இராணுவப் போர்த்தந்திரப் பிரச்சினைகளின் தீர்வில் பங்கேற்றனர். அமெரிக்க வரலாற்று இலக்கியத்தில் சமாதான விரும்பியாகச் சித்தரிக் கப்படும் வில்சன் கூட இராணுவத் துறையில் முக்கிய முடிவுகளை எடுத்தார், கப்பல் எதிர்ப்பு யுத்தம் மற்றும் அமெரிக்கப் பயணப் படைகளின் பங்கைப் பற்றிய விவாதங்களில் பங்கேற்றார், ஜெனரல் ஜா. பெர்ஷிங், அட்மிரல் வி. ஸிம்சின் போர்க்களத்தில் இரண்டு தளபதிகளின் அதி காரம் குறித்து அமெரிக்கத் தரைப்படைக்கும் கடற்படைக்கும் இடையில் மூண்ட விவாதத்தில் தலையிட்டார். எல்லா சந்தர்ப்பங்களிலும் மற்ற கருத்துகளில் வில்சனுடைய முடிவுகள் மேலோங்கி இருந்தன.[125]

ஜனாதிபதிகள் தி. ரூஸ்வெல்டும் பி. ரூஸ்வெல் டும் உயர் மட்ட பிரதான படைத்தளபதிகள் என்ற வகையில் நிர்வாகத் தலைவர்களின் பாத் திரத்தைக் கணிசமான அளவு விரிவுபடுத்தி னார்கள். முன்பு கடற்படை வரலாற்று துறை யில் விஞ்ஞானியாகவும் கடற்படை அமைச்சரின் உதவியாளராயும் வாலன்டியர் குதிரைப்படை யின் கர்னலாகவும் இருந்த தி. ரூஸ்வெல்ட் இராணுவத்தினரிடமிருந்து அதிக செயல்வன்மை யையும் இராணுவ இயந்திரத்தின் சீர்திருத்தங் களையும் கோரினார். பி. ரூஸ்வெல்டும் முன்னர்

கடற்படை அமைச்சரின் உதவியாளராக இருந்தார். இவர் இராணுவக் கொள்கையின் மீது கணிசமான கவனம் செலுத்தினார், காங்கிரஸ் சந்தேகம் தெரிவித்ததைப் பொருட்படுத்தாமலும் இராணுவத் தலைவர்களின் சித்தத்திற்கு எதிராயும் தன்னுடைய முடிவுகளை நிறைவேற்றினார்.

காங்கிரசைப் பொறுத்த மட்டில் போர்க் காலத்தில் ''அணிதிரட்டும் போர்த்தந்திரத்தின்'' பயனாய் இது நிர்வாகத்திற்குக் கீழ்ப்பட்டிருந்தது. யுத்தங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் காங்கிரஸ் இராணுவத்தின் பாத்திரத்தையும் அதன் இடத்தையும் நிர்ணயிப்பதில் முக்கியப் பங்காற்றியது. தேசியப் பாதுகாப்புச் சட்டம் (1920), வான்படை கோர்பசைப் பற்றிய சட்டம் (1925) போன்ற முக்கிய சட்டங்கள் காங்கிரசால் நிறைவேற்றப்பட்டன. வான்படையின் வாய்ப்புகளைப் பெருக்குவதன் மீதும் விமானத் தொழில்துறையை வளர்ப்பதன் மீதும் காங்கிரஸ் விசேஷக் கவனம் செலுத்தியது.

அதே நேரத்தில் 20ஆம் நூற்றாண்டில் இராணுவத்தின் நிலை மற்றும் அதன் கொள்கை மீது தாக்கம் செலுத்துவதில் ஜனாதிபதிகளும் காங்கிரசும் குறிப்பிட்ட இடர்ப்பாடுகளைச் சந்தித்தனர் என்பதைக் குறிப்பிடாமலிருக்க இயலாது. அரசு உறுப்புகளின் முறையில் தரைப்படையும் கடற்படையும் படிப்படியாக ஒப்பீட்டளவில் சுயமான அமைப்புகளாக வளர்ந்ததிலிருந்துதான் முக்கியமாக இந்த இடர்ப்பாடுகள் தோன்றின. இராணுவ நடவடிக்கைகள் சிக்கலானதும் மேன்

மேலும் நவீன ஆயுத அமைப்புகள் தோன்றி யதும் சிவில் தலைவர்களிடமிருந்து விசேஷ ஞானத்தைக் கோரின, ஆனால் இந்த ஞானம் இவர்களிடம் இருக்கவில்லை. எனவேதான் இவர்கள் இராணுவ நிபுணர்களைச் சார்ந்து இருக்கலாயினர். யுத்தங்களின் பெரும் அளவு, குறிப்பிட்ட ஒரு இராணுவக் கொள்கையை அவசியமாக்கியது; அசாதாரண சம்பவங்களுக்காக இராணுவத் துறையினரால் நிறைவேற்றப்படத் தக்க திட்டத்தை இது உள்ளடக்கியிருக்கலாம். உருவாக்கப்படும் இராணுவ செயல்திட்டங்கள் அசாதாரண காலகட்டத்திற்கான திட்டங்களுடன் ஒத்து வர வேண்டும்.[126]

பெரும்பாலான இராணுவ சித்தாந்தவாதிகள், இராணுவ பலத்தைப் பயன்படுத்தும் விஷயத்தில் முடிவுகளை எடுக்க சிவில் தலைவர்களுக்கு உள்ள உரிமையை அங்கீகரித்தனர். ஆனால் அதே சமயம் இராணுவத் துறையினருடன் (இவர்கள் தமக்கு அரசாங்கம் அளித்துள்ள துருப்புகளின் வெற்றிக்கான வாய்ப்பைப் பற்றிய தமது கருத்துகளை எடுத்துரைக்க வேண்டும்) கலந்தாலோசித்த பின்தான் இத்தகைய முடிவுகளை எடுக்க வேண்டியது அவசியமென சுட்டிக் காட்டப்பட்டது. இது தவிர, இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமான பின் சிவில் தலைவர்கள் இவற்றின் போக்கில் தலையிடக் கூடாதென்றும் இராணுவத்தினர் வலியுறுத்தினார்கள். இவ்வாறாக, இராணுவத்தினரின் பங்கையும் இராணுவ நடவடிக்கையில் இவர்களின் சுயமான தன்மையையும் அரசியல் தலைமை ஒப்புக்கொள்ள வேண்டும்

என்பதைப் பற்றி பேசப்பட்டது.[127]

இரண்டாவது உலக யுத்தத்தின் போது உயர் மட்ட பிரதான படைத்தளபதி என்ற வகையில் ஜனாதிபதியின் பணிகள் கணிசமாக வளர்ச்சி யடைந்தன. யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் எல்லா ஜனாதிபதிகளும் இப்பணிகளை வளர்த்து வலுப்படுத்த முயன்றனர். அமெரிக்க ஆராய்ச்சியாளராகிய அ. மில்லெட்டின் அடையாளச் சிறப்புள்ள வரையறுப்பின்படி இவர்கள் ''ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்னால் மார்க்கஸ் அவ்ரேலியஸோ கன்ஸ்தன்தீனோ பெற்றிருந்த அதே அளவு பெரிய அதிகாரங்களுடன் 'சுதந்திர உலகின்' மாபெரும் தளபதிகளின் பாத்திரத்தில்''[128] தம்மைப் பார்த்துக் கொண்டனர். இன்று, அணு ஆயுத சகாப்தத்தில் இந்தப் பாத்திரம் 1941ஆம் ஆண்டிற்கு முன் இருந்ததை விட ஒப்பிட முடியாத அளவிற்குப் பெரியது. இன்று ஒவ்வொரு ஜனாதிபதியின் சாதாரண வேலை நாளும் பாதுகாப்புத் துறை மற்றும் வெளிநாட்டுக் கொள்கை நிலவரம் பற்றிய அறிக்கைகளோடு (ஒரு நாளில் உலகம் பூராவுமிருந்து வரும் விவரங்கள் இவற்றில் தொகுத்து கூறப்பட்டிருக்கும்) துவங்குவது தற்செயலானதல்ல.

குறிப்பாக இந்த விஷயங்களில் தான் மூழ்கியுள்ளதை விவரிக்கும் முகமாக ஜான் கென்னடி தன் நெருங்கிய ஆலோசகர்களிடம் பின்வருமாறு கூறினார்: ''உள்நாட்டில் நடைபெறும் சம்பவங்கள் நமக்கு இழப்பை மட்டுமே ஏற்படுத்தக் கூடும், ஆனால் வெளிநாடுகளில் நடைபெறும்

விரும்பத் தகாத நிகழ்ச்சிகளோ நம்மை அழிக்கக் கூடும்''[129]. வெள்ளை மாளிகையின் மற்ற எஜமானர்களைப் போன்றே நிக்சனும் வெளி நாட்டு கொள்கையையும் பாதுகாப்பு பிரச் சினைகளையும் வழிநடத்துவதுதான் ஜனாதி பதியின் பிரதானக் கடமையாகும் என்றும் உள் நாட்டு பிரச்சினைகளைத் தனது அமைச்சரவை கவனித்து கொள்ள வேண்டும் என்றும் கருதி னார். ட்ரூமனிலிருந்து கார்ட்டர் வரை ஒவ் வொரு ஜனாதிபதியும் இராணுவ சேவை புரிந் துள்ளனர், ஒவ்வொருவரும் தமது கடந்த கால சேவையின் தன்மை, பண்பைப் பொறுத்து இல் லாமல் (ஒருவேளை நிக்சனைத் தவிர்த்து) தமது அனுபவத்தை இராணுவத் துறை, இராணுவ விவகாரங்களில் ''விசேஷ'' ஞானத்திற்கான மூல ஊற்றாகக் கருதினர். ஆனால் ஜனாதிபதியின் பதவியில் இராணுவ தீர்மானங்களை எடுக்கும் போது ஐசன்ஹோவரால் மட்டுமே தன்னுடைய கடந்த கால ஞானங்களைப் பயன்படுத்த முடிந் தது. இராணுவக் கல்வியில் தமக்குக் குறைகள் உள்ளதாக ஜனாதிபதிகள் ஒப்புக்கொண்ட போது (உதாரணமாக ட்ரூமனும் கென்னடியும் இவ்வாறு ஒப்புக்கொண்டனர்) இவர்கள் இரா ணுவ ஆலோசகர்களை நாடினர். ஆனால் இதை விட முக்கியத்துவம் வாய்ந்தது என்னவெனில், இராணுவ அமைப்பின் மீது தம் அதிகாரத்தை நிலைநாட்டுவதன் தீவிர அவசியத்தை எல்லா ஜனாதிபதிகளும் உணர்ந்தனர்.

''தேசியப் பாதுகாப்புக்'' காரியங்களை நிர் வகிப்பது பெரும்பாலும் ஜனாதிபதியைப்

பொறுத்துள்ளது, இவர்தான் அந்தந்த தீர்மானங்களை எடுப்பதில் முக்கிய நபராவார். உதாரணமாக, வெளிநாட்டு கொள்கை துறையில் ''நன்கு சிந்திக்கப்பட்ட முடிவுகளை'' எடுக்கும் நோக்கத்துடன் முப்படைகளை ஒன்றிணைக்கும் அவசியத்தையும் நிர்வாக ஆட்சியின் பல்வேறு உட்பிரிவுகளின் உறவுகளை மறுபரிசீலனை செய்யும் அவசியத்தையும் யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் ட்ரூமன் சந்தித்தார். இதற்காக வேவு பார்த்தல், சிவில் பாதுகாப்பு, மூலாதாரங்களைத் திட்டமிடுதல் ஆகியவற்றைக் கவனிக்கும் பல புதிய இலாக்காக்கள் தோற்றுவிக்கப்பட்டன, சிவில் தலைவரின் தலைமையில் பாதுகாப்பு அமைச்சகம் உருவாக்கப்பட்டது, இறுதியில் தேசியப் பாதுகாப்புக் கவுன்சில் ஏற்படுத்தப்பட்டது.

அரசுத் துறை செயலர், பாதுகாப்புத் துறை அமைச்சர், படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டி ஆகியோருடன் தனிப்பட்ட சந்திப்புகள் வழக்கத்தை ஐசன்ஹோவர் வெள்ளை மாளிகையில் கொண்டுவந்தார். இலாக்காக்களுக்கு இடையிலான சீரிசைவை மேம்படுத்தும் பொருட்டு ஜனாதிபதி தேசியப் பாதுகாப்பு விவரங்கள் சம்பந்தமான தன் விசேஷ துணைவரின் தலைமையில் தேசியப் பாதுகாப்புக் கவுன்சிலின் நிரந்தர அமைப்பை ஏற்படுத்தினார். முதலில் இந்த அமைப்பு இலாக்காக்களுக்கு இடையிலான இரண்டு நிரந்தர உறுப்புகளின் பணிகளில் (அரசியல் திட்டக் கவுன்சில், நடவடிக்கைகளை ஒத்திசைவிக்கும் கவுன்சில்) தன்

கவனத்தை ஒருமுனைப்படுத்தியது. 1961ஆம் ஆண்டிற்கு முன் தேசியப் பாதுகாப்புக் கவுன்சிலின் அமைப்பு வெளிநாட்டு கொள்கையை உருவாக்குவதில் முக்கியப் பங்கேற்காவிட்டாலும், மேற்கூறிய உறுப்புகள் இலாக்காக்களுக்கு இடையில் சமரசங்களை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஆவணங்களைத் தொடர்ந்து வெளியிட்டதால் இந்த அமைப்பு மேன்மேலும் அதிகமாகத் தலைமைப் பாத்திரத்தை ஆற்றத் துவங்கியது.

கென்னடியின் ஆட்சிக் காலத்திலிருந்து தேசியப் பாதுகாப்புக் கவுன்சிலின் அமைப்பு ''தேசியப் பாதுகாப்பு'' விஷயத்தில் நேரடியாகத் தலையிடும் ஒரு கருவியாகியது. தேசியப் பாதுகாப்பு பிரச்சினைகளில் ஜனாதிபதியின் உதவியாளர்கள் என்ற வகையில் மா. பான்டி, வி. ரொஸ்தோ, ஹெ. கிஸ்ஸின்ஜெர் ஆகியோரால் வழிநடத்தப்பட்ட தேசியப் பாதுகாப்புக் கவுன்சிலின் அமைப்பு நாள்தோறும் ஜனாதிபதியை நேரடியாகச் சந்திக்கும் உரிமையைப் பெற்று அரசுத் துறை மற்றும் பாதுகாப்பு அமைச்சகத்தின் சிறு மாதிரியைப் போலாகியது.

ஜனாதிபதி கென்னடி மட்டுமே தன்னுடைய தனிப்பட்ட இராணுவ ஆலோசகராகிய ஜெனரல் மா. டெய்லரின் சேவைகளைப் பயன்படுத்தினார். ஜெனரல் ஏ. வில்லெர், அட்மிரல் தா. மூரெர் போன்ற செல்வாக்கு மிக்கப் பிரமுகர்கள் படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டியின் தலைமையிலிருந்தும் இராணுவ விஷயத்தில் மற்ற ஜனாதிபதிகளும்

இக்கமிட்டியை மட்டுமே நம்பியிருக்கவில்லை. இது தவிர, 1970இல் நிர்வாக-பட்ஜெட் காரியாலயமாக மாற்றியமைக்கப்பட்ட பட்ஜெட் காரியாலயமும் ஜனாதிபதிகளின் முக்கிய ஆலோசக உறுப்பாக இருந்தது. இதில் இராணுவ செயல் திட்டங்கள் சம்பந்தமான நிபுணர்கள் இடம் பெற்றிருந்தனர். இவர்கள் உள்நாட்டு பொருளாதார நோக்கங்களை அடிப்படையாகக் கொள்ளாமல் அந்தந்த படைப் பிரிவுத் திட்டத்தின் மதிப்பு, செயல்வன்மை, அதை உரிய வகையில் இயக்கும் வாய்ப்பு ஆகியவற்றைப் பற்றிய பகுப்பாய்வின் அடிப்படையில் இராணுவச் செலவுகள் பற்றிய சிபாரிசுகளை அளித்தனர்.

இராணுவக் கொள்கை, இராஜதந்திரம் பற்றிய பிரச்சினைகளில் ஜனாதிபதிகள் அரசுத் துறையைச் சார்ந்த ஆராய்ச்சிகள் மற்றும் வேவு பார்க்கும் காரியாலயம், ஆயுதங்கள் மீதான கண்காணிப்பு மற்றும் படைக்கலைப்பு ஸ்தாபனம், மத்திய ஒற்றாடல் ஸ்தாபனம் ஆகியவற்றைச் சேர்ந்த நிபுணர்களையும் ஈடுபடுத்தினார்கள். தேவையேற்படும் போது காங்கிரசின் இரு சபைகளின் தலைவர்கள், அந்தந்த கமிஷன்களின் தலைவர்கள், தனிப்பட்ட செல்வாக்குள்ள செனட்டர்கள் மற்றும் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆகியோரையும் ஜனாதிபதிகள் ஆலோசனைக்காக நாடினார்கள். என்றாலும் இறுதியில் ஜனாதிபதி இராணுவக் கொள்கை சம்பந்தமாகத் தீர்மானங்களை எடுக்கும் போது பாதுகாப்பு அமைச்சர் மற்றும் படைத்தலைமையகத் தலைவர்களின் கூட்டு கமிட்டியின் தாக்கமும்

செல்வாக்கும் மேலோங்கி நின்றன.

தீர்மானங்களை எடுப்பதன் மீது இராணுவ-தொழில்துறை இணையம் மற்றும் இதனோடு சேர்ந்த ஸ்தாபனங்களின் செல்வாக்கும் பெரியதாக இருந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும். ''ஆட்சி மையங்களின்'' மீதான நேரடியான தாக்கம், குறுகிய தேசிய வெறி, சோவியத் எதிர்ப்பு மற்றும் இராணுவ வெறி சூழ்நிலைகளை ஏற்படுத்துவதிலும் இச்செல்வாக்கு வெளிப்படுகிறது. படிப்படியாக, இராணுவ மற்றும் இராணுவ-அரசியல் பிரச்சினைகளின் மீதான தீர்மானங்களை எடுப்பதில் இராணுவ-தொழில் துறை இணையம் நேரடியாகப் பங்கேற்கத் துவங்கியது.[130]

ஆனால் எது எப்படியிருந்தாலும் ஜனாதிபதி தான் தனிப்பட்ட முறையில் முக்கிய இராணுவ-அரசியல் தீர்மானங்களை எடுக்கிறார், அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவது பற்றிய பிரச்சினையில் முடிவு செய்கிறார். 1946இல் அணு சக்தியைப் பற்றி நிறைவேற்றப்பட்ட சட்டமும் இத்துறையில் இதற்குப் பின் வந்த சட்டங்களும் அணு ஆயுதத்தைப் பொறுத்த மட்டில் ஜனாதிபதியின் மட்டற்ற அதிகாரங்களை உறுதிப்படுத்தின.

''யுத்தம் துவங்கும் தீவிர அபாயம் அல்லது இது தவிர்க்க இயலாது நெருங்கி வருவது அல்லது தகவல் தொடர்பு முறையில் ஏற்படும் இடைவெளி போன்ற ஒரு சில மட்டான சந்தர்ப்பங்களில்... ஐக்கிய மற்றும் விசேஷ படைத் தலைமைகளின் ஒரு சில படைத்தளபதி

களுக்கு''[131] அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவது சம்பந்தமான தன் அதிகாரத்தை தருவது பற்றிய இரகசிய தீர்மானத்தை 1957இல் ஐசன்ஹோவர் எடுத்தார் என்பதைக் குறிப்பிட வேண்டும். பின்னால் இக்கொள்கை மற்ற ஜனாதிபதிகளால் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது.

வட அமெரிக்காவின் விமான எதிர்ப்பு தற்காப்பின் முன்னாள் தளபதி ஜெனரல் ஏ. பார்ட்ரிஜ், ஜனாதிபதியின் விசேஷ அனுமதியின்றியே அணு ஆயுதத்தைப் பயன்படுத்த தனக்கு உரிமையிருந்தது என்று 1958இல் அறிவித்தார். அன்று இருந்த தகவல் தொடர்பு முறைகளில், எதிரி போர்த்தந்திரத் தாக்குதலைத் தொடுத்தால் ஜனாதிபதியின் ஆணை மிகத் தாமதமாகத்தான் இந்த விமான எதிர்ப்பு தற்காப்பு பிரிவிற்கு கிடைத்திருக்கும் என்பதன் மூலம் அவர் இதை விளக்கினார். ஆனால் இதற்குப் பின் விரைவில் செய்தியறிவிக்கும் முறை தோற்றுவிக்கப்பட்டு தகவல் தொடர்பு முறைகள் கணிசமாக மேம்படுத்தப்பட்டாலும் 70ஆம் ஆண்டுகளின் இரண்டாம் பாதியில் காங்கிரஸ் கூட்டங்களில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டபடி இந்த உரிமை வட அமெரிக்காவின் விமான எதிர்ப்பு தற்காப்பின் தளபதியின் வசமே முன்போன்று உள்ளது; விமான எதிர்ப்பு தற்காப்பிற்கான அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் நடைமுறைத் தந்திர முறைகள் இத்தளபதிக்குத்தான் உட்பட்டவையாகும்.

அமெரிக்கப் பத்திரிகைகளில் பன்முறை அறிவிக்கப்பட்டபடி உள்நாட்டிலும் வெளிநாடு

களிலும் ஜனாதிபதி எங்கு சென்றாலும் விசேஷ இராணுவ உதவியாளர் ஒருவர் அவருடன் கூட வே செல்லுவார். இவரிடமுள்ள விசேஷ கறுப்பு நிற பெட்டியில் அணு ஆயுதத்தைப் பயன்படுத்து வது சம்பந்தமான கட்டளையைப் பிறப்பிக்கத் தேவையான விஷயங்களும் தகவல் தொடர்பு சாதனங்களும் இருக்கும். ஜனாதிபதியிடம் எப்போதும் இருக்கும் ஒரு சீட்டில் சில எண்களும் சொற்களும் சங்கேத மொழியில் இருக்கும்; இவற்றின் ஒட்டுமொத்தம் அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவது சம்பந்தமாக ''அவசர இரா ணுவ கட்டளை'' எனப்படும் கட்டளையைப் பிறப்பிக்கும் ஜனாதிபதியை அடையாளம் காட் டும். இந்தக் கட்டளை உடனடியாக ஜனாதி பதியிடமிருந்து பெண்டகனின் தலைமைக் காரி யாலயத்திற்கு வரும். அங்கே இந்த சங்கேத எண்கள் முற்றிலும் இரகசியமான, சிக்கலான முறையை இயக்குவிக்க, அது கட்டளை உரிய நபரிடமிருந்து வந்துள்ளதா என்பதை ஊர் ஜிதப்படுத்தும்.

அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவது பற்றிய ஜனாதிபதியின் கட்டளை அனேகமாக பல வடி வங்களில் தரப்படலாம், இது ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் வெவ்வேறு வகைகளைத் திட்டமிடலாம். முன்னாள் பாதுகாப்பு அமைச் சர் ஹா. பிரவுன் ஜனாதிபதியின் 59ஆவது ஆணையை செனட்டர்களுடன் விவாதிக்கும் போது வெளிநாட்டு விவரங்கள் பற்றிய செனட்டு கமிட்டியில் 1980ஆம் ஆண்டு செப்டெம் பரில் கூறியதிலிருந்து இது தெரிகிறது.

அமெரிக்காவிற்கு எதிராகத் தாக்குதல் திட்டமிடப்படுவதாக முற்றிலும் நம்பகரமான தகவல் இருந்தால் சோவியத் யூனியனின் மீது முந்திக் கொண்டு அணு ஆயுதத் தாக்குதலைத் தொடுக்கும் திட்டங்கள் உள்ளனவா என்று செனட்டர் சா. பேர்சி கேட்ட போது பிரவுன் பின்வருமாறு பதிலளித்தார்: ''இத்தகைய ஒரு நிலவரத்திற்கு ஏற்ற வாய்ப்புகள் உள்ளன'' (இவருடைய பதிலின் எஞ்சிய பகுதி இரகசியமானதாக அறிவிக்கப்பட்டு சுருக்கெழுத்து குறிப்பிலிருந்து அகற்றப்பட்டது). 70ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் இராணுவ அதிகாரங்களைப் பற்றிய சட்டத்தின் நகல் செனட்டில் விவாதிக்கப்பட்ட போது அச்சுறுத்தும் அணு ஆயுதத் தாக்குதலிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டைப் பாதுகாக்க அல்லது இதைத் தடுக்க ஜனாதிபதிக்குள்ள உரிமையைப் பற்றிய கருத்து நிலையை இந்தத் திட்ட நகலில் சேர்க்க வேண்டுமென செனட்டர் ஜா. ஸ்டென்னிஸ் வலியுறுத்தினார். அப்போது காங்கிரஸ் இத்தகைய உரிமையை ஜனாதிபதிக்கு அளிப்பதை மிகவும் அபாயமானதாகக் கருதியது. இக்கருத்து நிலை கணிசமாகப் பலவீனப்படுத்தப்பட்டு பின் திட்ட நகலின் இறுதி வாசகத்திலிருந்து முற்றிலுமாக அகற்றப்பட்டது. ஆனால் பிரவுனின் அறிக்கையிலிருந்து தெரியும்படி தடுப்புத் தாக்குதலைத் தொடுப்பதானது ஜனாதிபதி மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகளில் ஒன்றாக இன்று வரை கருதப்படுகிறது.

இப்போதுள்ள நடைமுறையின்படி கட்டளை

''அதிகாரபூர்வமான'' எண் குறியாக பெண்ட கனின் தலைமைக் காரியாலயத்தை அடைந்து, அங்கிருந்து நேரடியாக முப்படைகளின் போர்த் தந்திரச் சக்திகளின் தளங்களுக்குச் செல்கிறது. இந்தக் கட்டளையோடு கூட ''அத்தாட்சி கூறும்'' சங்கேத மொழியும் செல்ல வேண்டும். இத்தகையதொரு வழக்கம் பெண்டகனை கட்டளையைப் பிறப்பிக்கும் நடைமுறை மையமாக மாற்றுகிறது. அசாதாரண சந்தர்ப்பங்களில் இது அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவதில் இராணுவத்தினர் தம் அதிகாரங்களை மீற வழிகோலக் கூடுமென்று ஒரு சில அமெரிக்க நிபுணர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தத் துறையில் ஜனாதிபதி தன் அதிகாரங்களை அளிக்கும் வாய்ப்பைப் பற்றிய பிரச்சினை தத்துவ ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் இராண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டம் பூராவும் அமெரிக்காவில் விவாதிக்கப்பட்டது. அமெரிக்கப் பத்திரிகைகளில் அறிவிக்கப்பட்டபடி இறுதி முடிவை ஜனாதிபதி தனியாகத்தான் எடுக்க வேண்டும் என்றாலும் சந்தர்ப்பச் சூழ்நிலைகள் அனுமதித்தால் இதற்கான தயாரிப்புகளில் பாதுகாப்பு அமைச்சர், படைத்தலைமையகத் தலைவர்களின் கமிட்டி, ஜனாதிபதியின் அந்தரங்க ஆலோசகர்கள், இவருக்கு நெருக்கமானோர் ஆகியோர் ''மிக நெருக்கமாக ஈடுபடுத்தப்படுகின்றனர்''. இவர்களுடைய செல்வாக்கு, அனேகமாக மனநிலை நிர்ப்பந்தம் ஜனாதிபதியின் இறுதி முடிவின் மீது தாக்கம் செலுத்தக் கூடும்.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் நெருக்கடியான சர்வதேச சூழ் நிலைகளிலும் அமெரிக்கா பங்கேற்ற சச்சரவு களிலும் தம் விருப்பப்படி அணு ஆயுதத்தைப் பயன்படுத்தும் உரிமையை அளிக்க வேண்டுமென இராணுவத்தினர் வற்புறுத்தினர். ஆனால் இது அவர்களுக்கு கிடைக்கவில்லை.

ஐக்கிய அல்லது தனிப்பட்ட சக்திகளின் எந்த ஒரு தளபதிக்கும் அல்லது விசேஷ படைப் பிரிவுகளின் எந்த ஒரு தளபதிக்கும் சுயமாக அணு ஆயுதத்தைப் பயன்படுத்தும் உரிமை கிடை யாது என்று 1980இல் பிரவுன் கூறினார். என்றாலும் அவருடைய மற்ற பேச்சுகளிலிருந்து தெரிவதுபடி, அணு ஆயுதத்தைப் பயன்படுத்து வது சம்பந்தமாக ஒரு இரகசிய வழிகாட்டி நிலவுகிறது. இது இந்த ஆயுதத்தைப் பயன்படுத் தும் கோட்பாடுகளையும் ஒருவேளை உயர் இராணுவ அதிகாரிகளின் உரிமைகளையும் நிர் ணயிக்கலாம். இந்த ஆவணம் பாதுகாப்பு அமைச் சரால் உருவாக்கப்பட்டு படைத்தலைமையகத் தலைவர்களின் கமிட்டிக்கு அளிக்கப்படுகிறது. அது அந்தந்த படைத் தளபதிகளுக்கு இதை அனுப்புகிறது.

வெளிநாட்டு விவரங்கள் பற்றிய செனட்டு கமிட்டியின் மேற்கூறிய கூட்டங்களில் பிரவுன், அணு ஆயுத யுத்தம் மூண்டால் ஒரு புறம் ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு அமைச்சருக்கும் ''அல்லது உரிய முறையில் நியமிக்கப்பட்ட இவர் களின் தொடர்ச்சியாளர்களுக்கும்'', மறுபுறம் அந்தந்த படைத் தளபதிகளுக்கும் இடையில்

உள்ள தொடர்புகளை மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அறிவித்தார். இத்தகைய ஒரு திட்டம் நிலவுகிறது என்றும் அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவதைப் பற்றி ஜனாதிபதியாலோ உதவி ஜனாதிபதியாலோ கட்டளை பிறப்பிக்க இயலாது போகும் பட்சத்தில் இது செயல்படும் என்றும் அனுமானிக்க இது உதவுகிறது. இந்த உரிமையைப் பாதுகாப்பு அமைச்சருக்கோ வேறு சில நபர்களுக்கோ அளிக்கலாம்.

காங்கிரசின் ஆராய்ச்சிப் பிரிவின் விவரங்களின் படி, அணு ஆயுதத்தைப் பயன்படுத்த அமெரிக்க ஜனாதிபதிக்கு உள்ள உரிமை குறிப்பிட்ட இராணுவச் சூழ்நிலைகளில் ஐரோப்பாவில் உள்ள கூட்டுச் சக்திகளின் உயர் மட்ட தளபதிக்கு அளிக்கப்படலாம் என்று **நேட்டோவின்** திட்டங்கள் முன்னனுமானிக்கின்றன. ஐரோப்பாவிலிருந்த **நேட்டோ** சக்திகளின் முன்னாள் பிரதான தளபதி ஜெனரல் நோர்ஸ்தேத், 60ஆம் ஆண்டுகளில் தான் அப்பதவியில் இருந்த போது ''அசாதாரண சந்தர்ப்பங்களில்'' அணு ஆயுதத்தைப் பயன்படுத்தும் உரிமை தனக்கு இருந்ததாக காங்கிரஸ் கூட்டத்தின் போது அறிவித்தார். ஓமகாவில் உள்ள அமெரிக்கப் போர்த்தந்திரச் சக்திகளின் படைத்தலைமையகத்தில் அணு ஆயுதத் தாக்குதல்களுக்கான இலக்குகளின் பட்டியலை முறைப்படி ஒத்திசைவிப்பதற்காக ஐரோப்பாவிலுள்ள **நேட்டோ** துருப்புகளின் தளபதியின் பிரதிநிதி நிரந்தரமாக இருப்பதன் மூலமும் மேற்கூறிய உரிமையை அளிக்கும் திட்டம் அனேகமாக மெய்ப்பிக்கப்படுகிறது.

சட்டப்படி நேட்டோ துருப்புகளின் உயர்மட்ட தளபதி இக்கூட்டின் தலைமை உறுப்புகளுக்கும் இவற்றின் மூலம் கூட்டிலுள்ள எல்லா நாடுகளின் அரசாங்கங்களுக்கும் கீழ்ப்பட்டவர். அதே நேரத்தில், மற்ற சுயமான அரசுகளின் அரசாங்கங்களுக்கு முன் ஓரளவிற்கோ முழுமையாகவோ பொறுப்பு வகிக்கும் நபருக்கு ஜனாதிபதி தன் பிரதான தளபதி அதிகாரங்களை அளிக்க அமெரிக்க அரசியல் அமைப்புச் சட்டம் அனுமதிக்கவில்லை என்ற முடிவிற்கு காங்கிரசின் ஆராய்ச்சிப் பிரிவு வருகிறது. ஆனால் விஷயம் என்னவெனில், நேட்டோ சக்திகளின் உயர் மட்ட தளபதி அதே நேரத்தில் ஐரோப்பாவில் உள்ள அமெரிக்கத் துருப்புகளின் தளபதியாகவும் இருக்கிறார், அதாவது இவர் அமெரிக்கப் படைத்தலைமைக்கும் பிரதான தளபதியாகிய ஜனாதிபதிக்கும் கட்டுப்பட்டவர். ஆயுத சச்சரவு மூண்டால் இந்த அமெரிக்க ஜெனரல் ''சர்வதேச'' பதவியைப் பொருட்படுத்தாது அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவது உட்பட எல்லாவற்றிலும் வாஷிங்டனின் கட்டளைகளை நிறைவேற்றுவார் என்பதில் அனேகமாக எவ்வித சந்தேகமும் இருக்கவில்லை போலும்.

நேட்டோ தோற்றுவிக்கப்பட்டதிலிருந்தே அமெரிக்கா, அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவதில் தன்னுடைய கூட்டு நாடுகளின் முன் தனக்கு எவ்வித கடமையும் இருக்கவில்லையெனக் கருதியது.[132] 1951ஆம் ஆண்டு மார்ச்சில் அணு சக்தி சம்பந்தமான காங்கிரசின் ஐக்கியக் கமிட்டியின் தலைவர் செனட்டர் மாக்மாகோனின் கேள்

விக்கு அளித்த பதிலில், அணு ஆயுதத் தாக்கு தலைப் பற்றிய ஜனாதிபதியின் முடிவை செயல் படுத்துவதை மட்டுப்படுத்தக்கூடிய அல்லது தாம தப்படுத்தக் கூடிய ''எந்த விதமான கடமை களும்'' மற்ற நாடுகளின் முன் அமெரிக்காவிற்குக் கிடையாது என்றும் அமெரிக்க ஜெனரலை நேட்டோ சக்திகளின் தளபதியாக நியமித்ததால் இப்படிப்பட்ட கடமைகள் எதுவும் தோன்ற வில்லை என்றும் அந்நாள் அரசுத் துறை செயலர் ஆச்செசன் காங்கிரசிற்கு முன் முறைப்படி அறிவித்தார்.

பின்னால் நேட்டோ வரம்புகளுக்குள் சில உடன் பாடுகள் உருவாக்கப்பட்டன. அணு ஆயுதத்தைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் தோன்றும் போது பாதுகாப்பைத் திட்டமிடும் கவுன்சில் மற்றும் கமிட்டியின் மூலமும் நேரடியாக அரசாங்கத் தலைவர்களுக்கு இடையேயும் கலந்தாலோசனை களை நடத்த இந்த உடன்பாடுகள் வழிகோலு கின்றன. ஆனால் நடைமுறையில், அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது ஷிலே ஸின்ஜர் அறிவித்தபடி, அணு ஆயுதத்தைப் பயன் படுத்துவதா இல்லையா என்ற முடிவை எடுப் பதற்கு அணு ஆயுத வல்லரசோ வல்லரசுகளோ மட்டுமே பொறுப்பு வகிக்கின்றன.

நேட்டோ நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பிற் கான செயல்திட்டங்களும் உள்ளன. இவை இந் நாடுகள் பின்னால் பயன்படுத்துவதற்காக அமெ ரிக்க அணு ஆயுதங்களை இவற்றிற்கு அளிக்க வகை செய்கின்றன. ஆனால் இதற்கு முன்பாக எந்த அமெரிக்கப் படைப் பிரிவுகளின் வசம்

இந்த அணு ஆயுதங்கள் உள்ளனவோ அவை இதற்கேற்ற கட்டளைகளைப் பெற வேண்டும். இவை முற்றிலும் அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவது சம்பந்தமான அமெரிக்க ஜனாதிபதியின் அதிகாரங்களின் அடிப்படையில் மட்டுமே பிறப்பிக்கப்படலாம்.

* * *

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில் அமெரிக்க அணு ஆயுதக் கொள்கை நிறைவேற்றப்பட்டது குறித்த முக்கிய முடிவுகளைத் தொகுத்துரைப்போம். சித்தாந்தங்கள், கருத்தமைப்புகளில் அந்தந்த மாற்றங்கள் ஏற்பட்டபோதிலும் இதன் சாரம் மாற்றமின்றி இருப்பது தெளிவு: உலக மேலாதிக்கத்தின் மீதான நாட்டம், அணு ஆயுத மேம்பாடு எனும் மாயையை நோக்கிய ஓட்டம் என்பது தான் இதன் சாரமாகும். அணு ஆயுதத்தின் பலமும் தாக்கும் தன்மையும் கணக்கிடப்பட முடியாத அளவில் அதிகரித்துள்ள போது இக்கொள்கையை அணு ஆயுத முட்டாள்தனம் என்றுதான் சொல்ல முடியும். சோவியத் யூனியனை அணு ஆயுத ரீதியாக முறியடிக்கும் விவரமான திட்டங்கள் இன்றைய உலகின் யதார்த்தத்தை (அணு ஆயுத சமன்நிலையை) அடியோடு மறந்து விடுகின்றன. ஆக்கிரமிப்பாளன் பழிக்குப் பழியாகத் தொடுக்கப்படும் பயங்கர அழிவுத் தாக்குதலைத் தவிர்க்க இயலாதவாறு சந்திக்க வேண்டும்.

# முடிவுரை

தனது மேலாதிக்கவாதக் கொள்கையை நிறை வேற்றும் பொருட்டு அமெரிக்க ஐக்கிய நாடு கிட்டடத்தட்ட முப்பதாண்டுகளுக்கும் மேலாக தனது இராணுவ இயந்திரத்தை இடையறாது மேம்படுத்தி வருகிறது, இதன் முக்கிய அங்க மாகிய அணு ஆயுத உள்ளாற்றலைப் பெருக்கி வருகிறது. அமெரிக்காவிடம்தான் (முதலாளித் துவ நாடுகளின் மத்தியில்) எண்ணிக்கையில் பெரிய, தொழில்நுட்ப ரீதியாக முன்னேறிய இராணுவம் உள்ளது. எண்ணிக்கையிலும் ஆயுதங் களின் அளவிலும் இது பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, இத்தாலி ஆகிய நாடுகளின் ஒட்டுமொத்த அளவை விட பெரியது. மற்ற அரசுகளுக்கு மாறாக அமெரிக்காவிடம் ஒரு செயல்முறை ஸ்தாபன அமைப்பு உள்ளது. இதன்படி எல்லா சக்திகளும் சாதனங்களும் ஐந்து ஐக்கிய மற்றும் மூன்று விசேஷ படைத் தலைமைகளில் சேர்க்கப்பட்டுள்ளன. சமாதான காலத்திலேயே இவை இராணுவத்திற்குத் தலை மை தாங்கி அதை யுத்தத்திற்குத் தயார்படுத்த வேண்டும், அமெரிக்கா நிறைவேற்றியுள்ள உலக ளாவிய கொள்கையின் அடிப்படையில் யுத்தக்

களங்களில் போர்த்தந்திர நடவடிக்கைகளுக் கான திட்டங்களை முன்கூட்டியே தீட்ட வேண் டும்.

கடல் கடந்த பிரதேசங்களில் ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்குத் தயாராகி அவற்றை நடத்துவது பற்றிய இராணுவ சித்தாந்தத்திற்கு ஏற்ப சமா தான காலத்திலேயே ஐந்து ஐக்கிய படைத் தலைமைகளில் நான்கு படைத்தலைமைகளின் துருப்புகளும் இராணுவ சாதனங்களும் அமெரிக் காவிற்கு வெளியே நிறுத்தப்பட்டுள்ளன. மிகச் சக்தி வாய்ந்த இரண்டு படைத் திரட்டுகள் சோவியத் எல்லைகளுக்கு நேரடியாக அருகே மேற்கிலும் கிழக்கிலும் நிறுத்தப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றிலும் போர்த்தந்திரச் சக்தி கள், அதிநவீன ஆயுதங்களை உடைய பல்வேறு விதமான அணு ஆயுத சாதனங்கள் (இவை போர்க்காலத்திற்கேற்ப சகலவித அம்சங்களை யும் உள்ளடக்கியவை), தரைப்படை, வான் படை, கடற்படையின் செயல்முறை யூனிட்டு கள் உள்ளன.[133]

இன்றைய அமெரிக்க இராணுவ சித்தாந்தத் தின் அடிப்படையில் 200 வருட வரலாற்றை உடைய அமெரிக்க இராணுவ-அரசியல் சிந் தனையின் ஒரு சில நிரந்தரக் கோட்பாடுகள் உள்ளன. இவற்றில் பிரதானமான ஒரு கோட் பாட்டின்படி இராணுவ பலம்தான் அரசினு டைய சர்வதேச நிலைகளின் அஸ்திவாரமாகும். ''மேம்பாடு கிட்டத்தட்ட முழுவதுமாக அமெ ரிக்காவிடமிருந்த 50 மற்றும் 60ஆம் ஆண்டு களில்தான் மேற்கத்திய நாடுகளின் மிகக் கண்

கூடான வெற்றிகள் பெரும்பாலும் அடையப் பட்டன''[134] என்பதை ஆதாரமாகக் கொண்டு வாஷிங்டனின் பிற்போக்கு வட்டங்கள் இயங்கு வது கவனிக்கத் தக்கது. போர்த்தந்திர ஆயுதங் களை மட்டுப்படுத்துவது உட்பட பரவலான பிரச்சினைகளில் சோவியத்-அமெரிக்க உடன் பாடுகள் 70ஆம் ஆண்டுகளில் அமெரிக்கா ஒப் பீட்டளவில் பலவீனமான நிலையிலிருந்ததால் தான் அடையப்பட்டன என்று ரீகன் நிர்வா கத்தின் தத்துவகர்த்தாக்களும் போர்த்தந்திர வாதிகளும் கருதுகின்றனர். பேச்சுவார்த்தை களை ஆரம்பித்து நடத்த ஒப்புக்கொள்வதே இவர்களைப் பொறுத்தமட்டில் பலவீனத்தின் அடையாளமாகும்.

அணு ஆயுத யுத்தத்தை நடத்தி வெற்றி பெறும் வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காக இரா ணுவ இயந்திரத்தை இடையறாது பெரிதாக்கிய ஆளும் வர்க்கம் அதே நேரத்தில், உலக அரங்கில் அமெரிக்க இராணுவ பலத்தை முழு அரசியல் செல்வாக்கின் காரணியாக மாற்றவும் விடாப் பிடியாக முயற்சித்தது. ஆனால் இம்முயற்சிகள் இறுதியில் எப்போதுமே எதிர்பார்த்த பலன் களை அளிக்கவில்லை. என்றாலும் இன்றுவரை அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமை இரா ணுவ மேம்பாட்டை அடையும் மாயமான நோக்கை ஆதாரமாகக் கொண்டு மேலாதிக்கக் கொள்கையைத் தொடர்ந்து உறுதியாகக் கைப் பற்றி வருகிறது.

சர்வதேசப் பிற்போக்கு, ஆக்கிரமிப்பு சக்தி களிடம் தாக்குதலுக்கான பலத்த நவீன சாத

னங்களும் பெரும் பொருளாதார, விஞ்ஞான-தொழில்நுட்ப, இராணுவ உள்ளாற்றலும் ஏராளமான ஆள் பலமும் இயற்கை மூலாதாரங்களும் உள்ளன என்பது சோவியத் யூனியனுக்குத் தெரியும். இச்சக்திகளின் ஆக்கிரமிப்புத் தயாரிப்புகளும் இராணுவ-போர்த்தந்திரக் கருத்தமைப்புகளும் உலக சமாதானத்திற்கு உண்மையான அபாயத்தை ஏற்படுத்துகின்றன. சோவியத் நாட்டின் மாற்றமில்லா நிலை திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டது: ''இப்போது நிலவும் சமன்நிலையைத் தக்கவைப்பது, இராணுவ சச்சரவை மேற்கொண்டு குறைப்பது, எல்லாத் தரப்புகளுக்கும் ஒரே விதமான பாதுகாப்பு நிலவ இராணுவத்தையும் ஆயுதங்களையும் குறைப்பது ஆகியவைதான் சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்கான அடிப்படைகளாகும். ஆயுதப் போட்டியில், அதுவும் அணு ஆயுத யுத்தத்தில் வெற்றியை எதிர்பார்ப்பது பைத்தியக்காரத்தனமாகும். இது ஆபத்தான முட்டாள்தனம். எங்களுக்கு மேற்கு நாடுகளை விட இராணுவ மேம்பாடு தேவையில்லை. எங்களுக்கு நம்பகரமான பாதுகாப்பு மட்டுமே வேண்டும். இதற்கு வகை செய்ய சுமாரான சமத்துவமும் சமன்நிலையும் போதுமானது.''[135]

கிட்டத்தட்ட முப்பதாண்டுகளுக்கும் மேலாக ஆயுதப் போட்டியை, முக்கியமாக பேரழிவு சாதனங்களின் போட்டியைக் கட்டவிழ்த்து விட்டதற்கான பொறுப்பு முழுக்கமுழுக்க அமெரிக்க ஆளும் வர்க்கத்தைத்தான் சாரும். எல்லா மட்டங்களிலும் போர்த்தந்திர ஆயுதப் போட்டி

யை ஆரம்பித்து வைத்ததும் இதைத் தொடருவ தும் அமெரிக்காதான். 1945ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் உலகம் மனிதகுல வரலாற்றிலேயே மிக அழிவுகரமான ஆயுதமாகிய அணு ஆயுதம் தோன்றியதைப் பற்றி அறிந்தது. இராணுவ நோக்கங்களுக்காக அணு சக்தியைப் பயன் படுத்துவதைத் தடை செய்வது பற்றி சோவியத் யூனியன் இதற்கடுத்த ஆண்டுகளில் கூறிய முன் மொழிவுகள் அமெரிக்காவால் நிராகரிக்கப்பட் டன. தன்னை எதிர்நோக்கிய ஆபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சோவி யத் யூனியன் பதில் நடவடிக்கைகளை மேற் கொண்டது, தன் சொந்த அணு குண்டைத் தோற்றுவித்தது.

50ஆம் ஆண்டுகளில் ''குண்டு வீச்சு விமானங் களில் பின்தங்கியிருப்பதாக'' சாக்கு சொல்லி பெண்டகன் காங்கிரசிலிருந்து பெரும் நிதி ஒதுக் கீடுகளைப் பெற்று போர்த்தந்திரக் குண்டு வீச்சு விமானங்களை உற்பத்தி செய்யும் பரவ லான செயல்திட்டத்தை நிறைவேற்றத் துவங்கி யது. அமெரிக்காவில் இத்தகைய விமானங் களின் ஒரு பெரும் படையே ஏற்படுத்தப்பட்ட போது சோவியத் குண்டு வீச்சு விமானங்களின் எண்ணிக்கை வேண்டுமென்றே 3—4 மடங்கு உயர்த்தி கூறப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

60ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் ''ராக்கெட்டு களின் விஷயத்தில்'' ஏதோ பின்தங்கியிருப்பதாக கூச்சல் கிளம்பியது. தரையில் வைக்கப்படும், கண்டம் விட்டு கண்டம் செல்லும் பாலிஸ்டிக் ராக்கெட்டுகளை அமெரிக்கா பரவலாக நிறுவ

ஆரம்பித்தது. இப்படிப்பட்ட ராக்கெட்டுகள் ஆயிரத்திற்கும் அதிகமாக நிறுவப்பட்ட போது தான் சோவியத் ''ராக்கெட் அபாயமும்'' 15-20 மடங்கு மிகைப்படுத்தப்பட்டது ''தெரிய வந்தது''. அதே நேரத்தில் பாலிஸ்டிக் ராக் கெட்டுகளுடன் கூடிய 41 அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்டும் திட்டமும் தீட்டப்பட்டது. அந்நேரத்தில் இது போன்ற கப்பல்கள் உலகில் யாரிடமும் இருக்கவில்லை. 60ஆம் ஆண்டுகளின் மத்தியிலேயே பெண்டகன் நீர்மூழ்கிக் கப்பல் களின் ராக்கெட்டுகளில் ஒன்றிலிருந்து ஒன் றாகப் பிரியும் போர்முகங்களை வைக்கத் துவங் கியது. ஏழு ஆண்டுகள் கழித்துதான் சோவியத் யூனியனிடம் பாலிஸ்டிக் ராக்கெட்டுகளுடன் கூடிய நீர்மூழ்கிக் கப்பல்கள் தோன்றின.

அமெரிக்க ஐக்கிய நாடுதான் முதலாவதாக 70ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் போர்த்தந்திர பாலிஸ்டிக் ராக்கெட்டுகளில் இலக்கை நோக்கி சுயமாகச் செல்லவல்ல பல போர்முகங்களை நிறுவி ஆயுதப் போட்டியின் புதிய சுற்றிற்கு வழிகோலியது. சோவியத் யூனியன் 1975—1977இல்தான் இத்தகைய போர்முகங்களை வைக்கத் துவங்கியது. இதற்குப் பின் அமெ ரிக்கா, புதிய வித போர்த்தந்திர ஆயுதமாகிய நெடுந்தொலைவு அணு ஆயுத உலாவு ராக் கெட்டுகளை ஏற்படுத்துவதில் (இவை வானிலும் தரையிலும் கடலிலும் நிறுவப்படலாம்) மும்முர மாக இறங்கியது. இறுதியாக 1981இல் அமெரிக்க ஜனாதிபதி நியூட்ரான் குண்டுகளை முழு அள வில் உற்பத்தி செய்ய முடிவு செய்தார். விண்

வெளியிலிருந்து வேவுபார்க்கும் சாதனங்கள், ''ஷட்டில்'' எனும் பல் நோக்குள்ள விண்வெளி அமைப்பு, AWACS எனும் தொலைதூர ரேடார் கண்டுபிடிப்பு முறைகள் ஆகியவற்றைத் தோற்று விக்கும் பிரச்சினைகளின் விஷயத்திற்கும் இது பொருந்தும். இவையெல்லாம் முதலாவதாக பெண்டகனிடம்தான் தோன்றியதே தவிர சோவியத் இராணுவத்திடம் அல்ல.

சோவியத் யூனியன் தன் இராணுவ பலத்தை உருவாக்கும் போது மேற்கு நாடுகள் ஏற் படுத்திய அச்சுறுத்தல்களுக்குப் பதிலளிக்கும் விதத்தில் மட்டுமே செயல்பட்டது தெளிவு.

அணு ஆயுதக் கலைப்பை எதிர்ப்பவர்கள் ஆயுதப் போட்டியின் அடுத்த சுற்றுகளை முடுக்கி விட மிகவும் பிரயாசைபடுகின்றனர். மேன்மை நிலையை அடைவது, உருவாகியுள்ள இராணுவ சமன்நிலையை, இராணுவ-போர்த்தந்திர சமத் துவத்தை தனக்கு ஆதரவாக மாற்றுவது, இரா ணுவ பலத்தை அடிப்படையாகக் கொண்டு மற்ற நாடுகளின் மீது அமெரிக்க வாழ்க்கை முறையை சுமத்துவது ஆகியவைதான் இவர் களின் நோக்கமாகும்.

ஆரம்ப நாட்களிலிருந்தே இன்றைய அமெ ரிக்க நிர்வாகம் மிக ஆபத்தான ஆக்கிரமிப்பு கொள்கையை — உலகளாவிய அளவில் அமெரிக் காவிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையில் ''நேரடியான மோதல்'' எனும் போர்த்தந்திரத் தை — உருவாக்குவதில் இறங்கியுள்ளது. அமெ ரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் கா. வெயின்பர் கரின் அறிக்கையின்படி, முழுமையான, சந்தே

கத்திற்கிடமற்ற இராணுவ மேன்மையை அடைவது, உலகில் அமெரிக்காவின் தலைமைப் பாத்திரத்தைப் புனர்நாட்டுவது, உலகின் பல்வேறு பகுதிகளிலும் தன் ஜீவாதார நலன்களைப் பாதுகாக்கும் போது சோவியத் யூனியனுக்குத் தீவிர எதிர்ப்பைக் காட்டுவது, சோஷலிச முகாமைக் "கொத்திக் குதறுவது" ஆகியவைதான் மேற்கூறிய போர்த்தந்திரத்தின் முக்கிய லட்சியமாகும். இதன் தொடர்பாக பாதுகாப்பு துணை அமைச்சராகிய பி. கார் லூச்சி அமெரிக்கா "அணு ஆயுத யுத்தத்தை நடத்தும் வாய்ப்புகளைப்" பெற வேண்டுமென அறைகூவல் விடுத்தார். வெயின்பர்கரோ அணு ஆயுத யுத்தத்தில் "வெற்றி பெறும்" அவசியம் குறித்து தம்பட்டமடித்தார்.[136] 1983ஆம் ஆண்டிற்கான இராணுவ பட்ஜெட் குறித்து காங்கிரசிற்கு சமர்ப்பிக்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சரின் அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: "பாதுகாப்புத் துறையில் அமெரிக்க கொள்கை பதில் நடவடிக்கைகளுக்கான தயார் நிலைக்கும் தேவையெனில் சாதாரண அல்லது அணு ஆயுத யுத்தத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கும் வகை செய்கிறது"[137].

"'புதிய இராணுவப் போர்த்தந்திரத்தின்' வளர்ச்சியில் இரண்டு கருத்தமைப்புகள் — 'தீவிர எதிர்ப்பு' மற்றும் 'பூகோள ரீதியான விஸ்தரிப்பு' — உருவாக்கப்படுகின்றன" என்று சோவியத் மார்ஷல் அகார்க்கவ் கோடிட்டுக் காட்டுகிறார். "'தீவிர எதிர்ப்பு' எனும் கருத்தமைப்பானது மட்டான அணு ஆயுதத் தாக்குதல்

என்றழைக்கப்படுவது முதல் அணு ஆயுதத்தைப் பெருமளவில் பயன்படுத்தி சோவியத் யூனியன், மற்ற சோஷலிச முகாம் நாடுகளில் உள்ள எல்லா இலக்குகளின் மீதும் தொடுக்கப்படும் தாக்குதல்கள் வரை பல்வேறு விதங்களில் போர்த்தந்திர அணு ஆயுதங்களைப் பயன்படுத்து வதைத் திட்டமிடுகிறது. பெண்டகனின் கருத்துப் படி அமெரிக்காவிடம் பலம் மிக்க போர்த்தந் திர அணு ஆயுத சக்திகள் இருப்பதும் 'ஐரோப் பிய போர்த்தந்திர' அணு ஆயுத சக்திகள் என்றழைக்கப்படும் பெரும் சக்திகளைத் தோற்று விப்பதும் ஐரோப்பியப் போர்க்களத்தில் 'மட்டான' அணு ஆயுத யுத்தத்தில் (அதாவது இது உலக யுத்தமாக மாறாத நிலையிலேயே) அரசியல் மற்றும் இராணுவ நோக்கங்களை அடையும் வாய்ப்பை ஏதோ அதிகப்படுத்து கிறதாம்.''[138]

புதிய ஆயுதப் போட்டிக்கான அறைகூவலை விடுப்பதன் மூலம் நாடு முழுவதையும் இராணுவ-மயமாக்கும் பாதையை, உலகை ஆளுவதற்கான தமது மேலாதிக்கவாத திட்டங்களை நிறை வேற்றுவதற்காக இராணுவ பலத்தை பரவலான இராணுவ சச்சரவுகளில் பயன்படுத்தும் பாதை யைத் தாம் மேற்கொள்வதை அமெரிக்க ஆளும் வட்டங்கள் மறைக்கவில்லை.

வாஷிங்டனில் உள்ள இராணுவ-அரசியல் தலைவர்கள் கருதும்படி, சோவியத் யூனியனுக்கு எதிரான அணு ஆயுத யுத்தம்தான் இன்று தமது லட்சியத்தை அடைவதற்கான பிரதான வழியாகும். முதலாவதாக அழிவுத் தாக்குதலைத்

தொடுப்பது அல்லது ''எதிர்சக்தி திறமை'' எனும் கருத்தமைப்பில் இந்த லட்சியம் மிகத் தெளிவாகத் தெரிகிறது. இந்த பேரரசு சித்தாந் தத்திற்கான கருத்துப் போர்வையைத் தந்து ''தத்துவார்த்த'' அடிப்படையை அளித்த அமெ ரிக்க இராணுவ இயந்திரத்தின் சேவை நிறுவ னங்கள் சோவியத் யூனியன் ஏதோ இந்த திறமையை அடைந்து விட்டதாக கூறுகின்றன. முதலாவதாக தாக்குதலைத் தொடுப்பதற்கான தயாரிப்பைப் பற்றிய கருத்தையே உயர் மட்ட சோவியத் தலைமை இரு பொருளின்றி நிரா கரித்து விட்ட ஒரு சூழ்நிலையில் இவ்வாறு பேசப்படுகிறது. கண்டம் விட்டு கண்டம் செல் லும் சோவியத் பாலிஸ்டிக் ராக்கெட்டுகள் மிகத் துல்லியமாக இலக்குகளைத் தாக்கும் திறமை படைத்தவை என்பதால், சோவியத் யூனியனின் எண்ணங்கள் எப்படிப்பட்டவையாக இருந்தா லும், இந்த அம்சம் முதல் தாக்குதலுக்கான வாய்ப்பை இதற்கு அளிப்பதாக பெண்டகனின் நவீன போர்த்தந்திரவாதிகளும் இவர்களுக்கு சேவை புரியும் விஞ்ஞானத் துறை வட்டங்களும் தந்திரமாக கூறுகின்றனர். சோவியத் யூனியனின் எண்ணங்கள் ஏதோ தெரியாதவையாதலால் அமெரிக்கா தானே இத்தகைய வாய்ப்பைப் பெற வேண்டுமாம். இதுதான் சோவியத் யூனியனின் மீதான இராணுவ மேன்மையை அடைவதை நோக்கமாகக் கொண்ட கொள்கை யை ஆதாரப்படுத்தும் தவறான ''தர்க்கம்'' ஆகும்.

இராணுவ மேம்பாட்டை நாடும் போர்த்தந்திர

வாதிகள் வேண்டுமென்றே சோவியத் நோக்கங்களை மாற்றிக் கூறுகின்றனர், தமக்கு அனுகூலமான சந்தர்ப்பங்களில் சோவியத் வாய்ப்புகளைக் கொச்சைத்தனமாக திரித்துரைக்கின்றனர். இவர்கள் சோவியத் வாய்ப்புகளின் தற்காப்புத் தன்மையைக் கவனிக்க விரும்பவில்லை, அதே நேரத்தில் உண்மைகளுக்கு மாறாக, அமெரிக்க ஆயுத முறைகள் முற்றிலுமாக தற்காப்பிற்காகவே தோற்றுவிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். இப்படிப்பட்ட பொய்கள் தோன்றும் முறையை வெளிப்படுத்தி அமெரிக்க ஆராய்ச்சியாளர் பின்வருமாறு கூறுகிறார்: ''ஒரு சில வாய்ப்புகளில் சோவியத் யூனியன் நம்மை விட பின்தங்கியிருந்தால்... இவ்வாறாக இது நமக்கு ஆபத்தானது என்பதை மெய்ப்பிக்க முடியாமல் உள்ளது என்றால் ஆபத்து என்று கூச்சலிடுபவர்கள் விஷயத்தையே மாற்றி, 1917 இலிருந்தே சோவியத் யூனியன் உலக ஆதிக்கத்திற்காக (இந்த லட்சியத்தை அடைவது இயலாது, இது யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டது என்பது அதற்கு நன்கு புரிந்தாலும்) பாடுபடுவதாக சுட்டிக் காட்டி சோவியத் நோக்கங்களைப் பற்றி பேச ஆரம்பிக்கின்றனர்''[139].

எதிர்சக்தி வாய்ப்புகள் இருப்பதானது ஒரு நீண்டகால அணு ஆயுத யுத்தத்தை (இதில் இராணுவம் சம்பந்தமான இடங்கள், தலைமை மையங்கள், எதிரியின் பழிவாங்கும் சக்திகள் மட்டுமே பாதிக்கப்படுமாம்) நடத்த உதவும் என்று இன்றைய அமெரிக்க நிர்வாகத்தின் போர்த்தந்திரவாதிகள் கூறுகின்றனர். ''எதிர்

சக்தி'' சித்தாந்தத்தில் ஏதோ சிவில் மக்கள் தாக்குதலிலிருந்து காப்பாற்றப்படுவதால் இது மனிதாபிமானது என்று கூட சித்தரிக்கப்படு கிறது. ஆனால் பல முக்கிய இராணுவ அமைப்பு கள் பெரிய நகரங்களிலோ இவற்றிற்கு அருகி லுள்ள இடங்களிலோதான் உள்ளன என்பது குறித்து இக்கருத்தமைப்பின் ஆதரவாளர்கள் மௌனம் சாதிக்கின்றனர். இராணுவ அமைப்பு கள் தாக்கப்பட்ட பின் எதிரியிடம் எஞ்சியுள்ள அணு ஆயுதச் சக்திகள் பழிவாங்குவதற்காக எல்லா இலக்குகளின் மீதும் பயன்படுத்தப் படாது என்றும் நிச்சயமில்லை. தலைமை மையங்கள் அழிக்கப்பட்ட பின் (முதல் தாக்குதல் போர்த்தந்திரம் இப்படித்தான் சொல்லுகிறது) யுத்தம் ''சாதாரண'' அல்லது மட்டான பாதையில் செல்லும் நம்பிக்கை மறைகிறது என்பதையும் இதோடு சேர்த்து கொள்ள வேண்டும். ஏனெனில் இயற்கை யாகவே எதிரி தன்னிடம் எஞ்சியுள்ள போர்த் தந்திர சக்திகளைத் தன் விருப்பப்படி, தன் நாட்டு நலன்களுக்காகப் பயன்படுத்துவான், முழு பழிவாங்கும் தாக்குதலைத் தொடுக்க அவனுக்கு எல்லா தார்மீக உரிமையும் இருக்கும்.

''முதல் தாக்குதல்'' சித்தாந்தத்தைக் கை விட்டு விட்டதாகக் கூறியதன் மூலம் 60ஆம் ஆண்டுகளிலிருந்து துவங்கி அமெரிக்கப் பொது மக்களையும் உலகம் முழுவதையும் வேண்டு மென்றே ஏமாற்றி வந்துள்ளனர். எதிர்சக்தி, மட்டான அணு ஆயுத யுத்தத்தோடு

தொடர்புடைய அபாயம் மிகப் பெரியது ஏனெனில் இது சர்வபொது அணு ஆயுத சச்சரவாக மாறும் பெரும் அபாயம் உள்ளது என்று அமெரிக்க இராணுவ-அரசியல் தலைவர்கள் கூறினர். உண்மையில், ''மட்டான'' அணு ஆயுத யுத்தத்தைப் பற்றிய வாதமும் இதில் தப்பி உயிர்வாழும் நம்பிக்கைகளும் அணு ஆயுத யுத்தத்தை மேன்மேலும் யதார்த்தமானதாக ஆக்கின என்பது நெடு நாட்களுக்கு முன்பே தெரிந்திருந்தது. அதே நேரத்தில் ''கட்டுப்படுத்தி வைக்கும்'' அமெரிக்க சக்திகளின் தாக்கப்பட முடியா தன்மை தேசியப் பாதுகாப்பைக் காப்பாற்றுவதற்கு போதுமானது என்றும் இது போர்த்தந்திர அணு ஆயுதத் தளவாடங்களை மேற்கொண்டு பெருக்குவதை ''உபரியானதாக'' ஆக்குமென்றும் கூறப்பட்டது.

ஆனால் நடைமுறையில் அமெரிக்கா எப்போதுமே ''முதல் தாக்குதல்'' கருத்தமைப்பை நிராகரிக்கவில்லை. அமெரிக்க ஜனாதிபதியின் 59ஆவது ஆணை இதை மெய்ப்பிக்கிறது. சோவியத் யூனியன் ஏதோ தன் எதிர்சக்தி வாய்ப்புகளை வளர்ப்பதாயும் எனவே அமெரிக்கா மீண்டும் ''பின்தங்கி விட்டதாகவும்'' பொறுப்பின்றி கூறப்பட்ட கூற்றே இந்த ஆணை தோன்ற சாக்காக அமைந்தது. இந்தப் புதிய ''பின்தங்கலும்'' மற்றவற்றைப் போன்றே பொய்யானதாக இருந்தது, ஏனெனில் அமெரிக்க ராக்கெட்டுகளின் இலக்கைத் தாக்கும் துல்லியம் அமெரிக்காவிற்கு எப்

போதோ எதிர்சக்தி வாய்ப்புகளை அளித்தது. இது தவிர, பெரும் எண்ணிக்கையிலான ராக்கெட்டுகளை வைத்திருந்ததன் மூலம் 1964இலிருந்தே வாஷிங்டனால் இவற்றில் நூற்றுக்கணக்கானவற்றை சோவியத் நாட்டின் இராணுவ இலக்குகளுக்கு எதிராக வைக்க முடியும்.

இராணுவ இலக்குகளைத் தாக்குவது 16 ஆண்டுகளாக அமெரிக்காவின் எல்லா செயல்முறைத் திட்டங்களின் அங்கமாக இருந்தது. ஜனாதிபதியின் 59ஆவது ஆணை ஆமோதிக்கப்பட்ட பின் இத்திட்டங்களில் கடைசி திட்டத்திற்கு (இதுதான் இப்போது நடைமுறையில் உள்ளது) எவ்வித திருத்தங்களையும் சேர்க்க வேண்டியதில்லை என்பதே இதற்கான சான்றாகும்.[140] ஆணை கையெழுத்தானதுமே கார்ட்டர் நிர்வாகம், MX ராக்கெட்டுகள் சம்பந்தமான விவாதங்களின் போது தான் இரண்டு ஆண்டுகளாக மறுத்து வந்த ஒரு அம்சத்தை ஒப்புக்கொண்டது: இந்த ராக்கெட்டுகள் முதல் தாக்குதலைத் தொடுப்பதற்கான துல்லியத்தைப் பெற்றிருக்கும்.

தாக்குவதற்கு மிகக் கடினமான இலக்குகள் தரையில் பாலிஸ்டிக் ராக்கெட்டுகளை நிறுத்துவதற்காகக் கட்டப்படும் அதி உறுதியான சுரங்கங்களாகும் என்பது தெரிந்ததே. மாஸச்சுஸெட்சில் உள்ள பாதுகாப்பு, படைக்கலைப்பு ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த ரே. போர்ஸ்பெர்கின் வார்த்தைகளின்படி இதுவரை 90 சத

விகித துல்லியத்துடன் இலக்குகளைத் தாக்க வல்ல ஒரே போர்முகம் ''மினிட்மென் III '' ராக்கெட்டுகளில் நிறுவப்படும் MK-12A போர் முகமாகும். கிட்டத்தட்ட 100 இப்படிப்பட்ட போர்முகங்கள் ஏற்கெனவே வைக்கப்பட்டு விட்டன.[141] ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த சோவியத் அமைப்புகளுக்கு ஏற்பட்டுள்ள அபா யம் குறித்து சோவியத் யூனியனால் கவலைப் படாமலிருக்க முடியாதென்று பெண்டகனின் நிபுணர்களே ஒப்புக்கொள்கின்றனர். அமெரிக்க நடவடிக்கைகள்தான் ஆபத்தான போர்த்தந் திர நிலவரத்தை ஏற்படுத்தி, பதில் நட வடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சோவியத் யூனியனை நிர்ப்பந்திக்கின்றன என்பதை இந்த ஒப்புதல்களே இன்னுமொரு முறை மெய்ப்பிக்கின்றன.

அமெரிக்க இராணுவ இயந்திரத்துடன் சேர்ந்து இயங்கி ''முதல் தாக்குதல்'' சித்தாந் தத்திற்கு ஊக்கமளிக்கும் பூர்ஷ்வா செய்தி ஒலிபரப்பு சாதனங்கள் அமெரிக்காவில் இரா ணுவ வெறியையும் தேசிய வெறியையும் வளர்ப்பதில் பெரும் பங்காற்றுகின்றன. ''எதிர் சக்திக்'' கருத்தமைப்பின் ஆசிரியர்கள், அணு ஆயுதப் போர் மூண்டால் அதில் நகரங்களை அழிவிலிருந்து காப்பாற்றும் வாய்ப்புகள் சம்பந்த மாக ஆபத்தான மாயைகளுக்குத் தூபம் போடுகின்றனர். ''எதிர்சக்தி'' சித்தாந்தத்திற்கு ஏற்ப ஒரு அரசு இராணுவ இலக்குகளின் மீது மட்டும் முதலாவதாக பதில் தாக்குதலைத் தொடுக்குமென்றும் முதல் பரஸ்பர அணு

ஆயுதத் தாக்குதல்களுக்குப் பின் தன் நகரங்கள் பாதிக்கப்படாதென்றும் ஒரு அரசு கருதினால் நகரங்களை இழந்து விடுவோமோ என்ற அச்சத்தின் கட்டுப்படுத்தும் தன்மை மறைந்து முதலாவதாக தாக்குதலைத் தொடுக்கும் ஆசை ஏற்படும்.

அமெரிக்கா திடீர் தாக்குதலைத் தொடுத்தால் அது மிக மேம்பாடான சூழ்நிலைகளை ஏற்படுத்துமென்றும் இதனால் சர்வபொது அழிவு அபாயத்திற்குப் பதிலாக தமக்கு அனுகூலமான நிபந்தனைகளில் சமாதானத்தை அடையலாம் என்றும் ''முதல் தாக்குதலின்'' போர்த்தந்திரவாதிகள் கூறுகின்றனர்.

எதிர்சக்தி வாய்ப்புகளும் முதல் தாக்குதல் என்ற அச்சுறுத்தலும் அணு ஆயுத சச்சரவின் எல்லாக் கட்டங்களிலும் ஆதிக்கம் செலுத்த உதவுமென்று அமெரிக்கத் தலைவர்கள் கருதுகின்றனர். ''உலக அரங்கில் தண்டனைகளின்றி இயங்கும் வாய்ப்பைத் திரும்பப் பெற ரீகன் நிர்வாகம் முயலுகிறது''[142] என்கிறார் டா. ஜேர்வெஸி. ஆனால் அணு ஆயுத சச்சரவு மூண்டால் பொதுவான அணு ஆயுத அழிவை எப்படித் தவிர்க்கலாம் என்று அமெரிக்கப் போர்த்தந்திரவாதிகளில் யாரும் விளக்கவில்லை. ''ஒப்புக்கொள்ள முடியாத அழிவுகளை'' ஒருவருக்கொருவர் பரஸ்பரம் ஏற்படுத்துவதற்குப் பதில் நீண்டகால மற்றும் ''மட்டான'' அணு ஆயுத யுத்தம் என்ற கருத்து தமக்கு அதிக ''யதார்த்தமானதாகத்'' தோன்றுவதாக மட்டுமே அவர்கள் கூறுகின்ற

னர். ஆனால் அணு ஆயுத யுத்தம் பரவு வதைத் தடுக்கும் வாய்ப்பு உண்டு என்று நம்பிக் கொண்டிருப்பவர்களை யதார்த்தவாதி கள் என்று அழைப்பது கடினம்.

ஒரு சில அமெரிக்க நிபுணர்களின் கருத்துப் படி, 1966இல், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கட்டுப்படுத்தும் தன்மையைத் தக்கவைக்கலாம் என்ற முடிவிற்கு வந்த போதே அமெரிக்கா வால் அணு ஆயுதத் தளவாடங்களின் பெருக் கத்தை நிறுத்தி வைத்திருக்க முடியும். ஆனால் அமெரிக்கா இதைச் செய்யவில்லை. இன்றோ கடந்த பத்தாண்டு காலத்தில் சோவியத் யூனியன் ''இதுவரையில்லா அளவிற்கு'' தன் அணு ஆயுத வாய்ப்புகளைப் பெருக்கியுள்ளதாக ரீகன் குழுவின் உயர் மட்ட உறுப்பினர்களும் ஜனாதிபதியும் குற்றஞ்சாட்டுகின்றனர். இந்தக் காலகட்டத்தில் சோவியத் யூனியன் எப்போது மே சமன்நிலையை நோக்கி சென்று கொண் டிருந்ததே தவிர வேறில்லை எனும் நன்கு தெரிந்த உண்மையை அவர்கள் வெட்கங் கெட்ட முறையில் மறைக்கின்றனர். எந்த அமெரிக்க ஐக்கிய நாடு அவர்களுடைய சொற்களின்படி ''பொறுமையைக்'' கடைப் பிடித்ததோ அந்த அமெரிக்கா உண்மையில் கடந்த பத்தாண்டில் தமது போர்முகங்களின் எண்ணிக்கையை 4,000இலிருந்து 9,500 வரை உயர்த்தியது (சோவியத் யூனியன் இக்காலகட் டத்தில் தனது போர்முகங்களின் எண்ணிக்கை யை 7,000 வரை மட்டுமே உயர்த்தியது) எனும் உண்மையைப் பற்றியும் அவர்கள்

வேண்டுமென்றே மௌனம் சாதிக்கின்றனர்.

பேரரசுப் போர்த்தந்திரவாதிகளுடைய கருத்தின்படி கிட்டத்தட்ட இத்தகைய விகிதம்தான் ''சமன்நிலை'' ஆகும். போர்த்தந்திர அணு ஆயுதத் தளவாடங்களில் சோவியத் யூனியன் அமெரிக்காவிற்கு ஏறக்குறைய சமமாக இருப்பது அவர்களுக்கு மிகவும் ஏற்புடையதாக இல்லை. 1966இலிருந்து அமெரிக்கா பாலிஸ்டிக் ராக்கெட்டுகளின் பொது எண்ணிக்கையை மாற்றாமல், சோவியத் யூனியனை விட தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்டு நிற்கும் கொள்கையை மேற்கொண்டு தமது ராக்கெட்டுகளின் துல்லியத்தை அதிகப்படுத்த அயராது பாடுபட்டது என்பது தெரிந்ததே. முதல் தாக்குதலுக்கு அவசியமான துல்லியத்தை அதிகப்படுத்தும் தொழில்நுட்ப வாய்ப்புகள் தோன்றியதுமே புதிய மட்டத்தில் முதல் தாக்குதலுக்கான இந்த திறமையை அடைவதில் அமெரிக்கா இறங்கியது. இது தன் பங்கிற்கு, ''அணு ஆயுத நிர்ப்பந்தத்தின்'' உதவியோடு செயல்படுத்தப்படும் அமெரிக்கப் பேரரசிற்கான நம்பிக்கைகளைத் திரும்பவும் ஏற்படுத்தியது. இந்த நோக்கங்களுடன்தான் அமெரிக்க இராணுவ-அரசியல் தலைமை ''எதிர்சக்தி'' சித்தாந்தத்தை ஏற்றது.

''எதிர்சக்தி'' கருத்தமைப்பின் அபாயம் என்னவெனில், இது அணு ஆயுத யுத்தத்தில் வெற்றி பெறலாம் எனும் மாயைகளை இராணுவ-அரசியல் தலைமைக்கு ஏற்படுத்துவதாகும். முதலாவதாக இது, ஒப்புக்கொள்ள

முடியாத அழிவு எனும் ஒரு கருத்து மறை வதைக் குறிக்கிறது. அணு ஆயுத யுத்தத்தில் இறுதி வெற்றி கிட்டுமானால் எந்த 'ஒரு அழிவும் ஏற்புடையதாகிறது. வங்கிகளும் இராணுவ கார்ப்பரேஷன்களின் பங்குதாரர் களும் தம்முடைய முதலீடுகள் இவற்றிற் கேற்ற லாபங்களைக் கொண்டு வர வேண்டு மென இராணுவ-தொழில்துறை இணைய நிர்வாகிகளிடம் இருந்து கோருவது அணு ஆயுத முட்டாள்தனத்திற்கான முக்கியக் காரணங்களில் ஒன்றாகும். அணு ஆயுத மேன்மையின் உதவியோடு அமெரிக்கா கட்டுப் படுத்தக் கூடிய உலக வல்லரசின் மீதான விருப்பம் அணு ஆயுத முட்டாள்தனம் அதிகமாக வழிகோலுகிறது.

70ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் சக்தி களின் புதிய சமன்நிலையின் தாக்கத்தின் கீழ் அமெரிக்க ஆளும் மேல் மட்டத்தின் யதார்த்த சிந்தனையுள்ள பிரதிநிதிகள் வெளி நாட்டு, இராணுவக் கொள்கையை மாற்றி யமைக்கத் துவங்கினர்; சாராம்சத்தில் இது உலக யதார்த்தங்களை மனக்கசப்போடு ஒப்புக்கொண்டதைக் குறித்தது. முதலாவ தாக இது சோவியத் யூனியனுடன் உறவு களை மேம்படுத்தும் திசையில் வாஷிங்டன் கட்டாயமாகத் திரும்ப வேண்டியிருந்ததிலும் பதட்ட நிலைத் தணிவிற்காக இன்னும் சில நடவடிக்கைகளை எடுத்ததிலும் வெளிப்பட்டது. இந்த நிகழ்ச்சிப் போக்கானது, உலகில் நடை பெற்ற மாற்றங்களை ஒப்புக்கொள்ள விரும்

பாமல் புறவய ரீதியான நிகழ்ச்சிப் போக்கைப் பின்னோக்கித் திருப்ப ஆசைப்பட்ட ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவினருக்கும் எதிரெதிராக நிற்கும் இரண்டு சமூக அமைப்புகளின் சக்திகளின் விகிதம் மாறியுள்ளதை நிதான புத்தியோடு மதிப்பிட முயன்றவர்களுக்கும் இடையிலான கடுமையான உள்போராட்டச் சூழ்நிலைகளில் நடைபெற்றது.

அமெரிக்க கொள்கையின் எல்லாப் போக்குகளைக் குறித்தும் போராட்டம் நடந்தது. இவற்றில் ஒரு சிலவற்றில் யதார்த்தத்தை நோக்கிய திருப்பம் பிரகடனப்படுத்தும் தன்மையை மட்டும் பெற்றிருந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

''பல நேரங்களில் வெளிப்படையான, ஜனநாயகமான, யதார்த்தமான கோஷங்களுக்குப் பின் பாரம்பரியமான ஏகாதிபத்தியக் கொள்கை மறைந்திருந்தது''[143] என்று இதன் தொடர்பாக சோவியத் ஆராய்ச்சியாளர் கி. திரஃபீமென்கோ நியாயமாகக் குறிப்பிட்டார்.

யுத்தத்திற்குப் பிந்தைய மேலாதிக்கவாதக் கொள்கையிலிருந்து உலகின் யதார்த்தங்களை ஒப்புக்கொள்வதை நோக்கி 70ஆம் ஆண்டுகளின் முதல் பாதியில் ஏற்பட்ட திருப்பம் இப்போது மாறிவிட்டது. வாஷிங்டனில் மீண்டும் வல்லரசு மனநிலையும் இராணுவ பலத்தை ஆதாரமாகக் கொண்டு இராணுவ மேன்மையை அடையும் விருப்பமும் மேலோங்கி நிற்கின்றன.

அதே நேரத்தில் யதார்த்த சிந்தனையுள்ள

பல அமெரிக்கர்கள் இந்த ஆபத்தான பாதையை நிராகரிக்கின்றனர் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

இன்னுமொரு மிக முக்கிய அம்சத்தைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். அமெரிக்க ஆளும் வட்டங்கள் உண்மையை நேருக்கு நேர் பார்க்காவிடில், சோவியத் யூனியனைப் பற்றியும் இதன் கொள்கையைப் பற்றியும் தானே தோற்றுவித்துள்ள தவறான கருத்தை மாற்றாவிடில் நிலைமை சீர்படுமென்றும் சர்வதேச நிலவரம் சீரடையுமென்றும் எதிர்பார்ப்பது கடினம். பொய்யான சித்தாந்த உளநிலைப் படிவங்கள் சமாதான சகவாழ்வுப் பாதையில் தீவிரமான தடையாக உள்ளன.

இன்று வாஷிங்டனில் குறிப்பிட்ட வட்டாரங்கள் அமெரிக்க இராணுவ இயந்திரத்தை மேம்படுத்தவும் இது போதாதென்று அணு ஆயுத யுத்தத்திற்கு நடைமுறை ரீதியாகத் தயாராகவும் முயலுகின்றன. இதன் தொடர்பாக, **1796**இல் அமெரிக்க மக்களிடமிருந்து விடை பெறும் போது ஜார்ஜ் வாஷிங்டன் கூறியதைத் திரும்பச் சொல்லுவது பொருத்தமாயிருக்கும்: ''எந்த ஒரு தேசிய இனம் மற்றொரு தேசிய இனத்தை நிரந்தரமாக வெறுக்கிறதோ அல்லது நிரந்தரமாக பூஜிக்கிறதோ அது ஒரு குறிப்பிட்ட அளவில் தனக்குத் தானே அடிமையாகிறது. அது தனது காழ்ப்புணர்ச்சி அல்லது பற்றுணர்வின் அடிமையாகிறது. இரண்டு சந்தர்ப்பங்களிலுமே இது அந்த தேசிய இனத்தை அதன் கடமை

களிலிருந்து பிரித்து அதன் நலன்களைக் குலைக்கிறது.''[144]

அமெரிக்க இராணுவ இயந்திரத்தால் அரசியலை அடக்கியாள முடியுமா? இக் கேள்வி இன்று பெரும் முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

சோவியத் தலைமையும் சோவியத் மக் களும், இறுதியில் யதார்த்த சிந்தனையுள்ள சக்திகளின் குரல் மேலோங்கி ஒலிக்கும் என்று நம்புகிறார்கள். யதார்த்தமானது உலகில் அமெரிக்காவின் பங்கையும் முக்கியத்துவத்தையும் குறைத்து மதிப்பிடவே இல்லை. எதார்த்தமா னது அமெரிக்க அரசியல்வாதிகளின் முன்னும் மற்ற அரசுகளின் அரசியல்வாதிகளின் முன்னும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் பாதுகாப்பு பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் குறைப் பதைக் குறிக்கவில்லை. யதார்த்தப் போக்கு முதலாவதாக, அணு ஆயுத சகாப்தத்தின் உண்மைகளை ஒப்புக்கொள்வதைக் குறிக்கிறது, மனிதகுலமே அழிந்து, நாகரிகத்தின் அடிப் படைகள் சீர்குலைக்கப்படும் ஒரு பேரபாயம் மனிதகுலத்தை எதிர்நோக்கியுள்ளதை இது குறிக்கிறது. எல்லோருக்கும் தேவையான பாதுகாப்பை, அணு ஆயுத சகாப்தத்தின் ஒரே உண்மையான பாதுகாப்பைத் தேடும் அவசியத்தை ஒப்புக்கொள்வதை இது குறிக் கிறது. இறுதியாக, மேலாதிக்கவாத பாரம் பரியங்களையும் உலக பிரச்சினைகளைப் பலத்தின் மூலம் தீர்க்கும் பழக்கங்களையும் கைவிடுவதை இது குறிக்கிறது. இன்று

யதார்த்தப் போக்கு என்பது சுயபாதுகாப்பை, சமுதாயத்தின் சாதாரண வாழ்வைக் குறிக்கும் சொல்லாகி வருகிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலுள்ள உறவுகளின் வரலாற்று அனுபவத்தைக் கிரகிக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. ஆயுத உற்பத்தியைப் பெருக்கும் செயல்திட்டங்களால் சோவியத் யூனியனை ஒருதலைப்பட்சமான இணக்கங்களுக்கு இறங்கி வருமாறு கட்டாயப்படுத்த முடியாது. அமெரிக்கத் தரப்பின் செயல்களுக்குப் பதிலாக சோவியத் யூனியன் தனது ஆயுத சாதனங்களை நிறுவ வேண்டி வரும். சோவியத் யூனியனை விட இராணுவ மேன்மையை அடைவதை நோக்கமாகக் கொண்ட கொள்கைக்கு எதிர்காலமில்லை, இது யுத்த அபாயத்தை அதிகரிக்க மட்டுமே செய்யும்.

சோவியத் யூனியன் தான் முதலாவதாக அணு ஆயுதத்தைப் பயன்படுத்தாது என்று அறிவித்ததன் மூலம் உண்மையிலேயே வரலாற்றுச் சிறப்புள்ள ஒரு முடிவை எடுத்தது. இதில் மனிதகுலத்தை அணு ஆயுதப் பேரழிவிலிருந்து காப்பாற்றுவதற்கான உண்மையான வாய்ப்பு உள்ளது. அதிகாரபூர்வமான வாஷிங்டன் ''மட்டான'', ''இழுபறியான'' இன்னும் பிற வகையான அணு ஆயுத யுத்தங்களைப் பற்றி யோசித்து கொண்டிருக்கும் சூழ்நிலைகளில் இந்த முன்மொழிவை ஏற்பதில் ஏகாதிபத்திய ''கழுகுகள்'' காட்டி வரும் எதிர்ப்பு நன்கு புரிகிறது. அணு ஆயுதத்தைப் பயன்படுத்தும்

முடிவுதான் அமெரிக்க இராணுவக் கொள்கையின் மைய அம்சமாகும். நம் சகாப்தத்தின் யதார்த்தங்களைக் காணாமல் இருக்கவும் ''எப்படி, எங்கே அணு ஆயுத போர் புயல் மூண்டாலும் அது நிச்சயமாக நம் கட்டுப்பாட்டிலிருந்து நழுவி பொதுவான பேரழிவை உண்டாக்கும்''[145] என்பதைப் பார்க்காமல் இருக்கவும் வர்க்க வெறுப்புணர்வால் கண்ணவிந்து போயிருக்க வேண்டும். மற்ற அணு ஆயுத வல்லரசுகளும் சோவியத் உதாரணத்தைப் பின்பற்றி தாங்களும் முதலாவதாக அணு ஆயுதத்தைப் பயன்படுத்த மாட்டோம் என்று உறுதிமொழி தந்தால் அது அணு ஆயுத யுத்தத்தைத் தடுப்பதில் பெரும் பங்காக அமையும்.

இன்று அணு ஆயுத யுத்த அபாயத்தை அகற்றுவதை விட வேறு முக்கியக் கடமை இல்லை என்பதை ஆதாரமாகக் கொண்டு சோவியத் யூனியன், அணு ஆயுதங்களை மட்டுப்படுத்தி குறைப்பது சம்பந்தமாக அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளும் வழிகளைத் தேடி வருகிறது. சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் மார்ச் மாத முழுப் பேரவை கூட்டத்தில் (1985) கட்சி பொதுச் செயலாளர் மி. செ. கர்பச்சோவ் பின்வருமாறு கூறினார்: ''அமெரிக்க ஐக்கிய நாட்டை விட, நேட்டோ நாடுகளை விட ஒருதலைப்பட்ச மேம்பாட்டை அடையவும் இவற்றை விட இராணுவ மேம்பாடு அடைய

வும் நாங்கள் முயலவில்லை; நாங்கள் ஆயுதப் போட்டியை நிறுத்த விரும்புகிறோமே தவிர இப்போட்டியைத் தொடர விரும்பவில்லை; எனவே, அணு ஆயுதப் படைத் தளவாடங் களை முடக்கலாம் என்றும் மேற்கொண்டு ராக்கெட்டுகளை வைப்பதை நிறுத்தலாம் என்றும் நாங்கள் முன்மொழிகின்றோம்; நாங்கள் உண்மையிலேயே பெருமளவு ஆயுதக் குறைப்பை விரும்புகின்றோமே தவிர விண் வெளியிலோ, பூமியிலோ எங்கும் புதுப்புது ஆயுத சாதனங்களை ஏற்படுத்த விரும்ப வில்லை''[146]. எந்த ஒரு தரப்பிற்கும் இழப்பை ஏற்படுத்தாமல் அதே நேரத்தில் இரு தரப்பு களின் அணு ஆயுதத் தளவாடங்களையும் குறைக்கும் ஒரு நேர்மையான உடன்பாட்டிற் காக நாம் பாடுபடுகின்றோம். நவீன ஆயுதத்தின் விரைந்து செயல்படும் தன்மை, பலம் ஆகியவற்றை கவனத்தில் கொண்டால் பரஸ்பர சந்தேகங்கள் குறிப்பாக ஆபத்தான வை என்பதை சோவியத் யூனியன் கணக்கில் கொள்கிறது. முட்டாள்தனமான தற்செயல், தவறு, தொழில்நுட்ப பழுது கூட சோக மயமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். எனவே சுவிட்சுகளிலிருந்து விரல்களை அகற்றி ஆயுதங்களை நம்பகரமான பாதுகாப்பின் கீழ் வைப்பது அவசியம். சோவியத் யூனியனின் முன்மொழிவுகள் அனைத்தும் இதைத்தான் நோக்கமாகக் கொண்டவை. உடனடியாக அணு ஆயுதத் தளவாடங்களை முடக்க வேண்டும், போர்த்தந்திர ஆயுதங்களை

மட்டுப்படுத்தி, கணிசமாகக் குறைக்க வேண்டும், ஐரோப்பாவிலுள்ள அணு ஆயுதங்களின் மட்டத்தைப் பெரிதும் குறைக்க வேண்டும், விண்வெளியை இராணுவமயமாக்குவதைத் தடுக்க வேண்டும், இரசாயன ஆயுதங்களைத் தடை செய்து ஒழிக்க வேண்டும். இவையும் மற்ற நடவடிக்கைகளும் யதார்த்தமானவை, எல்லா அரசுகளின் நலன்களுக்கும் சமாதான நாட்டமுள்ள மக்களின் கோரிக்கைகள், நம்பிக்கைகளுக்கும் சமமான அளவில் ஏற்புடையவை. அணு ஆயுதத்தை வைத்திருக்கும் வல்லரசுகளுக்கு இடையிலான உறவுகள் கடைப்பிடிக்க வேண்டிய குறிப்பிட்ட வரையளவுகளைப் பற்றிய ஒப்பந்தம் சம்பந்தமாகவும் இவற்றைக் கட்டாயமாக்குவது குறித்தும் சோவியத் யூனியன் வைத்த முன்மொழிவுகளும் இப்படிப்பட்டவையே.

ஐரோப்பாவில் இடைத்தொலைவு ராக்கெட்டுகளை நிறுவுவதை சோவியத் யூனியன் ஒருதலைப்பட்சமாக நிறுத்தி, இதே போன்ற நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு அறைகூவல் விடுத்தது.

மத்திய ஐரோப்பாவில் இரு தரப்புகளின் இராணுவங்களையும் ஆயுதங்களையும் குறைப்பதில் இறங்குமாறும், முதலில் சோவியத் மற்றும் அமெரிக்கத் துருப்புகளைக் குறைக்குமாறும் சோவியத் யூனியன் முன்மொழிந்தது.

விண்வெளிப் பரப்பில் சமாதான ஆராய்ச்சிகளில் சர்வதேச ஒத்துழைப்பு பற்றிய முன்மொழிவை சோவியத் யூனியன் ஐ.நா. சபை

யில் வைத்தது.

பரஸ்பரம் ஒவ்வொரு நாட்டின் பரப்பையும் எட்டக் கூடிய அமெரிக்க, சோவியத் அணு ஆயுதத் தளவாடங்களை 50 சதவிகிதம் குறைக்கலாம் என்றும் விண்வெளியை இராணுவமயப்படுத்துவதில்லையென உடன்படிக்கை செய்து கொள்ளலாம் என்றும் ஐரோப்பாவில் உள்ள இடைத்தொலைவு அணு ஆயுதங்களைப் பற்றி பிரிட்டனுடனும் பிரான்சுடனும் நேரடி பேச்சுவார்த்தைகளை நடத்தலாம் என்றும் சோவியத் யூனியன் முன்மொழிந்தது. மேற்கூறிய பிரச்சினைகள் சம்பந்தமாக ஒப்பந்தங்கள் அடையப்பட்டால் அது சர்வதேச நிலவரம் முழுவதிலும் சோவியத்-அமெரிக்க உறவுகளிலும் உண்மையான ஒரு மாற்றத்தின் துவக்கமாக இருக்கும்.

ஏதோ பலமும் ஆயுதமும்தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கின்றன, எப்போதுமே இப்படித்தான் நடக்கும் என்ற கருத்தை மக்கள் மீது திணிக்க முற்படுபவர்களின் கண்ணோட்டத்தை சோவியத் யூனியன் பொதுவாக நிராகரிக்கிறது. அணு ஆயுத யுத்தத்தின் அபாயத்தை முன் எப்போதையும் விட அதிகமாக இன்று உணர்ந்துள்ள மக்கள் வரலாற்று மேடையின் முன் பகுதிக்கு வருகின்றனர். யுத்த எதிர்ப்பு, அணு ஆயுத எதிர்ப்பு இயக்கங்களால், புதிய உலக யுத்தத்தைத் தூண்டி விடுபவர்களுக்கு எதிரான தம்முடைய தீவிரமான, செயல்முனைப்பான நடவடிக்கைகளின் மூலம் அணு ஆயுத

சச்சரவு அபாயத்தை அகற்ற முடியும், சமாதானத்தை, எனவே இப்பூமியின் வாழ்வைக் காப்பாற்ற முடியும். சோவியத் அரசின் உண்மையான மனிதாபிமான, ஜனநாயகக் கொள்கை எப்போதுமே வாழ்வின் பாலான அசைக்க முடியா நம்பிக்கையை நோக்கமாகக் கொண்டிருந்தது, இது இன்றும் அப்படியே உள்ளது. பதட்ட நிலைத் தணிவு, ஒத்துழைப்பு ஆகியவற்றின் வழியாகத்தான் சமாதானத்தை நோக்கிய பாதை உள்ளது என்று சோவியத் மக்கள் திடமாக நம்புகின்றனர்.

# குறிப்புகள்

1 V. I. Lenin, *Collected Works*, Vol. 15, Progress Publishers, Moscow, 1982, p. 182.

2 K. Marx, F. Engels, *Selected Correspondence*, Progress Publishers, Moscow, 1975, p. 416.

3 Walter Lafeber, "Empire Begins at Home", *The Nation*, Vol. 228, No. 22, June 9, 1979, p. 656.

4 Bernard Brodie, *War and Politics*, The Macmillan Co., New York, 1973, p. 342.

5 James R. Schlesinger, "A Testing Time for America", *Fortune*, Vol. 101, No. 3, February 11, 1980, p. 247.

6 *1976 ஜூலையில் பிரிட்டனில், அமெரிக்க ஐக்கிய நாட்டின் 200வது ஆண்டு நிறைவையொட்டிய மகாநாடு நடைபெற்றது. பிரபல பிரிட்டிஷ், அமெரிக்க விஞ்ஞானிகள் கலந்து கொண்ட இந்த மகாநாட்டில், 200 ஆண்டு காலத்தில் யுத்தம் மற்றும் சமாதானம் பற்றிய துறையில் அமெரிக்கப் பாரம்பரியம் சம்பந்தமான பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன. மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சிகள் (பிரச்சார அம்சத்தைத் தவிர) சுவாரசியமானவை. இவை American Thinking About Peace and War*, Ed. by Ken Booth and Moorhead Wright, The Harvester Press, Sussex, 1978 *எனும் நூலில் இடம் பெற்றுள்ளன.*

7 *The Americans: 1976*, Ed. by Irving Kristol, Paul Weaver, Vol. 2, Lexington Books, New York, 1976, p. 127.

8 ''தேசிய நலன்கள்'' எனும் கருத்தினங்களின் கீழ் ''தேசியப் பாதுகாப்பின்'' வரையறுப்பு வா. லீப்மனைச் சாரும் (Walter Lippmann, *U.S. Foreign Policy: Shield of the Republic*, Little, Brown and Co., Boston, 1943). சோவியத் ஆராய்ச்சியாளர் பெத்ரோவ்ஸ்கியால் இப்பிரச்சினை மிக ஆழமாக, சாராம்சத்தோடு ஆராயப்பட்டுள்ளது. வி.பி. பெத்ரோவ்ஸ்கி, **அமெரிக்க உலகளாவிய போர்த்தந்திரத்தில் ''தேசியப் பாதுகாப்புச்'' சித்தாந்தம்**, மாஸ்கோ, 1980 (ருஷ்ய மொழியில்) எனும் வெளியீட்டைப் பார்க்க.

9 இன்று நவீன திருத்தல்வாதப் பள்ளி என்றழைக்கப்படுவதன் பிரதிநிதிகள் மத்தியில் பிரபல அமெரிக்க அரசியல் இயலராகிய கா. லாஸ்வெலின் கருத்து பரவியுள்ளது. இதன்படி ''தேசியப் பாதுகாப்பு'' முறை தோற்றுவிக்கப் பட்டதையடுத்து ''படையிருப்பிட அரசு'' தோன்றியுள்ளது, இதில் வன்முறை நிபுணர்கள் அரசியலை நடத்துவார்கள்.

10 *United States Code. 1970,* U.S. Government Printing Office, Washington, 1971, Vol. 11, p. 12182.

11 *Ibid.*

12 Roger Hilsman, *To Move a Nation*, Doubleday, Garden City (New York), 1968, p. 19.

13 *American National Security. Policy and Process,* Ed. by Amos A. Jordan, William J. Taylor, The Johns Hopkins University Press, Baltimore, 1981, p. 3.

14 சோவியத் இலக்கியத்தில் இராணுவ வெறி என்பது பின்வருமாறு வரையறுக்கப்படுகிறது: ''பிற்போக்கான சிறுபான்மை முற்போக்கான பெரும்பான்மையின் விஷயத்தில் பயன்படுத்தும் இராணுவ வன்முறையின் வடிவத்திலோ, ஒரு சில மக்களினங்களுக்கு எதிராக மற்ற மக்களினங்களின் இராணுவ ஆக்கிரமிப்பை இச்சிறுபான்மை திட்டமிட்டு வழிநடத்தும் வடிவத்திலோ ஒட்டுண்ணித் தனமான, உழைக்காத வர்க்கங்களின் நலன்களுக்கு இராணுவ சேவை புரிவது என்பதுதான் இராணுவ

வெறியாகும்''. வி.இ. ஸ்கோபின், இராணுவ வெறி, மாஸ்கோ, 1957, பக்கம் 17 (ருஷ்ய மொழியில்) எனும் நூலிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டது.

[15] Bernard Brodie, *War and Politics*, p. 459.

[16] Liddell Hart, *Strategy: The Indirect Approach*, London, 1967.

[17] *American Thinking...*, p. 17.

[18] ஹெ. கிஸ்ஸின்ஜெர் தன்னுடைய படைப்புகளில் ஒன்றில் (*Nuclear Weapons and Foreign Policy*, Harper, New York, 1957) தொழில்நுட்ப மேம்பாட்டின் அடிப்படையிலான எதிர்கால நம்பிக்கை போர்த்தந்திர சித்தாந்தத்தை மேம் படுத்தும் அவசியத்தை மறக்க வைத்தது என்று குறிப் பிடுகிறார்.

[19] *American Thinking...*, pp. 20—22.

[20] Barry M. Blechman, Stephen S. Kaplan, *Force Without War: US Armed Forces as a Political Instrument,* Brookings Institution, Washington, 1978.

[21] Samuel P. Huntington, *The Common Defense, Strategic Programs in National Politics*, Columbia University Press, New York, 1961.

[22] கன்கிஸ்ததோர்கள் (ஸ்பானிய மொழியில் conquistador — வெற்றி பெற்றவர்) — 15ஆம் நூற்றாண்டின் இறுதியி லும் 16ஆம் நூற்றாண்டிலும் மத்திய மற்றும் தென் அமெ ரிக்காவில் ஸ்பெயின் நாட்டவர் நடத்திய ஆக்கிரமிப்பு, கொள்ளை யுத்தங்களில் பங்கேற்றவர்கள். இவர்கள் ஸ்தல மக்களை மிகக் கொடுமையாகக் கொன்று குவித்தனர், அடிமைப்படுத்தினர்.

[23] *American Thinking...*, p. 63.

[24] George Liska, *Alliances and the Third World*, Baltimore, 1968, p. 50.

[25] *American Thinking...*, p. 44.

[26] R. Osgood, *Limited War: The Challenge to American Strategy*, Chicago, 1957, p. IX.

[27] Michael Sherry, *Preparing for the Next War*, Yale University Press, New Haven, London, 1977, p. 162.

[28] லேண்ட்-லீஸ் (lend-lease) — இரண்டாவது உலக யுத்தத்தின் போது *(1939—1945)* பாசிச எதிர்ப்புக் கூட்டு நாடுகளுக்கு அமெரிக்கா ஆயுதங்கள், போர்த்தளவாடங்கள், உணவுப் பொருட்கள், மற்ற பொருட்களைக் கடனாகவோ குத்தகைக்கோ தரும் முறை.

[29] Michael Sherry, *op. cit.*, p. 170.

[30] *Ibid.*, p. 174.

[31] *Ibid.*, p. 214.

[32] *Ibid.*, p. 213.

[33] Gregg Herken, *The Winning Weapon. The Atomic Bomb in the Cold War 1945—1950*, Alfred A. Knopf, New York, 1980, p. 12.

[34] *The Absolute Weapon. Atomic Power and World Order*, Ed. by Bernard Brodie, Harcourt, Brace and Company, New York, 1946, pp. 22—23.

[35] Gregg Herken, *op. cit.*, p. 17.

[36] *Ibid.*, p. 16.

[37] *Ibid.*

[38] *Dropshot. The United States Plan for War with the Soviet Union in 1957*, Ed. by Antony Gave Brown, The Dial Press, New York, 1978, p. 7.

39 *Ibid.*, p. 1.

40 *Ibid.*, pp. 18—19.

41 *Dropshot...*, p. 5.

42 *பிளீட்ஸ்கிரிக் (ஜெர்மன் மொழியில் — மின்னல் வேக யுத்தம்) — மிகக் குறுகிய காலகட்டத்தில் (அதாவது எதிரி தன் முக்கியச் சக்திகளை அணிதிரட்டி எதிர்க்கத் தயாராகும் முன்) வெற்றியை அடையும் நோக்கத்துடனான துரித யுத்தத் தத்துவம். இது 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஜெர்மானிய இராணுவ வெறியர்களால் தோற்றுவிக்கப்பட்டது. இது முதலாவது உலக யுத்தத்திலும் இரண்டாவது உலக யுத்தத்திலும் (குறிப்பாக 1941 — 1945ஆம் ஆண்டுகளில் சோவியத் யூனியனுக்கு எதிராக நடந்த யுத்தத்தில்) பொய்த்துப் போனது.*

43 Michael Sherry, *op. cit.*, p. 185.

44 *Ibid.*, p. 47.

45 *Ibid.*, p. 54.

46 *Ibid.*

47 Robert W. Tucker, *The Radical Left and American Foreign Policy*, The Johns Hopkins Press, Baltimore, 1971, pp. 28—39.

48 Warner R. Schilling, Paul Y. Hammond, Glenn H. Snyder, *Strategy, Politics and Defense Budgets*, Columbia University Press, New York, 1962, pp. 271—378.

49 John Lewis Gaddis, "Containment: Its Past and Future", *International Security*, Vol. 5, No. 4, Spring 1981, p. 83.

50 Harry S. Truman, *Memoirs*, Vol. I, *Year of Decisions*, Doubleday, New York, 1955, p. 552.

51 John Lewis Gaddis, *The US and the Origins of the Cold*

*War, 1941—1947*, Columbia University Press, New York, 1972, p. 264.

[52] Daniel Yergin, *Shattered Peace. The Origins of the Cold War and the National Security State*, Houghton Mifflin Co., Boston, 1978, p. 337.

[53] John Lewis Gaddis, *op. cit.*, p. 262.

[54] Daniel Yergin, *op. cit.*, pp. 338—339.

[55] *Containment: Documents on American Policy and Strategy, 1945—1950*, Ed. by Thomas H. Etzold and John Lewis Gaddis, Columbia University Press, New York, 1978, p. 401.

[56] John C. Donovan, *The Cold Warriors. A Policy-Making Elite*, D. C. Heath and Co., Lexington (Mass.), 1974, p. 99.

[57] *United States-Vietnam Relations, 1945—1967*, Book 9, US Government Printing Office, Washington, 1971, pp. 174—178.

[58] *Ibid.*, pp. 179—181.

[59] *Ibid.*, pp. 182—184.

[60] *Ibid.*, p. 190.

[61] *Ibid.*, pp. 197—198.

[62] Michael Sherry, *op. cit.*, pp. 8—9.

[63] Allan R. Millett, *The American Political System and Civilian Control of the Military. A Historical Perspective*, The Mershon Center of the Ohio State University, Columbus (Ohio), 1979, p. 37.

[64] Henry A. Kissinger, *Nuclear Weapons and Foreign*

*Policy*, Harper, New York, 1957; Robert Osgood, *Limited War: The Challenge to American Strategy*, University of Chicago Press, Chicago, 1957.

65 *Department of Defense Appropriations for 1962. Hearings Before the Subcommittee of the Committee on Appropriations. US Senate, 87th Congress, lst Session*, US Government Printing Office, Washington, 1961, p. 25.

66 Douglas MacArthur, *A Soldier Speaks. Public Papers and Speeches*, Frederick A. Praeger Publishers, New York, 1965, p. 356.

67 John F. Kennedy, *Public Papers. 1963*, US Government Printing Office, Washington, 1964, p. 736.

68 *American National Security...*, p. 553.

69 John Lewis Gaddis, *The US and the Origins of the Cold War, 1941—1947*, p. 245.

70 *Ibid.*, p. 268.

71 Vincent Davis, *Postwar Defense Policy and the US Navy, 1943—1946*, University of Carolina Press, Chapel Hill, 1966, p. 250.

72 P. Smith, *The Air Force Plans for Peace, 1943—1945*, The John Hopkins Press, Baltimore, 1970, pp. 1—23.

73 Gregg Herken, *op. cit.*, p. 204.

74 *Ibid.*, p. 207.

75 *Ibid.*, p. 208.

76 *Ibid.*, p. 217.

77 *American National Security...*, p. 253.

[78] *Ibid.*

[79] *Containment: Documents on American Policy and Strategy, 1945—1950*, pp. 302—311.

[80] Daniel Yergin, *op. cit.*, p. 270.

[81] Gregg Herken, *op. cit.*, p. 221.

[82] *The Absolute Weapon*, Ed. by Bernard Brodie, Harcourt, Brace and Company, New York, 1946.

[83] *Ibid.*, pp. 135—136.

[84] Gregg Herken, *op. cit.*, p. 222.

[85] Michael Sherry, *op. cit.*, pp. 200—201.

[86] *Ibid.*, p. 213.

[87] Gregg Herken, *op. cit.*, p. 226.

[88] *Ibid.*

[89] *Ibid.*, p. 228.

[90] *Ibid.*, p. 240.

[91] *Ibid.*, p. 241.

[92] *Containment: Documents on American Policy and Strategy, 1945—1950*, pp. 164—169.

[93] Gregg Herken, *op. cit.*, p. 251.

[94] *Ibid.*, p. 260.

[95] *Ibid.*, p. 266.

[96] *Containment: Documents on American Policy and Stra-*

*tegy, 1945—1950*, pp. 144—160.

97 Gregg Herken, *op. cit.*, p. 267.

98 *Containment: Documents on American Policy and Strategy, 1945—1950*, pp. 339—343.

99 *Ibid.*, p. 341.

100 Gregg Herken, *op. cit.*, pp. 284—285.

101 Warner R. Schilling, Paul Y. Hammond, Glenn H. Snyder, *Strategy, Politics and Defense Budgets*, Columbia University Press, New York, 1962, pp. 48—51.

102 Gregg Herken, *op. cit.*, p. 285.

103 *The Journals of David Lilienthal. The Atomic Energy Years: 1945—1950*, Harper and Row, New York, 1964, p. 270.

104 Gregg Herken, *op. cit.*, p. 288.

105 *The Journals of David Lilienthal...*, p. 580.

106 Gregg Herken, *op. cit.*, p. 305.

107 *Ibid.*, p. 303.

108 *Ibid.*, pp. 315—316.

109 *Ibid.*, p. 318.

110 *Ibid.*, p. 321.

111 *Containment: Documents on American Policy and Strategy, 1945—1950*, pp. 335—339.

112 Gregg Herken, *op. cit.*, p. 326.

113 Richard G. Hewlett, Fransis Duncan, *A History of the United States Atomic Energy Commission*, Vol. II, *1947/1952. Atomic Shield*, US Atomic Energy Commission, 1972, p. 532.

114 Gregg Herken, *op. cit.*, pp. 333—334.

115 *Ibid.*, pp. 334—336.

116 *Nuclear Armament. An Interview with Dr. Daniel Ellsberg*, Conservation Press, New York, 1980, p. 3.

117 Richard M. Nixon, *Memoirs*, Grosset and Dunlap, New York, 1978, pp. 150—155.

118 *Nuclear Armament...*, p. 3.

119 *Ibid.*, p. 4.

120 *Ibid.*, p. 7.

121 *Inquiry Magazine*, 1981, April 13, p. 15.

122 *Nuclear Armament...*, p. 1.

123 *Whence the Threat to Peace*, Military Publishing House, Moscow, 1982, p. 66.

124 *நி.வ. அகார்க்கவ்*, தாய்நாட்டைப் பாதுகாக்க எப்போதும் தயார், *மாஸ்கோ, 1982, பக்கங்கள் 46, 58 (ருஷ்ய மொழியில்).*

125 Allan R. Millett, *The American Political System...*, p. 23.

126 *Ibid.*, p. 27.

127 Allan R. Millett, *Military Professionalism and Officership in America*, Mershon Center of the Ohio State University, Columbus (Ohio), 1977, pp. 17—22; Samuel P. Huntington, *The Soldier and the State. The Theory and Politics of Civil-Military Relations*, Harvard

University Press, Cambridge (Mass.), 1957, pp. 254—269.

128 Allan R. Millett, *The American Political System...*, p. 38.

129 Bernard Brodie, *op. cit.*, p. 352.

130 Allan R. Millett, *The American Political System...*, p. 53.

131 *Nuclear Armament...*, p. 1.

132 இரண்டாவது உலக யுத்த ஆண்டுகளின் போது அணு குண்டைத் தயாரிப்பதில் பிரிட்டன் மற்றும் கானடாவின் உதவி அமெரிக்காவிற்குத் தேவைப்பட்டது. எனவே அமெரிக்கா 1943இல் பிரிட்டனுடன் குவெபெக் உடன்பாடு செய்து கொண்டது. இதன்படி ''இரு தரப்பின் ஒப்புதலுமின்றி'' அணு ஆயுதம் பயன்படுத்தப்படாது. ஆனால் 1948 ஜனவரியில் பரஸ்பர ஒப்புதலின்படி அணு சக்தி துறையில் போர்க் காலத்தில் செய்து கொள்ளப்பட்ட எல்லா உடன்படிக்கைகளும் தம் மதிப்பை இழந்தவையாக அறிவிக்கப்பட்டன.

133 *Whence the Threat to Peace*, p. 16.

134 *American National Security...*, p. 538.

135 தி.பி. உஸ்தீனவ், தாய்நாட்டிற்கும் கம்யூனிஸத்திற்கும் சேவை புரிகிறோம், *மாஸ்கோ, 1982, பக்கம் 50 (ருஷ்ய மொழியில்).*

136 *The Defence Monitor*, Vol. 11, No. 1, 1982, p. 4.

137 *Ibid.*

138 *நி.வ. அகார்க்கவ்,* அதே நூல், *பக்கம் 17.*

139 Tom Gervasy, *Arsenal of Democracy II. American Military Power in the 1980s and the Origins of the New Cold War*, Grove Press Inc., New York, 1981, p. 27.

[140] *Ibid.*

[141] *Ibid.*

[142] *Ibid.*, p. 29.

[143] கி. திரஃபீமென்கோ, அமெரிக்க ஐக்கிய நாடு: அரசியல், யுத்தம், சித்தாந்தம், மாஸ்கோ, 1976, பக்கம் 338 (ருஷ்ய மொழியில்).

[144] *The Defence Monitor*, Vol. 11, No. 1, 1982, p. 11.

[145] பிராவ்தா, 1982 டிசம்பர் 22.

[146] பிராவ்தா, 1985 மார்ச் 12.

## வாசகர்களுக்கு

*இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்து வரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும்* **முன்னேற்றப் பதிப்பகம்** *மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.*

*தங்கள் கடிதங்களை* "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" *என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.*

**விற்பனையாளர்கள்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்**

**தலைமை அலுவலகம்**

*41 — பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை — 600098*

**ஷோ-ரூம்**

*136, அண்ணாசாலை, சென்னை — 600002*

**கிளைகள்**

*80, மேலக் கோபுர வீதி, மதுரை — 625001*
*3-4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர் — 641018*
*42 / 7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி — 620008*
*செர்ரி ரோடு, சேலம் — 636001*

**விற்பனை நிலையங்கள்**

*3-22-75- D, மதுரை சாலை;*
*திருநெல்வேலி ஜங்ஷன் — 627001*
*66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்*
*சேரிங் கிராஸ், உதகமண்டலம் — 643001*
*நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல் — 624001*

## பிழை

99வது பக்கம், கீழிருந்து 9வது வரியைப் பின்வருமாறு படிக்க வேண்டும்:

எதிரான உலகளாவிய யுத்தம். இதற்கு